# சொந்தக்காரன்?



யோ. பெனடிக்ற் பாலன்

[illegible]
1.4.83

# சொந்தக்காரன்?

பெனடிக்ற் பாலன்

விற்பனை உரிமை :

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை-1.

முதற் பதிப்பு: டிசம்பர், 1968.

விலை ரூ. 4-50

PAARI NILAYAM
59, Broadway
MADRAS 1.

அச்சிட்டோர்: ஜீவன் அச்சகம், சென்னை-5

# முன்னுரை

மலிவு விலையில் வளமான நிலம்.

அடிமை விலையில் இந்தியத் தொழிலாளர்களின் உழைப்பு.

இரண்டையும் சுவை கண்டதும் இங்கிலாந்திலே கம்பனிகள் ஆரம்பித்து இலங்கையை நோக்கிப் படையெடுத்தன. சிங்கள விவசாயிகளின் நிலங்களை, புரட்சி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 1817-ல் பறித்தெடுத்து, ஏக்கர் ஐந்து சிலிங் விலையில் (ரூ. 3-30) ஆங்கிலேயக் கம்பனிகளுக்கு அவர்களது கவர்னர் விற்று இலங்கையை லாப வேட்டைக் காடாக்கினர். முதலில் கோப்பி பயிரிடுகை ஆரம்பமாகியது. ஜமெக்கா கோப்பி விலையுடன் போட்டியிட, அங்கு கோப்பித் தோட்டங்களில் வேலை செய்த அடிமைகள்போல அடிமைக் கூலியாக வேலை செய்ய சிங்கள மக்கள் தயாராயிருக்கவில்லை. தமது ஆட்சியில் இருந்த தமிழ் நாட்டிலிருந்து கோப்பிக் கொட்டை பறிப்பதற்கு சீசன் கூலிகளை முதலில் வரவழைத்தனர்.

1870 வரையில் கோப்பிப் பயிரிடுகை நோயினால் அழிவுற்றதும் தேயிலையும், ரப்பரும் மாற்றுப் பயிராகப் பெருகின. இவை பெரு லாபம் தருபவை என்பதை அறிந்ததும் புதிய கம்பனிகள் பல முளைத்தன. இலண்டன் பங்குமார்க்கெட்டில் பங்குகளின் விலைகள் பல மடங்காக ஏறிக்கொண்டிருந்தன. நிரந்தர கூலிகளாக இந்தியத் தமிழர்களைக் குடியேற்றத் தொடங்கினர். ஆங்கிலேய ஆட்சியினர் தம் நாட்டுக் கம்பனிகள் செழித்து வளர வேண்டிய உதவிகள் யாவையும் செய்தனர். அவர்களுக்கு வாய்ப்பாக சட்டங்களையும் அமைத்தனர். தெருக்கள், புகையிரதப் பாதைகள்,

தபால் தந்திப் போக்குவரத்து வசதிகள் யாவும் அவர்களுக் காகவே முதலில் ஏற்படுத்தப்பட்டன.

தேயிலை, ரப்பர் தோட்டங்கள் சில நூறு ஏக்கர் நிலமா யினும் அவை தனித்தனி இராச்சியங்கள். அங்கே தோட்டத் துரையே சர்வாதிகாரி. தோட்ட நிலம் மேல்நாட்டு கம்பனி களின் சொத்து. ஆங்கிலேயர் தமது தனிச் சொத்தையும் காப்பாற்ற வல்லதான முதலாளித்துவ ஜனநாயக ஆட்சியா ளரின் கையிலேயே சுதந்திரம் கொடுத்து வெளியேறினர். அவர்கள் வெளியேறிய போதும் அவர்களின் மூலதனங்கள் வெளியேறிவிடவில்லை. மூலதனம் மறைமுகமாக இன்றும் ஆட்சியை நடாத்துகிறது.ஆண்டுதோறும் பல கோடி ரூபாக் கள் லாபம் என்ற பெயரில் மேல்நாடுகளுக்கு அனுப்பப்படு கின்றன.

இலங்கையின் ஏற்றுமதியில் 90வீதம் தேயிலை,ரப்பர் ஆகிய இரண்டு பொருட்களுமேயாகும். இதனுல் கிடைக்கும் வெளி நாட்டுப் பணத்தைக் கொண்டே அரிசி, சீனி, புடவை ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் மட்டுமல்ல, மேல்நாட்டு நவீன நாகரிகத்தைப் பறைசாற்றும் பாவனைப் பொருட்களையும் இறக்குமதி செய்து நாட்டில் ஒரு பகுதியினர் ஆடம்பரமாக மேல்நாட்டு நாகரிக வாழ்வு நடாத்துகின்றனர். ஆனுல் அதிகாலையில் தமது லாயங்களில் சங்கொலி கேட்டு எழுந்து மாலைவரை மழையிலும் குளிரிலும் மாடாக உழைக்கும் மக்களின் வாழ்க்கையைப் பற்றிப் பலர் அறியமாட்டார்கள். திருப்தியற்ற ஆசைகள் மனிதர்களுக்கு இருக்கலாம். ஆயி னும் மனித அடிப்படைத் தேவைகளுக்கு இத்தொழிலாளர் படும் துன்பங்களையும், மனித அடிப்படை வாழ்வுரிமை, உறவுகளே மறுக்கப்படும் மிருக வாழ்வு பற்றியும் பெரும் பாலோர் அறியமாட்டார்கள்.

ஆதிகாலத்தில் அடிமைகளின் வாழ்க்கைப் பிரச்சனைகள் கலை, இலக்கியங்களிலிருந்து ஒதுக்கப்பட்டதுபோல இன்றும், நடுத்தர வகுப்பினரின் வளர்ச்சியின் பின்பும், கீழ்ப்பகுதியில்

கிடந்து நசியும் தொழிலாளர்களின் வாழ்வு 'தோட்டக் கூலி கள்' என்று கூறி மறைக்கப்படுகிறது. நவீன அடிமைகளாக குடியுரிமையுமின்றி, இலங்கைத் தோட்டங்களிலே தமிழர் கள் இன்றும் கூலிகளாக வாழ்கின்றனர். தோட்டங்களை விட்டு வெளியேற முடியாது; அங்குள்ள நிலத்தில் கொட்டில் கட்டித் தனிக் குடித்தனமாகக் கூட வாழமுடியாத நிலையில் குகைகளில் அடைக்கப்பட்ட அடிமைகள் போல நசிந்து கொண்டிருக்கும் பத்து லட்சம் தோட்டத் தொழிலாளர் களின் வாழ்க்கை பலருக்குத் தெரியாது.

அரசியல் சுதந்திரம் கிடைத்த இருபது ஆண்டுகளின் பின்னரும் தேயிலை, ரப்பர் தோட்டங்கள் ஆங்கிலேயரின் மூலதனப் பிடியிலேயே இயங்கி வருகின்றன. ஒரு பகுதி இலங்கை முதலாளிகள் கைகளில் மாறியபோதும், ஏற்பட்ட மாற்றம் வெள்ளைச் சிங்கங்கள் இருந்த இடங்களில் கறுத்தப் புலிகள் என்ற அளவிலேயே அமைந்துள்ளன.

பண்ணை அடிமை முறையில் பண்ணையாருக்கும் பண்ணை யில் வேலை செய்த அடிமைக்குமிடையில் நேரடி மனிதத் தொடர்பு, மனித உறவாவது இருந்தது. முதலாளித்துவ வளர்ச்சியில் நேரடி உறவே அற்றுப் போவதைக் காணலாம். இங்கிலாந்தில், லாபம் ஒன்றே நோக்கமாகக் கொண்ட கம்பனிகள், பங்குமார்க்கெட் என்ற கோவிலைத் தொழும் முதலாளிகள், பங்குதாரர்கள். லாபம் ஒன்றையே கருத் தாகக் கொண்டு அவர்களது சலுகையில் வாழும் பிரதிநிதி தோட்டத்தின் நிர்வாகி. உற்பத்திப் பொருட்களின் ஊடா கவே உறவு முறைகள் ஏற்படுகின்றன. மனிதாபிமான உணர்வுகளே மறைந்து இரு முனைகளாக மக்கள் மாறுகின் றனர். இலண்டனில் பங்குமார்க்கெட்டின் ஏற்றத்தை எதிர்பார்த்துத் தொழுது கொண்டிருக்கும் பங்குதாரருக்கு இலங்கைத் தோட்டத்தில் நசிந்து வாழும் தொழிலாளி பற்றி எங்கே கவலை யிருக்கப் போகிறது.

எங்கோ எவரோ சொகுசாக வாழ்வதற்காக பிறந்த நாட்டைவிட்டு வந்து உழைத்து பரம்பரை பரம்பரையாக

தேயிலைச் செடிக்கு உரமாவதற்கு மட்டுமாகவே வாழ்ந்த மக்களின் இன்றைய வாழ்வை இந்நாவல் படப் பிடித்துக் காட்டுகிறது. இது ஒரு கற்பனை நாவலல்ல. யதார்த்த நாவல். அடிப்படை உரிமைகள் யாவுமே மறுக்கப்பட்டு வாழும் மக்களிடையே இன்று ஏற்பட்டு வரும் காலமாற்றங் களையும் அரசியல் தாக்கங்களையும் ஆசிரியர் மறைத்து விட வில்லை. நசிக்கப்படுபவர்களிடையே குமுறிக் கொண்டிருக் கும் புதிய எண்ணங்களையும் எழுச்சிகளையும் அவர் சித்திரித் துக் காட்டுகிறார். தேயிலை. ரப்பர் தோட்டங்களில் உருவாகி வரும் புயலைப் பலர் அறியார். அவற்றை அப்பகுதியிலேயே வாழ்ந்து, தற்போதைய தொழிலாளர் இயக்கங்களைப் பற்றி நன்கு அறிந்தவருமாகிய பாலன் இந்நாவல் மூலம் காட்டு கிறார்.

பாலன் ஈழத்துச் சிறுகதை உலகிலேயே நன்கு அறிமுக மானவர். அவரது ‘குட்டி’ என்ற குறுநாவலையே நான் முதலில் படித்தபோது நல்லதோர் புதிய எழுத்தாளர் பிறந் துள்ளார் என்று நண்பர்களுக்கெல்லாம் அறிமுகப்படுத் தினேன். ‘குட்டி’ என்ற குறுநாவலை ஆங்கிலத்திலேயோ, பிரெஞ்சு மொழியிலேயே மொழிபெயர்த்து மேல்நாட்டி லேயே அறிமுகப்படுத்தப் படவேண்டிய எழுத்தாளர் என்று நான் கருதியபோதும் சிறிது அச்சமும் என் நெஞ்சில் இருந் தது. அழகு காட்டும் மயக்கத்தில், வார்த்தைகளை வைத்து கிளித்தட்டு ஆடி விளையாடும் பொழுதுபோக்கில் நுழைந்து தனக்கு வரப்பெற்ற படைப்பாற்றலுக்கும் கலைத்தன்மைக்கு முரிய சமூகப் பணியையே மறந்துவிடுவாரோ என அஞ்சி னேன். இந்நாவலைப் படித்தபோது என் அச்சம் மறைந்தது. ஈழத்து எழுத்தாளர்களின் முன்னணியில் அவருக்கும் ஓர் அழியாத இடமுண்டு என்பதை இந்நாவல் எடுத்துக் காட்டு கிறது. சிலகாலம் அழகை மட்டும் காட்டி மயக்கிவிட்டு மறைந்துவிட்ட பல எழுத்தாளர்களை அறிவேன். பாலன் நுழைந்திருக்கும் பாதை அவரை ஓய்வின்றி எழுதத் தூண்டிக் கொண்டேயிருக்கும் என்ற நம்பிக்கை எனக் குண்டு.

குயீன்ஸ் தோட்ட நிலத்திற்கு யார் சொந்தக்காரன் என்று மட்டுமல்ல இலங்கை நிலத்திற்கு யார் சொந்தக் காரன்? பூமிக்கே யார் சொந்தக்காரன்? என்றே இந்நாவல் மூலம் பரந்த உலகுக்கே குரல் எழுப்புகிருர் பாலன்.

வெறும் விஞ மட்டுமல்ல அதற்குரிய விடையையும் இந்த நாவலிலேயே காணலாம்.

உரும்பிராய்,
யாழ்ப்பாணம்.
4—12—68.

**செ. கணேசலிங்கன்.**

# சொந்தக்காரன்?

குயின்ஸ்தோட்டத்திலுள்ள காளி கோயில் விருந்தையில் சின்னக்கலப்பன் ஆறுதலாக இருந்தான். பின்னால் ஊன்றிய கையில் உடலைப் பாரப்படுத்தி, மடித்து உயர்ந்து நிற்கும் முழங்காலில் மறுகையை நீட்டிப் போட்டவாறு யோசனையில் மூழ்கிவிட்டான். கண்கள் உயர்ந்து சடைத்து நிற்கும் செம்பக மரத்தின் மஞ்சற் பூக்களில் வெறித்திருந்தன.

அவன் போட்டிருக்கும் சேட்டிற்கு மேலால் முதுகை மூடி துவாய்த்துண்டு போர்த்தப்பட்டிருந்தது. வரும்போது தலையைச் சுற்றிக் கட்டியிருந்தான்.

காலை வெயில் எரித்துக் கொண்டிருந்தது. வானம் சுத்தமான நீலமாகிவிட்டது. மலைமுகப்புக்களை கும்பலான வெண்முகில்கள் சுற்றிவளைத்து பஞ்சு, பஞ்சாக மூடிக் கிடந்தன. சில மலைச்சிகரங்கள் முகில்களின் அணைப்பை மீறி, ஒட்டகத்தின் முதுகைப்போல் உயர்ந்து நின்றன.

காளி கோயிலுக்குப் பக்கத்தில் பெரிய சுப்பிரமணியர் கோயில் உண்டு. அந்தக் கோயில்களில் தினப்பூசை செய்யும் பாலுச்சாமி பூசாரி, வெற்றிலைக் குட்டானை அவனுக்குப் பக்கத்தில் கொண்டு வந்து வைத்து 'சாப்பிடண்ணே' என்று கூறிவிட்டுப் போய்விட்டான். அவன் போய் சுப்பிரமணியர் கோயில் விருந்தையில் கால் நீட்டி பூமாலை கட்டிக்கொண்டிருந்தான்.

கோயில் கட்டியிருக்கும் அந்தப் பிரதேசம் ஒரு மலைக் குன்று. அங்கிருந்து பார்த்தால் பெரிய துரை பங்களாவும் அதற்குப் பக்கத்துக் குன்றில் அமைந்துள்ள பாக்டரியும் தெரியும். அந்த டிவிசனுக்கு பொறுப்பான சின்னத்துரை

பங்களா, கோயிலுக்கு அடுத்ததாகவுள்ள குன்றில் அழகாக அமைந்துள்ளது. தோட்ட 'டிஸ்பென்சரி' மட்டும் தெரியாது. இவை மட்டுமல்ல, அத்தோட்டத்தைச் சுற்றியுள்ள தேயிலைத் தோட்டங்களும், அவற்றின் பாக்டரிகளும், மலைகளைச் சுற்றி நெளிந்து வளைந்து செல்லும் பாதைகளையும் அங்கிருந்து பார்க்கலாம். யோசனையில் ஆழ்ந்த அவனுடைய கண்கள் செம்பகமரப் பூக்களைவிட்டு விலகவில்லை.

மூவாயிரம் அடிகளுக்கு மேற்பட்ட பகுதி அது. நான்கு டிவிசன்களைக் கொண்ட அந்தக் குயீன்ஸ் தோட்டத்தில் ஆயிரத்திநூறு தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களில் சிங்களத் தொழிலாளிகள் நூறுபேர் மட்டும் இருக்கும். அத்தனை தொளிலாளர்களையும் சின்னக்கலப்பன் காலில் இருந்து தலை வரை அறிவான். அவர்களை மட்டுமல்ல சுற்றியுள்ள தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களையும் அவனுக்குத் தெரியும்.

சின்னக்கலப்பன் அத்தோட்டத்தில் நான்கு டிவிசன்களிலும் வேலை செய்துள்ளான். அந்தக் காலத்தில் பத்து வயதில் பெயர் பதிந்து வேலை கொடுத்துவிட்டார்கள். அன்று முதல் மலையில் வேலை செய்துகொண்டே யிருக்கின்றான். மலையில் கொழுந்தெடுத்திருக்கிறான். கவ்வாத்து வெட்டியிருக்கிறான்; முள்ளுப் போட்டிருக்கிறான். அவன் வேலையில் பெரிய துரையோ, சின்னத்துரையோ, கணக்கப்பிள்ளையோ, கங்காணியோ யாரும் குற்றம் காணமுடியாது.

சின்னக்கலப்பன் நமுனகுல தோட்டத்திற்கு போய்விட்டு அப்பொழுதுதான் வந்தான். பஸ்ஸில் இருந்து இறங்கி லயத்திற்குப் போய் கொஞ்ச நேரத்தில் அங்கு வந்துவிட்டான். அவனுக்கு பஸ்ஸில் வந்த களைப்பு உடலில் சிறு சோர்வையும் ஏற்படுத்திற்று. பூசாரி வைத்த வெற்றிலையையும் அவன் இன்னும் சாப்பிடவில்லை. அவன் உள்ளத்தில் மகனைப்பற்றிய எண்ணங்கள் சிட்டுக்குருவியைப் போல் சிறிய சிறகுகளை அடித்துக்கொண்டிருந்தன.

தங்கை கண்ணம்மாள் கடிதம் எழுதி அவனை நமுனகுலவிற்கு வரும்படி அழைத்திருந்தாள். அவள் மூன்று

கிழமைக்கு முன் வரும்படி குறிப்பிட்டிருந்தாள். அவனுக்கு உடனே போக முடியவில்லை. பிரதான காரணம் பண முடை. நேற்று லீவு நாள், போயா தினம். நேற்றுப் போய் விட்டு இன்று காலையில் வந்தான். வேலைக்குப் போகலாம் என்று பறந்து வந்தான். நேரமாகிவிட்டது. வேலைக்குப் போக முடியவில்லை.

தொழிலாளர்கள் எல்லாரும் மலையில் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

லயத்தில் யாருமில்லை. மனைவி ஆருயியும், மகள் நட்சத்திரமும் கொழுந்து எடுக்கப் போய் விட்டார்கள். பயல்கள் பள்ளிக்கூடத்திற்குப் போய் விட்டார்கள். புல்லு வெட்டப் போகும் மாசிலானும் இல்லை. அவனுடைய இளைய மகள் பொட்டு விறகு பொறுக்கப் போயிருப்பாள். அவனுக்கு லயத்தில் தனியாக அடைந்து கிடக்க எரிச்சலாக இருந்தது. எல்லாத்திற்கும் முதல் வெய்யில் காலங்களில் பகலில் லயங்களில் இருக்கவே முடியாது. கூரைக்குப் போட்டிருக்கும் தகரத்தின் வெட்கை உடலை எரித்து அவித்துவிடும். கூரையும் உயரமானதில்லை. சாதாரண மனிதன் எழுந்து நின்று கையால் தொடும் அளவில்தான் உண்டு. அதனல் அவன் கோயில் பக்கமே வந்துவிட்டான்.

அவனுக்கு மனச்சோர்வு நேரும்போதும். அமைதி வேண்டும் போதும், தனிமை தேடும்போதும் அந்தக் காளி கோயிலைத்தான் நினைப்பான். மாரி காலத்தில் மழை கொட்டிக் கொண்டிருக்கும்; அக்காலத்தில் அவன் விரும்பும் பொழுது அவனுக்கு அங்கு வரமுடியாமல் இருக்கும். அப் போது அவனுக்கு மனம் துரு துருவென்றிருக்கும். எதிலும் திருப்திப்படாமல் அலையும். அங்கு வந்து குந்திவிட்டால் எல்லாவற்றையும் மேவிய மனத்திருப்தி இருக்கும்.

மூக்கால் சளி வடியவடிய ஓடித் திரிந்த சின்ன வயதி லிருந்து அங்கு வந்து வந்து பழகிப் போச்சு. இளைஞனக இருக்கும் பொழுது நிலவு காலங்களில் குளிரடிப்பதையும் மறந்து கம்பளியால் போர்த்துக்கொண்டு அந்த விருந்தை யில் இருந்து அழகு வடிய வடிய மனதுக்கு குளுமை தடவும்;

அதன் ஜாலமிடும் கோலங்களையும், வானத்தின் மிடுக்கையும், கொழுந்துகளின் வழுவழுப்பையும் நீண்டநேரம் இரசித்துக் கொண்டே யிருப்பான். நண்பர்களும் கூடி விட்டால் கற்பனைப் பேச்சுகளுக்கு அளவே யிருக்காது.

மனநினைவுகளைப் பொறுத்தவரை அது ஒரு வாளிப்பான காலந்தான். அவையெல்லாம் அவனுக்கு இப்பொழுது இனிமையான கனவுகளைப் போல் இருக்கின்றன.

மலைக்காடாகக் கிடந்த அந்தப் பகுதி அவனுடைய பாட்டன் காலத்தில்தான் தேயிலைத் தோட்டமாக மாறியது. அவனுடைய தகப்பன் வேலுச்சாமி அங்குதான் பிறந்தான். இருள் மூடிக்கிடந்த அந்தப் பகுதியை தேயிலைத் தோட்டமாக மாற்ற இந்தியாவில் இருந்து வந்த தொழிலாளர்கள் பட்ட பயங்கரமான கஷ்டங்களை வேலுச்சாமி சின்னக்கலப்பனுக்குக் கதை கதையாகக் கூறியுள்ளான். அவையெல்லாம் அவன் கண்முன் நடந்ததுபோல் அடி மனதில் அசை போட்டுக் கொள்ளும்.

அந்தக் காளி கோயிலில் குந்தியிருந்து இம்மலை, செல்வம் கொழிக்கும் தோட்டங்களாக உருவாக தங்களில் எத்தனையோ பேரின் உயிர்களும், கண்ணீரும், இரத்தமும் சதையும், இறுதியில் எலும்புகளும் பசளையாக்கப்பட்டுள்ளன என்று அவன் பலமுறை கணக்குப் போட்டுள்ளான்.

இன்று எல்லா நினைவுகளுக்கும் மத்தியில் பூவை வண்டு துளைப்பதுபோல் மனதை அரித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளில் இருந்து அகல முடியவில்லை அவனால்.

அவனை அவனுடைய தங்கை கண்ணம்மா தன் மகள் ஜானகியின் கலியாண விசயமாகப் பேசிக் கொள்ளவே அழைத்திருந்தாள். அவனுடைய மூத்த மகன் வீரமுத்துவுக்கும், ஜானகிக்கும், இருவரும் வளர்ந்து வயதுவந்த பின் கலியாணம் செய்துவைப்பதாக முன்பு முடிவு செய்துகொண்டனர். சின்னக்கலப்பன் கண்ணம்மாவுக்குப் பெண் குழந்தை பிறந்தபோது, தன் மருமகளுக்கு தானே பெயர் வைக்க வேணுமென்று தனக்குப் பிடித்த ஜானகி என்ற

பெயரை வைத்தான். அவன் ஜானகி என்று கூறும் பொழுது, அவனுடைய வாய் நிறைந்து பூரித்துவிடும்.

அவள் பிறக்கும்பொழுது குழு குழுவென்று மாம்பழச் சிவப்பில் மூக்கும் முழியுமாக ஒத்திருந்தாள். ஜானகி என்ற பெயருக்குப் பூரணமாக ஒத்திருந்தாள். தன்னை உரித்து வைத்ததைப் போல் பிறந்திருக்கும் வீரமுத்துவுக்கு சரியான ஜோடி என்று மனநிறைவு பெற்றிருந்தான். கண்ணம்மா சின்னக்கலப்பன் வீட்டிற்கு வரும்பொழுது, ஜானகியையும் கொண்டுதான் வருவாள். சின்ன வயதில் வீரமுத்துவும் ஜானகியும் சேர்ந்து விளையாடுவார்கள். அந்நேரங்களில் அவர்களின் சோடிப் பொருத்தத்தைப் பார்த்து கண் குளிர்ந்து போவான்.

இன்று அவள் ருதுவாகி, பிறக்கும்போது இருந்த அழகு இதழ் இதழாகப் பூப்பெய்தி, தேயிலைக் கொழுந்தின் வாளிப் போடு வனப்பில் மினுமினுக்கிறாள். நீர்வீழ்ச்சியைப் போன்று கண்களுக்குக் குளிர்ச்சியாக இருக்கின்றாள். அவ ளுக்கும் மகனுக்கும் கலியாணம் செய்து தன் முன்னால் வாழ்ந்து வருவதைக்காண அவன் மிக ஆவலாக இருந்தான்,

நேற்று சின்னக்கலப்பன் அங்கு போனபோது அவள் 'மாமா மாமா'வென்று பரிவாக அழைத்து உபசரித்த காட்சி கண்களுக்கு விருந்தாக இருந்தது.

ஜானகியும் மலையில் கொழுந்தெடுக்கிறாள். கண்ணம்மா வுக்கு அவளை யிட்டுப் பெரும் மனப்பீதி. மகளின் அழகோடு பிணைந்திருக்கும் ஆபத்தையும் அவள் யோசித்தாள். கணக்கப்பிள்ளையோ, கங்காணியோ வேறு யாருமோ ஜானகிக்குக் கெட்ட பெயர் உண்டாக்கிவிட்டார்களானால்? காமத்தால், களைவிரித்துக் கொண்டு எத்தனை காட்டு மிராண்டித் தனமான கழுகுகள் பசியோடிருக்கின்றன. நிர்ப்பந்தத்தினால் அக்கழுகுகளுக்கு இரையாகிச் சீரழியும் உயிர்கள் எத்தனை?

கண்ணம்மாவும் தோட்டத்தில் எத்தனை காலமாக வேலை செய்கிறாள். அவளுக்கு எவ்வளவு காரியங்கள் புரியும்?

அவளுக்கு ஆண் துணையுமில்லை. அவளின் கணவன் முத்துச்சாமி இறந்து நான்கு வருடங்களாகிவிட்டன. அவனை தொழிற்சங்க சண்டையில் எதிராளிகள் கத்தியால் குத்தி கொன்றுவிட்டனர். ஜானகியோடு இன்னும் இரண்டு பெண்கள் பெரிசாகி வீட்டோடு இருக்கின்றனர். கடைசிப் பையன் பெரியவனல்ல. ஜானகியின் திருமணம் எவ்வளவு சீக்கிரம் முடிகின்றதோ, அவ்வளவுக்கும் அவளுக்கும் நிம்மதியே.

இவற்றையெல்லாம் தன் அண்ணனை சின்னக்கலப்ப னிடம் கண்ணம்மா விபரித்துக் கூறினுள். இவற்றை உணர முடியாதவனல்ல அவன். அவளும் ஜானகி பெரியவளாகி மூன்று வருடங்களாக அவளுடைய திருமணத்தைப் பற்றித் தான் அவனிடம் சுவர்ப் பல்லியைப்போல் நச்சரித்துக் கொண்டு வருகின்ருள். அவனும் அவள் கூறியவற்றைக் கருத்தோடு கேட்டுவிட்டு ‘இப்பொழுது என்ன அவசரோம், ஆறுதலாகப் பார்த்துக்கலாம்’ என்று பின்போட்டுக் கொண்டு வந்துவிட்டான். அவள் கூறியவற்றில் நியாயம் இருந்தும் பின் போட்டுக் கொண்டு வந்ததின் முழு அர்த்தம் அவனுடைய அந்தராத்மாவுக்குத்தான் புரியும்.

ஆனுல் நேற்றுக் கண்ணம்மா அவன் முன்னுல் அழுது கண்ணீர் சிந்தினுள். பக்கத்துக் காம்பராவிலுள்ள ஒரு குர்மப் பெண்ணுக்கு தகப்பன் யாரென்று தெரியாமல் குழந்தை பிறந்திருக்கும் பயங்கரத்தை கூறி எப்படியும் ஜானகியின் திருமணத்திற்கு ஒரு முடிவான தேதி குறிப் பிடும்படி ஒற்றைக்காலில் நின்ருள். அழுது வடியும் அவ ளுக்கு தன் மனதில் அழுத்தி வைத்திருக்கும் எண்ணங்களைக் கூற முடியவில்லை சின்னக் கலப்பனுக்கு. அவனும் விசயத் தைப் புரிந்து உணர்ந்து கொள்ளும் முறையில் விளக்கமாகக் கூற முடியாமல் அவஸ்தைப் பட்டான்.

வீரமுத்துவும் ஜானகியும் கலியாணம் முடித்தாப் பிறகு தனியாக வாழ ஒரு தனிக் காம்பரா வேணும், என்று சுருக்கமாகக் கூறினுன்.

அவள் அதைக் கேட்கவில்லை அவள் அதை ஒரு பெரிய

விசயமாக எண்ணவில்லே. அவளுக்கு தன் தலேமேல் இருக்கும் ஒருபாரம் குறைய வேண்டும் என்ற அவசரம். ஒரே காம்பராவில் அவர்களும் உங்களோடு இருக்கட்டும் என்றுதான் கூறினுள். தோட்டத்தில் பெரும்பாலும் நடப்பதைத்தான் கூறினுள். திருமணத்தின் பின் தனிமையில் சுதந்திரமாக அனுபவிக்க வேண்டிய மனித இன்பங்கள் எத்தனையுண்டு. திருமணம் முடிந்தபின் ஒரே காம்பராவில் தாய், தகப்பன், தங்கை, தம்பிமார்களுடன் வாழும் போது ஏற்படும் நெருக்கடிகளே அவள் யோசிக்கவில்லே. எல்லாருக்கும் உள்ளதுதான் இவர்களுக்கும் என்று அவள் நினேத்தாள் போலும். அந்த வாழ்க்கையிலே அழுந்திப் பழகி ஊறிப் போன தன்மை. அப்போது அவளுக்கு எப்படிப் பதில் சொல்வதென்று அவளுக்குப் புரியவில்லே. ஆத்திரம் தான் எழுந்தது.

சகலதும் சின்னக்கலப்பனின் மனப் பரப்பின் ஆழத்தில் நிழல் உருவங்களேப் போல் தோன்றித் தோன்றி மறைய பீடி ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தான்.

செம்பக மரத்தின் கீழ் இரண்டு பெட்டை நாய்கள் சண்டை பிடித்துக் குரைத்துக் கொண்டிருந்தன.

சின்னக்கலப்பன் படிக்கவில்லே. ஒருவரி கூட ஒழுங்காக எழுத முடியாதவன். ஆனுல் ஒருவாறு தடங்கல்பட்டு வாசித்து விடுவான். இந்தக் காலத்திலேயே படிப்பென்பது தொழிலாளர்களுக்கு வேண்டாதவொன்று. அவர்களுக்கு அது சரிவராது என்ற எண்ணத்தை உருவாக்கக் கூடிய விதத்தில் தோட்டத்தில் படிப்பு. அவனுடைய காலத்தில் அதை நினேத்துப் பார்க்கத் தேவையில்லே. அவன் படிப்பறிவு இல்லா விட்டாலும் எதையும் பரந்து, ஆழமாக யோசித்து நிதானிக்கும் புத்திக் கூர்மையுள்ளவன். அநீதியான விசயங்களுக்கு அவன் அறிந்த மட்டில் பக்க பலமாக நின்றதில்லே.

அத்தோட்டத்தில் பிறந்து வளர்ந்து ஐம்பது வருடங்களுக்கு மேல் வாழ்ந்து விட்டான். இவ்வளவு காலத்திலும் அவன், தான் நீதியானவை என்று தெரிந்து கொண்டவற்

றின் பக்கம் நின்று அதற்காகவே போராடியும் வந்திருக்கின்ருன். எந்த விசயத்திலும் நடுநிலைமை வகிக்கும் பெரிய மனுசத்தன்மை அவனிடமில்லை. அதனுல் தோட்டத்தில் அவனுக்குத் தனி மதிப்பு. அவன் குரலில் யாருக்கும் ஒரு பயம்வரும்.

அவன் உருவத்தில் வயதுக்கும் மீறிய தோற் சுருக்கமும், முதுமையும் ஏற்பட்டு விட்டன. வாயில் ஒரு பல்லும் இல்லை. என்ருலும் இளமை குன்ருத வீராப்பும், துடிப்பும் நிலைத்து விட்டன. எந்த விசயத்திலும், எந்தக் கருத்தையும் கூறும் போது வெடிப்புறப் பேசுவது அவனது சுபாவம்.

சின்ன வயதில் இருந்து இன்றுவரை மற்றவருக்குக் கூறி மன ஆறுதல் பெற முடியாத நிலையில் வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் நெருக்கப்பட்டு வந்த துன்ப வடுக்கள் நீறு பூத்த நெருப்பைப் போல் நெஞ்சுக்குள் ஊமையாகக் கிடக்கின்றன. தோட்டத்தில் நடக்கும் கொடுமைகளும் அவலமான சம்பவங்களும், அதன் நீற்றை ஊதிவிடும் பொழுது அவனுல் கொதிப்படையாமல் இருக்க முடியவில்லை.

தன் மகனுக்குத் தனிக் காம்பரா எடுத்தபின்தான் கல்யாணத்தை நடத்துவேன் என்று ஒரே பிடியில் இருந்த அவன், தங்கையின் அழுகையாலும் அவளின் அநாதரவான நிலையை உணர்ந்ததும் இருதலைக் கொள்ளி எறும்பான நிலையில் முடிவு சொல்லிவிட்டு வந்து விட்டான்.

''இன்னும் ஆறுமாதங்களுக்குள் எப்படியும் கலியாணத்தை முடித்து வைக்கிறேன்''

அவன் இப்படிக் கூறியபோது கண்ணம்மா என்றுமில்லாதவகையில் மனம் விட்டுச் சிரித்தாள். கணவன் இறந்த பின் அவள் சிரித்த இதய பூர்வமான சிரிப்பு அதாகத்தான் இருக்கும். அது அவன் கண்களுக்குள் தெரிகின்றது.

செம்பக மரத்தின் உச்சியில் சிவப்புக் கொடி பறந்து கொண்டிருந்தது. அது அவர்களுடைய சிவப்புக் கொடிச்

சங்கத்தின் கொடி. அதை நிமிர்ந்து பார்த்து உள்ளூர பெருமித மடைந்திருந்தான். அந்தச் சங்கத்தைத் தோட்டத்தில் வரவிடாமல் துரை எவ்வளவு எதிர் நடவடிக்கைகளை எடுத்தான். கடைசியில் தோல்வியே கண்டான். சின்னக்கலப்பனுக்கும் அதில் பெரும் பங்குண்டு.

பூசாரி வைத்த வெற்றிலைக் குட்டானைத் தூக்கி வாயில் வெற்றிலை பாக்கைப் பக்குவமாக அதக்கிக்கொண்டான். பூசாரி அவனுடைய வாய்க்குத் தக்கதாக பாக்கைத் தூளாக்கி வைத்திருந்தான்.

அடைக்கலங் குருவிகள் கல்வீசுவதைப் போல் அவன் தலைக்கு மேலால் பறந்து திரிகின்றன. அவன் முன்னாலும் கோயிலுக்கு அருகிலும் உள்ள மணி வாழைச் செடிகளிலும் சோடி சோடியாக இருந்து 'சிலிங்சியோ' என்று கீச்சிடுகின்றன. துணையைக் காணாத குருவிகள் சிறிது பலமாகக் கத்தி அவற்றைக்கிட்டே அழைக்கின்றன. சில துணையைத் தேடி ஓடுகின்றன. சொற்ப நேரத்தில் அவையெல்லாம் கூட்டமாகக் கூடி இறகுகளைக் கோதியும், சிலிர்த்து ஆட்டியும் கொள்கின்றன.

அவைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் அவன் மனத்தில் மங்களகரமான சந்தோசம் உருக்கொள்கின்றது. யாருக்கும் பயப்படாத சுதந்திரமான குருவிகளைக் காணும் வேளைகளில் எல்லாவற்றையும் மறந்து அவற்றின் சாகஸங்களில் மனம் பறி கொடுத்திருப்பான்.

மங்கலாக எரித்துக் கொண்டிருந்த வெயில் திடீரென்று முகத்தைச் சுளித்துக் கொண்டது. எங்கும் மப்பும், மந்தாரமும் கவிந்து கொள்ள மழைத்துளிகள் பன்னீர் தெளித்துக் கொண்டிருந்தன.

ஒரு அடைக்கலம் குருவி கூடு கட்டுவதற்காக தும்புகளைச் சேகரித்து சொண்டில் கௌவிக் கொண்டு அவன் முன்னால் வந்திருக்கின்றது. அங்குமிங்கும் பார்க்கின்றது. சின்னக்கலப்பன் ஆசையோடு அதை நோக்குகின்றான். மனதிற்குள் அவை கட்டிப்புரள்வதைப் போன்று ஒரு உணர்வு தங்களுக்கான கூடுகளை அவை தங்கள் வசதிக்குத்

தக்காற் போல கட்டிக் கொள்கின்றன. அவைகள் உண்மை யான சுதந்தரமுள்ள உயிர்கள்.

திடீரென மேலே பறந்து கோயில் முகப்பில் இருக்கும் அதில் கண்ணெறிந்தான்.

வெயில் காய வந்து வெள்ளைக் கல்லில் குந்திக் கொண் டிருந்த கரண்ட் முத்துசாமி மழை பெய்யப் போவதை அறிந்து கோயிலுக்குள் ஓடிச்சென்றுன். அவன் ஒரு லூஸ். யார் எது அவனிடம் கேட்டாலும் பதில் சிரிப்புத்தான்.

திடீரென்று மழை திமு திமு வென்று கொட்டத் தொடங்கியது. குளிரும் சேர்ந்து வீசிற்று.

சின்னக்கலப்பன் மலைகளைச் சுற்றிப் பார்த்தான். அந்த மழையிலும் நடுக்கம் தரும் குளிரிலும் தொழிலாளர்கள் நனைந்து தோய்ந்த வண்ணம் கொழுந் தெடுத்துக்கொண்டே நிற்கின்றுர்கள். நனையும் அவர்களின் இருதயங்களும், கைகால்களும், உடலும் இரகசியமாக நடுங்கும். அட்டை கள் மொய்த்துக் கொண்டு ஏறி கால்களில் இரத்தம் குடிக்கும்.

கொஞ்ச நேரத்தில் வானம் மக்களை விழுங்கியதைப் போல் சாம்பலான மழை முகில்கள் பரந்து திரையிட்டுக் கிடக்கின்றன.

சின்னக்கலப்பன் தன் நினைவுக்குள்ளேயே இருந்தான்.

வீரமுத்துவுக்கு தனிக் காம்பரா கிடைக்கு மென்ற நம்பிக்கையில் இருந்திருந்து சோர்ந்து போய் சென்ற மாதம் பெரிய துரையிடம் வாய்விட்டுக் கேட்டான். பெரியதுரை 'காம்பரா எங்கேயிருக்கிறது?' என்று கேட்டு அவனை விரட்டி விட்டான். ஆனுலும் காம்பராவொன்று பெறுவதில் கொண்ட உறுதி தளரவில்லை. தன் பக்கமுள்ள நியாயத்தில் அவனுக்கு நல்ல நம்பிக்கை. கண்ணம்மாவுக்கு வாக்குறுதி கொடுப்பதற்கும் அதுதான் ஆதாரமாக அமைந்தது.

சும்மா கண்களை அசைத்த அவன் பார்வையில் பிள்ளைக் காம்பரா சுவரில் பெரிய எழுத்தில் எழுதி ஒட்டப்பட் டிருந்த வாசகம் பட்டது. அதை எழுத்துக் கூட்டிப்படித் தான். உறுதியுடனிருங்கள், தியாகம் எதற்கும் அஞ்சாதீர் கள்; வெற்றியை வென்றெடுக்க சகல கஷ்டங்களையும்

கடவுங்கள். படித்ததும் உணர்வுகள் வீறுபெற்றன. ஒரு மாதத்திற்கு முன் நடத்திய ஒரு நாளைக்கு ஒரு ரூபா சம்பள உயர்வுப் போராட்டம் தோல்வி. தொடர்ந்து போராடி ஞல் இறுதி வெற்றி நமதே, என்பதை உள்ளத்தில் பதித்துக் கொண்டான்.

துரை காம்பரா கொடுக்க மறுத்த அன்று, அவன் தோட்டத் தொழிற் சங்கத் தலைவர் அண்ணுமலை யிடம் ஆலோசனை கேட்டான். அவர், "வீரமுத்து தொடர்ந்து கேட்டு தொல்லைப்படுத்தனும். இந்தப் பிரச்சினை உங்க ளுடையது மட்டுமல்ல; சகல தோட்ட தொழிலாளர்க ளுடையதும் தான். நம்மை யெல்லாம் ஏதோ தேசத் துரோகக் கைதிகளைப் போல் இருட்டறையில் அடைச்சி வச்சிருக்குராங்க. இதை எதிர்த்து பெரும் போராட்டமே நடத்தணும். நம்ம சங்கம் தொழிலாளர்களுக்கு வசதி யான வீடு கட்டிக் கொடுக்கணும் என்ற கோரிக்கையை வைச்சு போராட்டம் நடத்த யோசிச்சுக்கிட்டிருக்கு. நீங்கதான் தொடங்கி வைக்கணும். நீங்க விடாதீங்க. பின்ஞல் நாங்க இருக்கிருேம்." என்று கூறிஞர். அது அவ னுக்குப் பரம திருப்தி. அவ்வார்த்தைகள் அவனுக்குப் பக்கபலமாக இருந்தன.

அவன் வீரமுத்துவிடம் தனக்குள்ள வாஞ்சையை வெளிக் காட்டிக் கொள்வதில்லை. தன்னைப் போல் நீண்டு வளர்ந்த மூக்கும் கறுத்து நீண்ட புருவங்களும், நடையும் அமைந்து தன்னுடைய மறு உருவமாகப் பிறந்திருக்கிருன். இப்போது இருபத்திஞலு வயது ஆகிவிட்டது. அவ னுக்கு விரைவில் திருமணம் முடித்து விட வேண்டும், என்ற ஆவல் கண்ணமாவிலும் கூட அவனுக்குத்தான் இருக்கிறது.

அதை அவன் யாரிடமும் கூறிக்கொள்வதில்லை.

தங்கை வீட்டில் ஜானகி வளர வளர தன் முன்ஞல் வீர முத்து வளர வளர இருவரையும் கண் பூரிக்கப் பார்த்து வந்த அவனுக்கு இருவரையும் இணைத்து வைக்கவேண்டும் என்ற ஆசையும்வளர்ந்துதான் வந்தது. இந்த ஆசையின்

ஊடாக நூலிழைபோல் ஒரு உணர்வு ஓடிக் கொண்டிருந் யது. கலியாணம்முடிந்தபின் அவர்கள் சுதந்திரமாக, மன தில் எந்த நெருக்கடிகளின் பீதியுமின்றி தனிமையில் வாழ வேண்டும். தான் அனுபவித்த துன்பங்கள், தோட்டத்தில் கசப்பான அனுபவங்கள் தன் மகனுக்கு விளையக் கூடாது. அந்த சூழ்நிலையை அவன் அடியோடு வெறுத்தான்.

ஆழ்ந்த உணர்வுகளின் மயமாக இருந்தஅவன் கிழக்குத் திசையில் தெரியும் மலையுச்சியை நோக்கினன்.

மழை ஓய்ந்து ஒரு பக்கத்தால் மலைகளின் முகங்கள் தெரிய வானம் வெளுத்துக் கொண்டிருந்தது.

இன்னெரு பக்கம் மலையுச்சியில் இருந்து உருண்டு வரும் கர்ப்பிணியான மழை முகில்கள் தேயிலைக் கொழுந்துகளின் கொழு கொழுப்பில் விருப்புற்று கீழ் நோக்கிச் சரிந்து அவற்றின் முகங்களை வருடின. வருடி வெற்றி கொண்டு ஆசை மீறி அவற்றின் மீது விழுந்து புரண்டு கொள் கின்றன.

மலையில் வேலை செய்யும் தாய்மார்களுக்குத் தண்ணீர் கொண்டு போய் கொடுத்துவிட்டு சிறுமிகளும் பையன் களும் இரண்டு மூன்று பேர்களாக வந்து கொண்டிருந்தார் கள். தலையில் கயிறு போட்டு முதுகில் தொங்க விட்ட குட்டிச்சாக்குள் போத்தல்களில் இருந்தன. வயது வந்தும் தோட்டத்தில் பேர் பதியாத வாலிபப் பையன்கள் பிள் ளைக் காம்பரா பக்கம் கூடி நின்று ஒருவரை ஒருவர் ‘கில்லாரி’ பண்ணிக் கொண்டிருந்தார்கள். சிலர் பக்கத்தி லுள்ள வாசக சாலைக்குள் பேப்பர் படித்துக் கொண்டிருந் தனர்.

சின்னக்கலப்பன் இமைகளை மூடி மூக்கடிப் பள்ளங்களில் கைவிரல்களால் அழுத்தித் தடவினன். கண்களுக்குள் வீரமுத்து நிற்கிறன். அவனருகில் ஜானகி நிற்கின்ருள். இரு வரும் கைகோர்த்து திருமணக் கோலத்தில் மிகப் பொலி வாக காணப்படுகின்ருர்கள். முகத்தில் எதிர்காலப் பீதி யில்லை. கவலையில்லை. சிட்டுக் குருவிகளின் சுதந்திரக் கோலத் தில் அவர்களிருவரும் ஒரு தனிக் காம்பராவில் குடித்தனம்

நடத்தப்போகிறுர்கள் என்ற அலேப்பான எண்ணம் ஊடுருவு கின்றது.

திடீரென்று நிதானித்துக் கண் விழித்தான். அவ்வள வும் அவனது ஆசையின் பிரதிபிம்பங்கள். அடிமன உந்துதல் கள். தோட்டத்தில் நடக்கும் கல்யாணங்களுக்குச் சென்று அவர்களே வாழ்த்திவிட்டு மட்டும் வருவதில்லே. அவர்கள் தனிக் காம்பராவில் வாழ்க்கை நடத்தப் போகிறுர்களா? அல்லது பெற்ருேர்களுடன் ஒரே காம்பராவில் அடைந்து கிடக்கப் போகிறுர்களா? என்று விசாரிப்பான். அவர்கள் மேல் அனுதாபமும், அந்நிலேயில் வாழும் தம் வாழ்வுக்கு அத்தோட்டத்தில் உழைப்பதைத் தவிர, தாங்கள் செய் கின்ற குற்றம் எதுவுமில்லே என்பதை எண்ணி ஆத்திரமும் கொள்வான். சில வேளேகளில் தன்பாட்டில் இருந்து தூஷண வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருப்பான்.

எண்ணங்களின் ஆழத்தில் தன்னே உட்படுத்தி இருந் தான். நேரம் சென்றது தெரியவில்லே. பக்டரியில் பன்னிரெண்டு மணிக்குச் சங்கு ஊதியதும் அவனுக்குக் கேட்கவில்லே.

பக்டரியில் வேலே விட்டு வீரமுத்துவும், அவனேடு வேலே செய்யும் பழனியும் அவசரமாக லயத்தை நோக்கி மலேப்படி களில் நடந்துகொண்டிருந்தார்கள். வீரமுத்து காற்சட்டை யும், சேட்டும் அணிந்து தலேயில் துண்டும் சுற்றி இருந்தான். சேட்டைப் பூட்டிக் கொள்ளாமல் நெஞ்சு தெரியவிட்டிருந் தான். பழனியும் அவனேப் போலத்தான். பழனி எந்த நாளும் எங்கேயும் சிவப்புச் சேட்டுத்தான் அணிந்திருப்பான். சிவப்புக் கொடிச் சங்கத்தில் சேர்ந்த நாள்முதல் அவன் அப்படித்தான்.

மலேயில் வேலேவிட்டு வந்த பெண்களும் அவசரமாக காலே எட்டி எட்டி வைத்து லயத்தை நோக்கி வந்தார்கள். அவர்கள் அரையில் படங்குச் சாக்கைச் சுற்றிக் கட்டி, தலேயில் வெள்ளேத் துண்டும் போட்டிருந்தார்கள். மழையில் நனேந்த அவர்களின் உறுப்புகளும் உடைகளும் பின்பு எறித்த வெயிலில் காய்ந்துவிட்டன.

“அண்ணே உங்க மகென் வீரமுத்து அந்தா போருனே !”

மாலே கட்டிக்கொண்டிருந்த பண்டாரம் கத்திச் சொன்னுன்.

“ஆமா, ஆமா !”

சின்னக்கலப்பன் தனக்குள் சொல்லிக் கொண்டான். பண்டாரத்திற்குக் கேட்கவில்லே. அவன் வெற்றிலேச் சக்கை யைக் கையில் எடுத்துத் தூர எறிந்தான்.

“எப்ப நமுனகுலேயில் இருந்து வந்தீங்க, ஏ, உக்காந்துக் கிட்டிருக்கீங்க? வாங்க! ரொட்டி கிடந்திச்சே. சாப் பிடல்லேயா ?”

மலேயில் இருந்து வந்த அவனுடைய மனேவி ஆருயி கணவனேக் கண்டதும் வந்தவீச்சில் கூறிவிட்டு நடந்தாள். அவள் பின்னுல் நட்சத்திரமும் கொழுந்துக்கூடையுடன் சென்ருள்.

“இல்ல !”

அவனுக்குப் பசியாகவிருந்தது. காலேயில் ஒன்றும் சாம்பிடவில்லே. முகத்தை முதுகில் போட்டிருந்த துண்டால் துடைத்துவிட்டு எழுந்து அவள் பின்னுல் நடந்தான்.

சின்னக்கலப்பன் இருக்கும் லயம் அக்குன்றின் கிழக்குப் பக்கத்திலுள்ள பள்ளத்தில் இருக்கிறது.

## 2

மகன் வீரமுத்துவும், அவன் மனேவியும் கலியாணம் முடிந்து புதிய பொலிவும், மகிழ்ச்சியும் முகங்களில் வழிய தமது கலியாண வாழ்க்கையை நடத்துவதற்கு தான் கட்டிய புதிய வீட்டில் சோடிப் புருக்களேப்போல் புகும்பொழுது பார்த்துக்கொண்டு நின்று தான் நினேத்த காரியத்தை திருப்தியாக முடித்துவிட்ட மன நிறைவினுல், சந்தோஷம் பொறுக்க முடியாமல் பாட்டுப் படிக்கும் வேளேயில் சின்னக் கலப்பனின் நித்திரை முறிந்தது. நித்திரைச் சோம்பலினுல் ஒடுக்கி வயிற்ருேடு இணேத்திருந்த கால்களே நீட்டினுன். அவை கால்பக்கமாக இருந்த விருந்தையில் மோதிக் கீழே

விழுந்தன. கைகள் சுவரில் மோதிக் கொள்ள அவைகளை மார்போடு இறுக இணைத்துக் கட்டிக் கொண்டான்.

விடியற்பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. மலைகளின் கூனிய முதுகுகளை விட்டு இருளின் போர்வை அடிவாரங்களை நோக்கிச் சரிந்து கலந்து கொண்டிருந்தது.—

அவன் காம்பரா வாசலோரம் சுவர் மூலைக்குள் தலையை வைத்துப் படுத்திருந்தான். கனவு முறிந்ததும் கனவில் நிறை வேறிய ஆசைகள் வாழ்வில் பெரும் பிரச்சினையாய் மனதைச் சுண்டி நெருடிக் கொண்டிருந்தது. அந்த நெஞ்சோடு அவன் கண்விழித்துக் கிடந்தான்.

வீரமுத்துவுக்கு பாக்கு மாற்றி முடிந்துவிட்டது. ஒரு கிழமைக்கு முன், அன்று ஒரு நல்ல நாள். பங்காளிகள் வந்தனர். தொழிற்சங்கத் தலைவர் கமிட்டி அங்கத்தவர்களும் வந்திருந்தனர். பெண் வீட்டாருக்காக ஜானகியின் மாமனும் நமுனகுலைத் தோட்டத்தில் உள்ள இன்னும் சில வயது போன கிழவர்களும் வந்திருந்தனர். மிக நெருங்கிய உறவாக இருந்தபடியால் காரசாரமான பிரச்சினைகள் எதுவும் எழவில்லை. இன்னும் இரண்டு மாதங்கள் முடிந்து வைகாசியில் திருமணம் நடக்கவேண்டும். அப்படித்தான், பாக்கு மாற்றிய அன்று சின்னக்கலப்பன் கூறினான். பாக்கு மாற்றிய பின் அடுத்துவரும் முகூர்த்தத்தில் திருமணத்தை முடித்து விடுவதுதான் பெரும்பாலும் வழக்கம். ஆனால் சின்னக் கலப்பன் ஒற்றைக்காலில் நின்று இரண்டு மாதத் தவணை கேட்டான். மூன்று முறை பாக்கு மாற்றுவதைப்பின் போட்டு வந்த அவனுக்கு இம்முறை கண்ணம்மாவின் அழுகைக்கு முன்னால் மறுத்து நிற்க முடியவில்லை. இனிக் குறித்த மாதத்தில் கல்யாணம் முடியவேணும். முடியும் என்று அவன் நம்பினான். அது, கல்யாணத்தை நடத்துவது ஒரு பிரச்சனை அல்ல. வேணுமானால் நாளைக்கும் வைக்கலாம். ஆனால் கல்யாணம் முடிந்ததும் அவன் குடும்பமும் நெரிசல் படும். அதே காம்பராவில், வீரமுத்துவும் ஜானகியும் வந்து சேர்ந்து குடும்பம் நடத்துவதை அவன் அடியோடு வெறுக்கின்றான். வீரமுத்து தனிமையாக வாழவேண்டும். தனிக்

குடித்தனம் நடத்தவேண்டும். அவன் தன் மனைவியுடன் நிம்மதியாக படுத்துத் தூங்குவதற்கு ஒரு துண்டு வேண்டும். அங்கே அவர்கள் தம் இளமைத் துடிப்புக்களை சுதந்திரமாகப் பரீட்சித்து மகிழவேண்டும்.

வீரமுத்து சென்ற கிழமை நமுனகுலேக்குச் சென்றிருந்தான். போகும்மோது ஜானகிக்குச் சேலை ஒன்றும் ரவிக்கைத் துணியும் வாங்கிக் கொண்டுபோய் கொடுத்து, அவளுடன் பேசிவிட்டு வந்தான். வரும்பொழுது அவளின் புகைப்படம் ஒன்றை வாங்கிக்கொண்டு வந்து, தானே 'பிரேம்' போட்டு ருக்கிச் சட்டத்தில் கட்டித் தூக்கியுள்ளான். நேற்று அவனுக்கு ஜானகியிடமிருந்து கடிதமும் வந்திருந்தது.

சின்னக்கலப்பனின் கண்கள் இருளில் மறைந்து தூங்கும் அந்தப் படத்தை நோக்கியவாறிருந்தன. இன்று அவனுடைய நெஞ்சத்தின் வேண்டுகோள்கள் அதுதான்.

கனவு கண்டு திடீரென விழித்ததினுல் அவனது இருதயம் சிறிது பலமாக இடித்துக் கொண்டிருந்தது.

பொழுது விடிந்துபோக மழை முகில்கள் மலைகளின் புகைப்பானைகளை உருட்டி இருட்டிக் கொண்டிருந்தன. கடுங்குளிர் வீசிற்று. அது உடலில் உள்ள மயிர்களைச் சிலிர்க்க வைத்தது. நரம்புகளை விறைக்க வைத்துவிடும், அக்குளிர் காற்று, காம்பராவில் உள்ள துவாரங்களைத் தேடி உள்ளே நுழைந்து கொண்டிருந்தது.

அவன் சட்டைச் சேப்பில் கிடந்த பீடியை எடுத்துப் பற்றவைத்துக்கொண்டு, கம்பளிக்குள்ளும் படங்குச் சாக்குகளுக்குள்ளும் புகுந்து குருவி, ஒருவருக்குமேல் ஒருவர் கைகளால் எறிந்து கூட்டி அணைத்தவாறு தூங்கும் தனது மக்களைச் சத்தம் போட்டு எழுப்பினுன்.

"ஏ தங்கச்சி! டேய் மாசிலான், ஏ பொட்டு எழும்புங்க. என்னு நல்லா தூங்கிறீங்க."

அன்று ஞாயிற்றுக்கிழமை. போயாதினம். தோட்டத்தில் வேலையில்லை. மலையில் கொழுந்து எடுக்கும் மனைவி ஆருயி, மகள் நட்சத்திரம், பக்டரியில் வேலை செய்யும் வீரமுத்து, மற்றும் காம்பராவின் இடத்தைப் பிடித்துக்

கொண்டு கிடக்கும் சரவணம், சுப்பிரமணி, முதலிய ஏழு பிள்ளைகளும் எழும்பவேயில்லை.

கிடந்தவாறு அவர்கள் எல்லோரையும் தலையைச் சரித்துப் பார்த்த சின்னக்கலப்பனுக்கு யோசனை தொட்டு விட்டது. சில நிமிஷ நேரம் அப்படியே பேசாமல் கிடந் தான். அப்படிக் கிடப்பதும் மனதுக்குச் சௌகரியப் படாததினால், அவன் பீடிப் புகையை விட்டவாறு சோம்பல் முறித்துக்கொண்டு எழுந்திருக்க முயன்றான். மேலே நீட்டிய கைகள் கொடியில் போட்டிருந்த துணிகளில் முட்டிற்று. கால்களை உளைவெடுத்து நீட்டியவாறு எழுந்திருந்து கொண் டான். நீட்டியிருந்த கால்களுக்கும் மறுபக்கச் சுவருக்கு மிடையில் இரண்டடி தூரம் இடைவெளிதானிருந்தது. உடலின் நித்திரைச் சோர்வு தட்ட திரும்பவும் சரிந்து படுத்துக் கொண்டான்.

கண்களால் காம்பராவின் பரப்பைச் சுற்றிப் பார்வை யிட்டான். இருள் நிறைந்து வழிந்தது.

சாக்குக் கட்டிலின் நடுவில் முழங்கால்களும், தலையும், இணைந்தவாறு வடக்கயிற்றைப் போல் சுருண்டு கொண்டு மனைவி ஆராயி கிடந்தாள். அவளுக்குச் சுகமில்லை. இரும லும் காச்சலும். சுவரோடு கிடக்கும் அந்தக் கட்டிலின்கீழ் மலையில் புல்லு வெட்டப் போகும் மாசிலான் கிடந்தான். குமரான நட்சத்திரமும், அவளின் தங்கை பொட்டுவும் தாயின் கட்டிலுக்குப் பக்கத்தில் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு ஒதுங்கிக் கிடந்தனர். மற்றப் பையன் கள் மூன்று பேரும் காம்பராவின் நடுவில் கண்விழிக்காத நாய்க்குட்டிகளைப் போல ஒருவரோடு ஒருவர் பிணைந்து கைகளை எறிந்து உறங்கிக் கொண்டிருந்தனர். வீரமுத்து முன் தோப்பில் விறகுகளுக்குப் பக்கத்தில் முகங் குப்புறப் படுத்திருந்தான். அவன் நல்ல தூக்கம்.

காம்பரா இருளை நிரந்தரமாக அமுக்கி வைத்திருக் கின்றது. அந்த அடிமை இருளின் பரப்பில் சிறை பிடிக்கப் பட்ட பட்டாளக்காரரைப் போல குமைந்து நெருங்கி இருள் துண்டுகளாக அவர்கள் எல்லோரும் படுத்திருக்கின்றார்கள்.

அவர்களோடு சாமான் வைக்கும் விருக்கியும், அரிசிச் சாக்கும், மற்றும் தட்டுமுட்டுச் சாமான்களும் மூலைக்கு மூலை இடம் பிடித்துக் கிடக்கின்றன.

அவர்கள் விடும் உயிர் மூச்சுக்களில் இருந்து சின்ன இரைச்சலுடன் வந்து கொண்டிருக்கும் கெட்ட அனற் காற்று காம்பராவின் வெளியை வெப்பமாக்கி விழித்திருக்கும் சின்னக்கலப்பனின் முகத்தை மிளகாய் உரசிவிட்டதைப் போன்று எரிவை ஏற்படுத்துகின்றது. அவன் கண்களை இறுக மூடி விழித்துக்கொண்டு கிடந்தான்.

இன்னொரு உயிர் புகுவதற்கு காம்பராவில் இடம் இல்லை. நிதான வுணர்வுடன் காம்பராவையும் அதற்குள் மந்தைகளைப்போல் அடைக்கப்பட்டு குவிந்து கிடக்கும் உழைக்கும் உயிர்களையும் பார்க்கும்போது தம்மேல் அனுதாபமும் "இதுவும் ஒரு வாழ்வா?" என்ற எண்ணமும், வெறுப்பும் அவன் மனதில் சூடான ஜுவாலை வீசிற்று. இருதயம் சுட்டுக்கொண்டது. இந்த உணர்வு சின்னக்கலப்பனுக்கு அடிக்கடி எழுந்து மடியும்.

அவன் திருமணம் செய்யப் போகும் மகனை நினைத்துப் பார்த்தான்.

தானே தன் மனைவியுடன் தாம்பத்திய உறவுகொள்ள முனையும் நாட்களில் தனக்கேற்படும் கஸ்டத்தையும், மற்ற லயங்களில் உள்ளவர்களின் அனுபவங்களையும், அவை ஏற்படுத்தும் மனநிஸ்டூரங்களையும் அவன் அறிவான். அந்தக் காம்பராவில் வீரமுத்துவும் கலியாணம் முடித்துவந்தால்?... பருவமடைந்த பொட்டு, நட்டத்திரம், வயதுவந்த பயலுகள்'...ஏற்படும் அவஸ்தைகளையும், சங்கடங்களையும் அவனால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. மனம் அருக்குளித்தது. வாய்க்குள் ஏதோ புறுபுறுத்துக் கொண்டான்.

அவன் விட்ட பெருமூச்சு குளிர்காற்றுக்குச் சூடேற்றி இதமளித்தது. புகார் மூட்டம் கட்டியிருந்து வானம் வெழுந்திருந்தது. சம்பள நாளில் தொழிலாளியின் முகம் போல அது திடீரென இருண்டு விடும்.

சின்னக்கலப்பன் வெளியில் சத்தம் சந்தடி கேட்கத் தொடங்கியதும், இனியும் தூங்கக்கூடாது என்று கையை

யூன்றி எழுந்திருந்தான். சிட்டுக்குருவிகள் கீச்சிட்டுப் பறந்து வந்து ரூக்கிகளில் இருந்தன. அவன் கழுத்தை நீட்டி வாசலால் வீரமுத்துவை நோக்கினான். அவன் கம்பளியால் முகத்தை மூடிக்கொண்டு மறுபக்கம் புரண்டு கிடந்தான். அவனுடைய காலில் ஒரு கோழி வந்து ஏறி நின்றது.

''டேய் எந்திரடா வீரமுத்தா, விடிஞ்சப் பொறகு என்னடா தூக்கம்?''

சின்னக்கலப்பனின் அதட்டுக் குரலில் எல்லோரும் அருண்டு எழுந்தனர். அருளும்போது ஒருவரை ஒருவர் கைகளாலும் கால்களாலும் அடித்தும், இடித்தும் கொண்டனர். நித்திரைச் சோம்பலில் வீரமுத்து எழுந்து கொட்டாவி விட்டு அணிந்திருந்த மலைக்காட்டில் பீடியைத் தேடினான்.

''ச்சீ, நாயே ஓடிப்போ'' வீரமுத்து பக்கத்திலே கிடந்த விறகுக்கட்டையை எடுத்து ஸ்தோப்பில் கிடந்த நாயை வெளியில் விரட்டினான். அவனுக்குத் தூக்கம் முறிந்து போன எரிச்சல் ஒரு பக்கம்.

''மனுசனுக்கே இடமில்லாமே இருக்கையில் நீயும் வேறே இங்க வந்து கெடந்துகிட்டு'' என்று கூறிக் கொண்டு வெளியில் வந்து நின்ற நாய்க்கு விறகுகட்டையால் எறிந்து விட்டான்.

''அதை ஏன் விரட்டுர, நம்மை நம்பியிருக்கிற சீவாத்து'' சின்னக்கலப்பன், வெளியில் சென்று முதுகை வளைத்து அனுங்கும் நாயைப் பார்த்த வண்ணம் சன்னமான குரலில் கூறினான்.

குளிர்காற்று ஜிலுஜிலு என வீசிக் கொண்டிருந்தது. பொட்டு எழுந்து குலைந்த கூந்தலை ஒதுக்கிக் கொண்டு ஸ்தோப்புக்கு வந்து ''காலை ஒதுக்கி வைச்சுக்க'' என்று அவனிடம் கூறிவிட்டு தேநீர் வைக்க அடுப்பருகில் குந்தினாள். வீரமுத்து காலை இழுத்து பின்னுக்கு நகர்ந்து விறகோடு சாய்ந்து பீடியைப் புகைத்துக் கொண்டிருந்தான். கையில் 'சுவீப் டிக்கற்' இருந்தது. அதன் இலக்கத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அது ஒரு பைத்தியம். ஒரு

கிழமையும் தவறவிட மாட்டான். அவனைப் போல் 'சுவீப்' பைத்தியங்கள் தோட்டத்தில் பல இருக்கின்றன. குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க முடியாதென்பதை அவன் அறிந்திருந்தாலும், சுவீப்பை அரசாங்கம் நடத்துவதால் இது அதற்கு அப்பாற்பட்டது என்று நம்பினான்.

சின்னக்கலப்பன் காம்பராவின் வாசல் வழியாக வெளியே தீனி பொறுக்கும் சிட்டுக்குருவிகளைப் பார்த்தவாறு கேட்டான்.

"நீ தொரகிட்ட காம்பரா கேட்டியா?"

"இன்னுமில்ல.."

சின்னக்கலப்பனுக்குச் சரியான ஒரு கோபம் வந்தது. சிறிதுநேரம் ஒன்றும் சொல்ல மனம் படாமல் பேசாமல் இருந்தான். உதடுகள் ஆடிக் கொண்டிருந்தன.

"இன்னும் ஏண்டா கேக்காம இருக்கிற. கலியாணம் முடிஞ்சா எங்கின படுத்துத் தூங்கப்போற?"

அவன் குரலில் நச்சரிப்பு இருந்தது.

"நேத்துக் கேக்கப் போனேன் தொர இல்ல. நீதான் மிந்திக் கேட்டியே." ஒரு நம்பிக்கை இழந்து வெறுத்துப் போன தொனியில் சொன்னான்.

"ஒனக்கு காம்பரா வேணுமா மவனே? கேக்காமத் தருவானா?" அவன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த தாயும் கட்டிலில் கிடந்தவாறு இருமி இருமி சொன்னாள்.

"அது மிந்திடா! இப்ப நீ கேளு. இனிமே ஒன் கலியாணத்தைத் தள்ளிப்போட ஏலுமா?"

சின்னக்கலப்பன் ஆறுயி கூறி முடிக்குமுன் சினங் கொண்டு கத்தினான். வீரமுத்து பேசாமல் இருந்தான். சில வினாடிகளின் பின் தன் சுபாவமான இளைத்த குரலில் சொன்னான்:

"ஒனக்கும் சொன்னதுதான் எனக்குஞ் சொல்லுவான் கொரங்குப் பய."

வெறுப்பாக முகத்தைச் சுளித்தவாறு விருக்கி நீக்கல்களால் மழை முகில்கள் உருளும் மலையுச்சியைப் பார்த்துக் கொண்டே இருந்தான். அவர்கள் வேலை செய்யும் தங்கமலை

தோட்டப் பெரிய துரை வெள்ளைக்கார பெய்லி குறுகலான உருவம். அவனது வெருட்டும் முகத்தை வீரமுத்து எண்ணினான். "முந்தாநாள் பெருமாள் தோட்டத்திலே வெறகு வெட்டிப்புட்டான்னு அவனையும் அவங்க குடும்பத்தையும் தோட்டத்தில் இருந்து வெளியே போறதுக்கு பற்றுச்சீட்டுக் கொடுத்திட்டான். இந்த தொர வேசமவன் பெருமாள் இந்தத் தோட்டத்தில்தான் பொறந்தான். அவங்கள வெளியில போட்டா எங்க போவாங்க? தோட்டத்தில இருக்கிறவன் தோட்டத்திலே வெறகு வெட்டாம வேற எங்க போவான்? களவில வெட்டிப்புட்டானும் மண்ணாங்கட்டி. இவங்க செய்யிற களவுக்கு?..." நினைக்க நினைக்க அவனுள்ளே கோபம் பற்றி எரிந்தது.

'நம்ம சங்கம் நடவடிக்கை எடுத்துக்கிட்டுதானே இருக்கு' என்று எண்ணி மனம் அமைதி கொண்டது.

சின்னக்கலப்பன் எழுந்து ஸ்தோப்புக்குள் வந்து நின்று சொன்னான். "நீ கேளு அவன் என்னதான் சொல்லப் போறான், பாப்பம். நான் கலியாணம் செஞ்சிக்கப் போறென். இப்பவுள்ள நம்ப காம்பராவில் இருக்க முடியாது. இப்பவே ஒன்பது உசிருகள் அடச்சிருக்கு. அதுகளுக்கே மூச்சுவிட ஏலாம இருக்கு. நானும் கலியாணம் செஞ்சுகிட்டு எப்படிங்க தொரை இருக்கிறது? அப்டீன்னு பணிவா கேளு. என்னா?"

வீரமுத்து யோசித்துக் கொண்டிருந்தான்.

"ஒங்களுக் கென்னண்ணே, நீங்க கேட்க வேண்டியது தானே?" என்று உள்ளே இருந்து கொண்டு நட்சத்திரமும் கூறினாள்.

"ம், கேக்கிறேன்."

உயர்த்தி வைத்திருந்த தன் முழங்காலை இடது கையால் தடவிய வண்ணம். தலையை அசைத்தவாறு சொன்னான்.

"மறந்து போவாம நாளைக்குக் கேளு."

சின்னக்கலப்பன் சிறு மனத்திருப்தியுடன் தன் நரைத்த தலைமயிரைக் கோதிக்கொண்டு வெளியில் வந்தான். குளிர் காற்று மலை முகடுகளிலிருந்து வந்து அலைவீசிக் கொண்டிருந்

தது. லயத்துக் குழந்தைகள் லயத்தின் வாசலிலுள்ள லயக் கானின் இரு பக்கங்களிலிருந்து மலம் கழித்துக் கொண்டிருந் தனர். நாய்கள் அவர்களுக்குப் பின்னல் நின்று அதை நக்கிக் கொண்டு நின்றன.

நீரின் மேல் மட்டத்திற்கு வந்து முகத்தை நீட்டிச் சுவாசிக்கும் கடல் ஆமைகள்போல் நித்திரை விட்டெழுந்த தொழிலாளர்கள் பலர் தம்தம் காம்பரா வாசல்களுக்கு வந்து நின்று, காற்றைச் சுவாசித்து, மலையிடைவெளிகளைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

சின்னக்கலப்பன் தன் காம்பராவின் முன்னல் வெறுமை யாகக் கிடக்கும் ஒரு துண்டு நிலத்தைப் பார்த்துக்கொண்டு நின்றான். அவன் அத்துண்டு நிலத்தைப் பார்க்கும்பொழுது தோட்டத் துரையின் அதிகாரங்களையிட்டு அவனின் மனத் தில் கலந்துபோன பயச் சலனத்தையும் அமுக்கிக்கொண்டு ஒரு தனித்த உரிமை உணர்வு புரண்டு கொண்டிருந்தது. லயக்கானை கடந்து சென்று அந்த நிலத் துண்டில் நிலத்தை நோக்கியவாறு உலாவி, உலாவி, வந்தான். சிறிது நேரத்தில் ஏதோ ஒரு முடிவுடன் திரும்பி ஸ்தோப்புக்குள் தலையை நீட்டி வீரமுத்துவிடம் சொன்னான்.

"நாளைக்கு மறந்து போவாமே கேளு! என்ன?"

கையிலிருந்த "சுவீப்டிக்கற்"றின் இலக்கத்தை சுவரில் கரித்துண்டால் எழுதிக் கொண்டிருந்தான் வீரமுத்து. அந்தச் சுவரில் அவன் எழுதிய பல இலக்கங்கள் உண்டு. அவன் தகப்பன் தன்மேல் கொண்டுள்ள வாஞ்சையை உள் மனதில் எண்ணிக்கொண்டு தகப்பனை நோக்கிச் சொன்னான்.

"நா தொர கால புடிச்சினாலும் கேக்கிறேன்" அவன் உதடுகள் அப்படி வார்த்தைகளை உதிர்த்தாலும் உள் மனதில் 'நான் என்ன நாயா, தொர காலைப் புடிக்க—சீ' என்ற வெறுப்புணர்வு புகைந்து கொண்டது. அந்த உணர்வு களோடு சுவரில் நகத்தில் கிறுக்கிக் கொண்டிருந்தான். அவன் கண்கள் அசைந்து சுவரில் சற்று மேலே ஒட்டப் பட்டிருக்கும் நோட்டீஸ்களில் விழுந்தன. அவை சம்பள உயர்வுப் போராட்ட காலத்தில் சிவப்புக் கொடிச் சங்கத்

தினல் கொடுக்கப்பட்டவை. அவன் அவைகளை அதில் ஒட்டி வைத்துள்ளான். 'சம்பள உயர்வுக்காகப் போராடும் தோட்டப் பாட்டாளிகளே' என்னும் நோட்டீஸில் பெரிய எழுத்துக்களில் உள்ளவைகளை அவன் மனம் படித்துக் கொண்டிருந்தது.

''மலைகளில் ஏறி காட்டை அழித்து வளம் பெற்ற நாடாக்கி நெற்றி வியர்வை சிந்தி நிலத்துக்கு இரத்தமாக்கி தேயிலை ரப்பர்த் தோட்டங்களை உருவாக்கி இந்நாட்டின் செல்வத்தின் பெரும்பகுதியை உற்பத்தி செய்யும் தோட்டப் பாட்டாளிகளே!''

''இலங்கையில் இன்று மிகவும் குறைந்த சம்பளத்திற்கு, அவல நிலையில் மோசமான வாழ்க்கை நடத்துபவன்தான் தோட்டத் தொழிலாளி. இருக்கும் இடமோ, இருள் குடியிருக்கும் சிறு காம்பரா! அதுவும் துரை தயவில்; சாப்பாடோ சத்தற்றது. பிள்ளைகளுக்கோ ஒழுங்காகப் படிக்க வசதியில்லை. வயது சென்றவர்களுக்கோ பென்சன் இல்லை. மனித உரிமைகளே இல்லை.''

''காலம் காலமாக காங்கிரசில் இருந்தீர்கள். தலைவர்கள் வந்தனர்! மலர் மாலைகள் பெற்றனர்! உங்கள் உரிமைகளைப் பெற்றுத் தருவோமென ஊர் கேட்கக் கூவினர். இந்தியனுக்கு தனி ஸ்தாபனமென்று சிங்கள மக்களிடமிருந்து பிரித்து வைத்தனர். இதனால் கண்ட பலன்தான் என்ன?''

''அண்ணை எத்தனை முறைதான் இந்த நோட்டீஸ்களைப் படிக்கிறீங்க'' என்று அடுப்பருகிலிருந்த பொட்டு கேட்டாள். அவளைச் சற்றுநேரம் மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்து விட்டு அவன் சொன்னன். ''தொழிலாளி வர்க்கத்திற்கு விடுதலை வேணும். அதான் படிக்கிறேன்'' என்று கூறிவிட்டுத் திரும்பிய அவன் கண்களில் அந்த நோட்டீஸின் கடைசி வரிகள் உறுத்திக் கொண்டிருந்தது.

''உழைப்பவர்களுக்குத்தான் இவ்வுலகம் சொந்தம்; போராடுவோம், வெற்றி பெறுவோம்.''

மலைகளில் சிறு துளிகள் சிறுகலாகத் துமித்துக் கொண்டிருந்தன.

ஏழு மணிக்கு முன்னுக பிரட்டுக்களத்திற்குப் போவதற்காக அவசரப்பட்டுக்கொண்டிருக்கும் தொழிலாளர்கள் இன்று ஆறுதலாகத் தங்கள் வாழ்க்கையைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

## 3

பெரிய துரையிடம் காம்பரா கேட்பதில் வேலை இல்லை என்று திட சித்தமாக இருந்த வீரமுத்து, தகப்பன் அதுபற்றி அழுத்திக் கூறிய பின்பு தனியாக இருந்து யோசித்துப் பார்த்து கேட்கத்தான் வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். நூற்றுக்கு நூறு வீதம் நியாயமானதையே கேட்கிறோம் என்ற உள்ளுணர்வும் காம்பரா கிடைத்து விட்டால் என்று எண்ணும்போது எழும்பும் ஆனந்த சலனமும் அவனுக்கு மேலும் ஆவலையும், உறுதியையும் கொடுத்தது. அவனுக்கு நிம்மதியாகத் தூங்க ஆசை இருக்காதா? அந்த நசிந்து போன வாழ்க்கையில் பிறந்தது தொட்டுப் புரண்டு, அதில் பழகிப் போய்விட்டாலும், நிம்மதியான தூக்கம் எப்படியிருக்கும் என்று அவனுக்குத் தெரியும்.

அதன்பின் வீரமுத்துவின் மனம் தூங்கும்போதுத் ஸ்டோரில் வேலை செய்யும் போதும் காம்பராவின் எண்ணம் தினுல் நிறைந்திருந்தது. இதே கவலையுடன் பெரிய துரையை மூன்று நாளாகத் தேடிக்கொண்டிருந்தான். ஆனுல் பெரிய துரை அங்கு இல்லை. அவன் தன் புதிய பென்ஸ் காரில் தன் மனைவியையும், இரு பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு எங்கோ ஜாலியாகப் புறப்பட்டு விட்டான்.

சின்னக்கலப்பன் கலியாண விஷயமாக தன் தங்கையிடம் கலந்து பேசுவதற்கு நமுனகுலவிற்குப் போய் விட்டான். அவனும் சென்று மூன்று நாளாகிவிட்டது. இன்னும் திரும்பி வரவில்லை. அங்கு போகும்போது வீரமுத்துவை அழைத்து இரகசியம் சொல்வதுபோல காம்பராபற்றி நினைப்பூட்டிவிட்டே சென்றுன். சின்னக்கலப்பன் காம்பரா விசயத்தில் எவ்வளவு அக்கறையாக இருக்கின்றுன். அவன் அந்தத்

தேயிலை இருளிலே தன் வாழ்வின் பெரும் பகுதியை வாழ்ந்து முடித்து அனுபவத்தின் களஞ்சியமாக அல்லவா இருக்கிருன்.

தகப்பன் நமுனகுலவில் இருந்து வந்தவுடன் துரையிடம் காம்பரா கேட்டதையும், அவன் அதற்குக் கூறிய பதிலையும் சொல்லியாக வேண்டும். இல்லாவிட்டால் சின்னக்கலப்பன் அவனை அசிங்கமான வார்த்தைகளால் திட்டித் தள்ளுவான். அவன் துரையிடம் காம்பரா பற்றிக் கேட்காமல் இருந்தால் நிசமாக அவனுக்குக் கெட்ட கேந்திதான் வரும். அதை நினைக்க வீரமுத்துக்குப் பயமாகத்தான் இருந்தது.

எல்லா வசதிகளும் கொண்ட இருபத்தி நாலு அறைகளுடன் ஒரு சிற்றரசனின் மாளிகைபோல் அமைந்திருக்கும் பங்களாவில் வாழ்ந்தும் திருப்திப்படாமல் ஓய்வு எடுப்பதற்காக வெளியில் எங்கோ சென்றிருந்த துரை நேற்றுத்தான் தோட்டத்திற்கு வந்தான். அவனுக்குப் பிரயாணக் களைப்பெதுவும் இருக்கவில்லை. எப்படி இருக்கும்? அவன் எல்லா அதிகாரங்களையும், சுகங்களையும் பெற்றுள்ள ஒரு குட்டி ராஜாதான்.

துரை வந்ததை அறிந்த வீரமுத்து ஒப்பீசுக்குச் சென்று அவனைக் காணவேணும் என்பதால் இன்று வேலைக்குப் போகவில்லை. ஒரு நாளைக்கு வேலைக்குப் போகாவிட்டால், அது அந்த மாதத்தில் எப்போதாவது ஒருநாள் வயிற்றிலடிக்கும் என்பதை அவன் உணராமலில்லை. ஆனுல் வேலைவிட்டுப் போனுல் துரையைக் காண முடியாது.

காலை எட்டு மணிக்கு மேலாகிவிட்டது. அவன் தம்பியும் புல்லு அறுக்க சாக்கும் அரிவாளும் எடுத்துக்கொண்டு மலைக்குப் போய் விட்டான். தாய் ஆருயி மட்டும் சாக்குக் கட்டிலில் கம்பளியால் மூடிக்கொண்டு கிடந்தாள். அவளுக்கு இன்னும் சுகமில்லை. வீரமுத்து ஸ்தோப்புச் சுவரில் ஆணி அடித்துத் தொங்கவிட்டிருக்கும் கையளவு முகக் கண்ணுடியில் முகத்தைக் காட்டி தலைசீவிக் கொண்டிருந்தான். அவன் யோசனை யெல்லாம் தகப்பன் சொல்லிவிட்டுச் சென்றதைப் பற்றித்தான் இருந்தது.

''ஆயா, ஆயா நான் ஒப்பீசுக்குப் போயிட்டு வர்றேன்'' என்றான்.

ஆருயி கையையூன்றி தலையைத் தூக்குகிறாள். ''தொரை யோட சண்டைக்குப் போயிடாதப்பா. பணிவாக் கேளு என்ன?'' அவள் குரல் நெஞ்சு இருமலால் கரகரத்தது. பின்பு மெதுவாக எழுந்து சுவர் மாடத்திலுள்ள சாமிப் படங்களைப் பார்த்து கண்களை மூடிச் சிறிது நேரம் இருந்து பக்தியுடன் கையெடுத்துக் கும்பிட்டாள். ''அப்பனே தொர இல்லேனாலும் காம்பரா கொடுத்திடனும். நம்ம மவென் தொல்லை இல்லாமெ வாழணுஞ்சாமி'' என்று நெஞ்சத்தினுல் முனகிவிட்டு கட்டிலில் விழுந்து முடங்கிக் கொண்டாள்.

அவன் தான் பிரேம் போட்டுத் தூக்கிய ஜானகியின் படத்தை கையில் பிடித்து மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்தின்பின் தாய் சொன்ன தற்கு, ''சரி'' என்று கூறிவிட்டு வெளியில் வந்தான். சட்டைச் சேப்பில் கிடந்த பீடி ஒன்றை எடுத்துப் பற்ற வைத்துப் புகையை ஊதியவாறு, அந்த லய ஓரமாக மெது வாகப் போய்க் கொண்டிருந்தான். அவர்கள் இருப்பது அந்த லயத்தின் தொங்கல் காம்பரா.

அவனுடைய தங்கை பொட்டு கொழுந்துக் காம்பரா வுக்கு அப்பால் விழும் சிறிய நீர்வீழ்ச்சியில் இரு பெண் களுடன் குளித்துக் கொண்டிருந்தாள்.

கூதல் காற்று தன் மெல்லிய விரல்களை அசைத்துக் கொண்டிருந்தது. அவன் அந்த லயத்தின் ஒவ்வொரு காம்பரா வாசல்களையும் இலேசாகப் பார்த்துக் கொண் டான்.

சின்ன வயது தொட்டு, விடியற்காலை இருளில் கொழுந்துக்கூடை தூக்கி, மலை ஏறி உழைத்துக் கொடுத்து விட்டு இரத்தமும் சதையும் வற்றி, தோல் சுருங்கி, சிறிய வாழ்க்கை தானும் சரியாக வாழ்ந்ததில்லை என்ற ஏக்கப் பெருமூச்சோடு, தங்கள் எலும்பையும் தேயிலைக்குப் பசளை யாக்கும் காலத்தை எதிர்நோக்கி இருக்கும் கிழவிகள், காம் பரா வாசலுக்கு வாசல் மலைகளைப் பார்த்தவாறு இருக்கின்ற

னர். அவர்களை மனதில் எண்ணிக்கொண்டு மலைப்படிக் கற் களில் ஏறி கோயில் பக்கம் வந்தான். பண்டாரம் இடும்பன் பூசைக்கு ஆயத்தப்படுத்துவதற்காக குடுமி குலைந்து முதுகில் தவழ ஓடியாடித் திரியும் போதே, ''இந்தத் தோட்டத்துப் பயலுக சாமியைக் கவனிக்க மாட்டானுக. கள்ளுத்தண்ணி குடிக்கிறதுக்குன்னு தெனேம் நாட்டுக்குப் போயிருவாங்க. ஆனு சாமிக்கு விளக்குப்போட செப்புச் சல்லிக்கு தேங்கா யெண்ணகூட வாங்கித்தர மாட்டானுக'' என்று சத்தம் போட்டு கத்திக் கொண்டிருந்தான். எனக்கு என்ன வரப் போகுது என்ற முறையில் யாருக்கும் பயப்படாத மாதிரி தன் மனதில் பட்டதையெல்லாம் உரத்த குரலில் கொக் கரித்துக் கொண்டிருந்தான்.

கோயிலுக்கு முன்னுல் உள்ள பிள்ளைக் காம்பராச் சுவரில் கோயிலுக்கீழ் ஆற்றுப் பக்க லயத்தில் இருக்கும் இராகவன் ஏறி நாடிக்குக்கை கொடுத்துக் கொண்டிருந் தான். பிள்ளைக் காம்பராவில் பிள்ளைகளைக் கண்காணித்துக் கொண்டு மாரியாயிக் கிழவி இருந்தாள். மலையில் இருந்து தாய்மார் வரும்வரை குழந்தைகளைப் பராமரிப்பது அவள் பொறுப்பு. அவள் இதைவிட வேறு வாழ்க்கை இல்லையென்று பூரணமாக அறிந்தவள்போல் எந்நேரமும் வெற்றிலை சப்பிக் கொண்டு கலகலப்பாகவே இருப்பாள்.

அவள் வீரமுத்துவைக் கண்டதும் வெற்றிலை குதப்பி வழியும் வாயைப் பிளந்து காரியத்தோடு சிரித்தாள். விழுந்த பல்வெளியால் வாயிலிருந்து எச்சில் நாடியில் ஒழுகியது.

''என்னப்பா வீரமுத்தா, ஒனக்குக் கலியாணமின்னு ஒங்கப்பன் சொன்னுனே உண்மைதானு?''

''ஆமா'' மாரியாயிக் கிழவியின் சிரித்த முகத்தைப் பார்த்து அவனும் சிரித்தான்.

''சரி, சரி, நீ மவராசனு வாழணும்பா!''

அவள் சொல்லிவிட்டு உள்ளங்கையின் அடிபாகத்தில் நாடியில் வழிந்து கொண்டிருந்த எச்சிலைத் துடைத்துக் கொண்டாள்.

அவள் சொன்னதைக் கேட்டு வீரமுத்து சிரித்தான். இராகவன் அவனைக் கண்டதும் இறங்கி தெருவுக்கு வந்தான்.

அவன் பின்னுக்குக் கைகட்டியிருந்தான்.

"இன்னிக்கி வேலை இல்லையா?"

"நான் வேலைக்கி போகல்லே. ஒப்பீசுக்குப் போகணும்."

"என்ன விசயெம்?"

"தொரகிட்டே காம்பரா கேக்கணும்."

"ஓ! ஓ! ஒனக்கு அடுத்த மாசம் கலியாணமில்லயா! சரி, சரி."

"வாறீங்களா பொயிட்டு வருவோம்."

"நா, இதில சும்மாதானே இருக்கிறேன். வாங்க போங்க போவம்."

இருவரும் ஒப்பீசுக்குச் செல்லும் மேல் றோட்டில் நடந்து கொண்டிருந்தனர். இராகவன் கைகளை மார்போடு கட்டிக் கொண்டு தெருவை நோக்கியவாறு வந்தான்.

"எஸ். எஸ். சி. பரீச்சை நல்லாச் செஞ்சியா?"

"எங்கப்பா நல்லா செய்யிரது. சுமாராச் செய்திருக்கு." வீரமுத்து பேசாமல் வந்தான். இராகவனும் பேச்சுக் கொடுக்கவில்லை. நிசப்தம் நிலவிற்று. இராகவன் எதையோ யோசித்துக்கொண்டு வருவதை வீரமுத்து தெரிந்து கொண்டான்.

"என்ன யோசிச்சிக்கிட்டே வர்ருய்? என்ன விசயோம்?"

"தோட்டத்தில இருக்கிறவன் கொஞ்சம் மேல படிக்கிறதுன்ன முடியாத காரியமப்பா. அந்த முறையில்தான் நம்மை வச்சிருக்காங்க."

"ஏம்பா அப்படிச் சொல்லிப்புட்டே?"

"ஒண்ணுமில்லே; நம்ம சம்பளத்திலே தாய் தகப்பன் நம்மைப் படிக்க வைக்க யோசிக்கிறதே நம்ம வயித்துக்கு துரோகம் செய்யிர வேலதான். அப்படியிருந்தும் நாம இருந்து படிக்கிறதுக்கு எங்கே வசதி இருக்கு. நம்ப காம்பரா ஒனக்குத் தெரியும்தானே. அதன் நடுவில நின்னு உண்மை

யிலேயே கையை விரிச்சா இரு பக்கச் சுவரிலேயும் முட்டும். மேலே கையை உசத்திஞலும் அதே கெதிதான். சன்னலே கிடையாது. அதனுள்ளே நம்ம எத்தனே பேரு? நானும் ஒரு மேசையை மூலேயில போட்டுக்கிட்டு எப்படி? இரவிலதான் லயம் கலகலப்பாக இருக்குமே. அந்தச் சன இரைச்சலிலும் சந்தடியிலும் ஒருவனுலே படிக்கத்தான் முடியுமா? இன்ஞென்று, வேலே செய்துவிட்டு அலுப்பில வாரவங்க எட்டு மணிக்கெல்லாம் தூங்கப் போயிருவாங்க. அதன் பிறகு விளக்கு எரிக்கமுடியுமா? நாமெல்லாம் ஏன் இப்படி வாழணும்?''

இராகவன் இவற்றைக் கூறும்போது சிறிது உணர்ச்சி வசப்பட்டிருந்தான். கைகளே விரித்து வீரமுத்துவிடமே நியாயம் கேட்டான். இராகவன் சுபாவமே அதுதான். எந்த நேரமும் தோட்டத்தில் நடக்கும் விபரீதங்களேப் பற்றியே யோசித்துக் கொண்டிருப்பான்.

''ஆமா இதிலென்ன ஆச்சரியமிருக்கு? ஒனக்கு மட்டுமா இப்படி இருக்கு?''

அவன் அமைதியான குரலில் கேட்டான்.

''அது சரி, நீ காம்பரா பத்தி சொன்னியே அதுதான் எனக்கு இந்த நினேவு வந்திருச்சி. வெள்ளேக்காரன் இங்க வந்து முதல்ல கட்டின லயமப்பா நம்ம லயம்.''

கொஞ்சத் தூரம் இருவரும் பேசாமல் நடந்தனர். வீரமுத்து சட்டை சேப்பியிலிருந்து பீடி ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தான்.

''சதாகாலம் மறியல் கிடைத்த குற்றவாளிக்கே சற்று வசதியான வாழ்க்கை இருக்கும்.''

இராகவன் பக்கத்தில் மலே மேட்டிலிருக்கும் தோட்டப் பாடசாலேயை நோக்கியவாறு சொன்ஞன்.

''ஆமா ஒங்களிலே எத்தனே பேரு வேலே செய்யிரிங்க?''

''நாலு பேரு.''

''தொரகிட்டே இன்னெரு காம்பரா கேக்கலியா?''

''கேக்காமயா இருக்கிரோம். நம்ம ஐயா கேட்டது தானே.''

''தொர என்ன சொன்ஞன்?''

''தொரயா, அவன் காம்பரா கேட்டேன்னு பில்லுக் கொந்தரப் பை கொடுத்திடுன்னு கேக்குறான் நாய்மவன்.''

வீரமுத்து இராகவன் முகத்தைப் பார்த்தான்.

''பில்லுக் கொந்தரப்பைக் கொடுத்திட்டு காம்பராவை எடுத்துக்கிறதுதானே?''

இராகவன் வீரமுத்துவை சிரித்துக்கொண்டே பார்த் தான்.

''என்னப்பா நீ தோட்ட நிலம் தெரியாதவன் மாதிரி பேசிறே. வாய் திறந்து காம்பரா கேட்டதற்கு தெண்டமது ஆனு காம்பராவைப்பற்றி பேச்சில்லே. அது கிடையா.''

வீரமுத்து நிமிர்ந்து முன்னல் தூரத்தில் மழை முகில் சோம்பலாக படுத்துத் தூங்கும் மலை உச்சியை நோக்கிய வண்ணம் தலையை மெல்லமாக அசைத்தான். அவர்கள் சின்னத்துரை பங்களாவுக்குத் தெருப் பிரியும் சந்திக்கு வந்த போது, அங்கு இருபது வயதுக்கு மேல் சென்றும் தோட்டத் தில் பெயர் பதியாமல் சும்மா இருக்கும் பழனியாண்டி, சரவணம், பெருமாள், கோவிந்தன் முதலியோர் ஏதோ சர்ச்சையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களோடு மலைக்கு வேலைக்குப் போகும் ராமசாமியும் நின்றான்

''என்னு பெரிய சர்ச்சையா இருக்கு. என்னத்தைப் பற்றி பேசிக்கொண்டிருக்கீங்க?''

அவர்கள் பக்கத்தில் சென்றதும் இராகவன் பழனி யாண்டியின் தோளில் தட்டிக் கேட்டான். அவன் கூறுதற்கு முன் சரவணம் விசயத்தைத் தொடங்கி விட்டான்.

''வேறென்னப்பா நம்ம வேலைக்காட்டு விசயந்தான். நம்ம ராமசாமியை, இந்தா இவனைத்தான் பெரிய தொரை விரட்டிப்புட்டான். ரெண்டுநாள் வேலையுமில்லேன்னு சொல்லிப்புட்டான்.''

''ஏ, என்ன காரணம்?''

வீரமுத்து நின்ன இடத்திலும் இன்னொரு அடி முன் னுக்கு வந்து கேட்டான்.

''என்னப்பா இப்ப வந்திருக்கானே சின்ன தொரே ஒரு பொடிப் பயலு, வறலச அவனு வேலெக்காட்டிலே இவங்

களோடு வேல பார்த்துக்கிட்டு நின்னிருக்கான். இவங்க மழைக்காக தொப்பி அணிந்திருந்தாங்க. சின்னத் தொரை யும் அணிஞ்சிருந்தான். அதினலே பெரிய தொரைக்கு சின்ன தொரையை கண்டுக்க முடியலே.''

பழனியாண்டி இடையில் ராமசாமியின் முகத்தைப் பார்த்தான்.

''அப்புறம்?''

''அப்புறம் என்ன? பெரிய தொர தொழிலாளிங்கல தொப்பியை கழட்டச் சொல்லிட்டாரு. இனிமே வேலைக் காட்டில தொப்பி போட்டுக்கக்கூடாதுன்னு கட்டளை போட்டிட்டாரு.''

ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க சிறு பொழுது மௌனத்தில் நகர்ந்தது.

''அதற்கு ராமசாமியை ஏன் விரட்டினரு?''

''அதுவா இவேன் அதெப்படிங்க தொர. நாம மழைக்கு தொப்பி போட்டுத்தானே ஆகணுமென்னரு; அவன் சும்மா விடுவானு. ராங்கி பேசியாச்சுன்னு விரட்டிப்புட்டாரு.''

இதற்கு என்ன சொல்வதென்று வீரமுத்துக்கும் இராகவனுக்கும் புரியவில்லை. கொஞ்ச நேரம் எல்லோர் முகத்தையும் பார்த்துவிட்டு, ''நாங்க வர்றம்'' என்று நகர்ந்தனர்.

''இது நம்ப தோட்ட ஜனநாயகம்''என்று கனைத்தவாறு பெருமாள் தன் மனச்சோர்வைத் தீர்த்துக் கொண்டான். அதைக் கேட்ட இராகவன் திரும்பி இரண்டடிகள் முன் எடுத்து வைத்தான். முகச் சுருக்கங்களின் நசிவுகள் கடுமை யான உணர்களின் பிரசவ வேதனையை வெளிப்படுத்தின. அவன் சொன்னன்.

''நாம் நேர்மையாகத்தான் ஒழைக்கிறோம். நமக்குத் தான் இலங்கையில் ஆகக் குறைந்த கூலி. படுத்துத் தூங்க நல்ல வீடு இல்லே. மனிதனுக்கு இருக்கக்கூடிய அடிப்படை உரிமைகளே இல்ல. பதுங்கி ஒதுங்கி வாழணும். கௌரக் குறைவான சட்டங்களுக்கெல்லாம் பணிந்தாகணும். கங்காணிக்குப் பயப்புடணும்.கிளார்க்குக்குப் பயப்புடணும்.

சின்னத் தொரைக்குப் பயப்புடணும். பெரிய தொரைக்குப் பயப்புடணும். இந்த லட்சணத்தில் பத்து லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள். அதாவது இந்த நாட்டின் முதுகெலும்பு கள், இலங்கையில, இந்த நாட்டை மக்களாட்சி நடக்கிற ஜனநாயக நாடுன்னு பெரிசா பேத்திக்கிருங்க. எனக் கென்னமோ, இதென்ன ஜனநாயகம்னு புரியல்லே.''

உணர்ச்சியில் குரல் சிறிது கரகரத்த போதிலும் நிதான மும் அமைதியும் குறையவில்லை. அவன் கூறியதில் லயித்து நீதியின் பக்கம் இதயங்கள் சரிய எதுவும் கூற முடியாமல் நின்றனர். ''நாமென்னப்பா செய்வோம். இது நம்ப தலை விதி'' என்று சாதாரணமாக தோட்டத் தொழிலாளர்கள் கூறிச் சலித்துக் கொள்வதைக் கூறி நிசப்தத்தைக் கலைத் தான் பெருமாள்.

''தலைவிதி, மண்ணுங்கட்டி.''

வீரமுத்து வெறுப்புடன் பேசிக்கொண்டே இராகவனின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு நடந்தான். பழனி யாண்டி, பெருமாள் முதலியோர் அங்கேயே பேசாமல் நின்றனர். இராகவன் கூறிய தொனியிலும் கருத்திலும் வாய் மௌனித்துப் போகும்படியான ஏதோ ஒன்றிருந்தது.

இருவர் உள்ளங்களிலும் தனித்தனி அவர்கள் கூறிய விசயத்தில் புரண்டு அலட்டிக் கொண்டிருந்ததால் பேச்சுக்கு இடமில்லை.

''அடுத்த மாதம் நம்ம தோட்டத்திலே சங்கக் கூட்டம் இருக்குதாமில்ல'' இராகவன் பேச்சுக் கொடுத்தான்.

''ஆமா, தலைவரு சொன்னரு.''

''கொழும்பில இருந்து பிரதிநிதிகள் வர்ருங்கிளாம் தெரியுமா?''

''ஆமா, தெரியும். ஆனு நிச்சயமில்லயாம். தொரை அனுமதி கொடுக்கணுமே?''

''ம்.''

இருவரும் தெரு வளைவில் உள்ள பௌத்த கோவிலையும் தாண்டி கடைத்தெருவுக்கு வந்து விட்டனர். இராகவன்

சட்டைச் சேப்பைத் தட்டிப் பார்த்துவிட்டு, ''வாப்பா, தேத்தண்ணி ஒண்ணு குடிப்போம்'' என்றுன்.

''இரு, நீ இந்த பண்டா கடையிலே இருந்துக்கோ. நா தொரைகிட்டே போயிட்டு வந்திர்றன். அவன் எங்கேயாச்சும் புறப்பட்டு போயிருவான்.''

''அதுவும் சரிதான். போயிட்டு வா. நா பத்திரிகை பார்த்துக்கிட்டிருக்கேன்'' என்று கூறிவிட்டு இராகவன் கடையை நோக்கிப் போக வீரமுத்து ஒப்பீசை நோக்கி மலே உச்சிக்கு ஏறிஞன்.

சிறிது நேரத்தில், சென்ற வேகத்திலும் இருமடங்கு வேகத்துடன் வீரமுத்து இறங்கி வந்தான். சொல்ல முடியாத கோபத்தில் முகம் உம்மென்றிருந்தது. இராகவன் அவனேக் கண்டதும் கடைக்கு வெளியில் வந்து விட்டான்.

''ஏனப்பா திரும்பி வந்திட்ட?''

''அந்த ருசுக்கோல் வேலேயா இருக்காஞம், இண்ணிக்கிப் பேச முடியாதாம்:''

''யேன், இண்ணேக்கி ஒப்பீஸ் நாள்தானே?''

''ஆமா சீமையில இருந்து தோட்டத்துச் சொந்தக்காரங்க கிட்டடியில தோட்டம் பாக்க வாருங்களாம். தோட்டத்த கிளிஞ வைச்சுக்கிறதுக்கு ஏதோ திட்டம் போட்டுக்கிட்டு இருக்காஞமென்னு பெரிய கிளாக்கர் சொன்ஞரு.''

வீரமுத்துக்கு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. நெற்றியைச் சுற்றி வியர்வை. மலே ஏறி இறங்கிய களேப்பு.

''இனி என்னப்பா செய்யிறது. வா, ரீயைக் குடிச்சுட்டுப் போவம்!'' என்று கூறி இராகவன் கடைக்குள்ளே சென்று ரீக்கு ஓடர் பண்ணிஞன்.

''என்னப்பா, நம்மவூட்டில இன்னேக்கி காலேயில தூளுவாங்க கஸ்டமாய்ப் போச்சு; கையிலே பணமில்லே.''

''ஏன்?''

வீரமுத்து துரையையிட்டு யோசித்துக் கொண்டு கேட்டான்.

''ஏஞ தோட்டத்திலே தூள் கொடுக்கல்ல. இருபத்

தொரு நாளைக்கு வேலே செஞ்சாத்தான் கொடுப்பாங்க!''

''அதென்ன தூளா? கூட்டித்தள்ளுற டஸ்டு?''

''தொரை பூங்கண்டுகளுக்கு உரமா போடுறதானே.''

''ஆமா? அப்புறம் வேறென்ன தருவாங்க கூலிக்காரங் களுக்கு.''

''தேயிலே உற்பத்தி செய்கிற நமக்கு நல்ல தேயிலே தூள் இல்லே'''

''நல்ல தேயிலேத் தூளா? தேயிலேத்தூளே இல்லே,''

''நமக்கு நல்ல தூளே கொடுத்தாங்கண்ணு, அவங்க எப்படி முதலாளிகளாக இருக்க முடியும்?''

இராகவன் கடை மேசையில் கிடந்த சிங்களப் பத்திரி கையை எடுத்துப் பார்த்துக்கொண்டு சொன்னுன்.

''ஆமா அதுசரி.''

வீரமுத்து முகவியர்வையை, கட்டியிருந்த சாறத்தில் குனிந்து துடைத்துக்கொண்டு வாங்கில் உட்கார்ந்தான்.

''சின்னக்கலப்பண்ணே எப்ப வருவாரு.''

''இன்னைக்கி வந்தாலும் வருவாரு!''

''ரீ குடிச்சிட்டு மாஸ்டரிட்ட போயிட்டு வருவம், என்ணு?'' என்று இராகவன் கேட்டான்.

''ஆமா நான் வர்றன்.''

''உங்களுக்குத் தெரியுமா? அவர் நம்ம ஆளு, நம்ம கட்சிதாணும்.''

''அப்படியா!''

''அவர் முந்தாநாளு எனக்கொரு புஸ்தகம் தந்தாரு.''

''என்ன புஸ்தகம்?''

''தொழிலாளி வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றுவது எப்படி என்றொரு புஸ்தகம். நம்ம தலைவர் எழுதியது. நல்ல புஸ்தகம். தர்றன் படித்துப் பாருங்க.''

''இப்ப வர்றன் தாங்க.''

''அவர் அடுத்த போயா தினத்தில நம்ம வாசிகசாலையில நமக்கு மார்க்சிசம் வகுப்பு எடுக்க வர்ருரு.''

''அப்படியா, எல்லாரையும் அழைச்சிட்டு வரணும்.''

''ஆமா, வாங்க போவம்.''

இருவரும் தேனீரைக் குடித்துவிட்டு எழுந்து மாஸ்டரின் அறையை நோக்கி நடந்தனர்.

## 4

''மறந்து போகம கேளு'' என்று நமுனகுலவில் இருந்து வந்த சின்னக்கலப்பன் அடிக்கடி மகனை அலட்டிக்கொண் டிருந்தான். இருளிலே உறங்கிக் கிடக்கும் தோட்டத்தின் அழுக்கான பகுதிகளையும்அங்கு வாழும் உயிர்களின் விருப்பத் திற்கு மாருக நடந்துவிடும் சின்னத்தனங்களையும் அவற்றின் தாத்பரியங்களையும் அவன் அணு அணுவாக அறிவான். அந்தச் சின்னத்தனங்களுக்கும் அழுக்கான பகுதிகளில் நிலைத்துவிட்ட போக்கிற்கும் அடிப்படைக் காரணங்களை அவன் உணர்ந்து கொண்டுள்ளான். தோட்டத்து மண்ணில் சத்தெடுத்து வளர்ந்து நிற்கும் தேயிலைச் செடிபோல, அவன் அந்த வாழ்க்கையில் பால்குடித்து வளர்ந்து நிற்கிருன். சின்னக்கலப்பன் சொல்வதற்கு தட்டிக்கழிக்க முடியாத காரணம் இருந்தபோதும், அவன் அடிக்கடி தூண்டிக் கொள்ளும்போது, தான் கேட்காமலிருப்பதனுல்தான் துரை காம்பரா கொடுக்காமலிருக்கிருன் என்ற உணர்வு தட்டுப் படுவதாக நினைத்து மனத்துள் எரிந்து கொண்டிருந்தான் வீரமுத்து.

நேற்றிரவு அவன் நித்திரை கொள்ள முடியவில்லை. இரவு முழுவதும் பேய் இரைச்சலுடன் ஆலங்கட்டி மழை பெய்து கொண்டிருந்தது. மழைச் சாரல் ராக்கி ஓட்டை களில் உள்ளே அடித்து ஸ்தோப்பில் கிடந்த அவனை நடுங்க வைத்தது. அதனுல் மனம் பலவாறு குழம்பிக் கொண்டிருந் தது.

இன்று அவனுக்கு ஒரு நிம்மதி. இன்று ஒப்பீஸ் நாள். தொழிலாளர்கள் துரையைச் சந்தித்து பிரச்சனைகளைக் கூறு வதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இன்று கேட்டுத் தொலைத்து விட்டால் ஒரு முடிவு தெரிந்து விடும் என்ற

மன ஆறுதலோடு, இராகவன் இருக்கும் லயத்திற்குப் போய் அவனையும் கூட்டிக்கொண்டு ஒப்பீசுக்கு வந்தான். அவர்கள் வரும்போது பேசிக்கொண்ட விடயம், முகங்களில் இரத்தம் கொதித்து, உணர்வுகள் கிளர்ந்தெழுந்து அவர்களை உஷாராக வைத்துள்ளது. அவர்கள் மட்டுமின்றி அத்தோட்டத்திலுள்ள தொழிலாளர்கள் அனைவரது உணர்ச்சிகளுக்கும் கொள்ளி வைத்து துடிதுடிக்கச் செய்த சம்பவம் அடுத்த தோட்டத்தில் நடந்துவிட்டது. அந்தத் துரை ஸ்கொத்லாந்தில் இருந்து வந்தவன். பெயர் குறூஸ். அவனுடைய பங்களாவில் அத்தோட்டத்திலுள்ள ஒரு தொழிலாளியான பொன்னுசாமி, பெரிய துரை பங்களாவில் அவனுக்குச் சமைத்துக் கொடுக்கும் அப்பு வேலை செய்து கொண்டிருந்தான். அவன் அத்தோட்டத்தில் கொழுந்தெடுக்கும் தங்கம்மாள் என்பவளைக் காதலித்தான். அவள் அழகும் இளமைப் பூரிப்புமுள்ள சோக்கான பொண்ணு. இருவரும் ஒருவரை ஒருவர் இதய பூர்வமாகக் காதலித்தனர். ஆனல் பெரிய துரைக்கு அவள்மேல் ஒரு கண். அவளை தான் இரையாக்க முயற்சி செய்து கொண்டிருந்தான். தங்கம்மாள் ரகஸியமாக பங்களாவுக்குச் சென்று அவனைச் சந்தித்து வந்தாள். இதை ஏதோ விதத்தில் அறிந்து கொண்ட துரை, ஒரு நாள் பொன்னுசாமியை ஒப்பீசுக்கு அழைத்து ஈனமாக அடித்துக் காயப்படுத்தி விட்டான். தங்கம்மாளுக்கு ஒரு மாதம் தோட்டத்தில் வேலையில்லை. அத்தோட்டத்தில் தொழிலாளர்கள் துரையின்மேல் ஆத்திரம் கொண்டு வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர். துரையை, அவனிடம் மன்னிப்புக் கேட்கும்படி கோரியுள்ளனர். வேலை நிறுத்தம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. இதைக் கேள்வியுற்றது தொடங்கி, ‘அவனுக்கு எவ்வளவு திமிரு’ என்று எல்லாரும் சினந்து கொண்டனர். சொந்த வாழ்க்கையிலும் ஈடுபட்டு தமது ஆணவத்தைக் காட்டுமளவிற்கு தோட்ட முதலாளிகளின் அதிகாரம் விஸ்தாரமாக இடம் கொடுப்பதை ஒவ்வொருவரும் யோசித்து தங்களுக்கே இயல்பான பெரு

மூச்சை விட்டுக் கொண்டனர். அது உள்ளே வீசிய புயலின் அறிகுறிதான்.

வீரமுத்து இன்னும் ஒப்பீசுக்குள் போகவில்லை. அவனோடு கைகளை மார்போடு கட்டியவாறு நிற்கும் இராகவன் பக்கத்தில் இருக்கும் துரை பங்களாவைப் பகுதி பகுதியாக கண்ணோட்டம் விட்டான். வெகு நேரமாக இருவரும் ஒப்பீசுக்கு வெளியில் நின்றனர். வீரமுத்து ஒப்பீஸ் வாசலை நோக்கி நின்றான். இருவர் நிலையிலும் ஓர் அவசரம் இருந்தது. தங்களின் அவல வாழ்வின் நிலையையிட்டு உணர்வுகள் நெருடும் விசாரமும், அந்த நிலைக்கு உழைக்கும் வர்க்கத்தின் வாழ்க்கை தள்ளி அதன்மேல் ஏறி மிதித்து நடனமாடும் காரண கர்த்தாக்களை எதிர்த்து எழும் தொழிலாளர்கள் ஒற்றுமையுடன் எதிர்ப்பு தெரிவித்ததில் எழுந்த பூரிப்புக் கலந்த ஒருவிதமான மனக்கிளர்ச்சியோடு அவர்கள் நின்றனர்.

வீரமுத்துவின் கண்களில் துரை எப்போது அழைப்பார் என்ற தவிப்பு.

துரை அழைத்ததும், பெரிய கிளாக்கர் புகைத்த சுருட்டை வீசிவிட்டு, வாயை அறுகத் துடைத்துவிட்டு, நடுங்கும் கைகளால் காற்சட்டையை வயிற்றில் ஏற்றிவிட்டு 'என்னைக் காப்பாற்று' என்று அபயக் குரல் எழுப்புபவனை காப்பாற்ற ஓடுபவனைப்போல் பெரிய கவடுகள் வைத்துப் பாய்ந்து துரையின் அறைக்குள் மறைந்தார். இவ்வளவும் இருவிநாடிகளில் நடந்திருக்கலாம்.

இராகவனுக்கும் வீரமுத்துக்கும் அதைப் பார்க்க சிரிப்பாக இருந்தாலும் அடிமனதிலே அனுதாபம்தான் இழையோடியது. தோட்டத்தில் வேலை செய்யும் கிளாக்கர் முதல் தொழிலாளர் வரை சகலரும் தங்கள் அடிமைகள்தான் என்பதை வெள்ளைக்காரர்கள் எவ்வளவு சூசகமாக ஆக்கி வைத்துள்ளார்கள்.

பெரிய கிளாக்கர் துரையின் அறையைவிட்டு வெளி வந்த சிறிது நேரத்தில் மூன்றும் கிளாக்கர், வீரமுத்துவுக்கு உள்ளே செல்லும்படி கையில் சைகை காட்டினர். வீரமுத்து

வும் விரைந்து உள்ளே நுழைந்து துரை அறையை அடைந்தான். எல்வளவுதான் துணிச்சல் இருந்தாலும் தோட்டத்தில் சர்வ அதிகாரம் கொண்ட துரை இருக்கும் அறையை அணுகும்போது இருதயம் இடித்துக் கொள்ளத் தொடங்கியது.

துரையின் அறையில் பெரிய துரை பெய்லி பிரித்தானிய தினசரி ஒன்றைப் பார்த்துக்கொண்டு சாவதானமாக இருந்தான். வாயின் ஓரமாக சுங்கான் இருந்தது. அதிலிருந்து வரும் புகை சுழன்று மேலெழுந்து பின்னுல் சுவரின் மத்தியில் தொங்கும் எலிஸபெத் மகாராணியின் உருவத்திற்கு தூபமிடுவது போல் அசைந்து கொண்டிருந்தது.

''சலாமுங்க தொரே !''

வீரமுத்து அறைக்குள் சென்று தோட்ட வணக்கம் செலுத்தியதும், துரை கையிலிருந்த பத்திரிகையைத் தாழ்த்தி, நெற்றியை நெரித்துப் பார்த்தான். சில விநாடிகள் பார்த்துக்கொண்டு முகத்தை உறுக்காட்டியமாகச் சுளித்தான். செருமினுன். பின்பு அநாயாசமாகத் தன் வேலையில் கவனமாக சற்று நேரம் இருந்துவிட்டு நிமிர்ந்தான்.

''என்ன வந்தது ?''

''காம்பரா கேக்க வந்தேங்க தொரே !''

வீரமுத்து துரையுடன் முண்டும் எண்ணமின்றி இயற்கையான தொனியில் சமாதானமாகக் கேட்டான். துரைக்கு முன்னுல் தான் சிறியவன் என்பதுபோல் நின்றுன்.

துரை பத்திரிகையை மடித்து மேசையின் ஒரு பக்கத்தில் வைத்தான். முகம் கடுமையானது. வெருட்டும் பாவனையில் அவனை நன்றுகப் பார்த்தான். உரமான குரலில் கனைத்தான். இது துரைமாருடைய சுபாவம். தம்மிடம் வரும் தொழிலாளர்கள் வெருண்டு நிலைகலங்கி திரும்பிச் செல்ல கையாளும் சாதாரண தந்திரம். வீரமுத்து முன் கைகட்டி நின்ற இடத்தில் அசையாமல் நிற்கிறுன்.

''இப்ப எங்கேயிருக்கிறது ?''

''ஐயாவுட்டு காம்பராவிலதானுங்க !''

''இப்ப ஒனக்கு காம்பரா என்ன அவசியோம் ?'' துரை தனித்தனி சொல்லாக உச்சரித்துப் பேசினான்.

''எனக்குக் கல்யாணமுங்கு தொரே ! நாங்க இருக்க, தனிக் காம்பரா வேணும் !''

''ஓ ! ஒனக்குக் கல்யாணமா ? ஒனக்கு கல்யாணம் இப்ப அவசியமா ?''

துரை ஒன்றும் புரியாத ஒரு மூடனைப்போல கேட்டு விட்டு இருந்தான். அதில் தொழிலாளர்களை சின்னஞ்சிறு சேற்றுப் புழுக்களாக எண்ணும் நையாண்டி தொனித்தது.

இதற்கு அவன் என்ன கூறுவது? துரை திருமணம் செய்து மூன்று பிள்ளைகள். அதை அவன் மனதுக்குள் நினைத் துக் கொண்டான். உள்ளம் எரிந்து கொண்டிருந்தது.

துரை சிறிது யோசித்தான். அப்புறம் ஏதோ உண்மை யைக் கண்டுபிடித்தவனைப் போல தலையை மேலும் கீழும் ஆட்டிவிட்டுச் சொன்னான்.

''தனிக் காம்பரா! ஐயாவுட்டுக் காம்பராவில இரு!''

அவன் துரையைப் பார்த்தான், முகம் கருகிவிட்டது; எவ்வளவு சாதாரணமாக துரை அதைச் சொல்லுகிறான்.

''அதிலே இருக்கேலாதுங்க தொரே! இப்பவே ஒம்பது உசிரு இருக்கு. நா, கலியாணம் முடிச்சாப்புறம் எப்பிடிங்க தொரே அதிலே இருக்க முடியும்? வயசு வந்த பொண்ணுக எல்லாம் இருக்கு!''

வீரமுத்து கூறிவிட்டு தொண்டையில் சிக்கிய எச்சிலை உமிழ்ந்து விழுங்கினான். துரை ஒன்றும் பேசவில்லை. கைவிரல் களை மேசையில் மெதுவாகத் தட்டிக்கொண்டு அமைதியாக விருந்தான்.

''காம்பரா எங்கே யிருக்குது? இந்தா உள்ளதைக் கொண்டு நல்லா இருக்கப் பார்க்கணும். அதுதான் கூலிக் காரங்க படிச்சுக்கணும் தெரியுதா?''

வீரமுத்துக்கு உள்மனதில் கோபத்தின் ஜுவாலை வீசிற்று. அவன் பொறுமையை இழந்தான்.

''அதைப்பத்தி எனக்குத் தெரியாதுங்க தொரே! நா, இந்தத் தோட்டத்திலேதான் பிறந்து, இதிலேயேதான்

வேலே செய்து வர்றேங்க. எனக்கு காம்பரா வேணும்.''

அவன் நல்ல துணிச்சலுடன் இன்னும் கொஞ்சம் நிமிர்ந்து நின்ருன்.

துரை பற்களே நறுமி, சப்பாத்துக் கால்களே நிலத்தில் உதைத்து, கையால் மேசையில் குத்திஞன்.

''ஏ, ராங்கி பேசாதே! ஏ, தொரையை எதித்துப் பேசியாச்சு.''

வீரமுத்து நாவிஞல் வரண்ட உதடுகளே நனேத்துவிட்டுச் சொன்ஞன்.

''நா, ராங்கி பேசலேங்க தொரே! வேணுமானதைத் தான் கேட்டேன்!''

''ஓ! ஓ! பேசாதை. நீ எத்தனே படிச்சிருக்க?''

''எட்டாம் வகுப்பு வரையுங்க!''

''ஓ! அதுதான் ஒனக்கு புத்தி வந்தது. ராங்கி பேசியாச்சு!''

வீரமுத்து ஒன்றும் பேசவில்லே. அவன் முகத்தை ஜாடையாகப் பார்த்துவிட்டுக் குனிந்துகொண்டான்.

சராசரி பிள்ளேகளுக்கு ஒரு ஆசிரியரைக் குறைந்த சம்பளத்தில்நியமித்து, ஐந்தாம் வகுப்புவரை சொல்லிக் கொடுக்கும் தோட்டத்தில், அவன் எட்டாம் வகுப்புவரை படித்தது எரிச்சலேக் கொடுத்தது—விசயங்களேப் புரிந்து கொண்டு சாதுர்யமாக, புத்தியுடன் பேசுவது துரைக்குக் கேந்தியைக் கொடுத்தது. எதையும் புரிந்துகொள்ளாத அறிவீனத்தின் மிடிமை இருள் கொண்ட முகங்களோடு, அந்த மூடத்தனத்தால் பயந்து ஒடுங்கி நின்று எதற்கும் ஆமா போடும் தொழிலாளர்களேக் காணும் மனத்திருப்திக்கு உருவம் கொடுக்க முடியாது.

''ஒன் பேரென்ன?''

துரை தெரியாதவன்போல கேட்டான்.

''என் பேரு வீரமுத்துங்க தொரே!''

துரை தலேயை அசைத்து சுக்கானே இழுத்து நீண்ட புகை விட்டவாறு, எழுந்து ஜன்னலூடாக மலேகளுக்கிடையில் அமைந்த தேயிலே பக்டரியைப் பார்த்துக் கொண்டு

நின்றான். அதைப் பார்க்கும்போது அவனுக்குப் பல நினைவு கள் உருவாகி வந்தன. சில மாதங்களுக்கு முன் பக்டரியில் 'ஓவர்டைம்' கேட்டு ஒரு கிழமையாக நடந்த வேலை நிறுத் தத்திற்கு வீரமுத்து பிரதான ஆளாக இருந்தான். தொழி லாளர்களின் உணர்ச்சியைத் தூண்டி உஷார்ப்படுத்துவதில் முன் நின்றான். இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு நாளைக்கு ஒரு ரூபா சம்பளம் உயர்வு கோரி சகல தோட்டங்களிலும் நடந்த வேலை நிறுத்தம், இத்தோட்டத்தில் பூரண வெற்றி யுடன் நடைபெற்றதற்கு தொழிற்சங்கத் தலைவன் அண்ணா மலையின் நெஞ்சுறுதியும், சின்னக்கலப்பன் ஆகியோர் வர்க்க உணர்வுடன் செய்த வேலைகளும் காரணமாக இருந்தது. தோட்டத்தில் ஒரு சங்கம் இருப்பது அவர்களுக்கு மிகப் பல மாகப் போய்விட்டது. அவ்வேலை நிறுத்தம் நடைபெற்ற ஒவ்வொரு நாட்களிலும் சகல தொழிலாளர்களும் சுலோக அட்டைகளையும், சங்கக் கொடிகளையும் தூக்கிப் பிடித்துக் கொண்டு வந்து ஒப்பீசுக்குமுன் இருந்து, 'முதலாளி வர்க்கம் ஒழிக! அடிமைத்தனம் ஒழிக! வெள்ளைக்காரனே வெளி யேறு!' என்று பலத்த குரலில் கோஷமிட்டதில் வீரமுத்தும், பாக்கியமும், சொத்திச் சிலம்பனும் முன்னணியில் நின்றார்கள்.

இந்த நினைவுகள் துரையின் மனதுள் எழுந்து இதயத் தின் இதழ்களைப் பிராண்டுவதனால் கோபமடைந்து சப்பாத் துக்கால்களை தலத்தில் தேய்த்துக் கொண்டான். பின்பு ஏதோ யோசித்தவனாக திரும்பி அமைதியாக நின்று அவனைப் பார்த்தான். சொண்டின் ஓரத்தில் காட்டிக்கொள்ளாமலே சிரித்தான்.

"ஸ்டோரில் ஸ்டிரைக் போட்டதில் நீ முதலாவதாக நின்னதுதானே?"

"..............."

"சிவப்புக் கொடிச் சங்கம் இந்தத் தோட்டத்துக்கு வாரதற்கு நீங்கதான் பெரிய ஆளு!"

"..............."

வீரமுத்து தலையை அசைத்துவிட்டு மௌனமாக

நின்ருன். துரை தலையை அசைத்துவிட்டு கதிரையில் சென்று அமர்ந்தான்.

''ஒனக்குக் காம்பரா வேணுமா?''

வீரமுத்துவின் முகம் கோபத்தில் சிரித்திருந்தது.

''ஆமா!''

''நல்லது! நீ நல்லவன். ஒன் அப்பனும் நல்லவன். இந்த சங்கம்தான் சரியில்லே. மிச்சம் சரியில்லே. ஒப்பன் நல்லவன். ஒப்பனுக்கு நான் கண்கானி வேலே கொடுக்கிறது. ஒனக்குக் காம்பரா தர்றது. ஆனு ஒண்ணு. நீங்க ரெண்டு பேரும் இந்த சங்கத்தை ஒடச்சி வெளியே வரணும் தெரியுதா? நல்ல சங்கம் இருக்கு. பெரிய சங்கம்! என்னு, இந்த சங்கம் கம்யூனிஸ்ட் சங்கம். இவங்க புரட்சி பேசுவாங்க. கூலிக் காரங்களே நமக்கு எதிராக தூண்டிவிடுவாங்க. நாங்கதான் ஒங்களுக்கு வேலே கொடுக்கிறது. சாப்பாடு கொடுக்கிறது. நம்மை நீங்க கடவுளா மதிக்கணும். இவங்க காந்திக்கு மாருனவங்க உனக்குத் தெரியுமா? காந்தி பொலிசிதான் நல்லது. நீங்க நல்லா யோசிக்கணும். இந்த சங்கத்தை விட்டுடுங்க என்னு?''

துரை கூறிவிட்டு அவன் முகத்தை வெறித்துப் பார்த்த படி நின்ருன்.

"அது முடியாதுங்க தொரே! நாங்க நம்ம சொகத்துக் காக தொழிலாளர்களேக் காட்டிக் கொடுக்கிறவங்க இல்லே! அந்தச் சங்கம்தான் தொழிலாளிக்கு நேர்மை யிருக்கு!''

''ஓ! ருங்கி பேசியாச்சு! எதிர்த்துப் பேசாதே?''

துரை பற்களே நெருடினுன்; மீண்டும் கைகளே கண்ணுடி மேசையில் குத்திக் கொண்டான்.

''ஒனக்குக் காம்பரா இல்லே போ! பூல்!''

வீரமுத்து நிமிர்ந்து சற்றுநேரம் துரையைப் பார்த் தான். பின் விறுக்கெனத் திரும்பி வெளியில் நடந்தான். துரை நடந்து செல்லும் அவனேப் பார்த்தவாறு நின்ருன்.

உங்கள் உயிர் மூச்சு நாங்கள் சொன்ன பாதையில்தான் போக முடியும் என்ற அதிகார உரிமையுடன் தான் நினேத்த தெல்லாம் செய்துகொண்டு நீண்ட காலம் சுகபோகம் அனு

பவித்தவர்களுக்கு, எந்த உயிர்கள் அந்த அதிகாரத்திற்கும் சுகபோகத்திற்கும் காரணமோ அந்த உயிர்களிடமிருந்து எதிரான எண்ணங்கள் வெடித்து எழுவதை கையாலாகாத் தனத்துடனும் ஆத்திரத்துடனும்தான் அனுசரிக்க முடி கின்றது.

வீரமுத்து வெளியில் வந்த வீச்சைக் கண்ட இராகவன் ''என்ன சொன்னுரு தொர'' என்று கேட்டான்.

''என்ன சொல்லுவான் கழுதப் பய. நம்ம சங்கம், நல்ல சங்கம் இல்லையாம். அதை விட்டுட்டு வேற சங்கத்திலே சேர்ந்திட்டா காம்பரா தர்ருனும். நாய் மவன்.''

''சரி, சரி வா!''

எல்லாவற்றையும் எதிர்பார்த்தவன் போல இராகவன் முன்னுல் நடந்தான். ஆத்திரம் கொண்டவனுய் எதுவும் பேச மனம் வராமல் வீரமுத்து பின்னுல் நடந்தான். சிறிது நேரத்தின் பின் யோசித்துக் கொண்டு சென்ற இராகவன் நின்று வீரமுத்து தன் பக்கமாக வரும்பொழுது சொன்னுன்.

''பாத்தியா தொரை யாருக்காக பேசுகிருன்; அவன் என்ன சொன்னுன். நம்ம சங்கம் கூடாதென்னுதானே?''

''ஆமா!''

''அவன் இதை எதிர்க்கிருன்; அவன் முதலாளி வீட்டு காவல் நாயி.''

'ஆமா நம்ம சங்கத்தை எதிர்க்கிருன். காங்கிரஸ் சங்கத்திலே சேரச் சொல்லுருன். குரங்குப் பயல்!''

''முதலாளி, முதலாளிக்கு ஆதரவாளரைத்தான் ஆதரிப் பான். இதிலே ஒரு விஷயம் புரியுது. எதை தொர ஆதரிக் கிருனே அதை நாம எதிர்க்கணும். எதிரி எதை எதிர்க் கிருனே அதை நாம ஆதரிக்கணும். ஏனென்னு எதிரி எதிர்க் கிறது, நமக்கு ஆதரவானதாய்த்தான் இருக்கும்.''

வீரமுத்து அவன் கூறியதை காதில் விழுத்திக் கொண்டு நடந்தான். ஒன்றும் சொல்லவில்லை.

அவன் மனம் நேற்றிரவு வாசகசாலையில் மாஸ்டர் வைத்த வகுப்பில் கூறியவற்றை நினைவில் இருந்து திரட்டிக் கொண்டிருந்தது. மாஸ்டர் பல வுண்மைகளை தொழிலாளர்

களுக்குத் தெளிவுபடுத்தினர். இந்த நாட்டில் வெள்ளைக்காரர் தோட்டம் வைத்து எப்படி சுரண்டிக்கொண்டு போகிறார்கள் என்பது பற்றியும், தொழிலாளர்களுக்கு மிகக் குறைந்த கூலியைக் கொடுத்து, குச்சு லயங்களில் அடைத்து வைத்து எப்படி அடக்கி ஆள முடிகிறது என்பது பற்றியும் தெளிவாகக் கூறினர். அவைகளை மனதில் உருப்போட்டுக் கொண்ட அவன் உள்ளம் அவர் கூறிய கவிதை அடிகளை கிரகித்துக் கொண்டு திரும்பத் திரும்ப முனகிக் கொண்டிருந்தது. 'உலகத்தில் காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான். அவன் காணவேண்டியது வறுமையாம். பூண வேண்டியது பொறுமையாம்.' அவனது உணர்வுகள் அந்த அடிகளுக்குள் இருக்கும் உண்மைகளை உணர்ந்து கொண்டிருந்து உடனே நின்று சுற்றிவரத் தெரியும் தொழிலாளர்களால் உருவாக்கப்பட்ட தேயிலை மலைகளையும் பக்டரிகளையும் துரைமாரின் பங்களாக்களையும் கண்ணோட்டம் விட்டான். பின்பு மௌனமாக தலையை ஆட்டிக்கொண்டு நடந்தான்.

''வீரமுத்து நம்மை மாஸ்டர் வரச் சொன்னரு!''

''இப்ப அறையில் இருப்பாரா? போயிட்டுப் போவம்.'' இருவரும் யோசனையில் நடந்தனர்.

நீர்ப்புகை மேகம் ஆளையாள் பார்க்க முடியாமல் காலடியிலும் தலைமேலும் பக்கங்களிலும் எங்கும் புகைந்து நகர்ந்து கொண்டிருந்தது. அந்த நேரத்தில் குளித்துவிட்டு வெறுமனே நிற்கும் குழந்தைகள் போல தேயிலைக் கொழுந்துகள் பனியினல் வழிந்து கொண்டிருந்தன.

## 5

மலையில் கான்வெட்டு முடிந்து லயத்திற்கு வந்த சின்னக்கலப்பன் தன்னுடைய காம்பரா வாசலில் குந்தியிருந்தான். மனத்தின் அடிவாரத்தில் எழும் அலைச்சல் உணர்வுகள் சுருங்கிய முகச்சதைகளை நெருடிக் கொண்டிருந்தன.

வீரமுத்து இன்னும் பக்டரியில் இருந்து வேலைவிட்டு வரவில்லை.

அந்தி மயங்கி வெகு நேரம் ஆகி இருளும் தன்நிறத்தில் கனம் ஏற்றிக் கொண்டிருந்தது. இரவுப்பொழுது வளர வளர மலையடிவாரங்களில் அமைக்கப்பட்ட லயங்கள் எல்லாம் இருளின் ஆழத்தில் புதைந்து கொண்டிருந்தன. உயர்ந்த மலைகள் வெருட்டும் பூதங்களாகிக் கொண்டிருந்தன.

குளிர் காற்றின் உக்கிரம் குறைந்திருந்தது.

குளிர் குறையவில்லை; வழமை போல் இருந்தது.

சின்னக்கலப்பன் காறித்துப்பிவிட்டு காம்பரா வாசலில் கால்களை ஒடுக்கி கைகளின் பிணைப்பிற்குள் அவைகளைக் குறுக்கிக் காட்டி நாடியை முழங்கால் சில்லுகளில் வைத்துக் கொண்டான். எவருடனும் பேசமனமின்றி வீரமுத்துவை எதிர்பார்த்திருந்தான். அவனுடைய வெள்ளைநாய் காலடியில் சுருண்டு கிடந்தது.

எலதெல தோட்டத்தில் வீடு திருத்திக் கொண்டிருக்கும் போது மண் சரிவு ஏற்பட்டு மூன்று தொழிலாளிகள் மண்ணுள் புதைந்து மாண்டு விட்டார்கள் அவர்களில் சின்னக்கலப்பனின் மச்சான் முறை உள்ளவனும் ஒருவன் நேற்று அந்தக் கேதத்திற்குப் போய் விட்டதால் மகனைக் காணவில்லை.

அவன் மனம் சினத்துக் கொள்ள முடியவில்லை. அவனுக்கு துரை கூறிய முடிவு அறிய ஆவலுடன் பீடி ஒன்றைப் பற்றவைத்து இழுத்துப் புகைத்தான். பாக்கு மாற்றிக் கொண்டதும் ஒரு மாதத்திற்கு மேலாகி விட்டது என்பதையும் யோசித்தான்.

"இவெ, தொரை கிட்ட காம்பரா கேட்டாளு? தொரை என்ன சொன்னுனும்?"

சிறிது தலையைப் பக்கமாகத் திருப்பி, உள்ளே கட்டிலில் கிடக்கும் ஆறுயியிடம் கேட்டான்.

"நா. அவெனைக் கேட்டேன் ஒண்ணும் பேசாம ஊமை போல இருந்து ஏதோ பொயித்தகம் படிச்சிக்கிட்டிருந்தான். அப்புறம் ஒண்ணும் சொல்லாமலேயே போயிட்டான்."

அவள் கூறியதைக் கேட்டதும் வீரமுத்து கேட்டிருப் பாஞ என்ற சந்தேகம் அவன் உள்மனதைப் புழுப்போல அரித்துக் கொண்டிருந்தது. பற்களைக் கடித்தவாறு யோசனை யில் இருந்தான்.

முன்ஞல் பரந்து கவிந்திருக்கும் இருள் பரப்பை அவ னுக்குப் பார்க்கப் பிடிக்கவில்லை.

''வீரமுத்துக்குக் கல்யாணமாமே?''

''மூத்த மவனுக்குப் பாக்கு மாத்தியாச்சாமே. நெசமா?''

ஒருசெய்தி காட்டுத்தீபோல் பரவும் என்பதை தேயி லைத் தோட்டங்களில் கண் முன் காணலாம். சின்னக் கலப்பன் மகனுக்கு நமுனகுலத் தோட்டத்தில் சம்மந்தம் முடித்த செய்தி தோட்ட மெல்லாம் பரவியது. சின்னக் கலப்பனை அறிந்த ஒவ்வொருவரும் அவனைக் கேட்கும் போது ''ஆமா'' என்று மகிழ்ச்சியோடும், தனக்கேயுரிய வீராப்போடும் பதில் கூறிவிட்டு வந்தான்.

ஆஞல் தனிமையில் அதையிட்டுத் துக்கித்த மனதோடு வெளியில் காட்டிக் கொள்ளாது மனக்கலக்க மடைகிறுன்.

கலியாணம் சுலபமாக முடிந்து விடும். கலியாணத்தை நடத்த பெரும்பணமும் தேவையில்லை. அவனிடம் வீர முத்துவைத் தவிர வேறு சொத்தும் இல்லை. பெண்ணும் அவனுடைய அக்காமகள். கல்யாணமும் மிக அமைதியாக வும் சாதாரணமாகவும் நடக்கும் என்று சொல்லித்தான் சம்மதம் எடுத்துக் கொண்டான்.

''கலப்பண்ணே என்ஞ யோசனை?''

வாசலால் வரும், காலடியில் உள்ள லயக்கானில், ததும் பிய அழுக்கு நீரை வெறித்துப் பார்த்தபடி இருந்த சின்னக்கலப்பன் நிமிர்ந்தான். அது விளக்கு வெளிச்சத்தில் மினுங்கிக் கொண்டிருந்தது.

''ஒண்ணுமில்லேப்பா!''

பக்கத்துக் காம்பராவில் இருக்கும் பேப்பர் இராமசாமி பந்தம் கொழுத்தி கையில் பிடித்தவாறு கடைத்தெருவுக் குச் சென்று சாக்குப் பையில் மாவு வாங்கி தலையில் வைத் துக் கொண்டு தாண்டித் தாண்டி வந்தான். அவனுக்குப்

பின்னுல் சிங்கள விவசாயிகள் வசிக்கும் நாட்டுப் பக்கம் சென்று கள்ளுக் குடித்த ஊமையன் தான் நடக்கும் காலடிச் சத்தம் கேட்காதவாறு, இருளில் கக்கூஸ் பக்கமாகப் பதுங்கிப் பதுங்கி நடந்து கொண்டிருந்தான்.

சின்னக்கலப்பன் தலையை முழங்காலில் சரித்துப் போட்டு மீண்டும் மௌனத்தில் ஆழ்ந்தான்.

எல்லா லயக் காம்பராக்களிலும் வேலை முடிந்து மலையில் இருந்து வந்த பெண்கள் சோறு சமைத்துக்கொண்டிருந்தார்கள். ஆண்கள் வெளியில் சென்று தங்குவதற்கோ, பொழுது போக்குவதற்கோ தோட்டத்தில் வசதியில்லாததால் உள்ளே அடைந்து கிடந்தார்கள். தங்கள் வாழ்வைப்பற்றியும் தொழில் நெருக்கடிகள் பற்றியும் பேசுவதற்கு அவர்களுக்குக் கிடைக்கும் நேரம் அதுதான். அதனுல் லயங்களில் பேச்சும் இரைச்சலும் ஜனசந்தடியுமாக இருந்தது. சிலர் குப்பியில் செய்த பந்தங்களை கையில் பிடித்து சிறு ஊர்வலமாக வந்து கொண்டிருந்தார்கள். சிலர் கடைத்தெருவுக்குப் போவதும் வருவதுமாக, தண்ணீர்க் குழாயடியில் வரிசையாக நின்று நீர் பிடிப்பதுமாக இருந்தார்கள். கோயிலடியில் சூப்பவைசரால் நடத்தப்படும் இரவுப்பள்ளிக்குச் சென்று படித்துவிட்டு சிறு பிள்ளைகள் பப்பாசித்தண்டில் செய்த பந்தங்களைக் கையில் அழுக்குப் படிந்த சட்டையணிந்து தலையும் சீவாமல் நிற்கும் பெண்கள் பிள்ளைகள், சிறுபிள்ளைகளை இடுப்பில் தாவிக்கொண்டு லய ஓரங்களில் ஓடித்திரிந்தார்கள். கொழுந்துக் கூடைகள் அங்கும் இங்கும் கிடந்தன. வாசல்களில் நாய்கள் சோம்பலாகச் சுருண்டு கிடந்தன.

அந்த லயத்தில் வாழும் எல்லாருக்குமாக லயத்தின் சிறிது தூரத்தில் கட்டப்பட்ட ஒரே கக்கூஸ் மலசலத்தின் அறிவியல் நாற்றம் வீசிக்கொண்டிருந்தது, அந்த லயத்துக்கு மட்டுமின்றி இல்லை. எல்லா லயத்துக்கும் அப்படித்தான்.

லயக்கானில் ததும்பி வழியும் லயநீரும் ஒவ்வொரு லயக் காம்பரா வாசல்களிலும் ஊற்றிய அழுக்கு நீரும் எறிந்த கழிவுப் பொருட்களும், வெற்றிலைக் கழிச்சலும்

சேர்ந்து ஒரு ஹோட்டலின் ஒதுக்குப்புறம் போல் லயத்தின் முன்புறம் காட்சி அளித்தது.

வெற்றிலே துப்பிக் கொண்டு - வழிவழியே துப்பிக் கொண்டு வந்த சின்னத்தங்கம், தன் காம்பராவுக்குள் நுழைந்ததும், வழமை போல் கணவனுடன் உரத்த குரலில் ஊத்தைப் பேச்சில் சண்டை தொடங்கியது. அவனும் குடித்துவிட்டுத்தான் வந்திருந்தான். அவன் அவளின் சத்தத்தை அமுக்கும் குரலில் கத்தினன்.

'இரண்டு நாளேக்குத்தானே' என்ற சமாதானத்துடன் வசதியினங்களைச் சகித்துக்கொண்டு தங்கி வாழ்க்கையின் சகல பகுதிகளையும் நடத்தும் யாத்ரீகர்கள் போல அவர்கள் நெடுங்காலமாக வாழ்கிருர்கள்.

"இவென, இன்னும் காணுமே, இன்னமுமா வேல செஞ்சுக்கிட்டிருக்கான்"

லயத்திலே நடப்பவற்றைக் கவனித்துக் கொண்டிருந்த சின்னக் கலப்பன் வாய் விட்டுச் சினத்துக் கொண்டான். அவனுக்கு யாரும் பதில் கூறவில்லே. பொட்டு ஸ்தோப்பின் மூலேயில் சுற்றி வளேயும் புகையின் நடுவில் அகப்பட்டுச் சமைத்துக்கொண்டிருந்தாள். அடுப்புப் புகை ஸ்தோப்பையும் முட்டி வெளியாலும் வந்தது. சின்னப் பையன்களும் நட்சத்திரமும் மண்ணெண்ணே விளக்கைச் சுற்றி இருந்து கொண்டு சத்தமிட்டுப் பாடம் படித்துக் கொண்டிருக்கிருர்கள்.

அவன், பீடியும் முடிந்து விட்டதால் கைகளேக் கட்டிக் கொண்டு சும்மா இருந்தான்.

அப்போது தோட்டத்தில் வேலே செய்து பென்சன் எடுக்கும் நெருவல் தம்பிரான் கிழவன் பந்தம் ஒன்று மில்லாமல், இருளில் மலேப்படியில் தவழ்ந்து தவழ்ந்து வந்து லயக்கானில் காலே வைத்து சறுக்கி விழுந்தான். அவன் முழங்காலுக்கு மேல் ஒரு துண்டு கட்டி உடலே அழுக்குப் படிந்த பழைய கம்பளியில் சுற்றி மூடியிருந்தான். கையில் இருந்த தடியை ஊன்றி எழமுயற்சித்த அவன் காலில் தொங்கிக் கொண்டிருந்த அட்டையை விளக்கு

வெளிச்சத்தில் கண்டு குந்தியிருந்து வெள்ளைக்காரப் பயலுக நம்ம இரத்தத்தை உறிஞ்சிட்டு விட்டானுக. பத்தாத திற்கு நீயும் குடிச்சித் தொலைக்கிற'' என்று புறுபுறுத்தவாறு, அதைக் கையால் பிடிங்கி எறிய முயற்சித்தான். அவனைப் பார்த்த சின்னக்கலப்பன் உதட்டுக்குள் வரண்ட சிரிப்புச் சிரித்தான்.

''ஏ, கறுப்பன் எங்கே போற ஆத்தாளுக்கிட்டத் தானே?''

''ஆமா!''

சின்னக்கலப்பனை கடந்து சென்று கறுப்பன் தலையைச் சொறிந்து விட்டு நின்றான். அவன் மேல் லயத்தில் இருப் பவன்.

''அவளுக்கு நீமட்டுமாடா புருசன்? பூசாரி, வாச்சர், மலையன். எத்தனை பேர வச்சிருக்க?''

''அதிலென்ன இருக்கு. என்னையும் சேர்த்துக்க!''

''கையில என்ன இருக்கு?''

''பாணு ஒரு ருத்தலண்ணே?''

''அவளுக்கா?''

''ஆமா'' என்று கூறிவிட்டு நகர்ந்தான்.

''சரி, சரிபோ!''

அவன் கறுப்பன் போகும் காலடியைப் பாாத்துக் கொண்டிருந்தான்.

ஆத்தாளை மட்டுமல்ல. அவளைப் போன்ற பலபேரை அவன் தன் வாழ்க்கையில் சந்தித்து சலித்துப் போயிருக் கிறான். சேற்றில் திருப்தியுடன் புரளும் பன்றிகளைப் போல அவர்கள் அந்தச் சின்னத்தனமான வாழ்க்கையில் தர்மபய மின்றி வாழ்ந்து கொண்டிருப்பதற்கு அந்த உயிர்கள் எவ் விதத்திலும் காரணமாக மாட்டார்கள். அதே போது அவர்கள் மனிதவுயிர்களின் ஆத்ம சுத்தத்திற்குப் பொருந் தாத சுகாதாரமற்ற சூழ்நிலையில் அவர்களின் மனச்சாட் சிக்கு மாறாக பலவந்தமாக அந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள் ளார்கள். அவனுடைய அடிமனத்தின் ஆழத்தில் உணர்ந்

திருக்கும், அனுபவத்தின் மூலம் கண்டு கொண்ட உண்மை இப்பொழுது சிறிது தலைநீட்டி மறைந்து விடுகின்றது.

அடுத்த பணிய லயத்தில் இருக்கும் புஞ்சி பண்டா பாணும் வாங்கிக் கொண்டு குப்பி விளக்கைக் கையில் ஏந்திக் கக்கூசுக்குப் பக்கத்திலுள்ள பாதையில் நடந்து கொண்டிருந்தான். அவன் பின்னுல் கறுத்த நாய் சென்றது. அவனுடன் தெரு முனையில் பேசிக் கொண்டு நின்றது வீர முத்துதான் என்பதை சற்று நேரத்தின் பின் கண்டு பிடித் தான்.

வீரமுத்து லயத்தின் வாசலோரமாக நடந்து வந்து கொண்டிருந்தான். அவன் காற் சட்டையணிந்து தலையில் உறுமாலையும் அணிந்திருந்தான். தலை குனிந்திருந்தது. பீடி கையில் புகைந்து கொண்டிருந்தது. மறுகையில் அன்றைய பத்திரிகை வைத்திருந்தான். மகனை தூரத்தில் கண்டதும் சின்னக்கலப்பன் சிறு உஷாரும் சந்தோசமும் அடைந்தான். நிட்சயமாகத் துரையிடம் காம்பரா கேட்டிருப்பான் என்ற முடிவுடன் அந்த முடிவைக் கேட்க ஆவலாயிருந்தான்.

லயத்தின் பின்புறம் மேல் ரோட்டில் லய வாசல் கூட்டும் வாசல்கூட்டி கசிப்புக் கள்ளின் போதையில் 'உலகமே மாயம். வாழ்வேமாயம். நாம் காணும் சுகமே மாயம்;' என்று நாட்டுக் கூத்து ராகத்தில் பாடிக் கொண்டு நடந் தான்.

வீரமுத்து தங்கள் காம்பரா அருகில் வந்ததும் தலையில் கட்டியிருந்த துண்டைக் குலைத்தவாறு உள்ளே நுழையக் குனிந்தான்.

"தொரெக் கிட்டக் கேட்டியா?"

சிறிது நேர மௌனத்தின்பின் "ம். கேட்டேன்" என்று வீரமுத்து விரக்தியும், கோபமும் சேர்ந்த தாழ்ந்த தொனி யில் கூறினுன். அது சின்னக்கலப்பனின் இருதயத்தைச் சுண்டிற்று. துரை காம்பரா கொடுக்க மறுத்துவிட்டான் போல இருந்தது.

"என்ன சொன்னுரு?"

சின்னக்கலப்பன் உள்ளே நோக்கித் திரும்பி யிருந்தான். வீரமுத்து அடுப்பில் இருந்து ஒரு நெருப்புச் சுள்ளியை எடுத்து விளக்குப் பக்கத்தில் போய் காலில் இரத்தம் குடித்து உருண்டிருந்த அட்டையைச் சூடு காட்டி விழுத்தி ஞன். அவன் தம்பிமாரும், நட்சத்திரமும் அந்த அட்டையைக் கிட்டத்தட்டி எடுத்து மண்ணெண்ணெ ஊற்றி சுட ஆரம்பித் தார்கள். கையில் இருந்த சுள்ளியால் மாடத்திலிருந்து பீடியை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு சொன்ஞன்.

"அவன் என்னதான் சொல்லுவான். நம்ம மனு சேன்னு நெனச்சிருந்தாத்தானே. குரங்குப்பய"

மகன் சொன்னதைக் கேட்டதும் சின்னக் கலப்பனுக்கு மனமெல்லாம் சோர்ந்து போயிற்று. சினம் கூடி முகத்தில் சுருக்கங்கள் விழுந்தன.

"என்ன சொன்ஞன்டா?"

வீரமுத்து உள் சுவர் ஓரமாக இருந்த ராக்கையில் முதுகைச் சாத்தி, கால் நீட்டியிருந்து, பக்கத்திலிருந்த கத்தி யைத் தூக்கி தரையில் தட்டிக் கொண்டே இருந்தான். முகவுணர்வில் துக்கமும் கோபமும், பெரு மூச்சும் விட் டான். "நம்மை யெல்லாம் அவன் வூட்டு பங்களாவில் நிக்கிற நாயினும் கேவலமாக நெனச்சிக் கிட்டிருக் கானுங்க!"

தகப்பன் கேட்டது அவன் காதில் விழவில்லை. தன் பாட்டில் சொல்லிக் கொண்டான்.

"என்னதான் சொன்ஞன் கழுதை மவன்?"

சின்னக்கலப்பன் உள்ளே சென்று சுவர் ஓரமாக இருந்து கொண்டான். அவன் தகப்பனை நிமிர்ந்து பார்த்து விட்டு குனிந்து கொண்டு சொன்ஞன்.

"காம்பரா எங்கிருக்கென்று என்னைக் கேக்கிறுனென் றேன். உனக்கு என்ஞத்துக்கு இப்ப கல்யாணம் அவசிய மான்னு கேக்குருன்" சின்னக்கலப்பன் மனதில் கோபத்தின் ஜுவாலை வீசி எரியத் தொடங்கிற்று. பெரியதுரையின் வெருட்டும் முகமும் பூனைக் கண்ணும் கண்களுக்குள் சலன மிட்டன. அவன் ஒன்றும் பேசாமலிருந்தான்.

''உள்ளதைக் கொண்டு திருப்தியா இருக்கப் பழகணும். நீபொய்காரன். கலியாணம் செய்துகிட்டு நீயும் அந்தக் காம்பராவில் இருக்கலாமுண்ணு நமக்குப் புத்தி சொல்லுருன்.''

வீரமுத்து மன எரிச்சலுடன் வார்த்தைகளை உமிழ்ந்தான். அவை உள் ஒடுங்கிய குரலில் வெளிவந்தன.

''தான் இருபத்து நாலு காம்பரா பங்களாவில் இருக்கலாமோ, ருசுக்கோல்?''

சின்னக்கலப்பன் கையை உயர்த்தி ஆத்திரத்துடன் கத்திக் கேட்டுத் துரையை ஊத்தைப் பேச்சால் திட்டிக் கொண்டிருந்தான்.

''வேசை மவென்''

தோட்டத்துப் பெரியதுரை பெய்லியிடம் வீரமுத்து காம்பரா கேட்கப் போனபோது துரை நடந்து கொண்ட விதமும், பேசிய வார்த்தைகளும் அவனுடைய கண்ணியமான உள்ளத்தைப் புண்படக் குதறின.

''நம்பவூட்டுக் கையால இரத்தத்தைப் பிழிஞ்சு உழைச்சும் அடிமையாக வாழ வேண்டியிருக்கு. எங்கவூட்டு உழைப்பைத்தின்ற அவங்க நாம அனுபவிக்கிற சின்னச் சுகங்களைக் கேட்கும் போது நையாண்டி பண்ருங்க. உழைப்பைத்தான் பறிச்சிகிருங்க. வேல செஞ்சிட்டு படுத்துறங்க காம்பரா கேட்டாலும் இல்லையென்ருங்க. கோபமும் வருகுது'' அவன் தனக்குள் சிந்தித்துப் புழுங்கிக் கொண்டிருந்தான்.

''ஆமா, கூலிக்காரங்களுக்குப் புதுசா காம்பரா கட்டுவதில்லையோண்ணு கேட்டியாவனே?''

''அதான் கேட்கநெனச்சேன். எதித்துப் பேசாதே. வெளியில் போன்னு விரட்டிப்புட்டுப் பொயிட்டான்.''

சின்னக்கலப்பன் சுடர் விட்டெரியும் விளக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''அவ்வளவு திமிரு!''

தகப்பன் கூறியதைக் கேட்டு தலை நிமிர்ந்த வீரமுத்து, கோபம் ஊறிய சிறிய சிரிப்போடு கேட்டான்.

''ஒனக்கு ஆச்சரியமாக இருக்கா இவன்தான் சுரண்ட வந்த வெள்ளைக்கார புத்தியை சரியா காட்டுறுன்!''

சின்னக்கலப்பன் ஒன்றும் பேசவில்லை. உள்ளே நொந்து கொண்டிருந்தான்.

''நம்ப சங்கத்திலே யிருந்து நாம விலகணுமாம். விலகினு காம்பராவும் தந்து ஒனக்குக் கங்காணி வேலையும் தர்ருனும்.''

நிலத்தைப் பார்த்திருந்த சின்னக்கலப்பன் சட்டென நிமிர்ந்தான்.

''அந்த வேசமவனுக்கு நாம முதலாளிக்கு வால் பிடிக்கிற சங்கத்தில் சேரணுமாமோ? கழுதப்பயல்?''

வந்த கோபத்தில் நெற்றியைச் சுருக்கி முகத்தைக் கோணி வைத்தான்.

''இனி நாம தொழிற் சங்க மூலமோ நடவடிக்கை எடுத்துத்தான் இந்த வேசமவனுக்குப் பாடம் படிப்பிக்கணும்''

''ஆமா அதுதான் வழி!''

வீரமுத்து சொன்னதை மனதில் எடுத்து நெற்றியை சுருக்கிய வண்ணம் விளக்குச் சுடரைப் பார்த்துக் கொண்டிருந்தான் சின்னக்கலப்பன்.

ஆறு மாதத்திற்கு முன் பக்டரியில் நடந்த ஸ்ரைக்குக்கு வீரமுத்துவும் காரணமாயிருந்தான். சம்பளவுயர்வு கோரி நடந்த வேலை நிறுத்தத்தில் முன்னுக்குச் சின்னக்கலப்பனும் நின்றுன். இவை துரைக்கு நன்ருகத் தெரியும். அதை வைத்துக் கொண்டு அதையும் காரணமாக்கி, அவனைப் பேசிக் கலைத்திருக்கிறுன், என்பதை அவன் உணர்ந்தான். தோட்டத் துரைமாரின் பழிவாங்கும் பண்பை அவன் நன்கறிவான்.

வெள்ளை நிற வண்ணுத்திப் பூச்சி விளக்கு வெளிச்சத்தை நாடி சிறகடித்தது. அதை வீரமுத்து நோக்கினுன். அது பல கண்ணைக்கவரும் நிறங்கள் வண்ணமிடும் வெள்ளைச் சிறகுகளை யுடைய அழகான வண்ணுத்திப் பூச்சி. அது யாருக்கும் பயமின்றி உள்ளே புகுந்து விளக்கைச் சுற்றி வந்து கொண்டிருந்தது. அதைக் கண்வெட்டாமல் பார்த்துக் கொண்

டிருந்த வீரமுத்துவுக்கு ''அதைப் பிடிக்கும் ஆசை எழுந்தது. கையை நீட்டினுன். உள்ளத்தில் பழைய நினைவுகள் அந்த வண்ணுத்திப் பூச்சியின் சிறகுகள் போல் அசைந்தன.

அவன் சிறு பையனுக இருக்கும் போது, தேயிலை மலைகளில் கூட்டம் கூட்டமாகச் செல்லும் அந்த வண்ணுத்திப் பூச்சிகளை துரத்திக்கொண்டு திரியும் போது தானும், அவைகளைப் போல் மகிழ்ச்சியுடன் சுதந்திரமாக வாழலாம் என எண்ணியிருந்தான். இன்று தான் வெள்ளைக்காரனுடைய தோட்டத்தில் வேலைசெய்யும் அடிமை போன்றவொரு கூலி என்பதை உணரும் போது உலகமே தலைமேல் பாரமாக அழுத்துவதைப் போன்றிருந்தது. இந்த எளிய வாழ்க்கை வாழவா, நாம் மனிதராய்ப் பிறந்தோம் என்று இதயவுணர்ச்சிகள் துடித்துக் கொண்டன. பெருமூச்சு நெஞ்சை உயர்த்திற்று.

அனிச்சையாக அவன் கைகள் கத்தியை நிலத்தில் தட்டிக் கொண்டன. அப்போது பக்டரியில் வைத்துப் பழனி கொடுத்த துண்டுப் பிரசுரத்தின் ஞாபகம் வந்தது. கோட்டுப் பைக்குள் கையை வைத்து எடுத்து வாசித்தான். அதை அவன் முன்பும் படித்துள்ளான். பழனி அதை திரும்பவும் படித்துப் பார்க்கச் சொன்னுன். அது தோட்டத் தொழிலாளியின் ஒரு ரூபா சம்பளவுயர்வுப் போராட்டம் வெற்றிபெறத் தவறிய காரணத்தைக் கூறுவது.

''தோட்டப்பாட்டாளி வர்க்கத்தின் சரித்திரத்திலேயே முதன் முறை நடத்திய மாபெரும் போராட்டம். வெற்றி பெருததற்கு முதற் காரணம் வெள்ளைக்கார முதலாளி வர்க்கத்தின் பிடிவாதமும் முரட்டுத்தனமுமே. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இவர்கள் எங்கள் தேசத்தையும் தோட்டத் தொழிலாளரையும் சுரண்டி வருகின்றனர். கோடிக் கணக்கான பவுண்களை சீமைக்குக் கப்பலேற்றினர். இங்கு இன்பமாக வாழ மாடமாளிகைகளைக் கட்டினர். ஆயிரக் கணக்கான ரூபாய்களை சம்பளமாக அபகரித்தனர். அது போதாதென்று பல அலவன்சுகளைப் பெற்றனர். இராஜ போக வாழ்வு நடத்தும் இவர்கள் தான் இராமசாமிக்கும்

மீளுட்சிக்கும் நியாயமான சம்பளவுயர்வு கொடுக்கமறுக் கின்றனர்.

தோட்ட முதலாளிமார்களினதும், பிற்போக்கு அரசாங் கத்தினதும் போக்கும் முதலாளிகளின் காங்கிரசின் கருங்காலித்தனமும் போராட்டத்தின் தற்காலிக தோல் விக்கு அடிப்படைக்காரணங்கள். ஆனுல் இப்போராட்டம் சரித்திர முக்கியம் வாய்ந்ததோடு, எதிர் காலப் போராட் டங்களுக்கும் ஒரு கலங்கரை விளக்கமாகத்திகழும்.

தோட்டத் தொழிலாளர் மத்தியில் முதன் முதலாகப் போராட்டப் பாதையைக் காட்டிச் புரட்சிக் கருத்துக்களைப் பரப்பிய பெருமை சிவப்புக் கொடிச் சங்கத்திற்கேயுரியது.

தொழிலாளி வர்க்கம் தனது விடுதலையை போர்க்களத் தில் தான் பெற முடியும் என்பதை ஒவ்வொரு தொழி லாளியு முணர்ந்து செயல்பட வேண்டும். தொழிலாளி வர்க்கம் இழப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனுல் வெல்வதற்கு இந்த உலக முள்ளது.”

மௌனமாக ஆறுதலாக வாசித்து முடித்ததும் சலனப் பட்டிருந்த அவன் எண்ணங்கள் வீறு பெற்றிருந்தன. லேசாக அசையும் குப்பி விளக்கின் சுடரைப் பார்த்தவாறு யோசித்துக்கொண்டிருந்தான்.

“இரு! இரு! பாப்பம்!”

மௌனமாக இருந்த சின்னக்கலப்பன் வெடுக்கெனக் கூறிவிட்டு வெளியில் வந்தான்.

வீரமுத்துவும் எழும்பி வெளியில் வந்தான்.

“அண்ணு றொட்டியைச் சாப்பிட்டுப்போங்க!”

பொட்டு சொன்னுள்.

“மூணு நேரமும் றொட்டியா? இரு வர்றன்?”

கோயிலடிப் பக்கமாக சிந்தனையோடு நடந்தான். அங்கே ராகவன், பழனி, புஞ்சி பண்டா முதலியோர் நிற் பார்கள்.

மலைக் குளிர் காற்று சில்லென்று அறைந்தது. லயத்தின் முன்னுலுள்ள வெளித்துண்டு நிலத்தை இருளின் ஊடாக

அழுகின்ற குழந்தையைப் பார்க்கும் தாயின் உணர்வோடு பார்த்துக் கொண்டு நின்ருன்.

தெரு நாய்கள் எதையோ சுற்றி நின்று குரைக்கும் பலரக ஓலங்கள் குளிர் காற்ருேடு இழுபட்டு வந்தது. அதைக் கேட்டதும் அவனுடைய நெஞ்சம் பல நெருடலான வுணர்வுகள் கலந்து பிறந்த ஒரு தவிப்பினுல் உயர்ந்து தாழ்ந்து கொண்டிருந்தது.

## 6

இருட்டிலே சின்னக்கலப்பன் நடந்து கொண்டிருக்கிருன். அவன் தொழிற்சங்கத் தலைவர் அண்ணுமலை இருக்கும் லயத்தை நோக்கிப் போகின்ருன். அண்ணுமலை மூன்று நாளாக தோட்டத்தில் இல்லை. அவன், சிவப்புக் கொடிச் சங்கத்தைச் சேர்ந்த தோட்டக் கமிட்டித் தலைவர்களின் கூட்டத்தில் பங்குபற்ற ஹற்றனுக்குச் சென்றிருந்தான். கூட்டம் முடிந்து இன்று காலைதான் வந்தான். துரை காம்பரா கொடுக்க மறுத்ததையும் அவள் வீரமுத்துவிடம் பேசியவற்றையும் சின்னக்கலப்பன் தோட்டம் பூராவும் சொல்லிக்கொண்டு திரிந்தான். அண்ணுமலை எப்போது வருவான் என்றும் ஓயாது விசாரித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு துரை பெய்லியின் முதலாளித்தனத்திலும் அதிகாரத்திலும் சொல்ல முடியாத ஆத்திரம்.

அண்ணுமலை இருக்கும் லயம் கோயிலுக்கு அந்தப்பக்கம் உள்ள மலைச்சரிவில் உள்ள இருபதாம் காம்பராவுக்குக் கீழே நூறு யார் தள்ளி இருக்கின்றது. ஒரு சிறிய ஆற்றின் பள்ளத் தாக்கில் அது அமைந்துள்ளது. அவனுடைய கையில் விளக்குப் பந்தம் எதுவுமில்லை. ஆளை ஆள் காண முடியாத இருள். சின்னத்துரை பங்களாவில் மட்டும் மின்சார விளக்கு எரிந்து கொண்டிருந்தது. கண்களைக் குருடாக்கி விட்டாலும் அவன் தோட்டத்தின் சந்துகளில் புகுந்து வந்து விடுவான். அந்த இருளில்தான் அவன் பிறந்தான்.

கைகளை மார்போடு இறுகக் கட்டியிருந்தான். குளிரில் அவனுக்கு இது இதமாக இருந்தது. மின்னிட்டான் பூச்சிகள் சிறிய நீல நெருப்புப் பொறிகளைப்போல ''மின்னி மின்னி'' பறந்து கொண்டிருந்தன.

வீரமுத்துவை பக்டரியில் வேலை முடிந்ததும் தலைவர் வீட்டிற்கு வரும்படி கூறி இருந்தான். ஆனுல் வீரமுத்து இன்று நான்கு மணிக்கே லயத்துக்கு வந்து வெள்ளனவே வீட்டிற்குப் புறப்பட்டு விட்டான். தலைவர் வீட்டிற்கு வந்த பிறகு அங்கு வருவதாகத் தாயிடம் கூறிவிட்டுச் சென்ருன்.

அவனுக்கு இதுவிசயத்தில் இருந்த ஆர்வம் அடங்கியிருந் தது. மாஸ்டரின் மார்க்சிய வகுப்பு வாலிபர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் மனக் கிளர்ச்சியை அளித்தது. மலையில் வேலை செய்து கொண்டிருக்கும்போது அவர் கூறிய முதலாளித்துவம், ஏகாதிபத்தியம், சுரண்டல், தொழிலாளி வர்க்க ஐக்கியம், புரட்சிகரப் போராட்டங்கள் என்பவை பற்றித்தான் விவாதம். நடந்து கொண்டிருந்தது. கண்கள் இரண்டும் இறுகக் கட்டப்பட்டு இருட்டிலே தடுமாறியவர் களின் கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டு இமைகள் திறந்துவிடப் பட்ட உணர்வோடு இருந்தார்கள். இப்பொழுது தம்மைச் சூழ்ந்திருக்கும் இருட்டின் கனத்தை உணரத் தலைப்பட்டார் கள்.

சின்னக்கலப்பனும் அதை அவதானிக்கத் தவறவில்லை. இப்பொழுது அவனுடைய மனம் ஒரு நினைவில், ஒரு விசயத் தில் புரண்டு வியூகமூட்டிக் கொண்டிருந்தது. அவனுள்ளே தகிப்பையும் உண்டாக்கின்றது. அதை அவன் இன்று வேலை விட்டு வரும்போது அறிந்தான்.

இருபது வருடங்களுக்கு மேல் தோட்டத்தில் ஸ்டோர் கீப்பர் வேலை பார்த்தவர் பரமநாதர். அவர் சென்ற கிழமை பென்சன் எடுத்து விட்டார். அவர் சொந்த ஊரான சுன்னுகம் செல்ல வேண்டிய நாளில் நோயினுல் அவதிப் பட்டார். தானிருந்த தோட்டத்திற்குச் சொந்தமான வீட்டில் ஒரு கிழமை தங்கிப்போக துரையிடம் அனுமதி கேட்டார். நீ செத்தாலும் நான் கவலைப்பட மாட்டேன்.

எனக்குத் தோட்டச் சொத்துத்தான் பெரிசு என்று முகத்தில் அறைந்தாற்போல் கூறினர். இதை மூன்றும் கிளாக்கர் சின்னக்கலப்பனிடம் கொஞ்சம் மறைமுகமாகவே கூறினர். தொழிலாளர்களுக்கு எந்த விதத்திலும் நயம் செய்யாது தோட்டத்திற்கே நயம் காட்டிச் சேவகம் செய்த அந்த மனிதனையே வேலை முடிந்ததும் நாயினுங்கேவலமாக மதித்துவிட்டான். முதலாளிகளுக்கு இருதயமே செத்துப் போச்சு. எம்மை அவன் என்னமாதிரி நினைத்து வைத்திருப்பான்.

இந்நிலையில் ஆழமாக ஊடுருவி அதனல் உருவாகிய மனப் பாரத்தோடும் எரிச்சலோடும் கோயிலடிக்கு வந்தான். அங்கு வீரமுத்து நிற்கிருனு என்று பார்த்தான். கோயிலுக்குள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வெளியில் இருட்டுத்தான். இருளில் பந்தம் கொளுத்தி வைத்துவிட்டு வயசு வந்த பயலுக சீனடி, சிலம்படி பழகிக் கொண்டிருந்தார்கள். வீரமுத்துவைக் காணவில்லை.

அவன் தலைவர் காம்பராவுக்குப் போயிருப்பானென்ற மனத் திருப்தியுடன் இருபதாம் காம்பரா லயத்திற்குச் செல்லும் ஒற்றையடிச் சரிவுப் பாதையில் திரும்பினன். புகைப்பதற்கு கையில் பீடியும் இல்லை. துரை காம்பரா இல்லை என்று மறுத்துவிட்ட நாளில் பிடித்த மனச்சோர்வு இன்னும் போகவில்லை. ஆனல் அவனுடைய நம்பிக்கையை மூழ்கடிக்கும் உறுதி அதற்கு இன்னுமில்லை. அந்தச் சோர்வின் கூட்டுக்குள்ளே தொழிற்சங்க நடவடிக்கை எடுத்து எப்படியும் துரையிடம் காம்பரா பெற வேண்டும் என்று ரோச உணர்ச்சி கொதித்துக் கொண்டிருக்கின்றது. காம்பரா கிடைக்குமென்ற நம்பிக்கை ஒளி அடிமனத்தின் மூலையில் இருந்து கண்களைச் சிமிட்டுகின்றது.

அவனுக்குத் தடிமல் மூக்கில் நிறைந்த சளியைச் சீறி எடுத்துப் பக்கத்தில் இருந்த தேயிலைச் செடிக்குள் வீசிவிட்டான். அந்நேரம் சிறிய வெளிச்சம் கண்களில் பட்டதும் திரும்பிப் பார்த்தான். சின்ன குப்பி விளக்கைப் பிடித்துக் கொண்டு ஒரு பெண் குழந்தை முன்னல் நடக்க அவர்

களுக்குப் பின்னால் மூக்காயி நாடியில் கையைத் தாங்கிக் கொண்டு வந்தாள்.

"எங்கே பொயிட்டு வாரீங்க?"

சின்னக்கலப்பன் கேட்டான். அவனுக்குத் தோட்டத்தில் தெரியாத ஆள் இல்லை. மூக்காயியின் முகத்தில் ஏக்கமும் வெருட்சியும்.

"நம்ப புள்ளைகளுக்கு ஒண்ணுமில்லை. பட்டினியா இருக்குதுக. அதான் கடையில போயி பாண்ரொட்டி வாங்கலாமுண்ணு போனேன். அவெ இல்லென்னுட்டான். அவனுக்கு மிந்தியே காசு கொடுக்க வேணும். என்னென்று கொடுப்பேன். இந்த விடியாமூஞ்சி பொழைப்பில நானும் என்னெத்தான் பண்ணுறதண்ணே?"

அவள் நாடியைத் தாங்கிக் கொண்டிருந்த கைகளை எடுக்கவில்லை. அவள் கூறிக்கொண்டிருந்தபோது இரு குழந்தைகளும் சின்னக்கலப்பனின் முகத்தையே ஏறிட்டு நோக்கின. அவன் அதுகளின் நசுங்கிப்போன கன்னங்களைத் தடவி விட்டான்.

"புள்ளயல பட்டினியாவா தூங்கவிடப் போற? நம்ம வீட்டுல போயி நான் சொன்னதாக நம்ப மகளுக்கிட்ட மாவு கேளு தருவாங்க. நா நேத்தைக்கித்தான் வாங்கிக் கொடுத்தேன்போ! போ அப்புறம் பார்த்துக்கலாம்போ!"

மூக்காயி மௌனமாகத் திரும்பி நடந்தாள். அவள் பிள்ளைகளும் அவள் பின்னால் போனார்கள். அவர்கள் நடையிலும் முன்னிலும் பார்க்க் வேகமிருந்தது.

தோட்டத்தில் சம்பளம் கொடுத்து பதினைந்து நாட்களாகி விட்டன. மூக்காயிக்கிருக்கும் நிலைதான் தோட்டத்தில் வேலை செய்யும் சகல தொழிலாளர்களுக்கும். வெளியில் தோன்றியும் தோன்றாமலும் சின்னக்கலப்பனுக்கும் நேற்று மாவுக்கு பெருந்தட்டுப்பாடாக இருந்தது. நாள் முழுதும் உழைத்துப் பட்டினி கிடக்க நேரிடும் நிலையையிட்டு அவன் யோசிப்பதை விட்டு விட்டான். நீடிய காலம் யோசித்து யோசித்து அநாதரவான நிலையில் வாழும் அந்த மக்களுக்காகவும் தனக்காகவும் அனுதாபப்பட்டு

உள்ளம் மரத்துப்போன நிலே. ஆனுல் இப்பொழுது பழைய நாளில் நடந்த நினைவு ஒன்று உள்ளத்தின் நரம்புகளில் விரலால் தட்டுகின்றது.

வீரமுத்து பிறந்து ஆறுமாதத்தில் ஆருயிக்கும் வேலையில்லை. வீரமுத்து காமாலை நோயினுல் துன்புற்றதினுல் ஆருயி அவன் பக்கத்தில் இருக்க வேண்டிய தாயிற்று. அவனுக்கு அடிக்கடி மருந்துச் செலவு. சின்னக்கலப்பனின் தாயும் தகப்பனும் வீட்டில் கிடந்தார்கள். அந்நாளில் ஆருயியும் அவனும் கதியின்றி யாருக்கும் தெரியாமல் பட்டினி கிடந்ததும் ஒரு நாள் மழையில் வேலை செய்யும் பொழுது பசிக் களைப்பினுல் மயக்கமிட்டு விழுந்ததும் சலனமிட்டு மனதில் சிறு கசிவை ஏற்படுத்திற்று.

அவன் கொஞ்சத்தூரம் நடந்து சொத்திச் சிலப்பன் இருக்கும் லயத்தின் முனைத்திருப்பத்தில் வாழை மரங்களுக்குக் கீழ் போகும் போது வீரமுத்து திட்டிப் பந்தத்துடன் வந்து கொண்டிருந்தான். சிறிய பையஞன விமுக்கன் அவன் பின்னுல் சினிமாப்பாட்டுப் படித்துக் கொண்டு வந்தான். பள்ளிக்கூடத்திற்குப் போகவழியின்றி மலைகளிலும் லயங்களிலும் சுத்தித் திரியுமவன் இன்று வீரமுத்துவுடன் சேர்ந்து விட்டான்.

''எங்க பொயிட்டு வாற?''

''சிலப்பண்ணே வீட்டுக்கு. அவரோட தாயாருக்கு மலையில் அட்டகடிச்சு காலு பெரிசா வீங்கிப் போச்சு. காய்ச்சலும் காயுது. விஷ அட்டை போலிருக்கு!''

''ஆமா ஆஸ்பத்துக்குப் போனுங்களா?''

''போயிட்டுத்தான் வந்தாங்க!''

சின்னக்கலப்பன் சில விநாடிகள் பேசாமல் நின்றுவிட்டுக் கேட்டான். ''நீ தலைவர் வீட்டுக்கும் போனியா?''

''இன்னுமில்ல!''

''சரி சரி, நடபோவம்!''

வீரமுத்து முன்னுல் லய ஓரத்திற் செல்ல பின்னுல் விமுக்கன் சென்ருன். கடைசியில் சின்னக்கலப்பன் நடந்

தான். அந்த லயத்தில் நடக்கும் சண்டை சச்சரவுகளேயும் சந்தடிகளேயும் நோட்டம் விட்டுக் கொண்டான்.

"இவனுரு பயல்!"

"இவெ விமுக்கன். இந்த பணிய லயத்திலே இருக்கிற பவளம்மை மகென்.

"அவள் கட்டின புருசனேக் கலேச்சுப்போட்டு அவன் தம்பி வீரனேடை குடித்தனம் பண்ருள் என்ன?"

"ஆமா அதனுலதான் இவெ அங்கே போக மாட்டேங்கிருன். ஆயா சரியில்லேன்னு சொல்ருன். லயமெல்லாம் சுத்திப்புட்டு யாரும் கொடுக்கிறதைத் தின்னுபுட்டு அலேயிருன்."

இதைக் கேட்ட சின்னக்கலப்பனின் யோசனே எங்கோ நுழைந்து வந்தது.

"அவங்களும் வீரனேடை ஒரே காம்பராவில் தானே இருந்தாங்க."

வீரமுத்து மௌனித்து விட்டான்.

சின்னக்கலப்பன் விழுக்கனே ஒரு விருப்பமான வுணர்வோடும் அனுதாபத்தோடும் பார்த்தான். அவனேயே பவளம்மாள் ஒழுங்காகப் பெறவில்லேயென்பது அவனுக்கு இரகசியமான விசயம். கணக்கப் பிள்ளேமார் லயத்திற்கு விரட்டாமல் பேர் போடுவதற்கும் கிள்ளிய கொழுந்தின் இருத்தல் குறையாமல் இருப்பதற்கும் தங்கள் பெண்மையின் ஆத்மாவைப் பலியிட வேண்டிய நிர்ப்பந்த நிலேயில் பெண்கள் இருக்கும் போது இதெல்லாம் சர்வசாதாரணம். இந்த விசயங்களே யிட்டு நேர்மையான உள்ளத்தில் எழும் ஆத்ம உணர்வு ஆதரவின்றி சிலவிநாடிகளில் சோர்ந்து விடும்.

"இன்னும் ரெண்டு வருசம் போனு இதெல்லாம் இவனுக்குப் பெரிசாத் தோனுது. எல்லாம் புரிஞ்சுக் கொள்ளுவான்."

வீரமுத்து இவை எல்லாவற்றையும் எண்ணி அருவருப்புக் கொள்ளும் மனதோடு வந்தான். ஒன்றையும் காதில் விழுத்தாதவன் போல 'நீ, ஒரு பாட்டுப் பாடேடா

விழுக்கா!'' என்று சொன்னான். விழுக்கன் செருமி தொண் டையைச் சரிப்படுத்தி உடனே பாடத் தொடங்கினான். ஒரு பீடி குடித்தால் இன்னும் உஷாராகப் பாடுவான்.

''மாடா ஒழைச்சவன் வாழ்க்கையில—பசி
வந்திடக் காரணம் என்ன மச்சான்
அவன் தேடிய செல்வங்கள் வேறயிடத்தில்
சேர்வதினால் வரும் தொல்லையடி''

அவனுக்குத் தெரிந்த பகுதிகளை மட்டும் திருப்பித் திருப்பிபாடினான். அவனுடைய இனிமையான குரலும் பாட்டின் கருத்தும் சின்னக்கலப்பனை மிகவும் கவர்ந்தது. அவன் மேல் ஆதரவும் சந்தோஷமும் பெருகியது. அவன் அருகில் சென்று அவனுடைய முதுகைத் தடவிக் கொண்டு சொன்னான்.

''பயல் நல்லாப் படிக்கிறானே. நீ இன்னைக்கி நம்ம ஆட்டுக்கு வர்றீயாடா?'' விழுக்கன் மனப் பூர்வமாக தலை யசைத்தான். வீரமுத்து அவன் பாடிய பகுதியை தன் வாய்க்குள் அர்த்தத்துடன் முணு முணுத்தான்.

ஆற்றுப் பாலத்தையும் கடந்து போய் அண்ணாமலையின் காம்பராவை மூவரும் அடைந்தனர்.

''வாங்க! வாங்க! வணக்கோம்! உங்க விசயத்தை யிட்டுத்தான் நாம் பேசிக்கிட்டிருந்தோம். வாங்க!''

முன் தோப்பில் இருந்த அண்ணாமலை சற்று எழுந்து அவர்களை அழைத்து விட்டு, பாயில் அமர்ந்தான். அவரோடு தோட்டக்கமிட்டி அங்கத்தவர்களான வேலுவும் அருணாசலமும் இருந்தனர். இராகவனும் வந்து இருந்தான். அவன் மூலையில் சுவரோடு சாய்ந்து இருந்தான். வீரமுத்து இராகவனைக் கண்டதும் சிரித்தவாறு அவன் அருகில் சென்று அமர்ந்தான். விழுக்கனுக்குப் பக்கத்தில் சின்னக்கலப்பன், அண்ணாமலைக்கு முன்னால் கால் மடக்கி அமர்ந்து கொண்டான். இராகவனும் அழைத்து வந்த சின்னப் பொண்ணுக் கிழவியும், அவள் மகள் ஜானகியும் உட்காருவதற்கு கூச்சப் பட்டு நாடியை ஒரு கையில் தாங்கி ருக்கியோடு சாய்ந்து நின்றனர். உண்மையில் அங்கு அவர்கள் உட்காருவதற்கு

இடமில்லை. ஸ்தோப்பின் மறுபக்கத்தில் அண்ணுமலையின் மனைவி சமைத்துக் கொண்டிருந்தாள். சின்ன வயதிலிருந்து ஏக்கமும் பயமும் கொண்டு பூரிப்பு வற்றி வெருட்சி கொண்ட அந்தப் பெண்களின் விடியாத முகங்கள் குப்பி விளக்கொளியில் லேசாக மினுமினுக்கத்தான் செய்தன.

வேலு, அருணுசலம், இராகவன், வீரமுத்து, தங்களுக்குள் சின்னப் பொண்ணுக் கிழவியின் விசயத்தை யிட்டுப் பேசிக் கொண்டிருந்தார்கள். அண்ணுமலைக்கு சின்னக் கலப்பனின் காம்பரா விஷயம் முற்றும் தெரியும். அவன் சின்னக்கலப்பனைப் பார்த்துக் கொண்டிருந்தான். பதட்ட மில்லாத சுபாவமும், எந்நேரமும் புன்னகை தவழும் லட்சுமி கரமும், எந்தத் துன்பத்தையும் தாங்கிக்கொள்ளும் தைரிய மும், செயல்களை ஆறுதலாக யோசித்து முடிவெடுக்கும் அடக்கமும் அவனிடமுண்டு. அவன் சின்னக்கலப்பழனுக்கு பதினைந்து வயது இளமையானவன். மூன்று வருடங்களாக அவனே சங்கத் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப் பட்டான்.

புஞ்சி பண்டாவும், அங்கு வந்து சேர்ந்தான். அவனும் தோட்டக் கமிட்டியில் இருக்கிருன். அவனுக்கு ஒரு கண் குருடு. கவ்வாத்து வெட்டும் போது தேயிலைத்தடி குத்தி யது. அவனும் போய் வேலுவுக்குப் பக்கத்தில் அமர்ந்தான். அவனுடைய நாய் வெளியில் நின்றது.

' நம்ம காம்பரா விஷயமெல்லாம் உங்களுக்குத் தெரியும் தானே ?'' என்று பேச்சைத் தொடங்கினுன் சின்னக்கலப்பன்.

''ஆமா!''

அண்ணுமலை தலையசைத்து யோசனையில் இருந்தான். அவன் கன்னத்தில் உள்ள நீண்ட வடுவை சின்னக்கலப்பன் நோக்கினுன். முன்பு தோட்டத்திலிருந்து தொழிலாளரின் பிரச்சினைகளைக் கவனியாது துரைக்கு வால் பிடித்த தொழிற் சங்கத்திற்கு எதிராக அண்ணுமலையும், சின்னக்கலப்பன் முதலியோரும் சிவப்புக்கொடிச் சங்கத்தைக் கொண்டு வந் தார்கள். அப்போது பழைய சங்கத்தார்க்கும் அவர்களுக்கு

மிடையில் சண்டை மூண்டது. அந்நேரம் அவர்கள் கல்லால் எறிந்து காயப்படுத்திய வடுதான் அது. அச்சங்கம், வால் பிடிச் சங்கமென்று கூறி சிவப்புக்கொடிச் சங்கத்தில் சேர்ந்த சிலரில் புஞ்சிபண்டாவும் ஒருவன்.

இன்று சகல தொழிலாளர்களும் புதிய சங்கத்தில் சேர்ந்து கொண்டார்கள். அதில் அண்ணுமலேக்கு பெரும் பங்குண்டு.

அதை நினைவுக்குக் கொண்டு வந்த சின்னக்கலப்பன் பூரிப்பு அடைந்தான்.

“நியாயப்படி தொரை நமக்கு காம்பரா கொடுக்கத் தானே வேணுமுங்க!”

“ஆமா, கொடுத்திருக்கவேணும், எதை நாம அநியா யமா கேக்குறேம்?”

“தொரை வேசமவனுக்கு நாம பாடம் படிச்சுக் காட்ட ணும்; தொழிற்சங்க மூலமா நடவடிக்கை எடுத்தோமின்ஞ எப்படியும் வெற்றி பெறலாம்.”

சின்னக்கலப்பன் ஒரு கையில் மறுகையைப் பொத்திக் கொண்டு கூறினுன். அதைப் பார்த்து சந்தேகத்துடன் ‘ஆமா’ என்று தலே ஆட்டினுன் புஞ்சிபண்டா. தமிழைத் தமிழனேப்போல் பேசுவான். அவனுடைய தகப்பனும் அத் தோட்டத்தில் வேலே செய்தான்.

அண்ணுமலே புன்முறுவல் புரிந்தான். பிறகு சொன்னுன்.

“எப்பெண்ணுலும் நம்ப பக்கம்தான் வெற்றி; நீதி எந்தப் பக்கமிருக்குதோ, அந்தப் பக்கம்தான் வெற்றியுமிருக்கும். நாம நீதியின் பக்கம்தான். அதிலே சந்தேகமே இல்லே. ஆனு வெள்ளேக்காரன் வச்ச சட்டதை எதித்து அவனுக்கிட் டேயே அவன் போட்ட சட்ட நிபந்தனேகளுக்கு உட்பட்டு நீதி கேட்கிறப்போ, அவனுக சுழிச்சுத்தான் பாக்கிறுனுக. நம்ம சங்கம் மிந்திய கேசுகளில் வெற்றியடிச்சதைப் போல் இதிலேயும் வெற்றி எடுக்கத்தான் பாக்கும். இந்த முறை விடுறதில்லே. சண்டை புடிச்சுத்தான் பாக்கிறது. இது உங்க பிரச்சனே மட்டுமில்ல. நம்ப எல்லோருக்கும் இருக்கிற பிரச்சனேதானே?”

''ஆமா, அப்படிச் சொல்லுங்க!''

சின்னக்கலப்பன் சத்தமிட்டுச் சிரித்தான். அவனைப் பார்த்த ஒருவராலும் சேர்ந்து சிரிக்காமலிருக்க முடிய வில்லை.

''நீங்க தைரியமா இருங்கண்ணே, விசயத்திலே நமக்குத் தான் வெத்தி. தொரையே ஒரு கை பார்த்துக்குவோம்.''

வேலுவின் குரலில் உறுதி இருந்தது. அதைக் கேட்டு வீரமுத்து உள்ளே உஷார்ப்பட்டான். அண்ணுமலையும் அதற்கு ஆமா என்று கூறிவிட்டு சில விநாடிகள் மௌனமாக இருந்தான். பின்பு செருமிக்கொண்டு சொன்னுன்.

''நம்ம சங்கத்தை தொரைக்கின்னு புடிக்கல்லே. அதனுலே தினமும் கரச்சல் குடுத்திக்கிட்டே வர்ருன். அதனுல ஒண்ணுமில்ல. நம்ம சங்கந்தான் தொழிலாளர் களுக்கு நேர்மையா ஒழைச்சுக்கிட்டிருக்கு. தொழிலாளர் களுக்கு நேர்மையா ஒழைக்கிற சங்கத்தை முதலாளிகளுக்குப் பிடிக்குமா? பிடிக்காதுதான். நம்ம சங்கத்திற்கு எல்லா தோட்டத்திலேயும் இதே எதிர்ப்புத்தான். அண்ணேக்கி வீரமுத்துகிட்டே தொரை சொன்னதும் தெரியும். இதைப் பத்தி தம்பி இராகவன் அழகாக ஒரு உண்மையைச் சொன் ஞரு. எதிரி எதை ஆதரிக்கிருனே, அதை நாம எதிர்க்கணும். எதிரி எதை எதிர்க்கிருனே அதை நாம ஆதரிக்கணும். இதை நாம எந்நேரமும் ஞாபகத்திலே வச்சிருக்கணும். நம்ம எதிரிகள் யாரு? நம்மை சுரண்டுற முதலாளிகளும் அவங்க கைக்கூலிகளும் வால்பிடிகளும்தானே? என்ன சொல்றீங்க!''

அவன் சின்னக்கலப்பனை பார்த்துக் கேட்டான்.

''ஆமா. அது சரிதானே, இதிலே வேறென்ன சொல்ற துக்கிருக்கு?''

அவன் கூறியதில் இருந்த ஆக்ரோசத்தைக் கண்டு, வேலுவும், இராகவனும், அருணுசலமும் மனம் பூரித்துப் போனுர்கள்.

'' அண்ணே, நீங்க எப்ப காரியாலயத்துக்குப் போறீங்க?''

இராகவன் அண்ணுமலேயிடம் கேட்டான்.

"நா, நாளேக்கி பதுளேக்கு போறேன். வீரமுத்து நீங் களும் வாங்க, இவங்க பிரச்சினேக்கி இவங்களேயும் வரச் சொல்லியிருக்கிறேன். நேராக நம்ப காரியாலயத்துக்குப் போயி, அங்கு நம்ம பிரநிநிதி இருப்பாங்க அவங்களிடம் நம்ம விசயத்ததை விளக்கமா கூறி நடவடிக்கை எடுக்கச் சொல்லிவிட்டு வருவோம். என்ன சொல்றீங்க?"

"அது சரி வீரமுத்து, நாளேக்கி நீ போயிட்டுவா. இதை உடனடியாக கவனிக்கணும்!"

"ஆமா வீரமுத்து, உடனடியாகக் கவனிக்கணும்." புஞ்சிபண்டாவும் ஆத்திரமாகச் சொன்ஞன்.

வீரமுத்து 'சரி' என்று சொல்லிவிட்டு இருந்தான். சின்னக்கலப்பன், மௌனமாக நின்று கொண்டிருக்கும் சின் னப்பொண்ணுக் கிழவியையும், மகளேயும் பார்த்தான். அவர் கள் பிரச்சனேயைப் பற்றித்தான் அண்ணுமலே சொன்ஞன்.

"இவங்க பிரச்சனே என்ஞங்க?"

"இவங்க பிரச்சனேயா, அதையேன் கேக்கிறீங்க; இவங்க மகெள் கலியாணம் பண்ணி வேற தோட்டத்துக்குப் போயி ருந்தாங்க. இப்ப புருஷஞேட தகரூறு பட்டுக்கிட்டு தாயாரு வூட்டுக்கு வந்திருக்காங்க. தொரை இதை அறிஞ்சுக் கிட்டான். அதஞலே தன்னுடைய அனுமதியில்லாம இவங்க மகளே காம்பராவில் வைச்சிருக்கக் கூடாதுன்னு சொல்லிப் புட்டான். அப்படியில்லேன்னு இவங்க வைச்சிருந்ததஞ லேயே இவங்களுக்கு வேலேயே நிறுத்திப்புட்டான்."

"அட, வேசமவெ இதிலென்ஞ அநியாயமிருக்கு. தாய் வூட்டுலே மகெ இருக்கத்தானே செய்வாங்க?"

என்ன சொல்லுவதென்று புரியாது, அண்ணுமலே ஸ்தோப்புச் சுவரில் பூச்சிப் பிடித்துத் தின்னுகொண்டிருக் கும் பல்லியைப் பார்த்துக் கொண்டிருந்தான். உலகத்தைக் காணமுடியாத இருட்டறையில் அடைபட்டிருப்பது போல ஒரு உணர்வு. அப்போது வேலு, ஒரு மூச்சு நாசியைவிட்டு வெளிவர, சொன்ஞன்.

"நம்ம வாழ்க்கை நாய் மாதிரித்தானே, வேலேயில்

லேன்னு விரட்டிவிட்டா தெருவிலே நின்னு அலையணும். உள்ளே வைச்சிருந்தா வாலைக் குழைச்சிக்கிட்டிருக்கனும். எஜமானிடம் அனுமதி இல்லாம நம்மை யாரும் பாக்கே லாது. ச்சீ இந்த கடைகெட்ட வாழ்க்கைக்கு எப்படித்தான் முடிவுகட்டப் போறேமோ?"

கூட்டுக்குள் இருந்து சிறகடிக்கும் கிளியின் அவதியைப் போல அவன் மனம் ஆக்ரோஷத்தில் ஒதுங்கிற்று. சின்னக் கலப்பன் நிமிர்ந்து சின்னப் பொண்ணுவையும் மகளையும் வாஞ்சையோடு பார்த்தான். அவனுக்கு ஒன்றும் கூற வர வில்லை.

சில விநாடிகள் நிசப்தம் நிலவிற்று.

"இந்த தோட்டங்களெல்லாம் முதலாளி ராசாக்கள், வெள்ளைக்காரங்க சர்வாதிகார ஆட்சி நடத்துற பிரதேச மாச்சே. இதை யாரு கேப்பான்? இந்த அநியாயத்தை எதிர்க்க நமக்கு தைரியம் வரல்லை. ச்சீ!"

இராகவன் மூலையோடு இருந்து பாயில் கோடுகள் கீறிக்கொண்டு, ஒரு அநாயாசமும், அருவருப்பும் உள்ளடக்கிய முகச்சுளிப்புடன் தாழ்ந்த தொனியில் கூறினன். அவன் நெஞ்சத்துள் ஒரு கொடுங்காற்று வீசிக்கொண்டிருந்தது.

தலைவர் நிமிர்ந்து இராகவனைப் பார்த்து சொன்னர்.

"நீங்க என்ன தம்பி சொல்லுறீங்க, தொழிலாளி வர்க் கந்தான் அதை எதித்துக் கேக்கணும். அது கேட்டாத்தான், நாயம் பிறக்கும்."

இராகவன் முகம் சிடுசிடுத்தது.

"இந்த தொழிலாளி வர்க்கந்தான் ரோசம் கெட்டுக் கிடக்கே. உணர்ச்சியெல்லாம் மரத்துப் போச்சே. நம்ம உழைப்பெல்லாம் வெள்ளைக்காரன் சுரண்டிக் கொண்டு போறன். நாலு பக்கத்தாலும் நாம வாழ்க்கை ஒடுங்கிக் கிடக்கு. சாதாரண மனிதனுக்கு கிடைக்கிற அடிப்படை மனித உரிமைகள் இல்லாமலே கூனிப்போய் கிடக்கிறேம். மயான அடிமைத்தளத்தில் கிடந்து அழுந்துகிறேம். இந்த தொழிலாளி வர்க்கம் இதை யோசிக்குது இல்லையே. தன் னுடைய சுதந்திரத்திற்காக போராட ரோசமில்லாத இவன்

இன்னமும் காந்திக்கும் நேருவுக்கும் ஜே! போட்டுக் கிட்டிருக்காணுக.''

உள்ளத்தின் பதக்களிப்பு அவன் முக நரம்புகளில் சிலிர்ப்பை ஏற்படுத்திற்று.

''தொண்டு செய்யு மடிமை உனக்கு
சுதந்திர நினைவோடா?''

வேலுவின் குரலில் ரோச உணர்ச்சி கெம்பிற்று.

''நாம ஏனய்யா இந்த வாழ்க்கை வாழணும்? என்னத்துக்காக வாழனும்? நாம செய்த குற்றம் என்ன? நேர்மையா உழைக்கிற நமக்கேன் இந்த ஈனமான வாழ்வு? வாழ்றதுக்காகத்தானே உழைக்கிறோம். ஆனா அந்த வாழ்க்கையே கிடைக்காதபோது அதற்கு என்ன அர்த்தம்? நம்ம பக்கம் நியாயமிருக்கு, நியாயமிருக்கிற பக்கம்தானே வெற்றி. இந்த நிலையிலே நாம வாழ்ந்தாலும் ஒண்ணுதான், செத்தாலும் ஒண்ணுதான். நாம இழப்பதற்கு நம்மிடமென்ன இருக்கு? நாமேன் இந்தக் கொடுமைகளை எதிர்த்து, எங்களைச் சுரண்டிக் கொடுமை செய்கின்ற முதலாளி வர்க்கத்தை எதித்து, நம்ம செல்வத்தைக் கொண்டு போகிற வெள்ளைக் காரனை எதித்து போராடக் கூடாது. முதலாளி வர்க்கத்துக்கேன் ஒரு முடிவு கட்ட நாம தயங்கனும்? ச்சீ, எப்பத்தான் இந்த தொழிலாளி வர்க்கம் உணர்ச்சி பெறப் போகுதோ?''

இராகவனுக்கு ஆத்மார்த்தமான ஒரு விடுதலை உணர்வு எழுந்து அதில் உள்ளமும் உத்வேகம் பெற்றுப் புகைந்தது. இதயத்தின் கொதிப்பு அவனுக்கு இன்னும் அடங்கவில்லை. மற்றவர்கள் அவனுடைய மனதின் எழுச்சியுடன் நூற்றுக்கு நூறுவீதம் ஒன்றிப் போயிருந்தனர். அவன் கூறிய வார்த்தைகள் ஒவ்வொருவர் உள்ளத்தின் நரம்புகளையும் சீண்டிக் கொண்டிருந்தன. மன ஆழத்தில் போராட்ட உணர்வுகள் இரத்தம் குடிக்க தலைதீட்டி ஆடும் அட்டைகளைப் போல கிளர்ந்து கொண்டிருந்தன.

சின்னக்கலப்பன் குனிந்தவாறு சொன்னன். ''நீங்க தொழிலாளர்களை குற்றம் சொல்லாதீங்க. அவங்க படிப்

பறிவில்லாத பாமரங்க. இதுதான் நமக்கு தலைவிதி என்றும் இதற்கு மேல நமக்கு வாழ்வில்லை என்றும் நம்பக்கூடிய மாதிரி நம்ம மலைநாட்டுத் தலைவங்க ஆக்கி வச்சிட்டாங்க அவங்களத்தான் நீங்க குற்றம் சொல்லணும்.

அவன் தன் அனுபவத்தில் இருந்து நிதானித்துப் பேசினான். அண்ணாமலை அது கேட்டு உற்சாகமடைந்தான்.

''நீங்க சொன்னதுதான் சரி. நம்ம மலைநாட்டுத் தலைவர்கள் தொழிலாளர்களை ஏமாத்தி இந்தக் கேடு கெட்ட வாழ்க்கையைவிட புதிய ஒரு வாழ்க்கை இல்லையென நம்பும்படி செய்துவிட்டாங்க. அவங்க போராட்ட உணர்ச்சியையே கெடுத்திட்டாங்க.''

''அவர்களை இந்தச் சமுதாயம் ஒருக்காலும் மன்னிக்காது!''

அருணாசலம் ஆவேசமாகச் சொன்னான். அண்ணாமலை எல்லார் முகங்களையும் ஒருமுறை பார்த்துவிட்டு ''நாம ஒண்ணை மறந்துடக்கூடாது. தொழிலாளி வர்க்கத்தில்தான் நாம நம்பிக்கை வைக்கணும். அதில் நம்பிக்கை இழந்தா, உலகத்திலேயே நம்பிக்கை இழந்த மாதிரி. எண்ணேக்கோ ஒருநாள் இந்த தொழிலாளி வர்க்கந்தான் கொடுமைகளை எதித்துக் கிளந்து எழும். தன்னுடைய சுதந்திரத்தை நிலை நாட்டி புதிய வாழ்க்கையை அமைக்கும். இதிலே சந்தேகமே இல்லை'' என்று வேலு அமைதியாகக் கூறிவிட்டு இருகைகளையும் நம்பிக்கையோடு தட்டிக் கொண்டிருந்தான்.

''தொழிலாளி வர்க்கத்திற்கு சரியான வழிகாட்டுற பொறுப்பு நம்மிடந்தான் இருக்கு.''

வேலு அமைதியாகக் கூறினான்.

''அப்படிச் சொல்லுங்க வேலு. அந்தப் பொறுப்பு நம்ம சங்கத்திற்கும் நம்ம கட்சிக்கும்தான் உண்டு.''

''நேத்து நடந்த நமது கூட்டத்தில கொழும்பில இருந்து வந்த நம்ம தலைவர் இதைத்தான் வற்புறுத்திக் கூறினாரு. தொழிலாளி வர்க்கம் அரசியலை முதன்மைப் படுத்தவேணும். அரசியல்தான் சகலவற்றையும் தீர்மானிக்கிறது. தொழிலாளி வர்க்கத்தின் அரசியலை தொழிலாள வர்க்கம் அறிந்து

கொள்ளவேணும். தொழிலாளி வர்க்கம் அரசியல் உணர்வு பெருவிட்டால், தொழிலாளீ வர்க்க உணர்வைப் பெரு விட்டால் நாம எந்தப் போராட்டங்களேயும் வெற்றிகரமாக நடத்த முடியாது என்று அழுத்திச் சொன்னுரு. நமது வேலே யும் அவையாகத்தான் இருக்க வேண்டும்'' என்று அண்ணு மலே பொறுப்புணர்ச்சியோடு கூறினுன்.

''நிச்சயமாக அவைதான் நமது வேலே.''

இராகவன் வீரமுத்துவின் முதுகில் தட்டிச் சொன்னுன். யோசனேயின் ஆழத்தில் சில விநாடிகள் மௌனம் நிலவிற்று.

''அடுத்த கிழமை சீமையிலே இருந்து தோட்டக்காரங்க தோட்டம் பாக்க வாருங்களாமே?''

வீரமுத்து ஏதோ நினேவில் மூழ்கி இருந்து கேட்டான்.

''ஆமா வர்ருங்க. தங்க சொத்துக்களே பாக்க வர்ருங்க. அதனுலதான் தோட்டத்தில் மும்முரமா வேல நடந்து கிட்டிருக்கு.''

அருணுசலம் பதில் கூறினுன்.

''அவுங்க வர்ரதினுலே நமக்கென்ன வந்திடப் போவுது?''

சின்னக்கலப்பன் நிரந்தரமாகிவிட்ட வெறுப்பைக் காட்டினுன்.

''ஆமா, தொழிலாளிகளுக்கு புதுசா காம்பரா கட்டித் தரனுமின்னு கேட்கலியா?''

அவன் ஏதோ மறந்துவிட்ட விசயத்தை ஞாபகப்படுத்து பவன்போல அவசரமாக தொடர்ந்து கேட்டான்.

''அதைச் சொல்லத்தான் இருந்தேன். நாம அதை யிட்டும் பேசிக்கிட்டிருந்தோம். இந்த தோட்டத்தில் நீண்ட காலமா புதுசா காம்பரா ஒண்ணும் கட்டப்படவில்லே. தொழிலாளர்கள் காம்பராக்களில் அளவுக்கு மீறி அடைஞ்சு கிடக்க வேண்டியிருக்கு. இப்ப உள்ள லயங்கள் சுகாதார மற்றவை. மனிதன் வாழ முடியாதவை. சுகாதார வசதி யுள்ள வீடுகள் கட்டிக் கொடுக்கவேணும். ஒரு குடும்பத் திற்கு ஒரு வீடு. ஒரு வீட்டுக்கு ஒரு மலசலகூடம், கட்டித்தர

வேண்டும் எண்ணு நம்ம சங்க மூலமா கோரிக்கை போடு வோம். இது நமது பிரச்சனேயல்ல. சகல தோட்ட தொழி லாளர்களினதும் பிரச்சனே; என்ன சொல்ருங்க பாப்பம். நாங்க இதுக்காக விட்டுக்கொடுக்காம போராடுவோம்.',

"ஆமா, கட்டாயம் செய்யணும். அதுதானே கேட்டேன்."

அண்ணுமலே சொன்னதைக் கேட்டு சின்னக்கலப்பன் அதட்டிச் சொன்னுன்.

அவனுக்கு மிகச் சந்தோஷம். அவனுக்குள்ள சந்தோஷம் தாம் மற்றவர்களுக்கும்.

"நம்ம சங்கப் பிரதிநிதிகளும் இந்த மாதக் கடைசியிலே நம்ம தோட்டத்துக்கு கூட்டம் போட வர்ருங்க."

வேலு தன் வீட்டுச் சொந்தக்காரர் சொன்னதைப் போன்ற பூரிப்போடு கூறினுன்.

"அவங்க வார்த்தைத்தானே நாம பாத்துக்கிட்டிருக் கோம். இல்லேயா இராகவன்?" புஞ்சிபண்டா மகிழ்ச்சியில் கையில் அடித்துக்கொண்டு இராகவனேப் பார்த்துக் கேட்டான்,

"ஆமா, நா, சொல்ல மறந்திட்டன். இம்முறை கொழும்பில் இருந்து பிரதிநிதி வர்ருங்க. நம்ம ஜினதாச தோழர் வர்ருரு."

தலேவர் தொடர்ந்து சொன்னுர்.

"தொரெ அனுமதி கொடுத்திட்டாஞ, அவங்க தோட் டத்துக்கு வர்றதுக்கு?"

வீரமுத்து ஆச்சரியத்தோடு கேட்டான். "இரண்டு மாசமா மறுத்துக்கிட்டிருந்தான். இந்த மாசங் கொடுத் திட்டான்" என்ருர் அண்ணுமலே.

"அவங்க வரட்டும்." ஏதோ தீர்க்கமான யோசனே யோடு, நிலத்தைப் பார்த்தவாறு சொன்னுன் இராகவன்.

பின்பு சின்னப்பொண்ணுவையும், மகளேயும் அனுப்பி விட்டு பிரதிநிதிகள் வரும் கூட்டத்தை எப்படி சிறப்பாக நடத்துவதென்பது பற்றி நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந் தார்கள்.

# 7

**தோட்டச்** சொந்தக்கார முதலாளிகளான வெள்ளேயர் கள் பிரித்தானியாவிலிருந்து சென்ற கிழமை இலங்கைக்கு வந்துவிட்டார்கள். தங்களுடைய கொம்பனியைச் சேர்ந்த, மற்றத் தேயிலேத் தோட்டங்களே பார்வை இடுவதற்காக கண்டி, நுவரெலியா, ஹட்டன் முதலிய இடங்களுக்குப் போய்விட்டு இன்றைக்கு இங்கு வருகிருர்கள்.

குயின்ஸ் தோட்டம் மிகவும் புனிதமாகவும் ஜோராகவும் காட்சியளிக்கிறது. அது ஒருமாத காலமாக அத்தோட்டத்தி லுள்ள தொழிலாளர்களின் கடும் உழைப்பை ஜீரணித்து விட்டது. முடிவெட்டி, முகசவரம் செய்து, குளித்து புத்தாடையணிந்து சந்தோஷத்துடனிருக்கும், ஒரு தோட் டத் தொழிலாளியைப்போல் அத்தோட்டம் இருக்கிறது. தேயிலேப் பக்டரியில் ஒவ்வொரு முக்கிய பகுதியும் புதுப்பிக் கப்பட்டது. சகல பகுதிகளும் நுணுக்கமாக வெள்ளேயடித்து, மை பூசி, சிறு துண்டு குப்பையும் 'கிளி'ஞக இருக்கின்றது. வீதிகள் எல்லாம் துப்பரவு செய்யப்பட்டு ''போர்டு''கள் திரும்பவும் எழுதப்பட்டு அழகாக இருக்கின்றன. துரை மாரின் பங்களாவுக்கு அதிக செலவு. அவை புதுமாளிகைகள் போல.

தோட்டத்துரை பெய்லி மிகக் கெட்டிச்காரன். ஒரு மாத காலமாக பெரும் திட்டம் தீட்டி, அத்திட்டங்களே டிவிசன்களுக்குப் பொறுப்பான சின்னத் துரைமார்களுக்கு விளக்கி, கடுமையான சட்டம் போட்டு, வேலே வாங்கி தோட்டத்தை அழகுபடுத்தி விட்டான். அந்நாட்களில் வேலேயில் சிறு பிழை விட்டவர்களுக்கு மறு பேச்சின்றி தெண்டம் அடிக்கப்பட்டது. ஒரு நிமிடம் பிந்தியவர்கள் லயத்துக்கு விரட்டப்பட்டனர். வேலேவிடும் நேரம் ஒருவருக் கும் தெரியாமல் சிறிது நேரம் கூட்டப்பட்டது.

அதிகாலே தொடக்கம் தோட்டம் மிகச் சுறுசுறுப்பாகக் காணப்படுகின்றது. தேயிலே மலேகள், ஒரு புதுமணப்

பெண்ணைப்போல சீவிச் சிங்காரித்து செருக்காக இருக்கின்றது.

சின்னத்துரைமார் 'மோட்டார் சைக்கி'ளில் அங்குமிங்குமாக ஓடித் திரிகின்றூர்கள். பெரிய துரை காரில் போவதும் வருவதுமாக இருக்கின்றுன்.

அன்றைக்கு 'சொந்தக்காரர்' வந்து போகும்வரை தோட்ட வீதிகளில் எவரும் நிற்கவும் கூடாது. நடமாடவும் கூடாது. அப்படி நடமாடினுல் அதற்குரிய தண்டனை தெண்டமாகவோ, பற்றுச் சீட்டாகவோ இருக்குமென்று சகல தொழிலாளர்களையும் துரை கடுமையாக எச்சரிக்கை செய்துள்ளான்.

ஒப்பீஸிலும், பக்டரியிலும், மலையிலும், வேலை அமைதியாகவும், அவதானமாகவும் துரிதப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ''கிளார்க்''மார் இன்றைக்குச் சிரிப்பது வழமையிலும் விட இன்னும் குறைந்து விட்டது. ஒருவரோடொருவர் பேசுவதென்றுல் ஏதாவது வேலை பற்றியதாகத்தான் இருக்கும். அவசியமில்லாமலேயே ஒரு பீதியுணர்வு எல்லோரையும் உள்ளாகப் பீடித்துள்ளது. அன்று வேலை சரியில்லை என்றுல் ஏதாவது 'கிளார்க்'மாருக்கும் எச்சரிக்கை கடிதமோ, நோட்டீசோ கொடுத்து விடுவார் துரை. தொழிலாளர்களிடையில் அவ்வளவு பயத்தைக் காணவில்லை. பொறுப்புக் கலந்த சோகமுண்டு.

இன்னும் சொந்தக்கார வெள்ளையர்கள் வரவில்லை.

நேற்றிரவு இராகவன், வீரமுத்து, புஞ்சிபண்டா முதலியோர் தூங்கவில்லை. அவர்கள் இரண்டு நாட்களாக திட்டம் போட்டிருந்தார்கள். ''வெள்ளை முதலாளிகளே! இலங்கையை விட்டு வெளியேறுங்கள்; கொள்ளைக்காரர்களே வெளியேறுங்கள்; வெள்ளையனே வெளியேறு; இலங்கை இலங்கையருக்குச் செந்தம்; உழைப்பு தொழிலாளருக்குச் சொந்தம்'' என்னும் கோசங்களை வெள்ளைக் கடுதாசி மட்டைகளில் தமிழிலும் சிங்களத்திலும் பெரிய எழுத்துக்களில் எழுதினுர்கள். அவற்றை நான்கு டிவிஷன்களிலும், கவர்மென்ட் வீதிகளின் பங்கங்களிலுள்ள இலவ மரங்களிலும்

கடைச் சுவர்களிலும் இரவிரவாக ஒட்டிவிட்டிருந்தார்கள். அந்த விஷயம் முக்கியமான தொழிலாளர்களுக்கு மட்டுந் தெரியும். ஆனுல் காலேயில் வேலேக்குப் புறப்பட்டபின் சகல தொழிலாளர்களும் அவற்றைப் பார்த்து உற்சாகமான பரபரப்பு அடைந்திருந்தார்கள். எல்லோரும் ஆங்காங்கே நின்றபடி இடைக்கிடை, வீதிகளே எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எங்கிருந்து வந்தாலும் அவர்கள் காரில் வருவது தனியாகத் தெரிந்துவிடும்.

சின்னக்கலப்பன் சகல தொழிலாளர்களுடனும் புது மலேச்சரிவில் கான்வெட்டிக் கொண்டு நிற்கின்ருன். அவர்கள் கண்களும் தெரு வீதியையே வட்டமிடுகின்றன. வீரமுத்து பக்டரீயில் இரண்டாம் லொப்பரில் கொழுந்து போட்டுக் கொண்டிருந்தான். அங்குதான் பழனீயும், வேலுவும், பெருமாளும் நிற்கின்ருர்கள்.

இராகவனும் இன்னும் கொஞ்ச வாலிபப் பையன்களும் கோயிலடியில் நின்ருர்கள். அவனுக்கு சுலோக அட்டைகளேப் பற்றிய யோசனேதான்.

தொழிற்சங்கத் தலேவர் அண்ணுமலேக்கு மலேயில் உரம் போடும் வேலே. அவரும் சுலோக அட்டைகளின் எதிர் விளேவு என்னவாக இருக்குமென்பதை யோசித்துக் கொண்டிருந்தார்.

சின்னக்கலப்பன், அண்ணுமலே, வீரமுத்து, இராகவன், வேலு முதலியோரின் உள்ளங்கள் ஒரே விஷயத்தில் கவனப்பட்டு நிலேப்படாது துடித்துக் கொண்டிருந்தன. தங்கள் தங்கள் சங்கம் கேட்ட கோரிக்கையின் பிரகாரம், வரும் தோட்டச் சொந்தக்காரர் தாங்கள் வாழும் 'லய'ங்களேயும் சென்று பார்ப்பவர்கள். பார்த்தால் மறு லயங்கள் கட்டிக் கொடுப்பதற்கு கையெழுத்திடுவார்கள் என்பதுதான் அவர்கள் எல்லோரினது உளம் நிறைந்த யோசனேயும், உந்துதலும். லயங்களுக்கு வெள்ளே அடிக்காமல் பழைய நிலேயில் வைத்திருந்தாலும், வந்து ஒருமுறை அதன் நிலேயைப் பார்த்தாலும் பார்ப்பார்கள் என்று நம்பி இருந்தார்கள். அதனுல்

தெருவில் கார்ச் சத்தம் கேட்டால், அவர்கள் கண்கள் அந்தப் பக்கம் பாய்ந்து ஓடிக்கொண்டிருந்தன.

காலையில் இருந்து மந்தாரமாகி, தூறிக்கொண்டிருந்த சாரல் நின்று இளமையான வெயில் எறித்துக் கொண்டிருந்தது. அந்த வெயிலில் கூதல் காயும் தேயிலைச் செடிகள் பருவத் திமிரில் பிதுங்கும் குமரிப் பெண்களின் மேனியைப் போல் மினுங்கிக் கொண்டிருந்தன. அந்த மலையில் கொழுந்தெடுக்கும் பெண்களின் மெலிந்த விரல்களின் இடுக்கில் ஒடிந்து விழும் கொழுந்துகள் துரைமாரின் குழந்தைகள் போல் வழவழப்பாக இருக்கின்றன.

மலைக்கொழுந்துகளின் துல்லியமான இதழ்களைத் தடவிக்கொண்டு ஒரு மெல்லிய காற்று அசைந்தவண்ணமிருந்தது.

அந்நேரம் சீமையில் இருந்து வந்த வெள்ளை முதலாளிகள் காரில் வந்து கொண்டிருந்தார்கள்.

பச்சைப் பசேல் என்று தேயிலை மலைகள் அள்ளி ஊற்றும் குளுமையை மனதால் பெருமிதமாகப் பருகிக்கொண்டு இரண்டு வெள்ளையர்கள் காருக்குள்ளே இருந்தார்கள். கார் மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தது. அது ஒரு கறுப்பு நிறமான நீண்ட பெரிய கார். சூரிய ஒளியில் அது கண்களைப் பறித்துக் கொண்டிருந்தது. புத்தம் புதியது. அந்த இரு வெள்ளைக்காரர்களும் அன்பாக வளர்க்கும் இரு வெள்ளை யானைக்குட்டிகள் போல் உள்ளே இருபக்கமும் சரிந்து கிடந்தார்கள். முன்னால் பெரிய துரை இருந்து தோட்டத்தின் எல்லாத் திசைகளையும் காட்டிக்காட்டி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். காரின் பின்பக்கம் அவர்களின் பாரத்தால் கீழே பதிந்துவிட்டது. அவர்களின் கைகளிலும், நெஞ்சிலும், முகத்திலும் சதைகள் பிதுங்கி வெளியில் பாய்ந்து கொண்டிருந்தன. உலகத்தில் உள்ள கவலைகள் எதுவும் விழுந்திராத முகங்கள், சாப்பிடுவதையும், தூங்குவதையும், உலாவி வருவதையும் தவிர வேறு வேலை எதுவும் தொட்டுச் செய்யாத கோலம் தெரிகின்றது. குளிர்காற்றை உண்டாக்கும் காற்றூடி உள்ளே சுழன்று கொண்டிருக்கிறது.

கார் வருவதை தூரத்தில் கண்டதும் இராகவனேடு நின்றவர்கள் 'இந்தா வாராங்கடா' என்று ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டு தெருவோடு கோயிலின் முகப்புப் பக்கம் வந்து நின்றனர். காரின் அழகையும் பெருப்பத்தையும் உள்ளே இருக்கும் மனித பூதங்களின் பெருப்பத்தையும் அதிசயமாகப் பார்த்துக்கொண்டு நிற்கிருர்கள். ஒருவரும் பேசவில்லே. மிக கூர் குறிப்பாகப் பார்த்தனர்.

கார் கோயிலேக் கடந்து சென்றுவிட்டது. கார் வருவதைக் கண்டு தேயிலேச் செடிகளுக்குள், ஒழித்துப் பதுங்கி இருந்த சிறு பயலுகள், கார் கடந்து போனதும், கூச்சலிட்டுச் கொண்டு காரின் பின்னுல் ஓடிக் கொண்டிருந்தனர். இராகவனுக்குப் பக்கத்தில் நின்ற சிங்காரவேல், "ஐயோ, இதென்னப்பா, அவங்க சைசைப் பாத்தீங்களா? இவங்க மனுசப் புறவிங்களா?" என்று நடுங்கிக் கொண்டான். அவன் ஒரு ஒல்லி உருவம். "ஆமாடா, அவங்க கையே என்னுட்டு சைசிலே இருக்கே" என்றுன் சிவலிங்கம். "என்னப்பா, சதை மிஞ்சி, பிதுங்கி, வெளியில் வருகுதே" என்று கூறித் தன் நெஞ்செலும்பை தடவிக் காட்டிச் சொன்ஞன் சண்முகம். அவன் எதையும் தமாசாகப் பேசக்கூடியவன். அவன் கூறியதைக் கேட்டு, சிரித்துக்கொண்டு கல்லொன்றிலிருந்த அல்லிமுத்து, "இந்த வெள்ளேக்காரங்க தான் நம்ம தோட்டச் சொந்தக்காரங்களாம். அப்புறம் என்ன?" என்று சலிப்போடு கூறிஞன். அவர்கள் கூறியதைக் கேட்டுக்கொண்டு கார் செல்லும் திசையைப் பார்த்தவாறு மௌனமாக நின்றுன் இராகவன். அவன் சொன்ஞன்: "தொழிலாளர்கள் எல்லாரும் சேர்ந்து உழைக்கிற உழைப்பு இப்படி இரண்டு மூன்று முதலாளிகள் கையில் தான் போய்ச் சேருது." அவன் எல்லோரும் உணர்ந்துள்ள உண்மையைத்தான் எடுத்துக் கூறிஞன்.

"மரங்களில் தொங்கும் சுலோகங்களே பார்த்திருப்பார்களா?"

ஒருவன் இரகசியமாகக் கேட்டான்.

"அவங்க பார்த்தாலென்ன, பார்க்கா விட்டாலென்ன? தொழிலாளர்களும், சிங்கள விவசாயிகளும் அதையிட்டு பேசிக்கொண்டால் போதும்; அவங்கதான் அதை உணர வேணும்" இராகவன் கூறினான்.

கார் நகர்ந்து மேல் டிவிசன் சின்னத்துரை பங்களாவின் பக்கத்தில் போய்க்கொண்டிருந்தது. அந்தப் பங்களா ஒரு குன்றின் உச்சியில் இருந்தது. அதன் வீதி நோக்கிய சரிவில் பெண்கள் கொழுந்து எடுத்துக்கொண்டு நின்றார்கள். அக் கூட்டத்தில் ஆருயி, அண்ணாமலையின் மனைவி சின்னத்தங்கம், வேலுவின் தங்கை லக்ஷ்மி முதலியோரும் நின்றனர். கூட்டமாக நின்ற பெண்களை விட்டு, சற்று முன்னுக்கு நின்ற லக்ஷ்மி காரைக் கண்டதும், "அம்மாடியோ எனக் கதறி நெஞ்சில் கையை வைத்து இந்தா வர்றாங்க" என்று கொழுந்து கிள்ளுவதில் கண்ணாயிருந்த மற்றப் பெண்களுக்கும் கூறினாள். அவர்களுக்குத் தோட்ட அதிகாரிகளைக் கண்டதும் இயற்கையாகப் பீடித்துக் கொள்ளும் பீதி இப்பொழுதும் பிடித்துக் கொள்ள கார் அப்பால் போகும் வரை மௌனமாக நின்றனர். அவர்களை மேற்பார்வை செய்துகொண்டிருந்த கங்காணி பயத்தால் கதிகலங்கி, அங்கும் இங்கும் ஓடி வெலவெலத்து அவர்களை உரத்த குரலில் உறுத்துக் கொண்டான்.

கார் கடந்து சென்றதுதான் தாமதம்.

"இதென்ன உருவங்களடி யாத்தே! சாமி! யானைக் குட்டிகள் மாதிரி இருக்குதேடி;" ஆருயி வாயில் கைவைத்து அதிசயித்தாள்.

"ஆமாடி, அவங்க என்னத்தைத்தான் தின்னு தொலைக்கிறாங்களோ? பார்க்கப் பயமா இருக்கு! என்ன திமிரோட பாக்கறாங்க?"

லக்ஷ்மி, திரும்பி மற்றவர்களைப் பார்த்துக் கேட்டாள். "ஆமாடி இரத்தம் குடிச்ச அட்டை மாதிரித்தான் வீங்கிப் போயிருக்காங்க!" இன்னொருத்தி கூறினாள்.

"இது தெரியாதா நம்ம இரத்தங் குடிச்சுத்தான் அவங்களும் இத்தோன்னு வந்திருக்காங்க!" என்றாள் அண்ணாமலையின் மனைவி.

''பேச்சை நிறுத்திட்டு வேலையைக் கவனிங்க! இந்த மலை முடியணும்!'' என்று கத்தினான் கங்காணி.

கார் புதுமலைப் பாதையில் வந்து நின்றது. அந்த மலைக்குப் பக்கமாகத்தான் சின்னக்கலப்பன் முதலியோருக்கு கான்வெட்டு. சின்னக்கலப்பனுக்கு மனப் பதட்டத்தில் வேலை ஓடவில்லை. அதற்கு பயம் அல்லக் காரணம். சீமையில் இருந்து வந்திருக்கிறவர்கள் புதுலயம் கட்டிக் கொடுப்பார்களா? என்ற கேள்வியும் அதற்குப் பதில் புரியாத தவிப்பும் தான்.

வெயில் எறித்துக்கொண்டிருந்தது.

பெரிய துரை, பர்வதங்களைப்போல் காரை விட்டிறங்கி மெதுமெதுவாகக் காலடி எடுத்து வைக்கும் அவர்களை அந்த புது மலையைக் காட்டுவதற்கு அழைத்து வந்தான். புது மலையில் இப்பொழுதுதான் வங்கித் தேயிலை நட்டுள்ளார்கள். அவர்கள் பெரிய துரை பிடிக்கும் குடையின் கீழ் நின்று 'கூலிங்கிளாஸ்' அணிந்தவாறு பார்வையிட்டுக் கொண்டார்கள்.

சின்னக்கலப்பனும், மற்றவர்களும் அதிசயமாக அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''பாருங்கண்ணே, அவங்க வெள்ளைப் பூதம் மாதிரி இருக்காங்க!''

சின்னக்கலப்பனுக்கு அருகில் நின்ற நயினாமலை ஆச்சரியப்பட்டான். அவன் யோசனையாகத் தலையை யசைத்தான்.

''ஆமா! ஆமா! அவங்க என்ன நம்மைப்போல பருப்பும், ரொட்டியும், பட்டினியுமாவா இருப்பாங்க!'' என்றான் மாரியன். அவன் கானுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய கல்லுப் புரட்டிவிட்டு களைப்புடன் நிமிர்ந்தான்.

''நம்ம இரத்தந்தான் அவங்க பாலுன்னு குடிக்கிறாங்க?'' என்று கூறினான் மண்வெட்டியை கையில் பிடித்துக்கொண்டு நின்ற செல்லையா.

அந்த மலைக்கு அப்பால் மற்ற மலைச்சரிவில் உரம் போட்டுக்கொண்டிருந்த அண்ணாமலை முதலியோரும்

அங்கிருந்தவாறு நோட்டம் விட்டனர். அவர்கள் பார்த்துக் கொண்டிருப்பதை நயினுமலே சின்னக்கலப்பனுக்குக் காட்டினுன்.

‘‘இவங்க காம்பரா விசயத்தில் என்னதான் சொல்ருங்களோ?’’ என்று சாவதானமாக அதேபோது சந்தேகத்துடன் கூறிக்கொண்டான்.

அதன் பிறகு கார் நேராகப் பெரிய துரைப் பங்களாவுக்குச் சென்றது. அவர்கள் காரில் வந்த களைப்பு ‘ரெஸ்ட்’ எடுத்து குளிர் பானங்கள் அருந்திக்கொள்ள வேண்டும்.

‘‘பக்டரி’’க்கு அவர்கள் நேராக வருவார்கள் என்று, ‘‘கெட்ரீமேக்கர்’’ தொடங்கி, சகலரும் பயத்தால் இருண்டு கருகிய முகங்களோடு இயந்திரங்கள் போல் இயங்கினர். கைகால் பதற்றமுற்றுக் கொண்டிருந்தன. இதயங்கள் இடித்துக் கொண்டிருந்தன. இருதயம் நடுங்க யன்னல் ஊடாக எட்டிப் பார்ப்பதும், உள்ளே ஓடுவதுமாக ரீமேக்கர்கள் இருந்தனர்.

பெட்டிக்காம்பராவில் அவர்களின் வரவை ஆவலோடு எதிர்பார்த்து ஞானம் நின்ருன். அவன் தேயிலேப் பெட்டி அடிக்கும் ‘கொந்தராப்பு’ எடுத்து இரவு என்றும் பகல் என்றும் இன்றி பெட்டி அடித்துக் கொண்டு நின்ருன். அவன் சொந்தக்காரரின் வருகையை அறிந்து கடனுக்கு பண்டா கடையில் ஒரு ‘ரீபெனியன்’ வாங்கி அணிந்து மரியாதையாக நின்ருன். ‘‘எப்படியென்ருலும் நம்ம எஜமானர்கள் இல்லேயா? அவர்களுக்கு நாம மரியாதை கொடுக்கத்தானே வேண்டும்’’ என்று தன்னே நையாண்டி பண்ணும் தொழிலாளர்களுக்குக் கூறிக் கொண்டான். எப்பொழுதும் பைபிளே எடுத்துக்காட்டி மனிதனுக்கு சாந்தம், பொறுமை, தாழ்மை வேணும் என்பான். எஜமானர்கள் குற்றம் செய்தால் சர்வேசுரன் தண்டிப்பார் என்றும் தொழிற்சங்கத்திலும் சேரவில்லே.

அவர்கள் பின்னேரம் இரண்டு மணிக்குத்தான் பக்டரி பார்க்க வந்தார்கள். பக்டரியின் ஒவ்வொரு பகுதியையும் நுணுக்கமாக பார்வையிட்டார்கள். அவர்கள் கேட்கும்

கேள்விகளுக்கு ஒரு வார்த்தைக்கு ஒரு 'சேர்' போட்டுக் கொண்டிருந்தார் ரீமேக்கர். ஏறக்குறைய அரைமணித் தியாலம் செலவழித்துவிட்டு காரில் ஏறிக் கொண்டார்கள் அவர்கள். ஞானம் வழியில் நின்று பத்து பதினைந்து சலாம் போட்டு விட்டான்.

காரில் போகும் அவர்களைப் பக்டரியின் மூன்றாவது மெத்தையில் நின்று வீரமுத்துவும் பார்த்துக் கொண்டான். அவனோடு பெருமாள், பழனி முதலியோரும் நின்றனர். பெருமாள் வீரமுத்துவின் தோளில் கை போட்டிருந்தான்.

''இவங்க நம்ம லயங்களைப் பார்க்கலப் போலிருக்கு!'' என்ற ஏமாற்ற உணர்வுடன் கேட்டான் வீரமுத்து.

''எனக்கென்னு நம்பிக்கையில்லை. இவங்க தங்கவீட்டுச் சொத்துக்களைப் பாக்க வந்திருக்காங்களே தவிர, நம்மைப் பற்றி அவுங்களுக்கென்ன?'' என்ருன் பெருமாள்.

''நம்ம சுலோக அட்டைகளை கவனித்திருப்பாங்க தானே'' வீரமுத்து ஆவலோடு கேட்டான்.

''ஆமா, நம்ம தொரையிடம் அதைப்பத்தி என்ன விஷய மென்று கேட்டிருப்பாங்கதானே? அவன் வீரமுத்துவின் சந்தேகத்துக்கு முடிவு சொன்ஞன்.

வீரமுத்து தன் பார்வையை காரைவிட்டு அகற்ருது, ''பாருங்க அவங்க சைசை'' என்று யோசனை அமுங்கிய குரலில் கூறினுன்.

இங்கிலாந்தில் இருந்துவந்த தோட்டச் சொந்தக்காரர் கள் போய் விட்டார்கள்.

மலையில் இருந்து லயத்துக்கு வந்த சின்னக்கலப்பனின் மனம் அங்கலாய்த்தது. வந்து போன வெள்ளைக்காரர்கள் புது லயம் கட்டுகிற விசயத்தில் என்ன முடிவு சொன்னுர்கள் என்னும் விஷயத்தை அறிய மனம் துடித்தது. அங்குமிங்கும் மனம் புரண்டு கொண்டிருந்தது. மனதுக்கு நிதானமில்லை. ஒரு கணம் புதுலயம் கட்டிக்கொடுக்க அனுமதி கொடுத் திருப்பார்கள் என்று தன் ஆசைக்குச் சாதகமாகவும், மறுகணம் அவர்கள் அதைப்பற்றி நினைத்துக்கூடப் பார்க்க

மாட்டார்கள் என்று யதார்த்தமாகவும் எண்ணி ஊசலாடி யது.

ஆனல் அவனல் காம்பராவில் இருக்க முடியவில்லை. கோயிலடிப்பக்கம் போனன். அங்கும் ஓரிடத்தில் இருக்க வில்லை. கோயிலுக்கு முன்னுலுள்ள செம்பக மரத்தின்கீழ் நீண்ட நேரம் உலாவினன். மூனுவது கிளாக்கர் ஒப்பீஸ் முடிந்து வந்ததும் விசயத்தைக் கேட்டுப்பார்க்க வேண்டும் என்று யோசித்துக்கொண்டிருந்த அவன் ஆறுமணியளவில் புறப்பட்டு அவசர அவசரமாக கிளாக்கர் வீட்டை நோக்கி வந்தான்.

மூனுவது கிளாக்கர் அருணு அப்பொழுதுதான் பங்களாவுக்கு வந்து கதிரையில் இருந்து சப்பாத்துக்களைக் கழற்றிக் கொண்டிருந்தார். ஒருவித சோர்வும் சினமும் அவர் முகத்தில் தெரிந்தது. எந்த நேரமும் அவர் முகம் கடுமையாகத்தான் இருக்கும். இதனல் அவரை அறியாத பலர் அவர் ஒரு சுடுமூஞ்சிக்காரர் என்று கூறிக் கொள்வார் கள். சின்னக்கலப்பனுக்கு அவரை நன்ருகத் தெரியும்.

''ஆ ! வாங்க, வாங்க சின்னக்கலப்பன் !''

''இப்பத்தான் ஒப்பீஸால வந்தீங்களா ?''

அருணு நிமிர்ந்து ஒரு காய்ந்த சிரிப்பை உலர்த்தி, ''இப்பத்தான் வரமுடியும்'' என்ருர். கிளாக்கர்மார் எப்படி ஒப்பீஸில் கஸ்டப்படுகிருர்கள் என்று அவனுக்குத் தெரியும். அவர்மேல் விசேஷ அனுதாபம் சின்னக்கலப்பனுக்கு. அருணு தொழிலாளர்களுக்கு மிகவும் வேண்டியவர். அவர் எந்த நாளும் தொழிலாளர் பக்கம்தான் நிற்பார். தொழி லாளர்களுடன், மதிப்புக் கொடுத்து அவர்களை மனுஷனைப் போல் பேசுபவர், அத்தோட்டத்தில் அவர்தான். அதனல் தொழிலாளர்களும் அவர்மேல் மதிப்பு வைத்திருந்தனர்.

''ஐயா ! நம்ம சங்க மூலமா லயங்கட்டித் தர்ர விஷய மாக, கோரிக்கை வைச்சம்தானே ? இப்ப வந்து போன சொந்தக்காரங்க என்னமும் கையெழுத்துப் போட்டாங் களா ?''

சின்னக்கலப்பன் கேட்டுவிட்டு அவர் வாயில் இருந்து வரும் வார்த்தைகளை மிக ஆவலாகப் பார்த்தான்.

அருணு சிறிது நேரம் பேசாமல் இருந்துவிட்டு தலையை நிமிர்த்தினுர்.

''அப்படி ஒண்ணுமில்ல. அதைப்பத்தி அவங்க பேசிக்கிட்டு இருப்பாங்கண்ணு நான் நினைக்கல்ல.''

சின்னக்கலப்பனின் இதயம் வெந்து புரண்டு சினத்தில் புழுங்கியது. அவன் பேசவில்லை.

''அவங்கபத்தி ஏன் கற்பனை பண்ணிக்கிட்டிருக்கீங்க. அவங்க வெள்ளைக்கார முதலாளிகள். போராடாமல் எதையும் அவங்களிடமிருந்து கேட்டுப் பெற முடியாது எனக்குத் தெரிந்தவரை. ஏனென்ருல் அவங்களுக்கு இருதயம் என்ற உறுப்பு இல்லை உண்மையில்.''

அந்த முதலாளிகள் அவர் வாழ்க்கையையும் பாதிக்கிற கோபமும் வெறுப்பும் அவர் தொனியில் பீறிட்டது.

சின்னக்கலப்பன் சில நிமிடங்கள் நின்ருன். அவன் நெஞ்சில் இருந்து ஒரு வார்த்தையும் வெளிவர முடியவில்லை.

''ஒரு விஷயம்!''

''என்னங்கையா?''

''யார் இந்த சுலோக அட்டைகளை எழுதித் தூக்கியது?''

''எனக்குத் தெரியாதுங்கையா!'' சின்னக்கலப்பன் புன் சிரிப்போடு சொன்ஞன். அவரும் சிரித்தார்.

''நல்லது. முன்னேறப்படும் விஷயம்!''

''நான் வர்றங்கையா.''

''நல்லம்!''

தெருவுக்கு வந்தவன், ''எளிய வேசமவ......'' என்று தொடங்கி கெட்ட தூஷண வார்த்தைகளால் வெள்ளைக்கார முதலாளிகளைத் திட்டிக் கொண்ட அவன் கடைத்தெருச் சந்தியில் சிங்கள விவசாயிகள் பலர் கூட்டமாக நின்று சுலோக அட்டைகளையிட்டு பேசிக்கொண்டிருந்ததை நின்று கேட்டான். ஒன்றும் கூருமல் மனதுக்குள் சந்தோஷப்பட்டுக்

கொண்டு அவன் கைகள் மார்போடு கட்டியவாறு ஆறு தலாக அண்ணுமலேயின் லயம் நோக்கி நடந்து கொண்டிருந் தான். வழியில் அண்ணுமலே கிளாக்கர் பங்களா நோக்கி வந்து கொண்டிருந்தார்.

"எங்க பயணம்?"

"கிளாக்கர் பங்களாவுக்கு."

"திரும்புங்க, நா அங்குதான் போயிட்டு வர்றேன். வாங்க!"

அண்ணுமலே திரும்பி அவனேடு நடந்தார். இராகவனும் வீரமுத்துவும் மாஷ்டரின் அறைக்கு சென்றுவிட்டு திரும்பி சற்றுத் தூரத்தில் போய்க்கொண்டிருந்தார்கள். இராகவன் கையில் 'முரண்பாட்டைப்பற்றி' என்னும் புத்தகம் இருந் தது. அவர்களே இவர்கள் காணவில்லே.

# 8

வெள்ளேக்காரத் தோட்ட முதலாளிகள் வந்து போய் ஐந்து நாட்களாகிவிட்டன. பெரிய துரை பெய்லி மிக ஆத்திரமடைந்திருந்தான். சிவப்புக் கொடிச் சங்கத்தையும், தலேவர் அண்ணுமலேயையும் பிடித்துத் தின்னும் கோபம். சுலோக அட்டைகளேயிட்டு முதலாளிகள் அவனிடம் கேட் டார்கள். ஆங்கிலத்தில் எழுதப்படாததால் ஏதோ கூறிச் சமாளித்து விட்டான். ஆனல் அன்றே அவைகள் பிடுங்கிக் கிழித்தெறியப்பட்டன. அதை யார் செய்தது என்பதுபற்றி நான்கு நாட்களாக விசாரணே வைத்தான். அண்ணுமலே முதல் சகலரும் தமக்குத் தெரியாது என்று கூறி விட்டார் கள். அவனுக்கு செய்தது யார் என்று நன்ருகத் தெரியும். நிரூபிக்க முடியாததாலும், சங்கம் பலமாக இருப்பதாலும் ஒன்றுமே அவனல் செய்ய முடியவில்லே.

பழிவாங்கச் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்தான். அடுத்த நாள் அண்ணுமலே சங்கம் வைத்த கோரிக்கைகள் பற்றிக் கேட்டபோது முடிவாக மறுத்து விட்டான்.

அன்றைய தினம் அதிகாலே. எங்கும் பனிப் புகார் மூட்டம் கவிந்திருந்தது. குளிரும் அடித்தது.

லயத்தில் எழுந்த சத்தமும், அவசரமான சந்தடிகளும் வீரமுத்துவின் நல்ல நித்திரையைக் குழப்பி விட்டன. கால் கைகளை நீட்டி முறிக்கி உளைவு எடுத்துக் கொண்டான். ஸ்தோப்பில் படுத்துத் தூங்கிய அவன் தன்னோடு வந்து கால் பக்கத்தில் தூங்கிக் கிடந்த நாயை காலால் உதைத்து விரட்டி விட்டான். தலையில் காதை மூடி குளிருக்காக கட்டி யிருந்த சிவப்புத் துணி குலேந்து கழுத்தில் தொங்கியது. அதை எடுத்து மீண்டும் தலையில் சுற்றிக் கட்டிக்கொண்டு காம்பரா வாசலில் வந்து குந்தினான். லயக்கானின் அருகில் இருந்து குழந்தைகள் மலம் கழித்துக் கொண்டிருந்தனர். நாய்கள் மிக ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தன. அவன் சும்மா இருந்து லயத்தின் முன்னால் நடப்பதை யோசனை தோன்றாத நிலேயில் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுக்கு முன்பு மிக வெள்ளனவாக, சின்னக்கலப்பன், நட்சத்திரம், பொட்டு, பையன்கள் எல்லோரும் எழுந்து விட்டார்கள். ஆருயியும் எழுந்து சுருட்டுக் குடித்துக் கொண்டிருந்தாள். காம்பரா நடுவில் குப்பி விளக்கு எரிந்து கொண்டிருந்தது. பொட்டு ஸ்தோப்பு மூலேயில் அடுப்பு மூட்டிக்கொண்டிருந்தாள்.

சின்னக்கலப்பன், வெளியில் வந்து கைகட்டியவாறு சுருட்டுப் புகைத்துக்கொண்டு நின்றான். அவன் உடம்பை கம்பளியால் போர்த்திருந்தான். தென்கிழக்கு ஓரமாக கோபுரம்போல் உயர்ந்து நிற்கும் செந்தால்கட்டி மலேயைப் பார்த்துக்கொண்டு நின்றான்.

வீரமுத்து சேட்டுச் சேப்பில் இருந்த சுவீப் டிக்கட்டை எடுத்து வெறுப்புடன் கிழித்து வீசிவிட்டு பீடியைப் பற்ற வைத்துக் கொண்டான். முன்பு சுவீப் டிக்கட் எடுப்பதில் இருந்த ஆர்வம் இப்போது இல்லே.

அன்றைக்குத் தோட்டத்தில் ஆம்பிளை ஆட்களுக்கு வேலே இல்லே. வேலே குறைவு என்று வாரத்தில் நான்கு நாளைக்குத்தான் வேலே கொடுக்கும்படி பெரிய துரை உத்

தரவு. வீரமுத்து இரவு பக்டரியில் வேலை செய்ததால் பகல் ஓய்வு. கொழுந்தெடுக்கப் போகும் பெண்கள் மெஷின் வேகத்தில் பாய்ந்து பாய்ந்து காலையில் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். நித்திரையில் இன்னும் குழம்பி அலங்கோலமாக இருக்கும் அவர்களின் கூந்தல் அப்படியேதான் இருக்கிறது. அதை இட்டு யோசிக்க நேரமில்லை. மழை மந்தாரமாக இருந்ததால் நேரமும் தெரியவில்லை. நகரத்தொடங்கிய புகையிரதத்தில் ஏற ஓடும் பிரயாணிகள்போல, தின்றது பாதியும், தின்னாதது பாதியும், பிள்ளைக்குப் பால் கொடுத்தது பாதியுமாக காம்பராச் சுவரில் தூக்கியிருந்த கொழுந்துக் கூடைகளை எடுத்து, எடுத்து, முதுகில் போட்டுக்கொண்டு பிரட்டுக் களத்தை நோக்கி ஓடினர். அங்கு கணக்கப்பிள்ளையும், கண்டாக்கய்யாவும் நின்றனர். சிலர் பால் குடிக்கும் குழந்தைகளை மார்போடணைத்துக்கொண்டு பிள்ளைக் காம்பராவில் விட்டுச் சென்றனர்.

பக்டரியில் சங்கூதி இரண்டு நிமிடம் சென்றதும் லயத்துக்கு திரும்ப வேண்டியதுதான்.

ஏழு மணிக்கு ஊதப்படும் சங்கு இன்னும் ஊதப்படவில்லை. அது நாயின் ஊளைச் சத்தம் போன்ற அபசகுனமான சத்தம்.

சற்று முன்னதாக பிரட்டுக்களம் சென்று கணக்கப் பிள்ளையிடம் துண்டு வாங்கிய பெண்கள் பாம்புபோல் நெளிந்து செல்லும் மலைப்பாதையில் வெள்ளைத் துணியால் தலையில் மொட்டாக்கிட்டு, அதன்மேல் கொழுந்துக் கூடையைக் கொழுவி, முதுகில் தொங்கவிட்டு, அறையில் படங்குச் சாக்கும் கட்டிக்கொண்டு முன் குனிந்தவாறு கொழுந்து மலைகளை நோக்கி நிரை நிரையாக நடந்து கொண்டிருப்பதை வீரமுத்து அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“எப்படித்தான் கஷ்டப்பட்டு உழைத்து என்ன பிரயோசனம். நம்ம வாழ்க்கை பழைய பள்ளத்தில்தான் கிடக்குது. ரோட்டில் கிடக்கு நம்ம வாழ்க்கை!”

அவனது அடிமனம் இரகசியம் சொல்வதுபோல் அடித்துக் கொண்டது. அப்பொழுது, தோட்டத்துக்கு வந்து போன வெள்ளைக்கார முதலாளிகளின் உருவங்களும் நிழல் விழுத்தின.

அவனைக் கடந்து குட்டையன் கங்காணி, காற்சட்டை அணிந்து தலையில் முண்டாசும் கட்டி, கையில் மட்டக்கத்தியுடன் சென்று கொண்டிருந்தான். போகவிட்டு அவனை அருவருப்போடு பார்த்தான். அவன் முன்பு பழைய சங்கத்தின் தலைவராக இருந்தான். ஒருமுறை தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தைக் காட்டிக் கொடுத்து, கங்காணி வேலையைத் துரையிடம் இருந்து பெற்றுக் கொண்டான். கருங்காலிக் கங்காணி என்றுலும் அவனைத் தோட்டமெல்லாம் தெரியும்.

அன்று வேலை இல்லை என்றதும் புல்லுக்கொந்தராப் புள்ள வேலு, நடராஜன், சுக்குடான் முதலியோர் காற்சட்டையும் மாட்டி, சுரண்டியும் எடுத்துக்கொண்டு புல்லுத் துப்புரவாக்க மலைக்குப் போனார்கள். அந்தக் காம்பராவுக்கு மூன்றுவது காம்பராவின் முன்னால் மங்களம் நின்று, அடிக்கடி வீரமுத்துவை ஓரக் கண்ணால் பார்த்தாள். அவனை இன்னும் தோட்டத்தில் வேலைக்குப் பதியவில்லை. அவள் நல்ல உடற்கட்டும் திமிரான பெண்மையும், சுட்டித்தனமும் உடையவள். அவளுக்கு அவன்மேல் ஒரு கண். அவள் பார்க்கும்போது வீரமுத்துவுக்கு நெஞ்சு சுள்ளிடத்தான் செய்யும். அவனுக்கும் அவள்மேல் ஒரு விருப்பம் இருந்தது. இப்போது இல்லை. அவனுடைய முறைப்பெண் ஜானகி ருதுவான பின், போய் அவளுடன் பேசிக்கொண்டபின், இவளை நிமிர்ந்து பார்ப்பதில்லை. தலையைக் குனிந்து கொண்டான்.

"என்ன கலப்பண்ணே, தோட்டச் சொந்தக்காரங்க வந்தாங்க, நம்மைப்பத்தி ஒன்றுமே சொல்லாம போயிட்டாங்க!"

கொழுந்துச் சாக்கு கொண்டுபோகும் கிருஸ்தி, லயத்துக்கு மேல் உள்ள தெருவில் நின்று குரலெடுத்துச் கேட்

டான். அவனுக்கு இரகஸியம் என்று ஒன்றுமில்லை. எதையும் பலமாகத்தான் கத்திப் பேசுவான்.

"ஆமா!—அவங்க நம்மையா பாக்க வந்தாங்க!—பாத்துக்குவோமடா!"

சின்னக்கலப்பன் கலவரம் அடையாமல் சாதாரணமாகக் கூறினன். அவனும் அதையிட்டுத்தான் யோசித்துக் கொண்டிருந்தான். ஆனல் அவனுடைய தலை ஏதோ முடிவெடுத்து ஆடியது. அவனுக்கு எந்த விதத்திலும் முதலாளிகளுடன் போராடி காம்பரா பெற வேண்டுமென்ற வைராக்கியம். அது அவன் மனதை இறுகக் கட்டிக்கொண்டது. உடனே ஏதோ ஞாபகம்வர சுருட்டை எறிந்துவிட்டு, மலைப்படிகளில் ஏறி இறங்கி எங்கோ போய்க்கொண்டிருந்தான்.

வீரமுத்து அந்த விஷயத்தையிட்டு அவ்வளவாக யோசிக்கவில்லை. அவர்கள் எதுவும் கொடுக்க மாட்டார்கள் என்ற முடிவுக்கு வந்திருந்தான். இரவு வாசிக சாலையில் மற்றத் தொழிலாளர்களுடன் சொந்தக்காரர் வந்து போனதையும், புதுலயம் கட்டிக் கொடுப்பார்களா என்பதைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தான். முதலாளிகளிடம் கேட்டு எதையும் பெறுவது முடியாத விசயம் என்று இராகவன் கூறியது அவர்கள் மனதில் பதிந்துவிட்டது.

"அண்ணு ரொட்டி சுட்டு வச்சிருக்கேன். குளிச்சிட்டு சாப்பிடு!" என்று கூறிக்கொண்டு அவதி அவதியாகக் காம்பராவை விட்டு வெளியே வந்தாள் நட்சத்திரம். தொங்கிக் கொண்டிருந்த கூடையைக் கழற்றி கழுத்தில் போட்டுக்கொண்டு ஓடினுள். அப்பொழுதுதான் சங்கு ஊதிற்று.

ஓடிக்கொண்டிருக்கும் தன் தங்கையைப் பார்க்கும் பொழுது வீரமுத்துவுக்குப் பெருமிதம். தோட்டத்தில் அவளில் யாரும் சேஷ்டைவிட முடியாது. ஒருமுறை தேயிலை மலையில் தனியாக வைத்து சின்னத்துரை டேவிட் கையில் பிடித்து விட்டான். அவன் பலநாள் திட்டம் போட்டு அதைச் செய்தான். ஆனல் நட்சத்திரம் கொழுந்துக் கூடை

யால் அவனை அடித்துக் காயப்படுத்தி விட்டாள். உடனே அங்கே தொழிலாளர்கள் எல்லாம் கூடி துரையைக் கொல்லப் போய் விட்டார்கள், இப்போது அவளைக் கண்டால் எல்லோருக்கும் ஒரு பயம்தான். அவளைப்போல் தோட்டத்தில் எல்லாரும் இருக்க வேண்டுமென்று எண்ணினன். மறு கணம் அது கற்பனையானது என்று அவன் எண்ணினன். அவர்களை ஒருநாள் வேலை கொடுக்காமல், ஒருநாள் வாழ்வு சங்கடமாக இருக்கும்பொழுது வேறு விசனங்கள் எல்லாம் அதற்குள் அடங்கி விடுகின்றது என்பது அவனுடைய அனுபவம்.

"அண்ணு நீ குளிக்கப் போகல்லியா?"

பொட்டு உள்ளே இருந்து கேட்டாள். அவன் எழுந்து உள்ளே போய் துவாய்த் துண்டையும், பற்பொடியையும் எடுத்துக்கொண்டு கொழுந்து மண்டபத்துக்கு அப்பால் உள்ள நீர் வீழ்ச்சியை நோக்கி நடந்தான். கிழவர் கக்கி உமிழ்ந்த வெற்றிலைக் கக்கலைப்போல் அசையாது இருந்தனர். தம்பிரான் கிழவனும், சிதம்பரக் கிழவனும், வெளியில் வந்து வெயில் காய்ந்து கொண்டிருந்தனர்.

காலை இளம் வெயில் மலை முகடுகளைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது.

அந்த லயத்தில் மறு தொங்கலில் பலா மரத்தின் கீழ் சுந்தரராஜனும் ராஜகோபாலும் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வார முறைக்கு கல்லூரியில் இருந்து வந்திருந்தார்கள். அவர்கள் இருவரும் அரசாங்கப் பள்ளிக்கூடத்தில் உயர் வகுப்புப் படிக்கும் மாணவர்கள். அவர்களைக் கடந்து தான் வீரமுத்து போனுன். அவர்களைக் கண்ட வெறுப்பு அவன் உள்ளே புரண்டுக்கொண்டிருந்தது. அவர்கள் இருவரும் அங்குள்ள தொழிலாளர்களுடன் பேசுவது குறைவு. படிப்பதால் ஒரு ஒழுப்பம் அவர்களுக்கு. தாங்கள் புறம்பான பிறவிகள் என்ற மனப்போக்கு. அந்த லயத்தில் தொழிலாளர்கள் மத்தியில் வாழ்வதற்கு வெட்கப்படுபவர்களைப் போல் தங்களைக் காட்டிக் கொண்டார்கள். அவர்களின் போக்கைப் பார்த்து அங்குள்ள வேலை செய்யும் வாலிபர்கள்

அவர்களுக்கு 'கல்விமான்கள்' என்று பெயர் வைத்துள்ளனர்.

தொழிலாளர்கள் மத்தியில், தொழிலாளர்களின் பிள்ளைகளாகப் பிறந்து அவர்களின் உழைப்பில் படிப்பவர்களுக்கு ஏன் இந்த அன்னிய மனப்பான்மை ஏற்பட வேண்டும் என்று வீரமுத்து மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டான்.

வெள்ளைக்காரன் உண்டாக்கி திட்டம் தீட்டி வைத்த படிப்பு முறைதான் இன்னும் இருக்கிறதென்று இவர்களுக்குத் தெரியாது....

நீர்வீழ்ச்சிக்கு முன்னுல் உள்ள கற்பாறையொன்றில் இராகவன் ஏதோ புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தான். பக்டரியில் வேலை செய்யும் பழனி, முண்டன், பொன்னையன், இராசு, சுருட்டன், களப்பையா, மலையில் உரம் போடுகின்ற காத்தான், சோனமுத்து, சரவணம், சிங்காரவேல், கவ்வாத்து வெட்டுகிற மண்டையன், சிவசாமி, பெருமாள், ஊமையன் முதலியோரும் அங்கு வந்திருந்தனர். தாங்கள் அணிந்திருந்த சேட்டுக்களைத் தோய்த்து பாறைகளில் காயப் போட்டுவிட்டு கல்லுகளில் குந்திக் கொண்டிருந்தார்கள். அந்த இளவெயிலில் காய்வதென்ருல் அவர்களுக்கு அலாதிப் பிரியம். வெயில் படுகிற இடமாகத்தான் பார்த்து இருந்தார்கள். மண்டையன் சிவசாமி கால் நகங்களைப் பேனைக் கத்தியால் வெட்டிக் கொண்டிருந்தான். சோணமுத்து தன் முதுகில் உள்ள பருக்களைச் சொறிந்தவாறு சினிமாப் பாட்டை வாயில் முணுமுணுத்தான்.

நீர்வீழ்ச்சியும் சலசலத்துக் கொண்டிருந்தது.

வீரமுத்து, இராகவனுக்குப் பக்கத்தில் போய் அமர்ந்து கொண்டான்.

"என்னடாண்ணே, நானுந்தான் இரண்டு மாசமா வதுளைக்குப் போயி ஒரு படம் பார்க்கலாமின்னு பார்க்கிறேன்; முடியலேயே?"

பொன்னையன் இராசு உடம்பை முறித்துக்கொண்டு பக்கத்தில் இருந்த சோணமுத்துவிடம் சொன்னான்.

"ஏன் கண்ணு தெரியலியோ?" பழனி காஷ்யமாகக் கேட்டான்.

"இல்லேப்ப, காசு கிடைக்கேல்ல:—இன்னக்கி காசு இருந்தா ஐயாவ புடிக்க ஏதுமா?"

"நீ சும்மா இருலே. ஒனக்கு மட்டுந்தானு காசு கிடைக் கல்லே. நம்ம கையிலே ஒரு இரண்டு ரூபா இருக்கணும்; சின்னொரு சுத்து சுத்திட்டு கறக்டா வந்திடுவேனே!"

காத்தான் தொடையிலே கையை அடித்துச் சொன்னான், வீரனைப்போல.

சில விநாடிகள் நீர்வீழ்ச்சியின் விழுகைச் சத்தம்தான் கேட்டது. அவர்கள் பேசவில்லை.

"அட நம்ம அம்மாயி சொல்ற மாதிரி இந்த விடியா மூஞ்சிப் பொழப்பில் என்னத்தைப் பண்றது?"

பெருமாள் சாதாரண தொனியில் கூறினான். அவன் ஒரு அட்டையைப் பிடித்து இரு முனையிலும் இழுத்து இழுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"வீரமுத்தண்ணே, எப்ப ஒங்க கலியாணம்? நல்ல தொரு விருந்து சாப்பிடலாமென்னு பாக்கிறேன்!"

சிங்காரவேல் கொஞ்சம் தள்ளி இருந்தான். அவன் சத்தமாகக் கேட்டான்.

"ஆமா! ஆமா சின்னக்கலப்பண்ணே எழுப்பமாத்தான் செய்வாரு!"

சரவணம் அவனுடன் சேர்ந்து கொண்டான்.

"ஏண்டா, சின்னக்கலப்பண்ணே இப்பதானே இதால போனாரு. நா, காம்பரா வாங்கி கலியாணஞ் செய்யிறேனு இல்லேன்னு பாருங்கடா எண்ணுதானே கூறிவிட்டுப் போனாரு" என்று மண்டையன் கூறினான்.

"சும்மா இருங்கடா. மனுசன் தூங்கிறதுக்கு இடமில்லே. அதுக்குள்ள கலியாணம்வேறாக்...கு...ம்."

வீரமுத்து சலிப்புடன் சொன்னான். எல்லாருடைய அடி உள்ளத்திலும் அது சுள்ளிட்டது. அந்தப் பிரச்சனை எல்லா

ருக்கும் சேர்ந்ததுதான். வீரமுத்து கல்லில் சும்மா கீறிக் கிட்டிருந்தான். சொற்ப நேரம் ஒருவரும் பேசவில்லை.

சின்னப் பயலுகள் நீர்வீழ்ச்சி விழுந்து நீர்தேங்கி நிற்கும் பள்ளத்தில் நின்று உடுத்தி இருந்த சாரங்களால் மீன் குஞ்சு கள் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

நாட்டுச் சிங்கள விவசாயிகள் கறுத்த ரோட்டில் தங்கள் எருதுகளை ஓட்டிக்கொண்டு போய்க் கொண்டிருந்தார்கள்.

அதிகளவு நேரம் ஒன்றும் கூறுமல் கால்களைக் கட்டி யணைத்தவாறு தேயிலை மலைகளைப் பார்த்துக் கொண்டிருந் தான் சுருட்டன் கலப்பையா. அவன் சொன்னுன். ''ஆமா நம்ம பாட்டன் காலந்தொட்டே நம்ம பிரச்சனை இதுவாகத் தான் இருக்கு. பிரச்சனைகளும் மாறக்காணும். வாழ்க்கை யிலும் சந்தோஷத்தைக் காணுமே?'' தன் உள் ஒடுங்கிய கண்களை மூடி விழித்தான்.

''ஆமா இது நமக்கு விதிச்ச விதியப்பா! வேற என்ன?''

சரவணம் சரியான உண்மையைக் கூறுவதுபோல் திருப்தியுடன் கூறினுன்.

இவ்வளவு நேரமும் புத்தகத்தைப் பார்த்துக் கொண் டிருந்த இராகவன் புத்தகத்தை மூடிவிட்டு, சொண்டுக்குள் சிரித்துக் கொண்டான்.

''இது கடவுள் விதிச்ச விதி இல்லேப்பா. இந்த இலட்சக் கணக்கான தொழிலாளர்களுக்கு ஒரே மாதிரி விதியா விதிச் சிருக்கான் கடவுள். இல்ல இது முதலாளி வர்க்கம் விதிச்ச விதி. இந்த விதி மாறும்; அல்லது அவங்களா மாத்துவாங் கன்னு நெனச்சா உண்மையில் மாறுதுதான். அதை நாங்க தான் மாத்தனும். வேற நாடுகளிலும் தொழிலாளர்தான் மாத்தியிருக்காங்க!''

இராகவன் சாதாரண குரலில் மிகச் சாவதானமாகக் கூறினுன். வீரமுத்து அவன் முகத்தையே பார்த்துக்கொண் டிருந்தான்.

''அது எங்கப்பா இங்க நடக்கப் போவது!'' என்றுன் காத்தான். அவன் மேலுதட்டை மீறி வெளி ஓடிவந்த பற்களை நாக்கால் தடவி விட்டிருந்தான்.

''ஏன்டா சலிச்சுப் போனே! சும்மா இருவே!'' பழனி கோபத்துடன் காத்தானை ஏசினான்.

''நாமேன் உழைக்கிறோம்; கஷ்டப்படுகிறோம். வாழத் தானே?''

இராகவன் எல்லோரையும் நோக்கி ஆறுதலாக, எல்லோருக்கும் பொதுவாகக் கேட்டான். அவன் எது கூறினாலும் அவர்கள் காது கொடுத்து விருப்பத்துடன் கேட்பதுண்டு.

''ஆமா!'' இராசுவின் குரல் சன்னமாக வந்தது. அது அடித்தொண்டையில் இருந்து வரும்.

''வாழுறதுக்கு என்ன முக்கியம் வேண்டும்!''

''சாப்பாடு வேணும், உடுப்பு வேணும், வீடு வேணும்!''

பழனி, இராசு, முண்டன் மூவரும் 'படா'ரென்று கிறுகிரென்று சொன்னார்கள், குழந்தைப் பிள்ளைகளைப் போல்.

''சரி இவை நமக்கு ஒழுங்கா கிடைக்கிறதா?''

''அதுதான் இல்லையே!'' சோனமுத்து கைவிரல்களை விரித்துக் காட்டினான்.

''ஏன் இல்லை, ஏன் கிடைக்கல்லே. ஏன் நாம் சும்மாவா இருக்கிறோம். நாங்க உழைக்க இல்லையா?'' அவன் யோசனையின் உந்தலில் உஷாராக இருந்தான்.

''உழைக்கத்தானே செய்யிறோம்!'' பொன்னையன் விரக்தியோடு சொன்னான்.

''உழைக்கிற நமக்கு ஏன் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளே சரியாகக் கிடைக்குதில்லே. சும்மா இருந்தால் கிடைக்காமல் இருப்பது நீதி. நாம வாழ வேண்டுமென்று கள்ளமின்றி உழைக்கிறோம். எங்களுக்கேன் வாழ்க்கையே இல்லை?''

எல்லாரும் அவன் கூறியதில் ஒன்றி, பேசாமல் இருந்தனர்.

''காரணம் இதுதான்! நாங்க உழைக்கிற உழைப்பு திருப்பி எங்களுக்கு வரவில்லை. முழுவதும் சில முதலாளிகளிடம் போகுது. எங்கள் உழைப்பு எங்களிடம் வராவிட்டால் வாழ்க்கை எப்படி சந்தோஷமாக இருக்கும்?''

''எங்களுக்கு கூலி தாருங்க'' மண்டையன் இருந்தாற் போல் சொன்னான்.

''கூலி தாருங்கதான்; அதுசரி; கூலி! அது என்ன? நாங்க உழைக்கிற உழைப்பில ஒரு சிறிய, மிகச் சிறிய பகுதி; மிகுதி எங்கே போகுது? முதலாளிகள் கைக்கு. இதுதான் சுரண்டல். அநீதியான சுரண்டல். எவ்வளவுக்கு தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி எவ்வளவுக்கு இலாபம் பெற முடியுமோ அவ்வளவும் பெறுவதுதான் முதலாளி வர்க்கத்தின் குணம். எவ்வளவு குறைந்தகூலி கொடுக்க முடியுமோ அவ்வளவுக்கு குறைச்சுத்தான் தருவாங்க.''

''அது என்ன கூலியா? மண்ணாங்கட்டி!'' பழனி புறுபுறுத்தான்.

''அந்தக் கூலி தரவும் முதலாளிகள் விரும்புறதில்லே. ஆனால் ஏன் தர்றாங்க? அதுவும் காரணத்தோடுதான். அடுத்தநாள் தொழிலாளிகள் உயிரோடு இருந்து வேலைக்குப் போக வேணுமே அதற்காகத்தான்.''

இராகவன் கூறியவைகள் பச்சை உண்மையாகவும், தங்களோடு நெருங்கியதாகவும் இருந்ததனால் அவர்களுக்குள்ளாகவே முதலாளிகள் மேல் வெறுப்பும் ஆத்திரமும் புரண்டு கொண்டிருந்தது. அது முகங்களில் ஏற்படும் கடுமையான மாற்றங்களில் தெரிந்தது. பொன்னையன் இராசுவுக்கு, அவன் கூறியதை நம்ப முடியாத மாதிரி சிறு சந்தேகம், மனதில் திடீரென எழுந்திருக்க வேண்டும். அவன் சொன்னான். ''தோட்டம் ஸ்டோர் எல்லாம் அவங்க சொத்துத் தானே?''

இராகவன் அவனைப் பார்த்துக் கருத்தோடு சிரித்தான்.

''முதலாளிகளுடைய சொத்தா? இல்லே! அவர்களுக்கு இவ்வளவு சொத்தும் எப்படி வந்தது? வானத்தில் இருந்து வந்ததா? எப்படி அவ்வளவு சொத்தும், பெரும்பான்மையான உழைக்கும் தொழிலாளிகளிடம் சேராமல் அவர்களிடம் சேரும். அந்தச் சொத்துக்களும் தொழிலாளரின் உழைப்புத்தான். தொழிலாளர்களைச் சுரண்டி சேர்த்தவைகள்தான். அதில் சந்தேகமே இல்லே. அவை அவங்க சொத்

தல்ல. உண்மையில் எங்க சொத்து! ஆனால் முதலாளிகள் சொந்தம் கொண்டாடுகிறார்கள். தொழிலாளர்களுடைய சொத்தை வைத்துக்கொண்டு, தொழிலாளர்களைச் சுரண்டு கிறார்கள். உண்மையான சொந்தக்காரர்களாகிய நாங்கள் அதை வாய்மூடி அனுமதிக்கிறதாலதான் முதலாளிகள் மேலும் மேலும் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள்! அது யாருடைய பிழை தொழிலாளர்களுடையதா? முதலாளி களுடையதா?''

அவன் கூறியவைகள் அவர்களுக்கு புதுமையாகவும் அதே சமயம் மறுக்க முடியாத உண்மையாகவும் இருந்தது. தங்களுடைய உண்மையான நிலையை உணரும் பக்குவம் அவர்களுக்குள் உருவாகியது.

எல்லோர் அடி மனத்திலும் ஒருவித வீராவேசம் எழுந்து வளர எதுவும் கூறாமல் இருந்தனர். அப்போது மண்டையன், ''முதலாளிகளோடு போராடத்தானே நம்ம தொழிற் சங்கம் இருக்குதே அப்புறம் என்ன?'' என்று முடிவாகக் கூறினான். அவன் கூறியதைக் கேட்க இராகவனுக்கு சந்தோஷமாக இருந்தது.

''தொழிற் சங்கம் போராடத்தான் இருக்கு. ஆனால் தொழிற் சங்கப் போராட்டம் மட்டும் நம்ம பிரச்சனைக்கு தீர்வு காணமுடியாது. யோசித்துப் பாருங்கள். தொழிற் சங்கம் எவ்வளவு காலமா இருக்கு. எவ்வளவு கோரிக்கைகளை வென்றெடுத்துவிட்டது. ஆனால் நம்ம அடிப்படைப் பிரச் சனைகள் மாறி இருக்குதா? அது அப்படியேதான் இருக்கு. ஏன்? சம்பளம் ஒரு பத்துசதம் உயர்தினா. வாழ்க்கைச் செலவு ஒரு ரூபா உயருது. சம்பளத்தை உயர்த்தும்போது அதற்குத் தக்க மாதிரி பொருட்களின் விலையை உயர்த்தவும் முதலாளிகளுக்குத் தெரியும். இது முதலாளித்துவ சமு தாயம். அதன் குணமே அதுதான். லாபமும் சுரண்டலும் தான் அதன் நோக்கம். உதாரணமாகப் பாருங்க ஒருவன் ஒரு மணிக்கூட்டை வாங்கி இரண்டு வருடங்கள் பாவித்த பின், விற்க யோசிச்சானென்னா வாங்கின விலையிலும் கூட விற்கத்தான் பார்க்கிறான். அது அவன் பிழை இல்லை. இந்த

முதலாளித்துவ சமுதாயத்தின் குணம், ஒரு சாதாரண மனிதனையும் பற்றிக் கொள்கிறது. இந்த முதலாளித்துவ சமுதாயம் முதலாளிகளின் நலனைத்தான் பாதுகாக்கின்றது. இங்கு முதலாளிகளுக்குத்தான் சுதந்திரம், ஜனநாயகம், வாழ்வு, எல்லாம். முதலாளிகள் தங்கள் சொகுசான வாழ்க்கையையும் அதிகாரத்தையும் பாதுகாக்க தொழிலாளர்களைச் சுரண்டுவதோடு அடக்கி ஒடுக்கிறது. இதை எதிர்த்து தொழிலாளி வர்க்கம் போராடாவிட்டால் தொழிலாளி வர்க்கத்திற்குத்தான் நஷ்டம். முதலாளிகளுக்கல்ல!''

இராகவன் சொன்னதைக் கேட்டு ஒவ்வொருவர் உள்ளமும் சூடேறிய உணர்வினால் கொதிப்படைந்துவிட்டிருந்தது. அவன் கூறியவற்றில் பொய்யானவை எதுவுமில்லை.

''இந்த முதலாளி வர்க்கத்தை அழிக்கவேண்டும். நான் இப்பவும் தயார்!''

பழனி எழுந்து நின்று நெஞ்சில் தட்டிச் சொன்னான். உண்மையில் அவன் உணர்ச்சி வசப்பட்டு விட்டான். மற்றவர்கள் அலசிப் பார்த்து சாடையாகச் சிரித்தார்கள். அந்தச் சிரிப்பில் அவனுக்குச் சாதகமான உணர்ச்சிக் கோடுகள் தெரிந்தன இராகவனுக்கு யோசனை போராடாவிட்டால் யார் போராடுவது? நம்ம வாழ்க்கையை நாமதாம் அமைக்கணும். உழைக்கின்ற தொழிலாளர்கள்தான் இந்த உலகத்தின் சொந்தக்காரர்கள். இப்ப எங்களிடம் இழப்பதற்கு ஒண்ணுமில்லை. நாங்க வெல்வதற்கு உலகமுண்டு.'' அவன் கூறிவிட்டு எல்லோரையும் பார்த்தான்.

நேர்மையான போராட்ட உணர்வு உள்ளாக எழுந்து அதன் தரப்பில் எல்லாருடைய முகமும் கறுத்துத் துடிப்பதை அவதானித்தான். அவனுக்கு சந்தோஷம் கரை புரண்டது.

''அண்ணே! ஒரு விசயம் தெரியுமா ஒங்க...க்கு!''

திடீரென வந்த அந்தக் குரலைக் கேட்டு எல்லோரும் திரும்பினர். விமுக்கன் பீடி ஒன்றைப் புகைத்தவாறு கற்பாறைகளில் கால் வைத்து பாய்ந்து கொண்டிருந்தான்.

''என்ன விசயமடா தூ!''

என்ன விசயமாக இருக்கும் என்ற சந்தேகத்துடனும் அதை அறியும் ஆவலுடனும் வீரமுத்து கேட்டான்.

விமுக்கன் அவர்களுக்கு முன்னால் வந்து நின்று மூச்சு வாங்கினான். அவன் முகத்தை எல்லோரும் பார்த்தனர். அவன் உட்கார்ந்து கொண்டான்.

''ராத்திரி சின்னத் தொரமாரு, சின்னத் தொர பங்களாவில் சேர்ந்து குடிச்சிருக்கானுக. நல்லா குடிச்சு சூறு ஏறினவுடன், அங்க அப்பு வேல செய்யிறானில்ல கருப்பையா?''

''ஆமா!''

''அவரைப் பிடிச்சு ஒரு ராத்திரியில, பொம்புல கொண்டு வாடான்னு கரைச்சல் பண்ணியிருக்கானுக மூணு பேருமா. அவரு அதெல்லாம், முடியாதென்னு சொல்லியிருக்காரு. உடனே உன் பொஞ்சாதியை கூட்டிக்கிட்டு வாடான்னு சொல்லி அவரை, மூணு பேருமா அடிச்சு உதைச்சு விரட்டிப் புட்டானுக...''

''ஏண்டா, அவன் தொரமார கொல்லாம வந்தான். கொன்னு போட்டில்லேயா வந்திருக்கனும். மடைப்பய, நானு இருக்கனும் அவங்களுக்கு பொண்ணு கொடுத்திருப் பேன்.'' பழனி ஆவேசமாகச் சொன்னான். அவன் கோரத் தால் துடித்திருந்தான்.

''இப்ப அவரெங்க, ஒரு தொர காலேயென்னாலும் உடைச்சுட்டில்ல வந்திருக்கனும்; என்ன திக்கு?''

வீரமுத்துவின் குரல் மிகக் கடுமையாக இருந்தது. முண்டன், ஊமையன், மண்டையன் முதலியோடும் கலவரமும் ஆத்திரமும் பட்டு முறுமுறுத்துக் கொண்டிருந்தார்கள்.

''அவரு இப்ப எங்கை இருக்காரு?''

''நம்ம தலே வருக்கிட்ட, பொலிசுக்குப் போகணுமின்னு சொல்லிக்கிட்டிருக்காரு. அங்கதான் சின்னக்கலப்பண்ணனும் இருக்கார்!''

''இனி பொலிசுக்குப் போயென்ன? அவங்க இவனேத் தான் புடிச்சு உதைப்பாங்க. அப்புறம் தொரமாரையா ஜெயிலில் போடப் போறாங்க?''

தோட்டத்தில் இதுவரை நடந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு சிங்காரவேல் கூறினன்.

"ஆமாடா, இப்ப போனில நல்லாக் கூறி இருப்பாங்க தொரமார் பொலிசுக்கு. நம்ம சரித்திரத்தில இருக்கா பொலிஸ் தொரமாரில குற்றம் கண்டது, அவன் ஒரு கேணயன். தொரைமாரை அடிச்சு நொருக்கி இருக்கணும்."

அந்நேரம் ஒன்றும் செய்ய முடியாத நிலேயில் அவன் இருக்கும் மனவேதனே அவன் வார்த்தைகளில் வெளிப்பட்டது.

"அது சரி! கருப்பையா தொரைமார் யாருக்காவது அடி குடுத்திருக்கணும்!"

"அவங்களக் கொல்லணும்.அவங்க சர்வாதிகாரம் கூடிப் போச்சு!" என்று ஆத்திரமாகக் கத்தினன் ஊமையன்.

"இப்ப அவங்க எங்க இருந்து பேசிக்கிட்டிருக்காங்க விமுக்கா?"

இராகவன் கேட்டான். வீரமுத்து பொத்திய கையால் கற்பாறையில் குத்திக்கொண்டு மௌனித்திருந்தான்.

"காளி கோயிலுக்கு முன்னல."

இராகவன் எழுந்தான்.

தொரமாரைக் கொல்லற தில்ல விசயம். இந்தத் தொரையைக் கொன்ன, இன்னெருத்தன் வருவான். அதில் வேலே இல்லே. இந்த சிஷ்டத்தையே அழிக்கணும்." அவன் ஆழ்ந்த யோசனே அடங்கிய தொனியில், மலேயுச்சியில் இருந்து பாய்ந்து வரும் ஆற்றைப் பார்த்துக்கொண்டு கூறினன். பின் வீரமுத்துவைப் பார்த்தான். "வாங்க கோயிலடிப் பக்கமாப் போயிட்டு வருவோம்" என்றுன். வீரமுத்து எழுந்து இருவரும் நடந்தார்கள். விமுக்கனும் எழுந்து அவர்கள் பின்னல் ஓடினன்.

அங்கிருந்தவர்கள் இராகவன் கூறியவற்றையிட்டு கலந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

# 9

வீரமுத்து வாசிகசாலைப்பக்கம் வந்தான். அவனுடைய மனம் குழம்பி நெருடுபட்டுக் கொண்டிருந்தது. கோயிலில் தூண்டாமணி விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வெளியில் ஒருவரையும் காணவில்லை. வாசகசாலைக்குள் பலர் பத்திரிகை வாசிந்துக் கொண்டிருந்தனர். அவன் பார்க்கும்போது இராகவன், சொத்திச்சிலம்பன், பெருமாள், வேலு முதலியோரின் தலைகள் மட்டும் தெரிந்தன. அவனும் பத்திரிகை படிக்கவென்றுதான் வந்தான். ஆனுல் உள்ளே போக மனம் இடம் கொடுக்கவில்லை. மனம் உள்ள நிலையில் தனிமையைத்தான் விரும்பியது.

அண்ணுமலையை அங்கு காணவில்லை. அவர்தான் அங்கு தலைவராய் இருப்பார்; தொழிற்சங்க பிரதிநிதிகள் வரும் கூட்டத் தயாரிப்பு வேலைகளில் ஓடித்திரிந்தார். இராகவன் ஆட்களும் கடைத்தெருவெல்லாம் நோட்டீஸ் ஒட்டிவிட்டுத்தான் வந்திருக்கிறுர்கள். வீரமுத்து வேலைவிட்டு வரும் பொழுது அவற்றைக் கண்டு உற்சாக மடைந்திருந்தான்.

சிறிது நேரத்தில் வாசகசாலைக்குள் போகலாம் என்ற முடிவுடன் கோயில் வாசலில் சென்று அமர்ந்துகொண்டான். நல்ல கிழகிழப்பான பௌர்ணமி நிலவு. அந்த நிர்க்களங்கமான ஒளியில் தேயிலை மலைகள் அழகு சொட்டும் கர்வத்துடன் நின்றன. குளிரும் சாடையாகக் கூதலை உண்டாக்கிற்று. அவன் பீடி புகைத்துக் கொண்டிருந்தான். அவனுடைய உள்ளம் சுய விருப்பமின்றி ஒரு விஷயத்தை ஆழமாக அலட்டிக் கொண்டிருந்தது.

பணிய டிவிசனில் இருக்கும் சப்பாணி என்பவன் நேற்றுக் காலை தற்கொலை செய்யும் எண்ணத்துடன் ''என்றெக்ஸ்'' மருந்தை எடுத்துக் குடித்துவிட்டான். உடனே தோட்ட ''டிஸ்பென்சரி''க்கு கொண்டு சென்றதால் உயிர் தப்பிவிட்டான். அவன் திருமணம் செய்து ஒன்றரை மாதம் ஆகவில்லை. அதற்குள் தற்கொலை செய்ய முயற்சித்தது

தோட்டத்தில் பெரும் குழப்பத்தை உண்டுபண்ணிவிட்டது. அவன் "வாட்டில்" இருந்தான். அவனை வீரமுத்து போய்ப் பார்த்து மனம்விட்டுப் பேசினான். இருவரும் தோட்ட ஸ்கூலில் ஒன்றாகப் படித்தவர்கள். சப்பாணி நாலாம் வகுப்பில் குழப்பிக்கொண்டு புல்லுவெட்டப் போய்விட்டான். சப்பாணி வீரமுத்துவிடம் தான் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்த காரணத்தை விளக்கினான். அந்த விஷயத்தில் வீரமுத்துவின் மனம் கொஞ்சம் ஆழமாகத் தாக்கப்பட்டு விட்டது. அதனால் சப்பாணி சொன்ன வார்த்தைகள். மூட்டைப் பூச்சியைப்போல மூலைக்கு மூலை மனதை நோண்டிக் கொண்டிருந்தது. அதற்குள் அவனுள் முன்னொரு பிரச்சினையும் ஒரு பக்கத்தால் முட்டி முட்டி அரித்துக் கொண்டிருந்தது. "தொர வேசமவ காம்பரா கொடுக்காட்டி காரியமில்ல." தாய் ஆருயி சின்னக் கலப்பனிடம் கூறினாள். அதைக்கேட்ட அவன் விவரமாக எதையும் விளங்கப்படுத்தப்படுத்த முடியாதவனாக சினங்கொண்டு ஏசிவிட்டு வந்துவிட்டான். அப்போது சின்னக்கலப்பன் ஒன்றும் கூறாது மௌனம் சாதித்தான். அவன் கூறியதற்கு சாதகமான மௌனமாக அது இருந்ததா என்று அவனுக்குப் புரியவில்லை. அவன் கோபித்து ஏசியதற்கு சப்பாணியின் விஷயமும் காரணமாயிருந்தது.

யோசனை மயமாக இருந்த அவன் விட்ட பீடிப்புகை வானத்தை நோக்கி வட்டம் வட்டமாக உயர்ந்து கொண்டிருந்தது. நீண்ட தூரத்துக்கப்பால் வேறொரு தோட்டத்தில் உள்ள உயர்ந்து இருண்டிருக்கும் புல்லு மலையின் உச்சிக் கணித்தாப்போல் புல்லை எரித்துவிட்டுக் கொண்டிருந்தார்கள். அது ஒரு கோணலான வட்ட அமைப்பில் மந்தமான ஜுவாலை விட்டு எரிந்துகொண்டிருந்தது. அதை அவன் மன விருப்பத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான். அது வாழ்க்கையின் அடிப்பள்ளத்தில் சரிந்து கிடந்து வாழ்க்கையில் எழும் பல முனை நெருக்கடிகளாலும் சூடுபட்டு வெந்து புழுங்கிக் கொண்டிருக்கும் தொழிலாளர்களின் இதயம்போல் அவனுக்குத் தோன்றியது.

"என்னடா வீரமுத்து இதில இருக்கே?"

"சும்மா இருக்கிறேன்!"

கிரஸ்தி அவனுக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டான். அவன் தலையை மூடி சுற்றி மௌலர் கட்டி இருந்தான். அவனுக்கு நிலவில் வீரமுத்துவின் கறுத்த உருவம் நன்கு தெரிந்தது.

"என்ன இப்போதைக்கி காம்பரா கொடுக்க முடியாதென்னு தொரை எழுதிட்டானுமே? தலைவர் சொன்னுரு!"

"ஆமா!" வீரமுத்துக்கு அதற்குமேல் ஒன்றும் கூற விரும்பவில்லை.

"ஏன் அப்படி எழுதினுன்? அதை நம்ம சங்கம் ஒத்துக்கிட்டதா?"

"ஒத்துக் காம? அதில பிடியில்ல. கலியாணம் செஞ்சா, காம்பரா கொடுக்க பாக்கிறேன்னு சொல்லியிருக்கான். அவுங்களுக்கா கள்ளப் புத்தி வராது?"

"ஆமா அவென் பெரிய ருசுக்கோலல்ல?"

"இப்ப தொரை அப்படிச் சொல்லுவான். கலியாணம் முடிஞ்சி கேட்டா காம்பரா எங்கே இருக்கென்னு கேட்டு மழுப்புவான். நாம அப்புறம் சோர்வில் விட்டுடுவோம் கேக்கலாமெ......வேசமகெ!"

"ஆமாடா அதுதான் செய்திக்கிட்டு வர்ருன்."

வீரமுத்து மௌனம் சாதித்தான். உன் மனதில் சப்பாணி விசயம்தான் அடிக்கடி தலை தூக்கிக் கொண்டது.

"பீடி இருந்தா ஒண்ணு குடுடா" என்று கிருஸ்தியின் சேப்பில் கைவைத்து, ஒரு பீடியை எடுத்து, கிருஸ்தியின் வாயில் இருந்த பீடியை வாங்கி பற்ற வைத்துக் கொண்டான்.

"நீ என்ன செய்யப் போற?" கிருஸ்த்தி சாதாரணமாகக் கேட்டான்.

"என்னத்துக்கு?"

"காம்பராவுக்குத்தான்?"

வீரமுத்து ஒன்றும் பேசவில்லை. மனம் விரக்திப் பட்டிருந்தது. அவன் தேயிலைச் செடிகளுக்கு நிழல் கொடுத்து, இப்போது இலைகளை உதிர்த்து உயர்ந்து பட்டுபோய் நிற்கும் சவுக்கு மரங்களை சற்றுநேரம் நோக்கிக் கொண்டிருந்தான்.

"இது வெள்ளக்காரன் தோட்டம். இந்த தோட்டத்தில் நாம காலங்காலமாக ஒழைச்சு கொடுத்துக்கிட்டுத் தான் வர்றம். ஆனா நாம இருக்கிற எட்டடிக் காம்பராவே நமக்கு சொந்தமில்ல. இன்னைக்கு ஒரு குற்றம் கண்டு பிடிச்சு தொரை பற்றுச்சீட்டு கொடுத்தா நாளைக்கி நாம தெருவில அப்படி இருக்கையிலே நமக்கு காம்பரா தேவையின்னு நாம் என்ன செய்யமுடியும்?" என்று அவன் பதட்டமின்றி சர்வசாதாரணமான தொனியில் கூறிவிட்டு கிருஸ்தியின் முகத்தைப் பார்த்துக் கேட்டான்.

"ஒனக்கு கலியாணமில்லையா?" ஆதரவாகக் கேட்டான் கிருஸ்தி.

"இல்லை"

அவன் பேசுவது கிருஸ்திக்கு ஆச்சரியமாக இருந்தது. காம்பரா கிடைக்காததினால்தான் அப்படி பேசுகிறான் என்று உணர்ந்து கொண்டு அவன் மேலும் பேசத் தயங்கினான். வீரமுத்துவும் பேசாமல் இருந்தான். வீரமுத்துக்கு களியாணமென்றும் அது பலதடவை பின் போடப்பட்டதென்றும் தோட்டத்தில் எல்லோருக்கும் தெரியும். வீரமுத்துவின் கலியாணம் பின் போடப்பட்டதைப் போல வேறு யாருடைய கல்யாணமும் பின் போடப்பட்டதில்லை.

"உங்க அப்பா தனிக் காம்பராவில உனக்கு கல்யாணம் செய்யிறேனா இல்லையா பாருன்னு சபதம் போட்டுக்கிட்டுத் திரியிறாரு!"

கிருஸ்தி நீண்டநேர யோசனைக்கு பின் கூறினான்.

"நீ ஒரு பக்கம்டா; சும்மா இரண்டா இதென்ன இந்தத் தோட்டம் அப்பன் வீட்டுச் சொத்தென்னு நினைச்சுகிட்டிருக்கிறாரோ? அவர் சொல்லுவாரு" என்று வெடுக்கென மன எரிச்சலுடன் கத்திவிட்டு பீடியை இழுத்துக் கொண்டிருந்தவன் திரும்பி கிருஸ்தியை பார்த்தான். "நாம உண்

மையிலே அடிமை தாண்டா. நாய்களிலுங் கேவலம். அதுகளுக் கென்றாலும் கொஞ்சம் சுதந்திரமிருக்கு'' அவன் கூறியபோது அவனுடைய குரலில் விளைந்த உணர்வுகளினது கடுமைகளை புரிந்த கிருஸ்தி, நிமிர்ந்து மலைச்சாரலைப் பார்ப்பதைவிட வேறு எதுவும் சொல்ல முடியவில்லை.

வீரமுத்துவின் கண்கள் தூரத்தில் எரிந்து கொண்டிருக்கும் புல்லுமலையில் மீண்டும் விழுந்தன. அவனுக்கு சப்பாணி கூறியவை மனதில் தீண்டிக் கொண்டிருந்தது.

''இது உண்மையில் மிருகத்தனமான செயல்''

''இதை அனுமதிக்க கூடாது!''

''இது கொடுமை, எவ்வளவு திமிரு!''

வாசிகசாலையில் இருந்து பல குரல்கள் முட்டி மோதி கலவரமடைந்து வெளியில் வந்து கொண்டிருந்தன. இருவரும் சட்டென திரும்பி வாசிகசாலையை பார்த்தனர். அங்கே பழனியும் பெருமாளும் எழுந்து நின்றனர். ஏதோ விசயம் பற்றி காரசாரமாக பேச்சு நடந்தது.

''வா! வா! எருந்திரு! என்னெண்ணுது பார்ப்போம்'' என்று கூறிக்கொண்டு வீரமுத்து எழுந்தான்! கிருஸ்தியும் அவனும் வாசிகசாலைக்குச் சென்றனர்.

''என்னது! என்ன விஷயோம்?'' என்று வினவினான். தன் மொத்தக் குரலில் கிருஸ்தி. அவனுக்குப் படிக்கவே தெரியாது.

''என்னவா! ஜனநாயக நாட்டிலே கொடுமை நடக்குதப்பா'' என்று மேசையில் கோபமாக தட்டினான் பெருமாள். அவன் தலையை துவாய்த் துண்டால் மூடிக்கட்டி. காற் சட்டையையும் போட்டிருந்தான். வேலை விட்டு அவன் லயத்துக்கு இன்னும் போகவில்லை. இங்கேயே வந்து விட்டான்.

''பொலீஸ் அட்டூழியம் நடந்திருக்கு'' என்று உணர்ச்சி பட்டுக் கலங்கிய தொனியில் கத்தினான் சொத்திச் சிலம்பன்.

''ஆமா இதுக்கு வேற வார்த்தை இல்லை, அட்டூழியமே தான்!'' என்று இராகவன் சொத்திச் சிலம்பனோடு சேர்ந்து கூறினான்.

''என்னப்பாது? விஷயமென்ன?''

வீரமுத்துவும் அவர்களைப் பார்த்து பதட்டமடைந்து கேட்டான். தோட்டத்தில் ஏதோ நடந்துவிட்டதாக்கும் என்று நினைத்துவிட்டான். துரை பங்களாவில் அப்பு வேலை செய்த கருப்பையாவைத்தான் பொலீஸ்காரர் கொண்டு போய் அடித்துவிட்டார்கள் என்று ஒரு யோசனை.

''கலகா தேயிலைத் தோட்டத்தில் அநியாயமாக வேலை நீக்கம் செய்து வெளியில் போட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கும்படி கோரி ''சாத்வீகமான'' முறையில் தொழிலாளர்கள் அனைவரும் வேலை நிறுத்தம் செய்தார்கள். வேலை நிறுத்தம் தொடர்ந்து ஒரு மாதம் நடந்தது. கோரிக்கையை மறுத்த முதலாளிகள் நீதியீன மாக பொலீஸ் படையை கட்டவிழ்த்துவிட்டனர். பொலீஸ் காரர்களில், தொழிலாளரை நாயினும் கேவலமான முறை யில் நடத்தினர். கற்பழிப்பு நடத்தியுள்ளனர். அதோடு நிற்காமல் தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் தாக்கியுள்ள னர். தொழிற் சங்கக் காரியாலயத்திற்குச் சென்று அவர்களை வெளியில் கொண்டு வந்து நடுத்தெருவில் வைத்து அடித் துள்ளனர். கடைசியில் துப்பாக்கிப் பிரயோகம் செய் துள்ளனர்...''

ஒரு கிழமைப் பத்திரிகையான 'தீச்சுடரி'ல் எழுதப்பட் டிருந்ததை இரத்தினவேல் என்ற மாணவன் வாசித்தான். அதைக் கேட்டுக் கொண்டிருந்த எல்லோருக்கும் தாங்களே தாக்கப்பட்டதைப் போன்ற ரோச உணர்ச்சி கிளம்பி நெஞ்சம் இடித்துக் கொண்டது.

''அங்கிருந்த தொழிலாளர்கள் என்ன தங்களைக் காந்தி யென்று நெனச்சிக் கிட்டாங்களோ? ஒரு பொலீஸ்காரனை யாவது கொன்னுருக்கணுமே?''

பழனி ஆத்திரத்தில் தகித்த உள்ளத்துடன் கால்களை நிலத்தில் குத்தினுன்.

''ஒருத்தனென்னுலும் அடிக்காமலா விட்டிருப்பான்?''

''யாராவது எதித்து அடிச்சுத்தானிருப்பான்? ஆனல்,

பொலீஸ்காரங்க திமிரைப் பார்த்தீங்களா?'' என்ருன் பெருமாள்.

''அது காங்கிரஸ் சங்கம்தானே அவங்களுக்கு வேணும். கடைசியெல அவங்க தொழிலாளரைக் காட்டிக் கொடுப்ப வங்கதானே?'' கிரஸ்தி தட்டிக் கழித்து கூறினுன்.

''அப்படிச் சொல்லக் கூடாது. சங்கம் பிழையா இருக் கலாம். ஆனு தொழிலாளருக்குதான் அநீதி நடந்திருக்கு. பொலீஸ்காரர் செய்தது சொல்லப்பட்ட அநீதி! அநீதியை நாம் எதிர்த்தே ஆகணும்! சங்கத்தில் பிழை சொல்லி தொழிலாளர்களுக்கு நடந்த அநீதியை எதிர்க்காமலிருப்பது பெரும் துரோகம்!''

இராகவனும் உணர்ச்சி வசப்பட்டிருந்தான். அவன் குரலில் அது தெரிந்தது.

''இந்தக் கொடுமைக்கு ஒரு நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டும். இதை நீடிக்கவிடக் கூடாது. அப்புறம் பொலீஸ் காரன் தலேயில் ஏறி மிதிப்பாங்க! இது இலங்கையில் உள்ள சகல தொழிலாளரையும் பாதிக்கச் செய்யும்.''

வீரமுத்துவின் மனக் கொந்தளிப்பு இன்னும் அடங்க வில்லே. அவன் கைகளே பின்னுக்கு கட்டி இருந்தான். அவன் சிறிது யோசித்துவிட்டே இதைக் கூறினுன்.

''ஆமா!''

''ஆமா!''

பெருமாளும் சிலம்பனும் உறுக்காட்டியமாகச் சொன் ஞர்கள்.

''இதில் ஆச்சர்யப் படுதற்கு ஒன்றுமில்லே!'' என்று சாவதானமாகக் கூறிய இராகவன் மேசைமேல் விரலால் கீறியவாறு, தொடர்ந்து சொன்னுன். ''எங்க தோட்டத் திலே ஸ்டிரைக் நடந்தபோதுகூட பொலிஸ் முதலாளி பக்கம் தான் நின்ருர்கள். துரையின் பங்களாவுக்கு கல் எறிந்து விட்டான் என்று பொய் சொல்லி மாரிமுத்துக்கு அடிக்க வில்லேயா? பொலிஸ் எங்கையும் முதலாளிகளுடைய சொத் துக்களேப் பாதுகாக்கவும், முதலாளிகளேப் பாதுகாக்கவும் தான் இருக்கும். இந்த முதலாளித்துவ சமுதாயத்தில்

பொலிஸ் முதலாளிகளுடைய காவல் நாய்களாகத்தான் இருக்கும். மக்களைப் பாதுகாக்க அல்ல. அமைதியாக வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களுக்கு ஏன் அடித்து உதைக்க வேண்டும்? ஏன் தொழிலாளர்களுக்காக போராடுகிற தொழிற் சங்க பிரதிநிதியை அடிக்க வேணும்? பொலிஸ் முதலாளி வர்க்கத்தின் ஆயுதம், கருவி. அந்தக் கருவியால், தொழிலாளர்களை அடக்கி ஒடுக்கித்தான் சுரண்டப் பார்க்கும். ஒரு வார்த்தையில் சொன்னால் முதலாளி வர்க்கத்தின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கத்தான் பொலிஸ் இருக்கு...! முதலாளிகளைப் பொலிஸ் தாக்கியதாகவோ அவர்கள் சிறைக்குச் சென்றதாகவோ கேள்விப் பட்டிருக்கிறீர்களா?''

அவன் கூறியவைகளை, மற்றவர்கள் ஆர்வத்தோடு ஏற்று தமது அனுபவத்தோடு சேர்ந்து அவற்றில் உள்ள உண்மையின் களத்தைத் தீர்மானித்துக் கொண்டார்கள்.

''ஆமா, அதுதான் உண்மை!''

பெருமாள் ஆச்சரியமான குரலில், தன்னை மறந்த விதத்தில் கூறினான். ஒரே மனப் போராட்டம் எல்லோர் மனதிலும் நிகழ வெளியில் நிசப்தம் நிலவிற்று.

வீரமுத்து வெளியில் நடந்தான்.

''எல்லாக் கொடுமைகளுக்கும் ஒரு முடிவு வரத்தான் போவுது!'' பழனி உஷாராக தன்னம்பிக்கையோடு கூறினான். சொத்திச் சிலம்பன் நெஞ்சில் இருந்து நல்ல ஒரு பெருமூச்சு வெளி வந்தது. வெளியில் வந்த வீரமுத்து கோயிலுக்கு முன்னால் கைகளைப் பின்னுக்கு இணைத்துக்கொண்டு, நட்சத்திரங்கள் ஜாடை செய்யும் நீல வானத்திரையில் கீழே நிலவிலே நனையும் மலைகளைப் பார்த்தவாறு நின்றான். இராகவன், அவன் இன்று ஒரு மாதிரியாக சோர்வுற்றிருப்பதை அவதானித்திருந்தான். அவன் வீரமுத்து பின்னால் நின்று தோளில் கைபோட்டு ''என்ன ஒரு மாதிரியாக இருக்கிறே?'' என்றான். வீரமுத்து திரும்பிப் பாராமலே ''ஒன்றுமில்லே!'' என்று வாய்க்குள்ளே முணுமுணுத்தான். இராகவன் அவனை அணைத்துத் தள்ளியவாறு சென்று கோயில் வாசலில்

அமர்ந்து கொண்டனர். அதன் பின்பு பழனியும், கிரஸ்தியும் வந்து அவர்களுக்கு முன்னல் நின்றனர்.

"என்னப்பா நீ இன்னக்கி ஒரு மாதிரியா இருக்கிறே!" என வினவினன். பழனியும், "ஆமா" என கிரஸ்தியும் அதை ஆமோதித்தான்.

"என்ன தொர காம்பரா கொடுக்க மறுத்திட்டானு பாக்கிருயா?"

"அப்படி ஒண்ணுமில்லே!"

"தொரே காம்பரா கொடுக்கலேன்னு இந்த முறையும் ஏன் கலியாணம் தடைப்பட்டிடுமோன்னு நெனச்சியா?"

இராகவன் அவனுடைய நிலைமைகளை அறிந்து வாஞ்சையுடன் கேட்டான்.

"ஏன் கலியாணம் கலியாணமின்னு என் உசிர எடுக்கிறீங்க. நா கலியாணம் முடிக்கலேப்பா!"

மனதில் எழுந்து நெருக்கடிப்படும் எண்ணங்களையும் அபசகுணங்களையும் வெளியில் கூறமுடியாத சினத்துடனும் வெறுப்புடனும் சிடுசிடுத்தான். அவன் கோபப்பட்டதை இட்டு எவரும் எதுவும் கூறவில்லை. அவனே சில வினடிகளின் பின் உள் வாங்கிய தொனியில் "நாமென்ன ஒரு பட்டியில் அடைபட்டிருக்கிற செம்மறிக் கூட்டம்தானே? நமக்கு கலியாணமுண்ணு ஒரு விசேசம் உண்டா?" எனக் கேட்டுச் சலித்துக் கொண்டான்.

இராகவன் அவனை அளவோடு பார்த்தான். வீரமுத்துவின் மனம் புழுக்கம் அவனுக்கு நன்ருகப் புரிந்தது. ஆனல் அவன் மனம் சோர்வடைவதை இராகவன் விரும்பவில்லை.

"நீ ஏம்பா மனதைப் போட்டு அலட்டிக்கிறே! உனக்கு மட்டுமா? எல்லோருக்கும் ஒரே நிலைதான். அதனலே கல்யாணம் முடிக்காமலா இருந்திட்டாங்க?"

"அது சரி!"

"கல்யாணம் முடிஞ்சாப்பிலே காம்பரா தர்றேன்னு தானே தொரே சொல்லி யிருக்கிருன்."

கிரஸ்தியும் அவனுக்கு நப்பிக்கை ஊட்டினன்

"ஆமா! ஆமா! சொல்லியிருக்கான். இப்ப சொல்லு வான். அப்புறம் போய்க் கேட்டா காம்பரா எங்கே இருக் குன்னு கேப்பான். அப்புறம் ஒரே காம்பராவில் அடஞ்சி சாகணும்?"

அவன் கூறியதை பழனியும், இராகவனும், கிரஸ்தியும் கேட்டார்கள். கேட்கும்போது அவர்களது உள்ளங்களும் அவனோடு சேர்ந்து கூறுவதைப் போல் இருந்தது. அவர் களுக்கு கூறுவதற்கு எதுவும் தோன்றவில்லை.

"அப்புறம் நான் சப்பாணிபோல தற்கொலை செய்யத் தான் பார்க்கணும்."

வீரமுத்துவின் தீர்மான குரலில் ஆழமான அர்த்தங்கள் இருந்ததை அவர்கள் அவதானித்துள்ளார்கள். தற்கொலை கள் அடிக்கடி தோட்டத்தில் நிகழுவதை யோசித்தான், இராகவன்.அதிகமானவை விரக்தியின் முடிவுகள்.இராகவன் வீரமுத்துக்கு தன் முகத்தை நன்ருகக் காட்டிக் கொண்டான்.

"நீ ஏன்னப்பா அந்தக் கோழைத்தனமான வேலை செய்யப் போகணும். நீ தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந் தவன். உலகத்தின் இயக்கு சக்தி. உலகத்தை தலைமை தாங்குற வர்க்கத்தை சேர்ந்த உனக்கு அந்த எண்ணம் வரக் கூடாதப்பா!"

கேலியாகவும் அதே நேரத்தில் உண்மையைக் கூறும் துணிவுடனும் கூறினுன். வீரமுத்து திரும்பி இராகவனை நோக்கிவிட்டு, பழனியையும் கிருஸ்தியையும் நிமிர்ந்து பார்த்தான்.

"சப்பாணி ஏன் அப்படிச் செய்தானென்று தெரியுமா?"

"இல்ல, ஏதோ மனைவியோட தகருறுன்னு கேள்வி."

"அதெல்ல கலியாணஞ் செய்து ஒரு மாசத்துக்கு மேலாகுதல்லே?"

"ஆமா?"

பழனியும் கிரஸ்தியும் கீழே குந்திவிட்டனர்.

"தகப்பனோட ஒரே காம்பராவில் தானே இருந்தாங்க அவனும் மனைவியும்."

"ஆமா?"

வீரமுத்து தொடர்ந்து சொல்லாமல் முஷ்டிகளைப்போல் நெளிந்து செல்லும் மலைகளைப் பார்த்தான். புல்லு மலை எரிந்து கொண்டுதான் இருந்தது.

''அப்புறம்'' கிரஸ்தி ஆவலோடு கேட்டான்.

''அப்புறமென்ன? இன்னும் ஒரு முறையும் மனைவிகிட்ட உறவு வைக்க முடியல!''

மூவரின் நெஞ்சங்களும் நெருப்புப் பொறி பட்டதைப் போல் திடுக்கிற்றுத் துடித்தன. இருதயம் சூடாகி பேச்சு வரவில்லை.

''அதனால்தான் நஞ்சு குடிச்சானா? இப்படி எத்தனை...?'' இராகவனின் கேள்வி இது.

''அல்ல—இவ்வளவு நாளும் சப்பாணி உணர்ச்சிகளோட எவ்வளவு போராடி இருக்கணும்.''

''வேற என்னத்துக்காக நஞ்சு குடிக்கனும்?''

''அண்ணைக்கி ஒன்னும் செய்ய முடியாம நாட்டிலே போயி கள்ளு குடிச்சிருக்கான். அப்புறம் நல்ல சூடில, நேரஞ் செல்ல லயத்துக்கு போயி இருட்டிலே மனைவிகிட்ட போறதென்னு நினைச்சி...தன் தங்கச்சிகிட்ட விழுந்து அணைச்சிட்டான்.''

வீரமுத்துவின் குரல் கரகரத்தது.

''ஐயோ''

இராகவனின் உதடுகள் அசைந்தன.

''உடனே அவன் தங்கச்சி ஐயோன்னு கத்தியிருக்கு; அப்பத்தான் அவனுக்கு தெரிஞ்சிருக்கு. பாவம்—பக்கத்திலே கிடந்த தகப்பன் இருட்டில் எழுந்து யாரோன்னு நெனச்சி நல்லா அடிச்சுப் போட்டாரு. அப்புறம் விளக்கை ஏத்திப் பாத்தாரும். பார்த்தா எல்லாருக்கும் விசயம் புரிஞ்சிட்டுது.''

''ச்சீ'' இராகவன் தங்கள் வாழ்க்கை முறையை ஊன்றி எண்ணி அருக்குளித்து முகத்தைச் சுளித்தான். சின்ன வயதில் இருந்து இப்படியான பல அனுபவங்களை கேட்டிருந்தாலும், அதை இன்னொருவன் சுட்டிக்காட்டும் பொழுது தான் அதனதன் தாத்பரியம் புரிகிறது.

தங்கள் வாழ்க்கையிலும் அப்படி யேற்படும் என்ற யோசனையின் பயம் பழனி, கிரஸ்தியின் முகங்களில் சூழ்ந் திருந்தது.

"அந்தத் துக்கம் தாங்க முடியாமைத்தான் அவன் அப்படிச் செய்தான்."

வீரமுத்து மனநெகிழ்ச்சி யடைந்திருந்தான். சப்பாணி இவ்விசயத்தை அவனுக்குக் கூறும்பொழுது கண்கள் கலங்கி இருந்தன. அது அவன் கண்களுக்குள் ஓடி வந்தது.

"நா, நாளைக்கி அவளைப் போய்ப் பார்க்கனும்" என்று பழனி சொன்னான்.

"ஆமா நானும் வர்றன்" என்றான் கிருஸ்தியும்.

"நாளைக்கி நம்ம கூட்ட நோட்டீஸ் கொடுக்கனும். ஒட்டவேணும்."

இராகவன் ஞாபகப்படுத்தினான்.

"ஆமாடா!" அது முக்கியமாச்சே! அப்ப நோட்டீஸ் ஒட்டினப்புறம் போவம் என்ன? என்று பழனியைத் திரும்பிக் கேட்டான் கிருஸ்தி.

"ஆமா!" என்று கூறிய பழனி எங்கு பார்த்தாலும் நம்ம கூட்டத்தைப் பற்றியும் தான் பேச்சாயிருக்கு" என்று உஷா ராகிச் சொன்னான். அப்பொழுதுதான் அவன் முகம் சிரித்தது.

"ஒட்டின நோட்டிஸ் நல்ல வேலே செய்திருக்கு!" என்று கூறிக்கொண்டு வீரமுத்து எழுந்தான். "நான் கலியாணம் வேணுமின்னு சொல்லப் போறன்; வர்றன்" என்று கூறிக் கொண்டு நடந்தான். இராகவன் அவன் தோளைக் கையால் பற்றி இழுத்து,"சும்மா யோசியாம ஒன்றும்செய்திடாதிங்க" என்றான். வீரமுத்து ஒன்றும் கூறாமல் நடந்தான். அவன் போவதைப் பார்த்துக் கொண்டிருந்த இராகவன் அழைத் தான்.

"வீரமுத்தண்ணே! நாளைக்கி சிங்கள நாட்டிலே நோட் டீஸ் குடுக்கணும் வந்திடு! என்ன?"

"ஆமா! வர்றன் ஸ்ரோர்ல வேலே செய்யிற பண்டாவை யும் அழைச்சிட்டு வர்றன்."

"சரி!"

"நாங்களும் வர்றம்" என்று இராகவனிடம் கூறிவிட்டு பழனியும் கிருஸ்தியும் "நில்லு நாங்களும் வர்றம்" என்று கத்திக்கொண்டு வீரமுத்துவின் பின்னுல் ஓடினர்.

"கொஞ்சம் நில்லுங்க!"

இராகவன் கூறியதைக் கேட்டு திரும்பி வந்தனர்.

"இதைக் கொஞ்சம் பாருங்க!"

தான் எழுதி வைத்திருந்த சுலோகங்களைக் கொடுத்தான்.

"பாராளுமன்றப் பாதை, சுரண்டல்காரர் பாதை."

"புரட்சிப் பாதை தொழிலாளி வர்க்கத்தின் பாதை."

"அமெரிக்க ஏகாதிபத்தியமே, எல்லா பிற்போக்காளர்களும் காகிதப் புலிகளே!"

"எதிரி தாளுக அழிய மாட்டான்!"

வாசித்த பழனி "இதையெல்லாம் எழுதி எல்லாரிடமும் ஒட்டனும்!" என்முன்.

"ஆமா அண்ணைக்கி வெள்ளைக்கார முதலாளிகள் வந்தப்போ ஒட்டின தோடை இதையும் சேர்த்து ஒட்டனும் இல்லையா!"

"இல்லாம" என்முள் கிருஸ்தி. யோசித்துக்கொண்டு நின்ற பழனி "இதுவும் எழுதி ஒட்டனும்" என்முன்.

"எது"

"அன்னைக்கி மாஷ்டர் சொன்னுரு; அரசியல் தான் சகலவற்றையும் தீர்மானிக்கிறது. தொழிலாளி விவசாயிகளே உங்கள் அரசியலைப் படியுங்கள்"

"ஆமா மிக முக்சியமானது நான் மறந்திட்டேன்."

"நாளைக்கி எழுதுவோம்; நாங்க வர்றம்."

என்று கூறிக் கொண்டு அவர்கள் சென்றனர். இராகவன் தனியாக இருந்து கொண்டு கூட்டத்திற்கு செய்ய வேண்டிய ஆயத்தங்களைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தான். அப்பொழுது புஞ்சிபண்டா நாயோடு அவனை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

# 10

இன்னும் கொஞ்சநேரத்தில் சங்கப் பிரதிநிதிகள் வந்து இறங்கி விடுவார்கள்.

குயீன்ஸ் தோட்டம் வீறு கொண்டிருந்தது. ஆண்களும் சரி, பெண்களும் சரி சகல தொழிலாளர்களின் உள்ளங் களும் ஒரு ஆதர்சமான உரிமைக் கொண்டாட்ட நினைவுடன் பூரிப்படைந்தன. அவர்களின் கைளும், இருதயமும் மிகச் சுதந்திரமாக தைரியத்துடன் இயங்கிக் கொண்டிருந்தன. ''நம்ம ஆக்கள் வாருங்க'' ''நம்ம பிரதிநிதிகள் வாருங்க'' என்று அடிக்கடி ஒருவருக்கொருவர் கூறிக் கொள்வதும் அப்படிக் கூறிக் கொள்ளும் பொழுது எண்ணத்தில் பலம் கொள்வதும் அவர்களுக்கு ஆனந்த மளித்தன.

கோயிலுக்கு முன்னல், அரசாங்க தெருவோடு அணித் தாக கூட்ட மேடை போட்டிருந்தார்கள். மேடையின் மேல் மேசையும் அதைச் சுற்றிக் கதிரைகளும் போடப்பட் பட்டிருந்தன. மேசையில் குத்து விளக்கு வைக்கப்பட்டிருந் தது. மேடைக்கு மேல் கூரைபோல் சிவத்தத் தோரணங் களும் கட்டி பக்கத்தில் செங்கொடிகளும் கட்டியிருந்தார் கள். தேர்க் கொட்டகைச் சுவரில் பெரிய எழுத்துக்களில் 'பாராளுமன்றப் பாதை சுரண்டல் காரர் பாதை; புரட் சிப் பாதை தொழிலாளி வர்க்கத்தின் பாதை' என்பதும், 'அமெரிக்க ஏகாதிபத்தியமும் சகல பிற்போக்கு வாதிகளும். காகிதப் புலிகளே' என்பதும் வெள்ளைத்தாள்களில் எழுதி ஒட்டப்பட்டிருந்தன. ஒரு பக்கத்து மட்டையில்.

'உலக மக்களே துணிவு கொள்வீர்; போரிடத்
துணிவீர்!
கஷ்டங்களை துச்சம் செய்வீர்; அலைக்கு மேல் அலையாக
முன்னேறுவீர்; அப்பொழுது முழுஉலகமும் மக்களுக்கு
சொந்தமாகும்;
எல்லாவித பைசாசங்களும் அழிக்கப்படும்!'

என்று எழுதப்பட்டிருந்தது. அடுத்த பக்கத்தில்,

"ஆயிரம் ஆயிரம் தியாகிகள் மக்களுக்காக தம் உயிர்களை வீரத்துடன் ஈந்துள்ளனர். நாம் அவர்களின் துவஜத்தை உயர ஏந்தி அவர்களின் இரத்தத் தால்சிவந்துள்ள பாதையில் முன்னேறுவோமாக"

என்று எழுதப்பட்டிருந்தது. அவை மட்டுமல்ல கடைத் தெரு, இலவ மரங்கள், பிரட்டுக் களம், சகல வசதியான இடங்களிலும் சுலோகங்கள் சிங்களத்திலும் தமிழிலும் எழுதி ஒட்டியிருந்தார்கள். அவற்றை வாசிக்கும் தொழிலாளர்கள், விவசாயிகள் நெஞ்சுகளில் உற்சாக மான கெம்பீர அலைகள் வீசிக் கொண்டிருந்தன. ஒலி பெருக்கி பாடிக் கொண்டிருந்தது.

அது ஒரு பகிரங்கக் கூட்டம் போல் அமைந்து விட்டது. இவ்வளவு காலம் போராடி கூட்டம் நடத்த அனுமதி பெற்றுள்ளனர்.

கூட்டம் நாலு மணிக்கு ஆரம்பமாகி ஆறு மணிக்கு முடியவேண்டும். அது போலீஸ் உத்தரவு.

கோடையில் பூத்திடும் பரந்து விரிந்த நிழல் வாகை மரத்தைப் போல் எங்கும் சிவப்புத்தான் தெரிந்தது.

பெண்கள் அதிகமாக வந்து முன்னுக்கு அமர்ந்து விட்டார்கள். பெரும் பாலான பெண்கள் சிவத்தச் சேலையும் சிவத்தச் சேலை இல்லாதவர்கள் சிவத்தச் சட்டையையும் அணிந்திருந்தார்கள். அவை இரண்டும் இல்லாதவர்கள் கொண்டையில் சிவத்த நாடா கட்டிக் கொண்டிருந் தார்கள்.

அவர்களின் பேச்சுக்களில் இழையோடும் நம்பிக்கை எவ்வளவு! இன்று அவர்கள் புரட்சி கரமாகி இருக்கிறார்கள். அடிமனதில் ஓதுங்கி இருந்த உணர்வுகள் சுதந்திரப் பட்டு விட்டன.

அண்ணாமலை மகள், வீரமுத்துவின் தங்கையார் நடசத்திரம், பொட்டு முன் வரிசைகளில் சிவப்புச் சேலையுடனிருந் தார்கள்.

இராகவன், வீரமுத்து, பழனி, புஞ்சிபண்டா, அண்ணாமலை முதலியோருடன் யாரும் பொறுத்து நின்று

பேச முடியாது. அவ்வளவு வேலை. எங்கும் அலைந்து கொண்டிருந்தார்கள். புஞ்சி பண்டா ஓடி ஓடி வருபவர் களுக் கெல்லாம் நோட்டீஸ் கொடுத்துக் கொண்டிருந்தான். அவனோடு விமுக்கனும் சேர்ந்து கொண்டான்.

நாட்டுச் சிங்கள விவசாயிகள் அனேகர் வந்து குவிந்து விட்டார்கள். பக்கத்துத் தோட்டங்களில் இருந்து சங்கத் தைச் சேர்ந்த தொழிலாளர்கள் செங்கொடியைப் பிடித்துக் கொண்டு ஊர்வலமாக வந்து கொண்டிருந்தார்கள்.

கோயிலின் முன்னுலும், தெருவும் தொழிலாளர்க ளாலும், நாட்டு விவசாயிகளாலும் நிறைந்து விட்டன. அதனுல் பின்னுல் வருபவர்கள் பக்கத்து தேயிலைமலைச் சரி வில் ஏறி அமர்ந்து கொண்டார்கள்.

நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

செய்ய வேண்டிய வேலைகள் எல்லாம் பழனி, வீரமுத்து, இராகவன் ஆகியோர் செய்து முடித்து விட்டு முன்னுக்கு வந்து நின்றனர். அவர்களும் புதிதாகத் தைத்த சிவப்புச் சேட்டுகள் அணிந்திருந்தார்கள். மத்தியானச் சாப் பாட்டை மறந்தும், களைப்புத் தெரியவில்லை.

சின்னக்கலப்பனைக் பிடிக்க இயலாது. அவன் இளமை பேர்ந்து இருந்தான். தலையில் சிவப்புத்துண்டால் சுற்றிக் கட்டிக் கொண்டு கூட்டத்தில் அமர்ந்து கொண்டான். கிழவர்கள் கூடியிருந்த பக்கம் அவன் இருந்தான். அவன் கையில் மாலை வைத்திருந்தான். இன்னும் பலர் கையில் மாலைகள் இருந்தன.

அண்ணுமலையின் தலைமையில் தான் கூட்டம். அவர் சிவப்பு நாஷனல் அணிந்து வெற்றிலையும் சப்பி நல்ல உஷா ராக இருந்தார்.

அன்று அத்தோட்டத்தில் சோர்ந்து இருந்தவர்கள் யாருமில்லை. ஒருவனை வெல்லும் சுறு சுறுப்பு ஒருவனுக்கு. அவர்களை அன்று யாரால் அசைக்க முடியும்?

செங்கொடிகளும், சிவந்த சேலைகளும். சட்டைகளும், தலைப்பாகைகளும் நிறைந்த அக் கூட்டத்தைப் பார்க்கும் போது ஒவ்வொருவர் மனதிலும் அசைக்க முடியாத

தைரியம் உற்பவித்துக் கொண்டிருந்தது. அது அவர்களை மீறிக் கொண்டது.

அந்தச் செந்நிறப் பகுதியைச் சுற்றி காக்கி நிற உடையணிந்த போலீஸ்காரர்களும் காவல் காத்து நின்றனர். எதிரிகளைப் பிடிக்க வருவது போல் குண்டாந்தடி துவக்குகள் சகிதம் சூழ்ந்து நின்றனர்.

அவர்களைக் கண்டு பயப்படுபவர்கள் அங்கு யாருமில்லை. அதைப் பொருட்படுத்துபவர் இல்லை. தொழிலாளர்கள் எந்த நடவடிக்கை எடுக்கும் பொழுதும் அங்கு போலீஸ் குதிப்பது சகஜமாகி விட்டது.

ஒருபோது எதிரிக்கு எதிராக ஐக்கியப்பட்டு விட்டோம். எம்மையாரால் அசைக்க முடியும் என்ற வைராக்கியமும், கிளர்ந்தெழுந்த வீராவேச உணர்ச்சியும், அவர்கள் எல்லோரது பாவங்களிலும் இழையோடி இருந்தது. நிமிர்ந்து நின்றார்கள்.

எல்லோரும் எதிர்பார்த்திருந்தது போல் நாலேகால் மணியளவில் ஒரு கார் வந்து கோயிலடியில் நின்றது. காரில் இருந்து இறங்குபவர்களைக் கண்டதும் இராகவனும் புஞ்சி பண்டாவும் வீரமுத்துவும் கிட்டச் சென்று உச்சஸ் தொனியில் கோசமிட்டனர். எல்லோருடைய உடம்பிலும் மயிர்கள் வீறுகொண்ட ஆவேசத்தால் புல்லரித்து நின்றன.

"சிவப்புக் கொடி வாழ்க!"

"நமது சங்கம் வாழ்க!"

"நமது பிரதிநிதிக்கு ஜே!"

"ஏகாதிபத்தியம் ஒழிக!"

"முதலாளி வர்க்கம் ஒழிக!"

"தொழிலாளி விவசாயி ஐக்கியம் ஓங்குக!"

காரிலிருந்து பதுளைப் பிரதிநிதி இராமநாதன், கொழும்பில் இருந்து வந்த தொழிற் சங்கப் பிரதிநிதி ஜினதாசா, விவசாயிகள் சங்கக் காரியதரிசி குணசேகரா ஆகியோர் இறங்கினர்.

அண்ணுமலை, புஞ்சிபண்டா, சொத்திச் சிலம்பன், இராகவன் முதலியோர் அழைத்துக் கொண்டு போய்

மேடையில் ஏற்றினுர்கள். அதற் கிடையில் மாலைகள் பல அவர் கழுத்தில் விழுந்து விட்டன. கூட்டத்தில் ஆரவார மும்கைத்தட்டலும், ஜே, கூறுவதும் ஓயவில்லை. கையுயர்த்தி உயர்த்தி ஜே கூறும் பெண்களின் குரல் ஆண்களின் குரலை அமுக்கி விட்டது.

அண்ணுமலையின் தலைமையில் கூட்டம் தொடங்கியது. முதலில் பதுளைப் பிரதிநிதி இராமநாதனும், அதையடுத்து விவசாயிகளின் சங்கக் காரியதரிசி குணசேகராகவும் பேசினர். ஜினதாசா பேசுவதற்கு எழுந்து நின்ருர். கரகோசம் தொடர்ந்து கொண்டது. முதலில் சின்னக்கலப்பன் முண்டி இடித்துக்கொண்டு போய், அவர்கழுத்தில் மாலையை அணிவித்து. ''நமது சங்கம் வாழ்க! முதலாளிகள் ஒழிக!'' என்று கையுயர்த்திக் கத்திவிட்டு இறங்கினுன். அவனைத் தொடர்ந்து புஞ்சி, இராகவன், அடுத்த தோட்டத்திலுள்ள தோட்டச் சங்கத் தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராக மாலை போட்டனர். மாலை போடும்போது '' செங்கொடி வாழ்க! முதலாளி வர்க்கம் ஒழிக!' என்றுதான் பெரும்பாலும் கோசமிட்டனர்.

பிரியமிக்க தோழர்களே! தோழியர்களே !

கூட்டத்தில் திடீரென அமைதி நிலவிற்று. ஜினதாசா அவர்களுக்கு நன்ருகத் தமிழ் தெரியும். சிங்கள விவசாயிகள் அதிகமாக வந்திருந்ததால் அவர் சிங்களத்தில் பேச வேண்டியதாயிற்று. இராமநாதன் தமிழில் மொழி பெயர்த்தார்.

அவர் பேச்சைத் தொடர்ந்தார்.

முற்றிலும் தொழிலாளர்களும் விவசாயிகளும் நிறைந்துள்ள இக் கூட்டத்தில் எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்ததையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்று யாஞெரு தொழிற் சங்கப் பிரதிநிதியாக நின்று பேசுகின்றேன். அதுவும் தொழிலாளர்களுக்காக இங்கு மட்டுமல்ல அகில இலங்கையிலும் உண்மையாகப் போரிடும் தொழிற் சங்கத்தின் பிரதிநிதியாக நிற்கின்றேன். எங்கள் சங்கம் எங்கு வளர்கின்றதோ அங்கெல்லாம் சுரண்டுகின்ற முதலாளி எதிர்ப்பு கடுமையாக இருக்கின்றது. அதே நேரத்

தில் மற்றத் தொழிற் சங்கங்கள் ஏதாவது உண்டாகின்ற நேரத்தில் அந்த முதலாளிகள் ஒன்றும் செய்வதில்லை. பதிலாக அவை வளருவதற்கு உதவி செய்கிறார்கள். தொழிலாளர்களிடம், அந்தச் சங்கத்தில்தான் சேர் என்று வழி காட்டியும் விடுகிறார்கள். தொழிலாள வர்க்கத்தின் எதிரி யார்? முதலாளி வர்க்கம். அதில் சந்தேகமில்லை. ஆகவே தொழிலாளி வர்க்கத்தின் எதிரி ஆதரிக்கின்ற ஒரு தொழிலாளர் சங்கம் உண்மையாக தொழிலாளர்களுக்காக இருக்கின்றதில்லை. இது முதலாளி வர்க்கத்திற்கு வால் பிடிக்கும் சங்கமே! எமது சங்கம் தொழிலாளி வர்க்கத்தின் சங்கமே! அது எந் நாளும் முதலாளி வர்க்கத்தை எதிர்த்த வண்ணமே இருக்கும். பாருங்கள்! எவ்வளவு காலம் போராடி இன்று நாம் கூட்டம் வைப்பதற்கு அனுமதி தந்துள்ளார்கள். நாங்கள் இன்று சண்டை செய்ய வரவில்லை. கூட்டம் வைக்கத் தான் வந்திருக்கின்றோம். ஆனால் முதலாளி வர்க்கம் பயம் கொண்டு தன் சொத்துக்களைப் பாதுகாக்க எவ்வளவு போலீஸ்காரர்களை அனுப்பி இருக்கிறது. ஏன் எங்களுக்கு இவ்வளவு பயப்பட வேண்டும்? மற்றத் தொழிற் சங்கங்களை விட எங்களுக்கேன் பயப்பட வேண்டும்? அவர்களுக்கு எங்களை நன்றாகத் தெரியும். நாங்கள், தொழிலாளி வர்க்கம் தான். பிரச்சினைகளுக்கு தொழிற் சங்கப் போராட்டங்களை மட்டும் நம்பியிருக்க முடியாது என்று கூறுகிறோம்.

ஏன் நாம் அப்படிக் கூறுகிறோம்?

தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்காக தொழிற் சங்கங்கள் எவ்வளவு காலமாக போராடி வருகிறது? எத்தனை வருடங்கள் நாம் எவ்வளவு கோரிக்கைகளை வென்றெடுத்துள்ளோம்? எத்தனை முறை சம்பள உயர்வு கிடைத்திருக்கிறது? ஆனால் உங்கள் பிரச்சினை அப்படியேதான் இருக்கும்? உங்கள் வாழ்க்கை அதே கடை கெட்ட நிலையில்தான் இருக்கிறது. அதில் மாற்றமே இல்லை. கேவலம் ஒரு நாளைக்கு வேலை இல்லை என்று விட்டால் உங்களால் அன்று வாழ்வது பெரும் கஷ்டம் ஏன்? இது ஏன்? இது முதலாளித்துவ சமுதாயம்! எங்கும் முதலாளி வர்க்கம். ஆட்சி செலுத்து

கின்ற சமுதாயம். முதலாளி வர்க்கத்தின் சுரண்டல் அதே கதியில் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது. உங்கள் உழைப்பைச் சுரண்டிக் கொண்டு எவ்வளவுக்கு குறைத்து கூலி தர முடியுமோ அவ்வளவு குறைத்துக் கூலி தருகிறுர்கள். பத்துச் சதம் உங்களுக்கு உயர்த்தித் தந்துவிட்டு பொருட் களை ஒரு ரூபாயாக உயர்த்த முதலாளிகளுக்குத் தெரியும். இந்த சுரண்டுகின்ற ஓரவஞ்சகமான சமுதாயத்தில் நீங்கள் கொடுமையாகச் சுரண்டப்படுவதோடு நீங்கள் அடிமை களாகவே இருக்கிறீர்கள். இந்த வெள்ளைக்காரனுடைய தோட்டத்தில் 'ம்' என்ருல் வேலையில்லை. ஏன் என்ருல் வெளி யேற்றம். இத்தோட்டத்தில், அவனுடைய அனுமதியின்றி யாரும் வரமுடியாது.

''ஆமாப்பா! பெரிய கொடுமை நடக்குது. படுத்துத் தூங்குறதுக்கு ஒரு சின்னக் காம்பரா கொடுக்க மாட்டேங் கிருங்க பொறுக்கிப்பயலுக!''

சின்னக் கலப்பன் எழுந்து நின்று உணர்ச்சி வசப்பட்டுக் கத்திக் கூறிஞன். பின்பு அமர்ந்து புறுபுறுத்துக் கொண் டான். அவர் பேச்சைத் தொடர்ந்து கொண்டேயிருந்தார். இங்கு யாருக்கு சுதந்திரம் உண்டு? யாருக்கு ஜனநாயகம் உண்டு. உங்களுக்கா? முதலாளி வர்க்கத்துக்கா? பெரும்பான் மையான தொழிலாளி விவசாயிகளுக்கா? சில முதலாளி களுக்கா? அவர்களுக்குத்தான்! உங்களைச் சுரண்டுவது போதாதென்று அடக்கி ஒடுக்கி கொடுமை செய்வதற்கு அவர்களுக்கு கொடுக்கப்பட்டதுதான் ஜனநாயகம்! இலங் கையில் இன்று இந்த ஜனநாயகம் தான் நடைமுறையில் இருக்கிறது. உழைக்கும் பெரும்பான்மை மக்களுக்கு ஜன நாயகமில்லை. மக்களின் உழைப்பைச் சுரண்டுபவர்களுக்குத் தான் ஜனநாயகம். இது முதலாளித்துவ சமுதாயம். இங்கு இதுதான் நடக்கும். நாங்கள் விழிப்படையும் வரை நடந்து கொண்டே இருக்கும்.

''நாங்கள் தயார்; நாங்கள் விழிப்படைந்து விட்டோம்!''

இராகவனேடு சேர்ந்து வீரமுத்து ஆட்களும் உச்சஸ் தொனியில் கத்தினர். அவர்களைத் தொடர்ந்து கூட்டத்தின்

பல இடங்களிலிருந்தும் அதே வார்த்தைகள் கிளம்பின. ஜினதாசத் தலைவரின் பேச்சு நரம்புகளில் ரோசத்தை கிளரச் செய்தது.

இந்தப் பிரச்சினைகளுக்கு தொழிற் சங்கம் மூலம் தீர்வு காண முடியுமா? முதலாளி வர்க்க சமுதாயத்தை மாற்றி தொழிலாளி வர்க்க சமுதாயத்தை ஏற்படுத்த முடியுமா?

அதுதான் நாங்கள் கூறுகின்றோம். உங்கள் அடிமை நிலை மாற வேண்டும். வாழ்க்கை செழிக்க வேண்டுமென்றால் முதலாளி வர்க்கத்தின் சுரண்டல் ஒழிய வேண்டும். சுரண்டல் ஒழிய வேண்டுமென்றால் முதலாளி வர்க்கம் ஒழிய வேண்டும். முதலாளி வர்க்கத்தை ஒழிக்க இந்த சமுதாயம் மாற வேண்டும். மாற்றியமைக்கப்பட வேண்டும். முதலாளி வர்க்கத்தை ஒழிப்பது உங்கள் கடமை. உங்கள் தலைவிதி.

''முதலாளி வர்க்கத்தை அழிக்கணும்; அடியோடு அழிக்கணும்!''

சின்னக் கலப்பன் பேச்சில் ஈடுபட்டு, உணர்வுகள் கிளர்ந்து மீண்டும் எழுந்து கத்தினான். அவனைத் தொடர்ந்து இராகவன் வீரமுத்து, புஞ்சி பண்டா ஆகியோர் ''முதலாளிகள் ஒழிய!'' என்று சொல்ல சில விநாடிகள் அனைவரும் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். அதைக் காண ஜினதாசா அவர்களுக்கும் வீறு கொண்டது.

''உழைப்பவர்களுக்கே உலகம் சொந்தம். உழைக்கும் மக்களாகிய உங்களுக்கே உலகம் சொந்தம். நாமேன் இதைத் திரும்பத் திரும்பக் கூறவேண்டியிருக்கிறது? இப்பொழுது உங்களின் சொந்த உலகம் உங்கள் கையில் இல்லை. அதைச் சொந்தம் கொண்டாடுவது வேறு யாருமல்ல. உங்கள் எதிரி! உங்களைச் சுரண்டுகின்ற முதலாளி வர்க்கம், இந்த உலகத்துக்கு சொந்தம் கொண்டாடுவதற்கு ஒரு வித நியாயமுமில்லை. உங்களைச் சுரண்டுவதைத் தவிர.

இது இலங்கை நாடு; நாம் இந் நாட்டில் பிறந்தோம். இது எங்கள் தாய் நாடு. நான் இப்போது நிற்பது வெள்ளைக்காரனின் தோட்டம். அவன் அனுமதியோடு குறித்தநேரத்

திற்குத்தான் நிற்க முடியும்? ஆனல் எமது நாடு சுதந்திர நாடாம்?

இந்தத் தோட்டம் இங்கிலாந்திலில்லை. நாம் பிறந்த எமது இலங்கையில் தான் இருக்கிறது. ஆனல் இதன் முதலாளிகள் சொந்தக்காரர்கள், வெள்ளைக்கார முதலாளிகள். அவர்கள் இங்கு தோட்டத்திலே ஒரு தனியான அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கிருர்கள். அவர்கள் இங்கு ஏன் தோட்டம் வைத்திருக்கிருர்கள்? இந்த நாட்டில் கொண்ட நேசத்தினுல்? தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்து காப்பாற்ற வேண்டுமென்ற கருணையினுலுமா? இல்லை!

இந்த நாட்டையும் இந்த நாட்டுச் செல்வத்தையும் சுரண்டி தன் நாட்டுக்குக் கொண்டு போவதற்காக. அவன் கொண்டு போகின்ற செல்வத்துக்கு நாம் போடுகிற சிறிய வரியில் தான், நமது நாடு இயங்கிக் கொண்டிருக்கிறது. கேவலம்!

இந்த நிலையில் அவன் நமக்கு சுதந்திரம் தந்து விட்டானும். இது உண்மையா?

இங்கு, இத் தோட்டத்தில் உள்ள கந்தோரில் துரைகிளார்க்கு மாரை மாற்றுவது போல பிரிட்டிஷ் காரன், வெள்ளைக்காரன் இருந்த நிர்வாகத்தில் இலங்கையனை இருக்க அனுமதியளித்துள்ளான். அவ்வளவுதான். இவன் செய்து வைத்த அமைப்புகள் எல்லாம் அப்படியேதான் இருக்கின்றன. அவனும் இங்கேதான் இருக்கின்ருன். இலங்கையை இயக்கும் பொருளாதார "ஸ்விச்" அவன் கையில் தான் இருக்கிறது.

இதற்கெல்லாம் அவன் கூறுவது இந்தத் தோட்டங்கள் எலலாம் அவன் சொத்தாம். எப்படி அவனுக்கு இது வந்தது? இலங்கை மக்கள் தூக்கி அவன் கையில் கொடுத்தார்களா? இல்லை.

பிரிட்டிஷ் காரன் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி நடத்திய காலத்தில் இந்த ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமாக இருந்த நிலமெல்லாவற்றையும் பலவந்தமாகப்

பறித்துக் கொண்டான். இலங்கையின் வருமானத்தில் ஒரு பகுதியை செலவு செய்தான். இந்தியாவில் வறுமையில் வாடிக் கொண்டிருந்த உங்கள் மூதாதையர்கள். தேயிலைக் குள் பருப்பும், மாசியும் இருக்கிறதென்று ஏமாற்றிக் கொண்டு வந்து வேலை வாங்கினுன். அவனுக்கு லாபந்தானே நோக்கம். நமது முன்னேர்கள் நாட்டு முன்னேற்றம் கருதி, விவசாயத்தை விருத்தி செய்யும் பெரும் நோக்கத்தோடு கட்டிய பெருங் குளங்களை யெல்லாம் தூர்த்தி விட்டான். நமது விவசாயமே அழிஞ்சு போச்சு! சிறிய நிலத்தை வைத்து பாடுபடும் மலைநாட்டு விவசாயிகள் வறுமையில் வாடத் தொடங்கினர்.

வெள்ளைக்காரன் வெற்றி யடைந்தான்.

தொழிலாளர்கள் இரத்தம் சிந்தி உழைத்தார்கள். நமது வளமான பூமி செழித்தது. தோட்டங்கள் செல்வம் செல்வமாக கொட்டுகின்றது. அவன் அசையாமல் அள்ளிக் கொண்டு போகின்றுன். எதற்கு? தனது நாட்டில் சொகுசாக வாழ்வதற்கு!

இவர்கள் தான் சொல்கிருர்கள் தோட்டங்கள் தங்கள் சொத்தென்று. இவன் இலங்கைக்கு வரும்போது வெறுங்கை யோடு வந்தவன் பாருங்கள்! தொழிலாளர்களின் உழைப் பில் காடாகக் கிடந்த மலை எவ்வளவு பதுமையாக அழகு கொட்ட நிற்கின்றது. ஆம். நாம் நமது உழைப்பால் உரு வான நமது நாட்டுச் செல்வத்தைப் பார்க்கிறோம். எமக்கு அது பார்க்க மட்டும் தான்; பார்ப்பதற்கு மட்டும் தான் இருக்கிறது. அனுபவிக்கிறதற்கு அல்ல.

அனுபவிப்பதற்கு வெள்ளைக்காரன்!

இலங்கை மக்களே! இப்போது சொல்லுங்கள் வெள்ளைக் காரன் இங்கு இருப்பது நீதியா? இத்தோட்டங்கள் யாரு டைய சொத்து? விவசாயிகளே; எமது விவசாயத்தை பாழாக்கி நமது நாட்டுச் செல்வத்தை சுரண்டிக் கொண்டு போகிற வெள்ளைக்காரனை இந் நாட்டை விட்டு துரத்தாமல் எமக்கு விமோசனம் உண்டா?

அவர்கள் கொண்டு போகின்ற கொள்ளை கொள்ளையான செல்வங்கள் இந்நாட்டில் இருந்தால் நாம் எமது வாழ்வில் எவ்வளவு புதுமைகளைச் செய்யலாம்? சிந்தியுங்கள்.

வெள்ளை முதலாளிகள் இங்கு இருப்பது நீதியா?

வெளியேற்றப்படுவது நீதியா?

"மே அப்பே இடங்கல்லே!"

"சுத்தனே பழயவ்!"

"சுத்தனே பழயவ்!"

"வெள்ளையனே வெளியேறு!"

சிங்கள விவசாயிகள் ஆத்திரத்தின் உச்சியில் நின்று கையுயர்த்தி கத்தினார்கள். அவர்களோடு சேர்ந்து சகலரும் கோசமிட்டனர். அது அவ்விடத்தை ஒருமுறை அதிரச் செய்தது.

ஜினதாசா பேச்சைத் தொடர்ந்தார்.

சரி, வெள்ளை முதலாளிகளை வெளியேற்றுவோம். அதையெப்படிச் செய்வது? தோட்டத் தொழிலாளர்கள் மட்டும் ஐக்கியப்பட்டால் போதுமா? இல்லை. இந்நாட்டின் சகல தொழிலாள வர்க்கமும் ஐக்கியப்பட வேண்டும்; அப்படி ஐக்கியப்பட்ட தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் தொழிலாளி விவசாயியின் அடிப்படையில் சகல மக்களும் ஐக்கியப்பட்டு போரிடுவதன் மூலமே செய்ய முடியும். அதைவிட வேறு வழியில்லை.

ஆம்; ஒன்றுபட வேண்டும். எங்கே ஒன்று படுவது? யார் தலைமையில் ஒன்றுபடுவது? தொழிலாள வர்க்கத்தின் தலைமையில்தான். தொழிலாளர் சங்கத்தின் கொடி எந்தக் கொடி? இன்றைக்குள்ள குழப்பமான நிலையில் நீங்கள் எதை இனம் கண்டுபிடிக்க வேண்டும்? இன்று ஆட்டுக்குட்டிகளின் கொடியை ஓநாய்கள் தூக்கிப் பிடிக்கின்ற காலம். அதனால் நாம் நமது நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்று இனங் கண்டு கொள்வது முக்கியம்.

நீங்கள் எல்லோரும் கரைபுரண்டோடும் உற்சாகத்தோடும் வீறுகொண்ட உணர்ச்சிகளோடும் இங்கு வந்திருக்கிறீர்கள். உங்கள் கைகளிலே நீங்கள் தைரியமாகத் தூக்கிப்

பிடித்திருக்கும் செங்கொடிகள் என்றும் நிறம் மாருத சிவப்புக் கொடி ! ஏன் அவை சிவப்பாக இருக்கின்றன ? அது முதலில் வெள்ளைக் கொடிதான். சுரண்டுகின்ற முதலாளி வர்க்கம், தொழிலாளிகள் தமது நியாயமான கோரிக்கைகளைக் கேட்கின்றபோது, அது தனது அடக்குமுறைக் கருவிகளான போலீஸ், இராணுவம் என்பவற்றைக் கொண்டு ஈன இரக்கமின்றி சுட்டுக் கொன்றது. கொன்றுகொண்டே இருக்கின்றது.

"இப்பவும் அதுதான் செய்யிருங்க !"

சின்னக்கலப்பன் இருந்துகொண்டே கத்தினன். அவனைக் கண்டு இராகவன் வீரமுத்து ஆகியோர் மிகவும் சந்தோஷமடைந்தார்கள்.

அப்படி சிந்தி உழைக்கும் மக்களின் இரத்தம் தோய்ந்து சிவப்பாகிய கொடிகள்தான் இந்தக் கொடிகள். இந்தச் செங்கொடியைக் கண்டதும் எங்கும் எந்நாட்டிலும் மூலை முடுக்குகளெல்லாம் முதலாளி வர்க்கம் கலங்குகின்றது. அந்தக் கொடியை தொழிலாளர்கள் உயர்த்தா வண்ணம் அதனுலான வேலைகளை எல்லாம் செய்கிறது. விஷயம் புரியாத தொழிலாளர்களிடமும், விவசாயிகளிடமும் தன் ஜனநாயகப் போர்வையில் சென்று செங்கொடியைத் தூக்குகின்றவர்கள் பயங்கர வாதிகள், கம்யூனிஸ்டுகள். எங்கும் பயங்கர வாதிகளே ! புரட்சிக்காரர்களே என்றெல்லாம் பயம் காட்டுகிறது.

ஏன் இந்த சுரண்டுகின்ற முதலாளி வர்க்கம் எதிர்க்கின்றது ?

இது சுரண்டுகின்ற முதலாளி வர்க்கத்திற்கும் நிலப்பிரபுக்களுக்கும் எதிராக உயர்த்தப்படுகின்ற செங்கொடி ! அதனுல்தான் அது எதிர்க்கின்றது. அவர்களை எதிர்ப்பது நியாயமானது. அவர்களை அழிக்கத் தூக்கிப் பிடிக்கின்ற கொடியை அவர்கள் எதிர்க்காமல் யார் எதிர்ப்பது ?

ஆம், நாங்கள் பயங்கரவாதிகள்தான். யாருக்கு நாங்கள் பயங்கர வாதிகள்? தொழிலாளி விவசாயி மக்களுக்கா ? இந்தச் செங்கொடியைத் தூக்கிப் பிடிக்கின்ற தொழிலாளி

விவசாயிகளைத்தானே பயங்கர வாதிகள் என்று கூறுகின்றார்கள்?

ஆகவே தொழிலாள விவசாயிகளே நீங்கள் யாருக்குப் பயங்கர வாதிகள்? நிச்சயமாக உங்களை அநீதியாகச் சுரண்டுகின்ற முதலாளி வர்க்கத்திற்கும் நிலப் பிரபுக்கள் வர்க்கத்திற்கும்தான் நீங்கள் பயங்கர வாதிகள். நீங்கள் உங்கள் எதிரிகளுக்கு பயங்கரவாதிகளாக இருக்காவிட்டால் உங்களை அநீதியை எதிர்க்கச் சக்தியற்ற கோழைகள் என்றே கூறவேண்டும். நீங்கள் கோழைகளா?

நான் சொல்லுகிறேன். சுரண்டுகின்ற முதலாளி வர்க்கத்தையும் இந்நாட்டில் இருந்து ஒழித்துக் கட்டும்வரை தொழிலாளி வர்க்கமும் விவசாயி மக்களும் செங்கொடியை உயர்த்திப் பிடித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

தோட்டம் வைத்திருக்கின்ற வெள்ளைக்காரர்கள் யார்? அந்நிய முதலாளிகள். அவர்களை எதிர்த்துக் கலைப்பதற்கு செங்கொடியின்கீழ் ஒன்றுபட வேண்டும்.

முதலில் நாம் நமது நாட்டைப் பிடித்திருக்கின்ற பயங்கரச் சனியனை வெள்ளையனை கலைப்போம். கலைத்துவிட்டு இந்நாட்டுத் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில், தொழிலாளி விவசாயி ஐக்கியத்தின் அடிப்படையில் ஒரு புதிய சமுதாயத்தை சிருஷ்டிப்போம். சுரண்டலற்ற மக்களுக்கு உண்மையான சுதந்திரம்; ஜனநாயகம் அளிக்கின்ற சோஸலிச சமுதாயத்தை உண்டாக்குவோம்.

தொழிலாளர்களே! விவசாயிகளே! மக்களே! அதை எப்படி உண்டாக்குவது? பாராளுமன்றப் பாதையின் மூலமா? அப்படியென்ருல் அது இதுவரையில் நடந்து முடிந்திருக்க வேண்டும். உங்கள் வாழ்வும் வளம்பெற்றிருக்க வேண்டும். வெள்ளைக்காரன் வெளியேறி இருக்க வேண்டும். ஆனல் அவை ஏன் நடக்கவில்லை. உண்மையில் நீங்கள் பாராளுமன்றத்திற்கு அனுப்பியவர்கள் மக்கள் பிரதிநிதிகள் அல்ல. அவர்கள் முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகள். நிலப் பிரபுக்களின் பிரதிநிதிகள். அவர்களை நீங்கள் எப்படி அனுப்ப முடிந்தது? உங்கள் எதிரிகளை நீங்கள் இனங்கண்டு

கொள்ள முடியாத அளவுக்கு வாக்குரிமை மூலம் உங்களை ஏமாற்றி விட்டார்கள். நீங்கள் ஏமாந்து போனீர்கள்! இல்லையா!

மக்களே! சிந்தித்துப் பாருங்கள்! இலங்கையில் பாராளுமன்றம் அமைக்கப்பட்டு எத்தனை வருடங்கள் ஆகிவிட்டன? எத்தனை முறை நீங்கள் பிரதிநிதிகளை அனுப்பி விட்டீர்கள்? பாராளுமன்றப் பாதையை நம்பி இருபது வருடங்கள் இருந்து விட்டீர்கள். உங்கள் வாழ்க்கைப் பிரச்சனையில் ஏதாவது தீர்ந்திருக்கின்றதா? சுரண்டல் ஒழிந்து விட்டதா? துன்பங்கள் தொலைந்து விட்டனவா? உங்கள் வாழ்க்கைப் பிரச்சனைகள் குறைந்து விட்டனவா? அதிகரித்து விட்டனவா? வேலை இல்லாத் திண்டாட்டம் எவ்வளவு பூதாகாரமாக வளர்ந்து விட்டிருக்கின்றது. வாழ்க்கைச் செலவுகள் மலைக்கு மேலாக உயர்ந்து விட்டிருக்கிறதா? இல்லையா?

இருபது வருடங்கள் சென்றும் பாராளுமன்ற ஆட்சி முறையில் ஏன் மக்கள் பிரச்சனைகள் தீரவில்லை.

உண்மை இதுதான்!

அதோ பாருங்கள் சுவரில் எழுதப்பட்டிருப்பதை! பாராளுமன்றப் பாதை சுரண்டல்காரர் பாதை!

சுரண்டுகின்ற சமுதாய அமைப்பு அப்படியேதான் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. பாராளுமன்றம் மக்களின் சாதனை மல்ல. நூற்றுண்டு காலமாக உலக நாடுகளை சுரண்டிக் கொள்ளை அடித்துக் கொண்டிருக்கின்ற பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளால், சுரண்டும் வர்க்கத்துக்காக புத்திசாலித் தனமாக உருவாக்கப்பட்ட சாதனம் அது. அது ஒரு பேச்சுக் கடை. அவ்வளவுதான்.

இன்று பாராளுமன்றத்தில் உள்ளவர்களைப் பாருங்கள்! பெரும்பான்மையானவர்கள் முதலாளிகளும், தோட்டச் சொந்தக்காரர்களும், பெரும் வியாபாரிகளும், நிலப் பிரபுக் களுமே!

சிங்களத் தலைவர்களும், தமிழ்த் தலைவர்களும் அந்த வர்க்கங்களைச் சேர்ந்தவர்கள்தான். அவர்கள்

அங்கு மக்களுக்காக, மக்கள் என்ற வார்த்தை பலமுறை வரும்படி பேசுவார்கள். அவை முதலாளித்துவ பிற்போக்கு திசைகளில் கொட்டை எழுத்துக்களில் வெளிவரும். அதைப் படித்த மக்கள் ஏமாந்து விடுகிறார்கள். நடைமுறையில் அப்படி நடப்பதில்லை. ஆனால் பாராளுமன்றத்தைவிட்டு இறங்கியதும் அவர்கள் சமுதாயத்தில் இரகசியமாக சென்று மக்கள் உழைப்பைச் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இதுதான் உண்மையில் நடக்கின்றது. இதைவிட வேறொன்றுமில்லை!

தொழிலாளர்களும், விவசாயிகளும் "உண்மை, உண்மை! அத்த, அத்த! என்று கரகோசமிட்டார்கள்.

"ஆகவே நான் கூறுகின்றேன். இந்த நாட்டின் மாபெரும் சக்திகளே! தொழிலாளி வர்க்கமே! விவசாயி களே! விழிப்படைவோம். நாம் எமது பாதையில் செல் வோம்!

"இந்நாடு எங்களுடையது. இந்தச் சமுதாயம் எங்க ளுடையது. இந்த உலகம் எங்களுடையது. நாங்கள் பேசா விட்டால் யார் பேசுவார்கள்? நாங்கள் இயங்காவிட்டால் யார் இயங்குவார்கள்?"

எனவே எமது எதிரிகள் சொந்தங் கொண்டாடும் எமது நாட்டை எங்களுடையதாக்க, எமது உலகத்தை எங்க ளுடையதாக்க கலகம் செய்யுங்கள். புரட்சி செய்யுங்கள்! நாம் நமது சொத்துக்களுக்காக கலகம் செய்வது நீதியே! புரட்சி செய்வது தவிர்க்க முடியாதது.

"உலக மக்களே துணிவு கொள்வீர். போரிடத்துணிவீர். கஷ்டங்களைத் துச்சம் செய்வீர். அலைக்குமேல் அலையாக முன்னேறுவீர்; அப்பொழுது முழு உலகமும் மக்களுக்குச் சொந்தமாகும். எல்லாவித பைசாசங்களும் அழிக்கப்படும்" என்று கூறிக்கொண்டு என் பேச்சை முடிக்கிறேன். தொழி லாளி விவசாயி ஐக்கியம் ஓங்குக!"

ஜினதாசா தன் பேச்சை முடித்தார். புஞ்சிபண்டா பரவசப்பட்டு ஓடிச்சென்று அவரைக் கட்டிப்பிடித்து "தொழிலாளி விவசாயி ஐக்கியம் ஓங்குக" என்று தனது

பலம் முழுவதையும் சேர்த்து கத்தினுன். கூட்டத்தில் இருந்தவர்களும் கைகளே உயர்த்தி சேர்ந்து கத்தினுர்கள். கரகோசம் இரைந்து கொட்டிற்று. மீண்டும் மீண்டும் கோச மிட்டார்கள்.

அவருடைய மெல்லிய உடலில் இருந்து வியர்வை சொட்ட மேடைவிட்டு இறங்கினுர். கூட்டம் முடிந்தது என்று கூறியதும் தொழிலாளர்களும், விவசாயிகளும் என்று மில்லாத வீராப்பு கொண்ட புரட்சிகர உணர்வு பெற்ற வராய் கோசங்கள் இட்டுக் கலேந்து சென்றனர். அவர்கள் உள்ளங்கள் ஒரு விவரிக்க முடியாத துணிகரமானதுமான உணர்ச்சி அலேகளில் மோதுண்டு இருந்தன. ஜினதாசா அவர்கள் பேசியவைகள் இருதய நரம்புகளே சுண்டிக் கொண்டு அடிக்கடி மேலெழுந்தவண்ணமிருந்தன.

இராகவன், வீரமுத்து, புஞ்சிபண்டா முதலியோர் பிரதி நிதிகளேச் சந்திப்பதற்காக அவர்களேச் சூழ்ந்து கொண் டனர். சின்னக்கலப்பன் ஒரே யோசனேயோடு லயத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தான். அவன் இருதயம் பூரிப் படைந்து நரம்புகள் இளமை கொண்டிருந்தன.

## 11

அடுத்த நாளேக் காலேச் சாப்பாட்டிற்காக பாண் வாங் குவதற்கு கடைத்தெருவுக்கு வந்தான் சின்னக் கலப்பன்.

இருட்டு நேரம். திடீரென வானம் இருண்டு கனத்த மழை பெய்து கொண்டிருந்தது.

அவன் கையில் குடையை எடுத்துவரவில்லே. புஞ்சிக் கிரா கடையில் பாணே வாங்கிக்கொண்டு, புஞ்சிக்கிரா கடைக்கு அடுத்த கடை ஓரத்தில் ஒதுங்கி நின்ருன். அக் கடை பூட்டப்பட்டிருந்தது. அவன் உருவத்தில் ஒரு செய லற்ற சோம்பல் மேவி இருந்தது. மனங்கொண்ட யோசனே யில் முகவுணர்ச்சிகள் அசையவில்லே.

'பக்டரி'க்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள சிறிய நீர்வீழ்ச்சி மழையின் உமை இரைச்சலை விழுங்கிப் பிரலாபித்துக் கொண்டிருந்தது.

அன்று அவன் பேசிக்கொண்டது மிகக் குறைவு. எந்த நாளும் அவன் பல பிரச்சினைகளைத் தொட்டுப் பேசிக் கொண்டிருப்பான். அவனிடம் பேசும்போது பேசுபவர் களுக்கு தம்மையறியாத தெம்பும் உஷாரும் உண்டாகும். காலையிலிருந்து வீட்டிலும் சரி, தேயிலை மலையிலும் சரி, அவனுகப் பேச்சுக் கொடுக்கவில்லை. ஒரு தொழிலாளியுட னும் ஒரு வார்த்தையும் விரும்பிப் பேசவில்லை. சுருக்கம் விழுந்த அவனுடைய முகத்தில் மனப்போரின் தாக்கம் கரிக்கோடுகளைத் தாக்கமாகக் கீறிக் கொண்டிருந்தது.

வெளியில் அவன் சோர்வுடன் காணப்பட்டாலும், உண்மையில் அவன் அதற்கு மாருன மனநிலைதான் கொண் டிருந்தான். அந்தக் கூட்டத்தின் பிறகும் தொழிற்சங்கப் பிரதிநிதி ஜினதாசா பேசியவற்றை மனதில் கிரகித்துக் கொண்ட பிறகும் அவனிடம் இயற்கையாக இருந்த துணி வும் தைரியமும் மூன்று மடங்காகி விட்டிருந்தன.

ஆனுல் அவனை வெளியுருவில் சோர்வடைந்தவனுகக் காட்டும் அவனின் யோசனை, தன் மகனைப் பற்றியதுதான். இரவு நீண்ட நேரம் ஒரு மாதிரி மௌனமாக இருந்த வீர முத்து இன்று காலை வேலைக்குப் போகும்போது தனக்கு கல்யாணம் வேண்டாமென்று சினத்துடன் கூறிவிட்டு சென்று விட்டான். தாய் அவனை மாமி வீட்டுக்கு போய் விட்டு வரும்படி கூறியதற்குத்தான் அவன் அப்படிக் கூறி னுன். அவன் இப்பொழுது தோட்டத்தில் வாலிபர் சங்கம், மாதர் சங்கம் என்பன அமைப்பதில் இராகவன், புஞ்சி பண்டா, அண்ணுமலை ஆட்களுடன் சேர்ந்து தீவிரமாக ஈடுபட்டிருந்தான்.

அவன் கூறியது சின்னக்கலப்பனின் மனத்தைத் தின்னு கிறது. மகனுக்கு கலியாணம் நடக்கவிருக்கின்றது. அவன் தனிக் காம்பராவில் தனியாக குடித்தனம் நடத்தவேண்டு மென்று இதய பூர்வமான ஆசையுடன் இருந்தவனுக்கு

அவன் சொன்னது பெரும் மனச் சங்கடத்தை கொடுக்கத் தான் செய்தது. தனிக் காம்பரா பெற்றுத்தான் அவன் கலியாணத்தைச் செய்து முடிக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்தினுல் பலரின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது பாக்கு மாற்றிய பிறகு,ஒருவருடம் பின் போட்டுவிட்டான். அவனது தங்கை ஒரு பக்கத்தால் அவனைக் காணும்போ தெல்லாம் பிராணனை வாங்கிக் கொண்டிருந்தாள்.

கடைசியில் தொழிற்சங்கமூலம் காம்பரா பெற எடுத்த முயற்சியும் வெற்றியளிக்காமல் போய்விட்டது. ஆனுல் அதனுல் சின்னக்கலப்பன் சோர்வடையவில்லை. அதன் பிறகு யோசனையின் ஆழம் கூடிக்கொண்டது.

அவனுக்கு நெடிய மூச்சு வெளிவந்தது.

வீரமுத்து கல்யாணத்திஞல் வெறுப்புக் கொண்டு ஞானிப்போக்கில் அப்படிக் கூறவில்லை. அவன் விரக்தி அடையவுமில்லை. சிறிது தன்னளவில் சிந்திக்கத் தெரிந் தவன். வாழ்க்கையின் நெரிசலால் அனுபவம் பெற்றவன். அவன் சுதந்திரமாக தன் மனைவியோடு படுத்துறங்குவதற்கு நெருக்கடியில்லாத ஒதுக்கிடம் இல்லை யென்ற ஒரே கார ணத்திற்காகத்தான் கலியாணம் என்றதும் அப்படியெல் லாம் சினந்து கொள்கிருன் என்பது அவனுக்கு வெளிச்ச மான உண்மையாக இருந்தமையால் உள்ளம் ஒரே நிலையில் இல்லை. அவனை மீறி மீண்டும் ஒரு மூர்ச்சை உயர்த்தி தாழ்த்திற்று.

பாண் பார்சலைக் கையில் வைத்து இடது கையை மார் பின்மேல் குறுக்காகப் போட்ட வண்ணம் கடையிஞேரத் தில் சுருண்டு கிடக்கும் நாயைப் பார்த்துக் கொண்டிருந் தான்.

மழை இன்னும் விடவில்லை. தூவானம் மெல்லிய குளிர் காற்றுடன் சிதறி வீசிற்று.

இலேசில் ஒரு முடிவுகாண முடியாமையால் அந்தரித்த அவன் மனம் கடந்துபோன வாழ்க்கையில் தத்தி நகர்ந்து கொண்டிருந்தது.

அப்படி நகர்கையில், தான் திருமணம் செய்துகொண்ட ஆரம்ப நாட்களில் பட்ட அனுதரவான ஏக்கங்கள், தனிமையான மனத்தை தகித்தெடுக்கும் நெருக்கடிகள், வெளியில் சொல்ல முடியாத அவலங்கள் என்பன தன் மகனுக்கும் நேர்ந்துவிடக்கூடாது என்ற அவனுடைய தூய ஆசை மேலும் மேலும் உறுதிப்பட்டுக் கொண்டிருந்தது.

அவனுடைய காலத்தில் தேயிலைத் தோட்டங்கள் இன்றிருப்பதிலும் கடுமையாக இருந்தது. தோட்டத் தொழிலாளர்கள் நிஜ அடிமைகள். அவர்களுடைய வாழ்க்கையின் சகல பகுதிகளையும் தீர்மானிக்கும் சர்வேசுவரனாக தோட்டத்துரை இருந்தான். எதையும் வாய்திறந்து கேட்க முடியாது. சவுக்கைக் கையில் வைத்து பயமுறுத்தி அடித்து உதைத்து வேலை வாங்கிய காலம். தொழிற்சங்கம் கிடையாது. துரையின் அனுமதியின்றி தோட்டத்துள் காலடி வைக்கும் எவனும் காலுக்குக் கீழ் சுட்டு வீழ்த்தப்படுவான். தோட்டத்துரை விரும்பிய பெண்களை அவன் அனுபவித்தே தீருவான். அதற்கு மறுபேச்சில்லை. அப்படியான ஒரு அடிமைச் சூழ்நிலையில் சின்னக்கலப்பன் ஆருயியைக் கைப்பிடித்தான். இன்றிருக்கும் அதே காம்பராவில்தான், தன் முதல் இரவுகளைக் கழித்தான். அன்று அந்தக் காம்பரா சுகாதார வீனமாக, இன்றைய மாட்டுக் கொட்டகையிலும் தரக்குறைவாக இருந்தது. அங்குதான் அவனுடைய தகப்பனின் பெரிய குடும்பமே நுழைந்துகிடந்தது. அந்த ரம்மியமான வாழ்வின் பகுதி, உடலுணர்வின் கொந்தளிப்புக் காலம். அந்நாட்களில் இரவில் தம் இச்சைகளைத் தீர்த்துக் கொள்ள முனையும்போது தகப்பன் தன்பாட்டில் இருமுவான். உடனே உணர்ச்சிகள் பீதிகொள்ளும். நெஞ்சு இடிக்கும். சில வேளையில் தட்டுப்பட்டு மற்றவர்கள் அருளுவார்கள். எதையும் பேசிக்கொள்ள முடியாது. எப்படி முடியும்? கைகால்கள் பக்கத்தில் படுத்திருப்பவர்கள் மேற்பட்டால் 'ஆரு' என்று கேட்டுத்தொல்லைப் படுத்துவார்கள். ஒருநாள் நடு இரவில் இந்நெருக்கடி விவகாரங்களை விலக்க தனிமையை விரும்பினான். மிக ஆவலுடன் ஆருயியை

இரகசியமாக எழுப்பிக்கொண்டு கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கும் தேர்க்கொட்டகைக்குப் போய் அங்கு பயமின்றி இன்பமாக மனைவியுடன் பேசி சுகமாக இருக்கும்போது, சலம் கழிக்க வந்த கோயில் பூசாரி ஆளைத்தெரியாமல் கள்ள னென்று கத்தி கலாட்டா பண்ணிவிட்டான். சூடேற்றும் இந்நினைவுடன், இன்னும் லயங்களில் நடக்கும் தவிர்க்க முடியாத விபரீத சம்பவங்களும் அடுக்காகுழைந்து வந்து மனதில் கொதிப்பை ஏற்றி, மலைச்சரிவில் புரளும் கற்களைப் போல் இருதயப் பரப்பைத் தாக்கிப்புரண்டு கொண் டிருந்தன.

நெஞ்சு உயர்ந்து தாழ காது இடுக்கில் செருகி இருந்த பீடியை எடுத்து பற்றவைத்துக் கொண்டு தலையை நிமிர்த்தி புகையை மேலே விட்டான்.

"என்ன சின்னக்கலப்பா. நீ சுகமாய் இருக்கிறியா?"

"ஏதோ உசிரோட இருக்கிறோமய்யா உங்கபுண்ணி யத்திலே!"

சின்னக்கலப்பன் வயதுக்குமூத்தவனென்றாலும், தோட்ட உத்தியோகத்தர் வழக்கப்படி டீ மேக்கர் பாலசிங்கம் சுகம் விசாரித்து விட்டுச் சென்றார். அவர் ஒரு யாழ்ப்பாணத் தவர். அவருக்குப் பின்னால் இரண்டுபேர் அவர் வாங்கிய சாமான்களைத் தூக்கிக் கொண்டு சென்றார்கள். 'பக்டறி' யில் வேலை செய்வதால் கூப்பிட்ட நேரம் எல்லாம் தொண்டு செய்து கொடுக்க வெண்டும். போன டீமேக்கர் திரும்பி வந்து "சின்னக்கலப்பா எனக்கொரு பொடியன் அல்லது பொட்டையொண்டு புடிச்சுத்தாறியா. யாழ்ப்பாணத்துக் கனுப்ப. ஒரு வேலைக்காரப் புள்ளை வேணுமின்னு சின் னம்மா ஒரே தொல்லை." என்று கேட்டார்.

"ஐயா நமக்கு முடியாது. அது நமக்கு தொல்ல. இவென் சாஸ்திரி சரவணத்துக்கிட்ட கேளுங்க. அவன் தான் இந்தவேல நல்லாச் செய்வான்."

"அப்படியா!" டீமேக்கர் திரும்பிப் போனார். அவருக்கு இவைகள் தான் தொல்லைகள்.

பெருமழை ஓய்ந்து தூவானம் தொடர்ந்து எங்கும் நனைத்துக் கொண்டிருந்தது. புகைக்குண்டு வெடித்ததைப் போல் மழைப்புகார் சகல இடங்களிலும் கவிந்து பரவிக் கொண்டது.

''நீங்க என்ன நெடுநேரமா இதிலே நிக்கிரீங்க?''

பெரிய கிளாக்கர் வீட்டுக்குப் போய் வந்த அருணா கேட்டார். சின்னக்கலப்பன் அப்போதுதான் அவரைக் கவனித்தான்.

''ஆமாங்கையா மழையாயிருக்கு?''

''உங்க கூட்டம் பெரும் வெற்றி?''

''ஆமா நல்ல சிறப்பா நடந்திடுச்சி!''

''அதுதான் வழி தொழிலாளர்களுக்கு சரியான வழி காட்டக் கூடியது செங்கொடிதான். நான் வர்றன்.''

''சரியுங்க!''

சில வினாடிகள் அருணா போவதைப் பார்த்துக் கொண்டிருந்த அவன் லயத்துக்குப் போக காலடி எடுத்து வைத்தான்.

''பசிக்குதையா!''

அந்த ஈனஸ்வரமான குரல் வந்ததிசையை திகைப்போடு திரும்பிப் பார்த்தான். மூடப்பட்டிருக்கும் ஒரு கடையோரத்தில் காளி, ஒரு கம்பளித்துண்டால் முதுகை மூடி ஒதுங்கி பெலனற்றுக் கிடந்தான்.

காளியை சின்னக்கலப்பன் அறிவான். அவன் நெஞ்சம் வாஞ்சையால் துணுக்குற்று நடுங்கியது.

காளி அதே தோட்டத்தில் பதினைந்து வருடங்களுக்கு மேல் உழைத்தவன். ஒண்டிக்கட்டை. தன்னை வேலைக் காட்டிலே மிகவும் கேவலமாகத் திட்டிய கங்காணியை ஆத்திரத்தில் கை ஓங்கி அடித்து விட்டான், என்ற காரணத்திற்காக விசாரணை இன்றி உடனடியாக பற்றுச் சீட்டுக் கொடுத்து தோட்ட நிர்வாகத்தால் விரட்டப்பட்டான். நம்பிக்கையோடு தோட்டத்திற்கு உழைத்த காளி, இன்று ஒதுங்கி தலை சாய்ப்பதற்கு ஒரு சிறு துண்டு இடமுமின்றி கடை ஓரங்களில் தெரு நாய்களோடு இரவும் பகலும்

குந்தியவாறு வயிற்று வெளிக்குள் முழங்காலை இடுக்கிக் கொண்டு கிடக்கின்றான்.

இதற்கு முன் பணிய உள்ள கடைத் தெருக்களில் ஊர்ந்து திரிந்தான்.

சின்னக்கலப்பன் உடனே தன் சிறிய மகனுக்கென வாங்கிக் கையில் வைத்திருந்த பணிஸ்சை அவனுடைய கையில் கொடுத்து விட்டு, குனிந்து அவன் முழங்காலைப் பிடித்துக் கொண்டு அவனின் முகத்தை நோட்டம் விட்டவாறு கேட்டான். ''நானறிய நீ ஒருத்தருக்கும் தீங்கு செய்யலியே? இந்த மலையிலே தானே மாடு மாதிரி ஒழைச்சே?''

அதற்கு காளியிடம் எதிரொலி இல்லை. சும்மா கிடந்தான். அவனைப் பார்த்துக் கொண்டு நிற்க சின்னக்கலப்பன் இளகிய மனசு கண் கலங்கிற்று. அனுதாப உணர்வு மனதில் எழும்ப தெருவில் ஏறி நடந்தான்.

''அக்காலத்தில் நம்ம சங்கம் இருந்திருக்கனும் காளியை தொர வெளியில் போட்டிருக்க முடியுமா?'' அவன் வாய் முணுமுணுத்தது. நாலைந்து அடிகள் எடுத்து வைத்த பின், ஏதோ நினைந்தவனாய் திரும்பி நின்று அவனை மீண்டும் பார்த்தான்.

''நன்றி கெட்ட பயலுக! முதலாளிக்கு இதயமே இல்லத்தான்.'' வெள்ளைக்காரத் தோட்ட முதலாளிகளை மனத்தில் எண்ணியவாறு வெறுப்புடன் திட்டிக் கொண்டான். சிறிது தூரத்தில் பேசாமல் நடந்தவன் உள்ளத்தில் தன் நிலையும் வீதியும் எழுந்து ''எனக்கும் இந்தக் கதிதானா?'' என்று ஒரு முறைக்குப் பல முறை அடித்துக் கொண்டது. அவன் உடனே ஆத்திரத்துடன் சொன்னான்.

''எந்த அப்பன் வந்தாலும் என்னை விரட்ட முடியாது! நாங்க தலை முறையா இந்தத் தோட்டத்திலே இருக்கிறோம்: அவன் குரலில் தூய்மையான உரிமைக் கோரிக்கை உயிர் பெற்றிருந்தது.

அவன் ஒற்றையடிப்பாதை வழியாக ஏறி மலையில் லயத்துக்கு வந்தான். சமைத்துக் கொண்டிருந்த பொட்டுவிடம் பாண் பார்சலைக் கொடுத்து உள்ளே நுழைந்தான்.

''சுருட்டு வாங்கினீங்களா?'' என ஆருயி கேட்டாள்.

''ஆமா!''

குப்பி விளக்கைச் சுற்றி பையன்கள் இருந்துகொண்டு நவமணி வாசகம் படித்தார்கள். ''பொறுங்கடா'' என்று அவர்களிடம் கூறிவிட்டு விளக்கைத் தூக்கிக்கொண்டு வெளியில் வந்தான். காம்பராவுக்கு முன்னுல் உள்ள அந்த துண்டு நிலத்தை நாலு பக்கமும் நன்ருகப் பார்த்தான். பின்பு ஓரிடத்தில் நின்று வெகு நேரமாக பிரசவ வேதனையில் வயிறு நோகும் கர்ப்பிணி தனக்கு முன்னுல் நிற்கும் மருத்து விச்சியை நோக்குவது போல் அந்நிலத்தைப் பார்த்துக் கொண்டு நின்ருன்.

''என்னய்யா அடிக்கடி அங்கிட்டுப் பார்க்கிறே?''

அவள் நினைவு வந்த நேரமெல்லாம் அந்த நிலத்தில் ஏதோ பார்ப்பதை அவதானித்த நட்சத்திரம் ஸ்தோப்பில் இருந்து கொண்டே கேட்டாள்.

விளக்கைச் சுற்றி இருந்த பயலுகள் அவனுக்குப் பின்னுல் தொடர்ந்து வந்து அவனுக்குப் பக்கத்தில் கைக்கெட்டியவாறு நின்றனர். ஒன்றும் புரியாமல் தகப்பனின் முகத்தையும் நிலத்தையும் மாறிமாறி நோக்கினுர்கள். அவன் விளக்கை பயலுகளிடம் கொடுத்துவிட்டு அதிலேயே நின்ருன். அப்பொழுது வீரமுத்து 'பக்கடரி'யிலிந்து வந்து கொண்டிருந்தான். அவன்கிட்டவாக வந்து விட்டான். அவன் கையில் நோட்டீஸ்களும், புத்தகங்களும் இருந்தன. வரும் வழியில் மாஸ்டரின் அறைக்குப் போய் விட்டு வந்திருந்தான்.

''டேய் வீரமுத்து!''

''ம்''

''நாளைக்கு நீ நமுன குலவுக்கு போயிட்டுவா''

''என்ன விஷயம்''

''தங்கச்சி வரச் சொன்னுள்; போயிட்டு வா!''

''நான் போகல்லே!''

''நான் சொல்றேன் போயிட்டு வா; நான் சொன்ன மாதிரி கலியாணத்தை நடத்திக் காட்டுறேன். இந்த முறை பாரு!''

அவன் தலையை மேலும் கீழும் ஆட்டிக் கொண்டான்.

"நீ வாயை மூடுரு."

வீரமுத்து உள்ளே போய்விட்டான். சின்னக்கலப்பன் கோபத்தால் சிறிது கலவர மடைந்த நிலையில் இருந்தான். அந்த நிசப்தமான இருளின் ஊடாக மலைகளைச் சுற்றி பார்த்தான். அந்த இருளில் லயங்கள் ஒவ்வொன்றும் காட்டுப் பகுதியில் தனித்து நிற்கும் ஒரு பிராயாணிகள் நிறைந்த சிறிய புகையிரதம் போலக் காட்சி அளித்துக் கொண்டிருந்தன.

## 12

சின்னக்கலப்பன், வீரமுத்துவை தங்கை வீட்டுக்கு போய் விட்டு வரும்படி கூறி மூன்று நாட்களாகி விட்டன. வீரமுத்து இன்று தான் போவதற்கு முடிவு செய்திருந் தான். ஒரு மாதத்திற்கு மேல் அவன் ஜானகியைப் பார்க் கப் போகாததால் அவளும், அவனை வருமாறு கடிதம் எழு திக் கொண்டிருந்தாள். வீரமுத்துவுக்கு தன் குடும்பப் பிரச்சனைகள் முக்கியமானதாக தெரியவில்லை. அவன் சங்க நடவடிக்கைகளிலும், தொழிலாளிவர்க்கம் அரசியல் உணர்வு பெறவேண்டும் என்பதிலும்தான் கூடிய விதமாய் அவன் மனம் சென்று கொண்டிருந்தது. இப்பொழுது அவன், தொழிலாளி வர்க்கம் விடுதலை பெற வேண்டுமென்று யோசிப்பதில் அதிக நேரத்தை செலவிட்டான். சகல தொல்லைகளும், துன்பங்களும் ஒழிய வேண்டுமானல் சமு தாயத்தை மாற்றியமைத்தாகணும்; தொழிலாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்திற்கு வரவேண்டும் என்றும், தொழிலாளி வர்க்கம் தனது விடுதலையை போர்க்களத்தில் தான் பெற வேண்டுமென்றும் மாஸ்டர் அடிக்கடி உறுதியாக கூறும் கருத்துக்கள் அவனுடைய மனதின் அடிவாரத்தில் கருக் கூட்டிக் கொண்டிருந்தது.

நேற்று அவன் பதுளைக்குப் போனபோது, தொழிற் சங்கப் பிரதிநிதி இராமநாதன் நமுன குல பகுதியில்

கொஞ்சம் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று கூறி யிருந்தார். அதை நினைவில் வைத்துக்கொண்டு பதுளைக்கு வந்து, சங்க காரியாலயத்தில் நோட்டீஸ் கட்டுக்களை எடுத் துக் கொண்டு பஸ் ஏறி நமுன குலவுக்கு வந்தான். சின்னக் கலப்பனின் தங்கையாட்கள் தனக்கும்பர அப்பர்டிவிஷனில் இருக்கிறார்கள். மூன்று மைல்கள் மலை உச்சியில் ஏறி நடந்து வந்து, அவர்களின் லயத்தை அடையும் போது அவன் சோர்வடைந்திருந்தான். அப்போது நான்கு மணி; எல்லோரும் மலையில் வேலை செய்துகொண்டு நின்றார்கள். ஜானகியாட்கள் இன்னும் லயத்துக்கு வரவில்லை. காம்பரா பூட்டிக் கிடந்தது. அவன் காம்பரா வாசலில் முழங்கால் களை, இரு கைகளாலும் அணைத்தவாறு குந்திக்கொண்டிருந் தான்.

அவனது உள்ளத்து யோசனைகள் பசறை டவுணைச் சுற் றிக்கொண் டிருந்தது. பஸ்ஸில் வரும்போது அந்த டவுணில் மாடத்தியையும், கறுப்பையாவின் மகன் பொன்னம்பலத் தையும் கண்டான். மாடத்தி மூன்டு வருடங்களுக்கு முன் குயின்ஸ் தோட்டத்தில் இருந்து பற்றுச் சீட்டுக் கொடுத்து விரட்டப்பட்டாள். கணவன் தோட்ட டாக்குத்தர் வீட்டில் களவெடுத்து விட்டான், என்று துரை இருவரை யும் வெளியில் விரட்டினான். அவன் இரண்டு பெண் குழந்தைகளுடன் அலைந்து திரிகின்றாள். அவளை எல்லோரும் ஒரு வேசை என்று டவுனில் கூறினார்கள். கறுப்பையா தன் மகன் நல்லாகப் படிப்பான் எப்படியும்சரி படிக்கப் போட வேணும் என்று கூறிக் கொண்டிருந்தான். இப்போது கத்திக் கத்தி பேப்பர் விற்றுக் கொண்டிருந்தான். அவ னோடு இன்னும் நாலைந்து பையன்கள். இந்நிலையில் சிங்கள விவசாயிகளையும் அவன் பல இடங்களில் கண்டிருக்கிறான். வர்க்க அனுதாபத்தோடு அவர்களையிட்டு எண்ணிய அவ னின் உணர்வுகள் கெம்பிக் கொண்டிருந்தன. அவர்களுக் குள் அவன் தன்னைக் கண்டான்.

"இப்பிடி எத்தனை கேசுகள்; இதெல்லாம் இந்த முதலா ளித்துவ சமூக அமைப்பின் கொடுமைகள் தானே! இந்த

அசிங்கமான சமுதாய அமைப்பை நாம மாற்றியமைக்க னும்!' என்று சத்தமற்று உதடுகள் அசைய பீடியை எடுத்து பற்ற வைத்தவாறு மலைச்சரிவுகளை பார்த்துக் கொண் டான்.

"மச்சான்!"

"ஜானகியின் தம்பி செல்லக்கண்ணு மலைச்சரிவில் தேயிலைச் செடிகளுக் கூட பாய்ந்து வந்தான்.

"எப்பவந்தீங்கா?"

"இப்பதாண்டா நீ எங்க போயிட்டுவர்றே?"

"பெரிய கிளாக்கர் ஆட்டுமாட்டுக்கு புல்லறுத்து கொடுத்திட்டு வர்றேன்."

"ம்...சரி காம்பராவைத் திற" என்று வெறுப்போடு கூறினான்.

அவன் தன்னிடமுள்ள திறப்பால் கதவைத்திறந்தான். உள்ளே சென்ற வீரமுத்து "இருட்டாயிருக்க விளக்கை ஏத்து" என்றான். அவன் குப்பி விளக்கை அவனுக்குப் பக்கத்தில் கொண்டு வந்து வைத்தான்.

"டேய் நீ ஒரு வேலை செய்யிறியா?"

"என்னது? ஓ!"

"இந்த நோட்டீசில் கொஞ்சம் தர்றன் தொழிலாளர் வேலை விட்டு வரும்போது குடுத்திர்றியா?"

"ஓ! இதென்ன நோட்டீசு மச்சான்!"

"இது நம்ம சங்க நோட்டீஸ்: தொழிலாளர் அறிய வேண்டிய விஷயம் இதில் ரொம்ப இருக்க."

வீரமுத்து கட்டை அவிழ்த்து, கொஞ்ச நோட்டீஸ்களை எடுத்துக் கொடுத்தான். அவன் கொண்டோடினான்.

கொஞ்ச நேரத்தில் கண்ணமாவும் ஜானகியும், தங்கை யுமாக கொழுந்துக் கூடைகள் முதுகில் தொங்க வந்து சேர்ந்தார்கள். அவன் கடிதம் எழுதாமல் வந்தது, ஜான கிக்கு ஆச்சரியமாகவும், சந்தோஷமாகவும் இருந்தது.

"நா, அண்ணனுக்குக் கடுதாசி எழுதிப் போட்டனே?" என்றாள் கண்ணம்மா.

"அதுதான் என்னை அனுப்பி வைச்சாரு!" என்றான் வீரமுத்து.

ஜானகியும், தங்கைமாரும் அவசரமாகி ஆற்றுக்கு குளிக்க ஓட்டினார்கள். கண்ணம்மா அவசர அவசரமாக சமைக்கத் தொடங்கினாள்.

அவள் அழாக்குறையாக தமது நிலைமைகளைக் கூறினாள். வீரமுத்துவும் தங்கள் நிலமைகளை எடுத்துச் சொன்னான். "எப்படி யெண்ணாதும் அடுத்து வர்ற நல்ல நாளில கலியாணத்தை முடிச்சுப் போடனும். எத்தனை முறைதான் பின் போடறது. அவமானமாயிருக்கு!" என்றாள் கண்ணம்மா.

"இந்த முறை நிச்சயமா நடக்கு மென்னுதான் ஐயா சொன்னாரு." சிறிது பொழுது பேசாமல் இருந்துவிட்டு மெதுவாகச் சொன்னான் வீரமுத்து.

"மச்சான் குடுத்திட்டேன்; பூராவும்!"

செல்லக்கண்ணு வாய்கிழிய சிரித்துக் கொண்டு உள்ளே வந்தான்.

"நல்லது, என்ன சொன்னாங்க?"

"ஒன்னும் சொல்லல்ல: வாங்கிட்டுப் போறாங்க!"

"சரி இப்படி வந்து உட்காரு"

வீரமுத்துவுக்கு சந்தோஷமாக இருந்தது.

இரவுச் சாப்பாடு ஏழு மணிக்கு சாப்பிட்டு முடிந்தார்கள். அவனுக்காக டின் மீன் வாங்கி சமைத்தார்கள். வீரமுத்து ஸ்தோபில் பீடியைக் குடித்த வண்ணம் கால் நீட்டிக் கொண்டிருந்தான். பக்கத்தில் ஜானகி முழுகிய கூந்தலை தோளில் கலைத்துவிட்டு நெற்றியில் குங்குமப் பொட்டும் இட்டுக்கொண்டு, அவனைப் பார்த்தவாறு இருந்தாள். ஜானகியின் தங்கைமார் உள்ளே தூங்கப்போய் விட்டார்கள். அவனுக்கு ஜானகியுடன் இன்று தனியாகப் பேசுவதற்கு ஆசையாக இருந்தது. அங்கிருந்து பேச முடியாது. வெளியில் பௌர்ணமி நிலவு காய்ந்து கொண்டிருந்தது. குளிரும் இல்லை. அதை அவன் கவனித்தான். அவன் ஜானகியிடம் வெளியில் சென்று விட்டு வருவோம் என்று இரகசியமாகச் சொன்னான். அவள் மெதுவாக எழுந்து வெளியில் வந்தாள். அவன் எழுந்து அவளுக்குப் பின்னால் சென்றான்.

"ஆயா, ஆத்துப்பக்கமாக சும்மா போயிட்டு வர்றம்" என்ருள் ஜானகி.

"ம். விரைசா வந்திடனும்."

தாய் உள்ளே இருந்து அவர்களைப் பார்த்துக் கொண்டு தான் இருந்தாள்.

ஜானகி கூந்தல் கலைந்து முதுகில் அசைய மெல்லமாக நடந்து போவதை வீரமுத்து சற்றுநேரம் பார்த்தான். அவள் சிவப்புச் சேலை கட்டி இயற்கையான அழகோடு இருந்தாள். வீரமுத்துவின் மனம் மனோரம்மிய உணர்வுகளால் விழித்துக் கொண்டது.

"ஜானகி நில்லு"

அவன் அவளுக்குப் பக்கமாகச் சென்ருன்.

"என்னை விட்டுட்டு எங்கபோறே!"

"என்னத்தான், உங்களுக்காகத்தானே வர்றன்!"

அவன் அவளுடைய கைவிரல்களை இலேசாகபற்றிக் கொண்டு சேர்ந்து நடந்தான்.

இருவரும் தேயிலைச் செடிகளின் ஊடாக நெளிந்து செல்லும் ஒற்றயடிப்பாதையால் சென்று சிற்ருறுவின் கரையை அடைந்தனர். அவன் ஜானகியின் கைவிரல்களை இறுகப்பற்றியிருந்தான். அவள் மெளனமாக உள்ளுணர்வுகள் சாடையாக கண் விழித்த நிலையில் நிலவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அது அடுத்தடுத்து குவிந்திருக்கும், இரு உயர் மலைகளின் இடைவெளியில், நடுவில், மேல் நோக்கி அசைவது போல இருந்தது. வெண்முகில்கள் அதைக்கடந்து நகர்ந்து கொண்டிருந்தன. அதன் பூரண ஒளியில், அங்காங்கு விழும் நீர்வீச்சிகளும், மலையின் கொழுந்து முதுகுகளும் ருது வடைந்திருந்தன.

"அங்க பாருங்க அத்தான் நிலவை!"

ஜானகி கூறிவிட்டு, அவனுடைய முகத்தை திரும்பிப் பார்த்தாள். அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவளுக்கு வெட்கமாகி விட்டது.

"என்ன அப்படிப் பாக்கிறீங்க !"

''ஜானகி நீ இன்னைக்கி நல்ல ஜோரா இருக்கிறே!'' வீரமுத்து அடிக்குரலில் கூறினன். அவன் பற்களால் கீழுதட்டைக் கடித்துப் புன்னகைத்தவாறு, அருவிக்கரையில் உள்ள ஒரு தட்டையான கல்லில் கால் நீட்டி அமர்ந்து கொண்டாள்.

''இப்படி உட்காருங்க''

அவன் உட்கார வில்லை. நின்றுகொண்டு அவளுடைய நீண்ட கருங் கூந்தல் முதுகில் நெளிந்து மினுக்கும் நளினத்தையும், அக்கூந்தலோடு மார்பகங்கள் உயர்ந்து தாழ அவள் கொண்டுள்ள குமரித்தன்மையும் சில மயிர்கள் முன்விழுந்து மூக்கின் அருவியாக சுருண்டு, சுருண்டு அசைந்து முகத்திற்கு ஏற்றும் கவர்ச்சியையும் நிலவின் கதிர்கள் அளிக்கும் பிரகாசத்தில் கண்டு ரசித்துக் கொண்டிருந்தான்.

''உட்கார மாட்டீங்க'' அவளுக்கு சிறு கோபம்.

அவன் அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தான்.

''இன்னைக்கு நான் நல்ல சந்தோசமாக இருக்கிறன்''

''ஏன்?''

''நீ நல்ல அழகாக இருக்கிறே!''

அவன் அவளின் கூந்தலைத்தான் கைவிரல்களில் அள்ளினன்.

''க்கும்''

ஜானகி தன் கைவிரல்களை பற்களால் நன்னிக் கொண்டிருந்தாள்.

அருவி சச்சரவுப்பட்டு பாய்ந்து கொண்டிருந்தது.

''போன கிழமை வருமாறு கடுதாசி எழுதியிருந்தேன். ஏன் வரல்ல?

''எனக்கு வேலை இருந்திச்சு.''

''என்ன வேலை அப்படி?''

''நம்ம சங்கவேலை வாலிப சங்க வேல, அது தானே முக்கியம்.''

''இன்னைக்கு எப்படி வந்தீங்க!''!

இந்த தோட்டத்தில் மிடில் டிவிஷனில் உள்ள தொழிலாளர்கள் நம்ம சங்கத்தில் சேர்ந்திருக்காங்க; அவர்களுக்கு

நோட்டீஸ் கொடுக்கனும். அவர்களைக் கண்டு பேசனும் அதுக்காகத்தான் முக்கியமாக வந்தேன்!

"அப்ப என்னைப் பாக்க வரல்ல"

"உன்னையுந்தான்" என்றுகூறி அவளுடைய மூக்கு நுனியில் சுட்டு விரலை வைத்து அழுத்தினான்.

"ஐயோ!"

"ஏன் நொந்து போச்சோ?"

ஜானகி ஜலதரங்க ஓசையாகச் சிரித்தாள். அவனும் சிரித்தான். கொஞ்ச நேரம் மௌனமாகப் பொழுது போனது.

"அந்த நிலாவைப் பாருங்களேன் அழகா இருக்குத்தானே?"

"நானும் அதைத்தான் பார்த்துக்கிட்டிருக்கேன். ஆனா ரசிக்க முடியல" அவன் பீடி புகைத்துக் கொண்டிருந்தான்.

"ஏனும்?"

"ஜானகி நாம கலியாணம் முடிச்சாப்புறம் ஏதோ காரணத்தைக் காட்டி தொரை பற்றுச்சீட்டு கொடுத்து வெளியில் விரட்டிப்புட்டான்னா நாம தெருவில் நின்னு இதை ரசிக்க முடியுமா?"

"முடியாது தானுங்க!"

"ஏன் முடியாது?"

"நாம வாழ இடமில்லை."

"ஆமா இந்த உலகம் நமக்கு சொந்தமில்ல. ஆனா நேர்மையாத்தான் ஒழைக்கிறம்!" அவள் ஒன்றும் பேசாமல் இருந்தாள். அந்த நினைவுகள் அவளுடைய மனதுக்கு சங்கடமாக இருந்தது.

"பாரு, நம்ம காலடிகளுக்கு கீழே ஒரு பிடி மண்ணுமில்ல. தலைக்கு மேல ஒருதுண்டு கூரையுமில்ல. நேர்மையா ஒழைக்கிற நமக்கு இந்த கதி ஏன்?" அவள் குரல் உணர்ச்சி வசப்பட்டதால் கரகரத்திருந்தது.

"அது நமக்கு ஆண்டவன் விதிச்ச விதி இவ்வளவு தானுங்க?"

''அதில்ல ஜானகி ஆண்டவன் விதிச்ச விதியல்ல, ஆள்கிறவன் விதிச்ச விதி. ஆனு எல்லாத்துக்கும் ஆண்டவனைத் தான் காட்டி விட்டிருக்கானுக. ஆனு நம்மை ஆள்கிறவர்கள் யார்? முதலாளி வர்க்கம்தான். நம்ம உழைப்பை சுரண்டும் வர்க்கம்தான்'' அவன் திரும்பி அவளுடைய முகத்தைப் பார்த்தான். அவளுக்கு வீரமுத்து கூறியவை புதிதாகவும் மனதைத் தொடக்கூடிய தாகவும் இருந்தது. ஆனல் புரியவில்லை.

''என்னமோ?''

''என்ன ஜானகி என்னமோ? நமக்கு இந்தக் கதி ஏன்? முதலாளிவர்க்கம் நம்ம ஒழைப்பைச் சுரண்டி நம்மை யெல்லாம் இந்த நிலையில் அடக்கி ஒடுக்கி வைச்சிருக்கு. அவர்க வைச்ச விதிதான் இது. இதை நாம மாற்றியமைக்க முடியும் இதே நிலையில் நாம தொடர்ந்து வாழனும் என்னு நீ ஆசைப்படுகிருயா? சொல்லு ஜானகி!''

''இல்ல''

''இந்த உலகம் உழைப்பவர்களுக்குத்தான் சொந்தமானது. நாம போராடினு நிச்சயம் நமக்கு சொந்தமாகிடும். நம்ம அடிமைத் தனமெல்லாம் நீங்கிவிடும்.

''அது முடியுமாங்க!'' அவள் உள் எழுந்த ஆசையோடு கேட்டாள்.

''நிச்சயமாக இந்த அடிமைத் தனத்தில் கிடந்து உழல்வதிலும் இந்த சமுதாயத்தை மாற்றி அமைப்பது சுலபமானது.''

வீரமுத்து பீடிப்புகை நெஞ்சிற்குள் போனதால் இருமிக் கொண்டான்.

சிற்றருவி முன்னேக்கி பாய்ந்து ஓடிக்கொண்டிருப்பதை இருவரும் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''காம்பரா கிடைக்குமா?''

அவள் அவனுடைய கவனத்தை வேறு திசைக்குத் திருப்பினுள்.

"அதுதான் நிச்சயமில்ல!"

"எப்பங்க கலியாணம்?"

"பயப்புடாதே சீக்கரத்தில் நடக்கும்."

"மாமா என்ன சொல்லிக்கிட்டிருக்காரு?"

"அடுத்த மாசத்தில் கலியாணத்தை முடிச்சுப் புடனும் என்னுதான் சொன்ஞரு!"

"மலேயில் எல்லோரும் என்னே அடிக்கடி கேட்டு தொல்லே கொடுக்கிருங்க; எனக்கு அவமானமா இருக்கு!"

"ஏன் அவர்களும் தொழிலாளிகள்தானே. நீ நிலமையைச் சொல்றதுதானே."

"எத்தினமுறை தான் சொல்லறது!"

"எதிர்காலம் நம்முடையது தான் தைரியமா இரு!"

ஜானகி யோசித்துக் கொண்டிருந்தாள். அவளேச் சந்தோஷப்படுத்த வீரமுத்து விரும்பினுன்.

"நமக்கு கலியாணம் முடிஞ்சாப்புறம் என்ன நடக்கும்?"

"என்னங்க நடக்கும்?"

"நமக்கொரு மகன் பிறப்பான். தனக்கொரு பாதை வகுக்காமல் நம்ம தலேவன் வழியிலே நடப்பான்!"

"ஆருங்க உங்க தலேவன்?"

"புரட்சிகர பாதை காட்டும் கம்யூனிஷ்ட் கட்சி. அது தான். தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் தலேவன்!"

"போங்க ஏனக்கது பிடிக்கல."

"இந்தா ஜானகி இப்ப நீ உனக்கெதிராப் பேசுருய்? இந்த அடிமை வாழ்வு வேனு மென்று சொல்ருய் அவ்வளவு தான்."

"யேனுங்க ?"

"இந்த அடிமைத்தனத்தையும். சுரண்டலேயும் எதிர்த்துதான் நம்ம கட்சிபோராடுகிறது" ஜானகி ஒன்றும் பேசலில்லே.

"உனக்கு ஒன்றும் தெரியல்ல, ஜானகி நீ அறியாமை இருளில் இருக்கிருய். நான் இனி அனுப்புற தெல்லாம் நீ படிக்கனும். சரியா ?"

“சரி”

வீரமுத்துக்கு அவள் கூறியபதில் திருப்தி ஏற்படவில்லை

“ஜானகி நாங்களும் நம்ப பிள்ளைகளும் இதே அடிமைத் தனத்தில் தொடர்ந்து வாழ்றதை நீ விரும்புறியா? நம்ம தாய் தகப்பன் போட்ட சலாமை அவர்களும் போடனுமா? அவர்கள் மனிதர்களாக வாழறதை நீ விரும்பவில்லையா?”

“இல்லைங்க : இந்த வாழ்க்கையை நான் மனசார வெறுக்கிறனுங்க”

“அப்ப நீ நம்ம கட்சி காட்டுகிற வழியில்தான வரனும். நம்மைச் சுரண்டுகிற எதிரிகள் நாம வாழ வழிவிட்டு தாங்களாவே செத்துப் போயிடுவார்களா?”

“இல்லையுங்க?”

“அவர்களை யாரு அழிக்கனும் நாமதானே? அவர்களை அழிக்காம நமக்கு வாழ்க்கையே இல்ல. புரிஞ்சுக் கொள்ளு.”

ஜானகி யோசனை கலந்த கண்களோடு அவனை ஏறிட்டுக் பார்த்தாள். அவன் அவளைக் கைகளால் அணைத்தான்

“குளிர் காத்தடிக்குது. வா போவம்”

வீரமுத்து எழுந்ததும் அவளும் எழுந்தாள்.

“எப்ப போறீங்க?”

“நாளைக்கி காலையில. மிடில் டிவிசனுக்கு போயிட்டுத் தான் போவேன்?” இருவரும் நடந்தனர்.

“நான் எங்கதூங்கிறது.”

“ஸ்தோப்பிலதான். தம்பி யோட”

“குளிர். அடிக்குமே”

“கம்பிளி தர்றன். போர்த்துக்கிட்டு தூங்குக.”

“பீடியும் முடிஞ்சுது, சரி நட.

ஜானகிமுன்னே நடக்க அவன்பின்னால் நடந்து கொண்டிருந்தாள்.

# 13

**சி**ன்னக்கலப்பன் அன்றைக்கு வேலைக்குப் போகவில்லை. அவன் வேலைக்குப் போகாமல் இருப்பது யாருக்கும் தெரி யாது. அவன் வேறு எங்கும் போகவில்லை.

அந்த லயக் காம்பராவுக்கு முன்னால் உள்ள அந்தச் சிறிய சும்மா கிடந்த நிலத்துண்டில் தன் மசனுக்கு என்று தனிக் காம்பரா—ஒரு குடிசை கட்டிக்கொண்டு நின்றான். மிகவும் கம்பீரமாக வேட்டியைத் தூக்கிக் கச்சை கட்டிக்கொண்டு தலையில் சிவப்புத் துண்டை வரிந்து சுற்றி, கையில் கவ்வாத்துக் கத்தியுடன் நிதானந் தவறாமல் நின்றான். இவ் வளவு காலமும் சின்னக்கலப்பன் என்ற ஆத்மாவில் ஒரு பகுதிதான் வெளிப்பட்டிருந்தது. இப்போது அதன் பூரண மும் உருவெடுத்து தன் சுய ரூபத்தில் நின்றது. சாமிக்கு உருவந்து விட்டதென்று கூறுவார்கள். சின்னக்கலப்பனுக் கும் ஒருவகை உருத்தான் வந்துவிட்டது. அது திடீரென கண்ணை மூடிக்கொண்டு வந்ததல்ல.

நேற்றிரவு விமுக்கனுக்கு இரகசியமாகச் சொல்லி அங்கே வரச் செய்தான். அவனும் காலையிலேயே பீடியும் புகைத்துக்கொண்டு வந்து நின்றான். சின்னக்கலப்பன் அவனையும் மலையில் புல்லு வெட்டப் போகும் தன் மகனை மாசிலானையும் அழைத்துக்கொண்டு தேயிலைத் தோட்டத் தின் அருகில் உள்ள காட்டுக்குச் சென்று மரங்கள் வெட்டிக் கொண்டு வந்தான். கூரைக்கு தகரம் இடுவதற்குப் பண மில்லை. அதற்கு மூன்று நாளைக்கு முதலே கடைத்தெருவில் உள்ள நூறு ரூபாய்க்கு இருபத்தைந்து ரூபா வட்டி வாங்கும் சின்னபாயிடம் வட்டிக்குப் பணம் வாங்கி விட்டான். அது வேட்டி முடிச்சில் தொங்கிக்கொண்டிருந்தது.

பள்ளிக்குச் செல்லாமல் மலைக்குப் புல்லறுக்கச் செல்லும் அந்த லயத்திலுள்ள சின்னப் பயலுகள் முத்துவீரன், இராம தாஸ், சிவலிங்கம் முதலியோர் 'கலப்பண்ணே' என்று அழைத்து அவனைச் சுற்றி நின்று காம்பரா கட்டுவதில் அவ னுக்கு உதவி செய்து கொண்டிருந்தனர். உதவி செய்யும்

போது தங்கள் காம்பராவின் முன்பக்கத்தையும் நோட்டம் விட்டனர். அங்கு அதைப்போல துண்டு வெளி இருக்கிறதா என்று அறிவதற்கு. தாங்களும் சின்னக்கலப்பனைப் பின்பற்றி அப்படி ஒரு குடிசை கட்டலாம் என்ற நினைப்பு.

ஒரு கிழமையில் காம்பராவைக் கட்டி முடித்துச் சீர் செய்யும் நோக்கத்துடன் சின்னக்கலப்பன் வேலை செய்து கொண்டிருந்தான்.

அவன் முகத்தை அழுத்தி இருந்த ஒரு ஊமைத்தன மான கோலம் கழுவப்பட்டுத் தெளிவாக இருந்தது. முற்று முழுதான தெளிவில்லை. அங்கு பயத்தின் காற்றுக்கூட வீச வில்லை. ஆனால் அந்த முகத்தில் படிந்துள்ள வைராக்கிய உணர்வுகளின் ஸ்திரத் தன்மையையும், அதன் நிமிர்ச்சியை யும், அவன் தன் முடிவை மாற்ற மாட்டான் உன்பதை உறுதிப்படுத்திற்று.

அவனுக்குள்ளேயே வேதனையுடன் மௌனமாகப் புரண்டு அனுதினமும் நெரித்துக்கொண்டிருந்த ஒரே ஆசை; தன் மூத்த மகன் வீரமுத்துக்கு குறித்த நாளில் திருமணம் நடந்து, அவனை மனைவியுடன் சந்தோஷமாகத் தனிக் குடித் தனம் நடத்தி, தன் இளமையின் கபடில்லாத கனவுகளை சுதந்திரமாக அனுபவிக்க வேண்டும் என்ற அந்த ஆசை நீதி கேட்டு மூச்சுக்குள் ஒதுங்கியிருந்தது. ஆனால் அது கேட்டது தோல்வியாக, இன்று வேறு வழி காண முடியாமல் நடை முறையில் தன்னுடைய உருவை எடுத்து பலாத்காரத்தில் இறங்கிவிட்டது. வேறு என்ன செய்வது?

அந்த ஆசை அவனுக்கென்று தனியான ஒரு விசேஷ மான ஆசையில்லை. அந்தச் சூழ்நிலையில், ஒவ்வொரு மனித னுக்கும் ஏற்படக்கூடிய தனி மனித உணர்ச்சிதான். மகன் என்பதால் வாஞ்சை சிறிது அதிகமாக இருக்கிறது. அவ் வளவுதான்.

இது வீரமுத்து நமுனகுலவுக்கு தன் மாமியான கண்ணம்மா வீட்டுக்குப் போய் வந்த ஒரு கிழமைக்குப்பின் நடக்கிறது. துரையுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் பல வழிகளிலும் தோல்வியடைந்தபின் சின்னக்கலப்பனுக்கு

காம்பரா கட்ட வேணுமென்ற யோசனை பூதாகாரமாக நின்றாலும், அவனால் ஒரு முடிவு எடுப்பதற்கு முடியாமலிருந் தது. ஆனால் வீரமுத்து நமுனகுலவுக்கு சென்றபோது கண்ணம்மா விரைவில் கல்யாணத்தை முடிக்கவேண்டு மென்று அவனிடமும் கண்ணீர் விட்டிருந்தாள். அதை நட்சத்திரத்திடம் கூற, அவள் தகப்பனிடம் கூறி விட்டாள். வீரமுத்துவும் ஜானகியைக் கண்டுவந்தபின் கல்யாணம் விரைவில் நடந்தால் நல்லது என்றதுபோல் காட்டிக் கொண் டான்.

அதையெல்லாம் மனதில் வாங்கிக்கொண்டிருந்த சின்னக்கலப்பனுக்கு மூன்று நாளைக்கு முதல் கண்ணம்மா எழுதிய கடிதம் பெரும் மன அங்கலாய்வைக் கொடுத்தது.

பாக்கு மாற்றி விட்டபின் ஒரு வருஷத்துக்கு மேல் கலியாணத்தைப் பின் போட்டுக் கொண்டிருப்பதும் பெரும் அவமானமாக இருக்கின்றது. இங்கு எல்லாரும் கேவலமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எம்மை ஒரு மாதிரிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அவள் கடிதத்தில் எழுதி, ''இந்த முறை கலியாணம் நடக்காவிட்டால் நான் ஆற்றில் விழுந்து சாகணும்'' என்றும் குறிப்பிட்டிருந் தாள்.

அதன்பின் அவன் நீண்ட நேரம் யோசித்துக் கொண்டி ருக்க முடியவில்லை. தலையா போகப் போவுது? என்ற எண்ணத்துடன் துணிந்து வேலையை ஆரம்பித்து விட்டான். அவனுடைய மகன் மாசிலானும்தான் மிக உற்சாகத்துடன் தகப்பனோடு வேலை செய்தான்.

கூட்டுப்புளுவைப்போல நெஞ்சுக்குள்ளே இருந்து அதைத் தின்று கொண்டிருந்த காரியம் வெளியேறிவிட்டது. அதனால் இப்பொழுது அவன் நெஞ்சும் காற்றுப்போல் பாரமற்று இருக்கிறது. ஆனால் எந்த ஒரு அநீதித்தனத்தை யும் அடித்து விழுத்தும் சக்தியுள்ள ஒரு துணிகரக் காற்று அங்கு வீசிக் கொண்டிருக்கின்றது.

நாங்கள் நிட்சயித்தது போல அடுத்த மாதம் பதினைந் தாம் திகதி வரும் முகூர்த்தத்தில் வீரமுத்துவுக்கும் ஜானகிக்

கும் திருமணம் நடக்கும். நீ பயப்படாதே! ஆகவேண்டியதைக் கவனி என்று கடுதாசி எழுதி கண்ணம்மாவுக்கு நேற்று அனுப்பி விட்டதை இன்று எண்ண ஒரு ஆறுதலாக அவனுக்கு இருந்தது.

ஆருயிக்கு மீண்டும் காய்ச்சல் பிடித்துக் கொண்டது. அவள் கட்டிலை விட்டு இறங்கி கம்பளியால் போர்த்துக் கொண்டு வாசலில் வந்திருந்து, கணவன் காம்பரா கட்டுவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. சின்னக்கலப்பன் அவளுடன் இதுபற்றிப் பேசினல்தானே. ஆனல் கணவன் குடிசை கட்டுகிருன் என்று கண்டதும் சகலத்தையும் மீறி அது நல்லது என்ற ஒரு ஆனந்தம் கண்மூடித்தனமாக உள்ளிருந்து பரவிக் கொண்டிருந்தது. என்ருலும், என்னென்ன நடக்குமோ என்ற பீதி கொண்ட ஏக்கம்தான் முகத்தில் கவிந்திருந்தது. அதனல் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடன் பொட்டுவும் சேர்ந்திருந்தாள்.

வீரமுத்துவுக்கும் நட்சத்திரத்திற்கும் இது தெரியாது.

அவர்கள் நேற்றுப்போல் இன்றைக்கும் வேலைக்குப் போய் விட்டார்கள்.

சின்னக்கலப்பன் அவர்களிடமென்ன? தொழிற்சங்கத் தலைவரிடம் கூட யோசனை கேட்கவில்லை. அவர் ஏதாவது காரணம் கூறி தடுத்து விடுவார் என்ற பயம். அவன் வருவதைப்பற்றி எதுவும் யோசிக்கவில்லை. திடீரென வேலையை ஆரம்பித்து விட்டான்.

துரைக்கு இருக்கும் அதிகாரத்தின் அளவையும் தங்களுக்குத் தோட்டத்தில் இருக்கும் உரிமையற்ற நிலைமையையும், ஆருயி யோசனையில் எடுத்துக் கொண்டதும், நெஞ்சு, ‘படக்’ என்று இடித்துக் கொண்டது. இதைக் காரணமாக்கி தற்செயலாக தோட்டத்துக்கு வெளியே விரட்டி விட்டால், அப்புறம் குந்தி இருக்கவும் இடமில்லாமல் போய்விடும் என்ற பயங்கர உண்மை மேலுக்கு வந்ததும் இருதயம் நடுங்கத் தொடங்கிற்று.

அவளுக்கு இருந்திருந்து யோசித்து தலையும் கனத்தது.

''இந்தா, நீ உம்பாட்டுக்குக் கட்டுறியே, தொரைக் கிட்டே ஒரு சொல்லு கேட்டியா ?''

''ஆமா அதுதானே ?''

பொட்டு தகப்பனின் பயத்தில் ஊமைபோல குந்திக் கொண்டிருந்தாள். தாய் கேட்டதும் ஒரு பலம் பெற்று தானும் கேட்டாள்.

வேலையில் முழுக் கவனமாக இருந்த சின்னக்கலப்பன் சிடுசிடுமுஞ்சியுடன் வெடுக்கெனத் திரும்பிப் பார்த்தான்.

''நீ சும்மா இருடி—நீ ஒன்பாட்டுக்கு சும்மா இருவே— போய்ப் படுத்துத் தூங்கு. போ.''

அவள் கணவன் குணமறிந்து, அதற்குமேல் பேசாமல் வாய் பொத்திக் கொண்டாள். அவள் உள்ளம் கடவுளை பிரார்த்து துணைக்கழைத்துக் கொண்டிருந்தது.

மாலை ஐந்து மணிக்கு மேலாகிவிட்டது. சின்னக்கலப்பன் நன்முக வேர்த்துப் போய்விட்டான். முகமும் வெயிலில் காய்ந்து இன்னும் கறுத்துச் சுருங்கிவிட்டது. உடலில் ஒரு அசதி ஏற்பட்டாலும் அவன் சோர்ந்து போகவில்லை. இப்பொழுதுதான் வேலை செய்யத் தொடங்கியவன்போல் நின்முன்.

தேயிலை மலையில் வேலைவிட்டு தொழிலாளர் ஆண்களும், பெண்களும் லயங்களை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். பெண்கள் கூடையை முதுகில் தொங்கவிட்ட வண்ணம், இரவுச் சமையலை எண்ணி கூட்டம் கூடடமாக கதை போட் டுக் கொண்டு ஓடி ஓடி வந்தார்கள். அவர்கள் கதை பெரும் பாலும் மலையில் இருந்து வீட்டுக்கு விரட்டப்பட்ட வர்களையும், தெண்டம் அடிக்கப்பட்டவர்களையும் பற்றியும் தான் இருந்தது.

அந்த லயத்தை கடந்து செல்பவர்களும் அந்த லயத்தில் உள்ளவர்களும், சின்னக்கலப்பன் கட்டும், காம்பராவை ஆச்சரியத்துடனும் விநோதமாகவும் ஒருவகைப் பயத்துட னும் பார்த்துவிட்டு, ''இது என்ன கலப்பண்ணே. இது என்ன கலப்பண்ணே, தம் பாட்டுக்கு காம்பரா கட்டுகிமுரே''

என்னும் சந்தேகமான கேள்வி மனதில் எழுந்து ஆடச் சென்று கொண்டிருந்தனர்.

‘‘அண்ணே. என்னண்ணே காம்பரா கட்டுறே?’’

அவனுடன் முன்பு கவ்வாத்து வெட்டிய கோனூர் நின்று கேட்டான்.

‘‘என்னடா மடையா, என்னத்துக்கு காம்பரா கட்டுறது? விளையாடவா? படுத்துத் தூங்கத்தான்!’’

அவன் மறு கேள்வி கேட்காமல் சிரித்துக்கொண்டே போய்விட்டான்.

நட்சத்திரம் தலையில் விறகுக் கட்டொன்றைக் காவிக் கொண்டு வந்து நின்றாள். தகப்பனின் வேலையைப் பார்த்து, அதிசயித்துப் போனாள்.

அவள் பகல் சாப்பிட வந்தபோது விசயந் தெரிந்தாலும் இப்படி நினைக்கவில்லை. துரையை நினைத்ததும் சிறு பீதி கனமாக நெஞ்சைச் சுட்டுச் கொண்டது.

‘‘ஐயோ இது என்னாதூ செய்யிறே?’’

‘‘நீ ஒன் வேலையைப் பாரு; போயேன். ஏன் முழிக் கிறே?’’

சின்னக்கலப்பன் கருமமே கண்ணாகி நின்றான். விமுக் கனும் மாசிலானும் குழி கிண்டிக் களைத்திருந்தார்கள். விமுக்கன் அவனிடம் ஒரு பீடி வாங்கி அடித்துக்கொண்டு நின்றான்.

குழியில் மரங்கள் நட்டு குறுக்குத் தடிகளும் வைத்துக் கட்டி காம்பராவின் உருப்படியையே ஆக்கி இருந்தான். அதைப் பார்த்தபோதுதான் நட்சத்திரத்துக்கு பயம் எழுந் தது.

அவன் வேலையில் கவனத்தோடு அடிக்கடி முடிச்சில் உள்ள பணத்தையும் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

காம்பராவின் உருப்படியைக் கட்டி முடித்ததும் சற்று திருப்தியுடன் சற்று தூரத்தில் போய் நின்று, அதைப் பார்த்துக்கொண்டு நின்றான். அவனைப்போல் விமுக்கனும் மாசிலானும் ஒவ்வொரு பக்கத்தில் நின்று பார்த்தார்கள்.

அவனுக்கு அதைப் பார்க்கப் பார்க்க மனதில் ஒரு

தெம்பும், நான்தான் சொந்தக்காரன் என்ற ஒரு உறுதியான உணர்வும் தேயிலைக் கொழுந்துபோல் பசுமையாகத் துளிர்த் திருந்தன.

புல்லுக் கட்டுடன் மலைப்படிகளில் ஏறிவந்த பேப்பர் இராமசாமி தாண்டித் தாண்டி நடந்து அவனுக்குப் பக்கத்தில் வந்து நின்றான். கொஞ்ச நேரம் அவனையும் அவனுடைய வேலையையும் பார்த்தான்.

"ஆமா நீ ஒன் கணக்கில் காம்பரா கட்டுறியே. தொரை கிட்டே......"

சின்னக்கலப்பன் திரும்பி நின்றான். முகம் நாகத்தைப் போல் படமெடுத்தது. சுருக்கம் விழுந்த தசைகள் நெளிந்து கொண்டன.

"நீ சும்மாப் போய்யா !"

இராமசாமி அவன் கத்திய கத்தில் அசந்து நின்றான். அவனுக்குப் பின்னால் குட்டையன் கங்காணி ஒரு மாதிரி யாகப் பார்த்துக்கொண்டு சென்றான்.

சில விநாடிகள் சென்றபின் பழனியின் தகப்பன் இரங்க சாமியும் இன்னும் இரண்டு பேரும் அந்தம் பக்கம் வந்தார்கள். "இதென்னப்பா" என்று வாய்க்குள் சொல்லிய இரங்க சாமி சின்னக்கலப்பனைப் பார்த்தான்.

"என்னண்ணே ஒன்பாட்டுக்கு கட்றியே. துரை அறிஞ்சால் ?"

அது காதில் விழுந்ததும் அவன் கொண்ட சினத்துக்கு அளவில்லை.

"........................."

"என்னடா நீங்க என்னை தொரை தொரைன்னு பயங் காட்டுறீங்க ? அவனார்டா என்னக் கேக்க ? அவன் கேக்கட்டுமே ? நான் சொல்லுகிறேன் பதிலு !"

"இல்லண்ணே !......"

"என்னதா சொல்லப்போற, என்மேல் என்ன பிழை இருக்கு ? சொல்லுங்கடா. நான் இப்பவே புடுங்கி வீசிப்புர் றேன். நானென்னமோனென்னு நினைச்சுக்கிட்டிங்களோ? நான் ஒன்றும் யோசிக்காமல் செய்யல தெரிஞ்சுதா ?"

உதடுகள் கோபத்துடிப்பில் வெளிவந்தன. அவன் சுபாவமான தைரியத்துடன்தான் பேசினுன்.

நீதியைத் தேடி ஆவேசம் கொண்டு தொல்லேப்படும் மனதில் இவ்வளவு காலமும் துரையிடம் காம்பரா கேட்டு ஒழுங்கான முறையில் கெஞ்சியதும், அவன் காட்டு மிருகம் போல எல்லாவற்றையும் காலில் மிதித்து எறிந்ததையும் கிளர்ந்து புண்களேக் கீறிக் கொண்டிருந்தன.

“இல்லே தொர அறிஞ்சா இது புடுங்கி வீசிடுவானே?”

இது அவன் நெஞ்சில் கத்தி முனேயைப்போல் குத்திற்று. அவன் கோபம் உச்சஸ்தாயியை அடைந்துவிட்டது. கையில் இருந்த கத்தியைப் பக்கத்தில் இருந்த செம்பக மரத்தில் ஓங்கிக் கொத்தித் தொங்கவிட்டுத் திரும்பி இராமசாமியை யும் இரங்கசாமியையும் பார்த்தான்.

“அவன் புடுங்கி வீசிடுவாஞ முடியுமா அவனுக்கு?” இந்தா இந்தத் தோட்டத்தில நானில்ல—எங்கப்பன் இல்ல. அப்பனூட்டு அப்பனும் இந்த மண்ணில் தானய்யா வாழ்ந் தாங்க. அது தெரியுமா ஒங்களுக்கு?”

அவன் குந்தி இருந்து நிலத்தில் கையால் அடித்துத் தொடர்ந்து சொன்ஞன்.

“இந்த நிலத்தில் புறந்தவங்க இந்தத் தோட்டத்தில மாடா ஒழைச்சுச் செத்தவங்க, இங்கிட்டுத்தான் அவங்களே முந்திப் பொதச்சாங்க!—சும்மா போங்கடா? பயங்காட் டிறீங்க?”

அவன் உதடுகளும், கைகளும் உணர்ச்சியால் நடிங்கிக் கொண்டிருந்தன. ஒளி பொருந்திய முழிக்கண்கள் உருண்டு வந்தன.

அவன் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த மற்ற தொழிலாளர்கள்! ‘நீங்கதானன்ணே சரி!’ என்று கூறி நகர்ந்தார்கள்.

சின்னக்கலப்பனுக்கு ஆத்திரம் தணியவில்லே.

“டேய் ஏண்டா தொட நடுங்குறீங்க? நம்மதாண்டா ஒழைக்கிறவங்க; நம்ப பக்கந்தாண்டா நியாயமிருக்கு! இது ஆர்வீட்டுச் சொத்தடா. நம்ம பிரதிநிதி என்னடா

சொன்ஞரு? நீங்களும் போய் கட்டுங்கடா காம்பரா! நம்ம எல்லாரையும் இவன் தோட்டத்தை விட்டுத் தொரத்திடமுடியுமா? நம்ம சங்கமா கூடியிருக்குறமடா; நாம ஏன்டா பயந்து சாகணும்?......''

பதில் சொல்லுங்கள் என்று கூறுவதைப்போல் கண்களை விரித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஆமாண்ணே நீங்க சொல்றது சரிதான்''

பேப்பர் இராமசாமியும் இரங்கசாமியும் தலையாட்டிக் கொண்டு நடந்தனர்.

தான் செய்த வேலைக்கு கைகொடுத்து மெச்சவேண்டியவர்கள், சும்மா பயமுறுத்துருர்களே எனத் தனக்குள் மனம் புளுங்கினுன்; ஆத்திரப்பட்டான். ஒரு சமயம் வெறுப்பும் கொண்டான்.

சின்னக்கலப்பன் தான், பரம்பரை பரம்பரையாக அத்தோட்டத்தில் இருந்து வருவதை தனக்குள்ளாகப் பெருமிதம் கொண்டான். அவன் பெருமிதம் கொள்வதில் அநியாயமொன்றுமில்லை. அது அவனை அறியாமல் அவன் நரம்புகளில் கலந்து ஊறிவிட்ட பாத்தியதை உரிமை. அதை யாரால் போக்க முடியும்.

அவன் பிறந்து கைகால்களை நீட்டிக்கிடந்து கண்திறந்து பார்த்தது அந்தப்பூமியைத்தான். தாயின் வயிற்றில் இருந்து அந்தப்பூமித் தாயின் மடியில் உரிமையோடு புரண்டு விழுந்தான்.

''மகனே இந்தப் பீடபூமி உனக்குத்தான் சொந்தம்! நீ வளர்ந்து உன் சக்திபடைத்த கரங்களால் என்னைச் செழிக்கச் செய்வாய்!'' என்று வாழ்த்தி பூரிப்போடு அணைத்துக் கொண்டாள் அவள்.

அவன் பிறந்திருந்தபோது யாராவது கிட்டச் சென்று ''நீ பிறந்திருக்கும் பூமி உன்னுடையதல்ல. வெள்ளைக்காரனுடையது. முதலாளிகளுடையது.'' என்று கூறி இருந்தால் அவனுல் உடனே பேசக்கூடும் என்ருல் ''அது பொய். நான் பிறந்த பூமி எனக்குத்தான் சொந்தம். இந்த மண்ணில் இருந்து தூக்கி எறிய யாரால் முடியும்? என்று கூறி இருப்

பான்; அப்போது அது தன்னுடைய தென்பதற்கு சந்தேகமே இருந்திருக்காது.

இன்று, அவன் பிறந்தபோது கைகால்களை நீட்டிக் கிடந்ததைப் போல் தூங்கக் கூடமுடியவில்லை.

"அவங்க கிடக்கிறுங்கண்ணே கோழைங்க, நீங்க பயப் படாதீங்க!"

விமுக்கன் கீழே குந்தி இருந்தவாறு யோசித்துக் கொண்டு நின்ற சின்னக்கலப்பனிடம் கூறினன். அவன் திரும்பி விமுக்கனைப்பார்த்து உதட்டுள் சிரித்தான். பின்பு மரத்தில் தொங்கவிட்ட கத்தியைக் கழட்டி எடுத்துக் கொண்டான்.

"நீ எந்திர்ரா விமுக்கா!" என்று உஷாராகச் சொன்னுன்.

"சின்னக் கலப்பண்ணே செய்யறதிலே என்ன தப்பிருக்கு? நியாயந்தானே? அவரு ஜெயிச்சிட்டா எல்லாருக்கும்தான் நல்லம்!"

"அவருட துணிவு தான்டா நமக்கு வேணும்!"

அன்று அந்த லயத்தில் மட்டுமில்லை, அந்த விஷயமறிந்த எல்லா விஷயங்களிலும் இதே பேச்சுத்தான்.

# 14

சின்னக்கலப்பன் இப்பொழுது சோதி கலந்த முகப் பொலிவுடன் அதிக சுறுசுறுப்புக் கொண்டிருந்தான். அன்றைக்குக் காம்பரா கட்டிய நேரம் எல்லாரும் பயங் காட்டிய வேளையில் 'நான் தனியாகத்தான் துரையோட மோத வேணுமோ' என்னும் சந்தேகமும் பீதியும் அவன் மனதில் எழுந்துதான் இருந்தது. அந்த மனநிலை அன்றிரவு அண்ணமலை, இராகவன், புஞ்சிபண்டா, நொண்டிச் சிலம்பன், பெருமாள், பழனி ஆகியோரைச் சந்தித்ததும் பறக்கடிக்கப்பட்டு தைரியம் ஏறிற்று.

''கலப்பண்ணே நீங்கதான் சரி.நாங்க உங்க பக்கந்தான்'' என்று இராகவன் ஆட்களும் உற்சாகத்தோடு கூறினார்கள்.

''நீங்க செய்தது நியாயோம். இத வச்சு தொரையோட போராடுங்க. நாங்க சங்கமா பின்னால நிக்கிறோம்'' என்றார் தலைவர் அண்ணாமலை.

''நீங்க ஒண்ணுக்கும் பயப்படாதீங்க, தொரை கேட்டான்னு காம்பரா ஒடைக்க முடியாதுன்னு சொல்லுங்க!'' என்று புஞ்சிபண்டாவும் பழனியும் சொன்னார்கள்.

இவற்றைக் கேட்ட அவன் சொல்ல முடியாத உற்சாகமடைந்தான். அவனுடைய இருதயத்துள்ளே பல இருதயங்கள் சங்கமமாகி அவனின் துடிப்புக்களையே அவையும் பெற்றிருக்கின்றன.

அவன் பழைய மலையில் இன்னும் பல தொழிலாளர்களுடன் முள்ளுப் போட்டுக் கொண்டிருந்தான். அங்கு சிதம்பரம் கங்காணி அவர்களை கங்காணித்துக் கொண்டு நின்றான். அவன் முகத்தில் கலகலப்பும் குளிர்மையும் செறிந்திருந்தன. நயினாமலை கொடுத்த வெற்றிலையை போட்டுக் குதப்பியவனாக நின்றான். வீரமுத்துவின் கலியாணத்தை நினைத்ததுபோல் குறித்த நாளில் முடித்துவிடலாம், தடை எதுவுமில்லை என்ற மனப் பூரிப்புடன் கல்யாணத்துக்கான ஆயத்தங்களை அவன் செய்து கொண்டிருந்தான்.

நான்கு நாட்களுக்கு முன் சின்னத்துரை வந்து அவனிடம் காம்பரா உடைக்கச் சொன்னபோது அவன் மறுத்து விட்டான். அவன் எதிர்த்துத் தர்க்கித்து கடைசியில் ''காம்பரான்னு உடைக்க முடியாது. நீங்க செய்யிறதை செய்யிங்க'' என்று ஒரே பேச்சாகக் கூறினான். அதன் பிறகு அவனிடம் யாரும் பேசவில்லை. அத்துடன் அவர்கள் அடங்கி விட்டார்கள். தனக்குள் ஒரு முடிவு கட்டி இருந்தான்.

வெயில் கடுமையாக எரித்துக் கொண்டிருந்ததால் வியர்வை கொட்டிற்று.

வீரமுத்துவுக்குச் சொன்னதுபோல் தனிக் காம்பராவில் கலியாணத்தை நடத்தி முடித்துவிடுவேன் என்ற திருப்தியும், அதற்கு மேலால் தொழிலாளர்களின் சார்பில் துரைக்கு

எதிராக ஒரு சவால் விட்டுக் கொண்டிருக்கின்றேன் என்ற செருக்கும் அவனுக்குள் பெருமிதத்தை உண்டாக்கிவிட்டன. அவன் அந்த நினைவுக்குள் நினைந்து வேலை செய்தான்.

''அண்ணே உங்க வேலையால ஒவ்வொருத்தனுக்கும் ஒரு உசார் எழும்பி யிருக்கண்ணே!'' என்றான் நயினமலை.

''ஆமாப்பா!'' என்றான் செல்லையா.

சின்னக்கலப்பன் அவர்களைப் பார்த்துச் சிரித்தான். அது வெற்றிச் சிரிப்பு.

''தொரை உங்களை அழைக்கிறாரு!''

ஒபீஸ் பையன் விடங்கன் சொத்திக்காலால் தாண்டி மலைப்படிகளால் வந்து நின்று மூச்சு வாங்கினான். அவன் ஒபீஸ் உள்ள மேல் மலையில் இருந்து இறங்கி ஓடி வந்திருக்கிறான்.

''ஏண்டா அழைக்கிறான் கழுதைப்பய?''

நிலத்தில் குத்திய முள்ளில் கைவைத்துக் கொண்டே கேட்டான் சின்னக்கலப்பன்.

''எனக் கென்னண்ணே தெரியும்?''

சின்னக்கலப்பன் ஏதோ யோசித்துவிட்டு வாய்க்குள் ஏதோ முணுமுணுத்தான். தலையில் சுற்றிக் கட்டியிருந்த சிவப்புத் துண்டை கழட்டித் தோளில் போட்டுக்கொண்டு ஒப்பீசை நோக்கி நடந்தான்.

''காம்பரா விசயமாத்தான் அழைக்கிறான் போல இருக்கு!'' என்று தாழ்ந்த தொனியில் சொன்னான்.

''நீங்க போங்கண்ணே, தைரியமாப் போங்க. நம்ம பக்கந்தான் நியாயமிருக்கு!''

''விட்டுக் கொடுத்திடாதீங்க தைரியமா நில்லுங்க!''

நயினமலையும் மற்றும் தொழிலாளர்களும் நம்பிக்கைப் படுத்தினர். அந்நேரம் அது அவனுக்கு ஊன்றுகோல் போல் பலமளித்தது. தெருவில் ஏறி நடந்தான்.

நான்கு நாட்களுக்கு முன் காம்பரா விசயமாகச் சின்னத் துரையுடன் தர்க்கித்ததும், கடைசியாகக் கூறிய பதிலும் நினைவில் கனத்துக் கொண்டிருந்தது. சின்னத்துரை போய் பெரிய துரையிடம் ஒன்றைப் பத்தாக்கிக் கூறியிருப்பான்

என்பதும் அவனுக்குத் தெரியும். பெரிய துரை தன்னிடம் கேட்கும் கேள்விகளுக்கு தன்னைத் தயார் படுத்திக்கொண்டு ஒப்பீசை அடைந்தான். துரையின் அறைக்குள் ஒபீஸ் பையன் போகும்படி கூறியதும் அவன் உள்ளே போனான்.

"சலாங்க தொரே!"

சின்னக்கலப்பன் குனிந்து வலது கையின் முழங்கையை இடது கையால் பிடித்து, வலது கையை நெற்றியில் வைத்து வணங்கினான். அப்படித்தான் சலாம் போட வேண்டுமென்று அன்று தொடக்கம் சொல்லிக் கொடுக்கப்பட்டுள்ளது.

அங்கு பளிச்சிடும் மேசைக்கு முன்னால் அறையின் நடுவில் பெரிய துரை பெய்லி இருந்தான். அவன் உருவத்துக்கு பின்னால் சுவரில் தொங்கும் பிரித்தானிய மகாராணியின் பெரிய படம்தான் அவன் முகத்தில் விழித்தது. துரை, வாலைப்பிடித்ததும் கோபங்கொண்டு பற்களை காட்டும் நாயைப் போல் அவனைப் பார்த்துக்கொண்டு பற்களைக் கடித்தான். சில விநாடிகள் கழிய ஒன்றும் கூறாமல் முகத்தை வெடுக்கி, கோபத்தால் சிவந்த பூனைக் கண்களால் அவனை மேலும் கீழும் 'ஏய் புழுவே' என்பது போல் ஒரு பார்வை பார்த்து சிறுக உறுமினான். கண்களை வெட்டி விழித்தான்.

சின்னக்கலப்பன் கைகளை மார்போடு கட்டியவாறு பய பக்தியான கோலத்தில் அவரை லேசாகப் பார்த்தவண்ணம் அமைதியாக நின்றான். அவன் துரை, தான் தொழிலாளி என்ற மரியாதையை அவன் அதில் தெரிய வைத்தான். அச் சூழ்நிலையில் மனம் சற்றுத் தயங்கி ஆடிற்று.

"நீ ஆர்டா நீ ஆரு?"

"நான் தொழிலாளியுங்க!"

"கூலிக்காரன்னு சொல்லுடா!"

"......" பேசாமல் இருப்பது நலம் என்று அவன் நினைத்தான்.

"நீ பெரிய ஆளு என்ன?"

அவன் வாய் திறக்கவில்லை.

"நீ எந்தத் தோட்டத்லே வேலை செய்யிறாய்?"

"இந்தத் தோட்டத்திலே தானுங்க தொரே!"

"உன்னை இந்தத்தோட்டத்தைவிட்டு விரட்ட என்னால் முடியுமா முடியாதா?"

விசயத்தை கெடுத்துவிடக் கூடாதென்பதற்காக தன்னைக் கட்டுப்படுத்தி மௌனமாக நின்றான் சின்னக் கலப்பன்.

"முடியுமா முடியாதா?" துரை அழுத்திக் கேட்டான்.

"அதெப்படிங்க துரை முடியும்?"

"டேய் எதித்துப் பேசாதே. இதுக்கு ஒனக்கு ஐஞ்சி ரூபா தெண்டம்."

துரை ஆங்கிலத் தமிழில் கத்தினான். அவன் துரையின் முகத்தை நோக்கியவாறு நின்றான்.

ஆத்திரம் கொண்ட துரை கதிரையை இரைச்சலுடன் இழுத்தெறிந்து எழுந்து நின்றான். கையில் கைப்பொல்லு இருந்தது.

"ஏய் ஒன்னை யார் என்னைக் கேக்காமல் தோட்டத்திலே காம்பரா கட்டச் சொன்னது?"

உரக்கக் கத்தியதில் அவனுடைய கழுத்து நரம்பு தொண்டையில் நீலமாக ஊதியது. மேசையில் கையால் குத்தினான்.

"ஒருத்தரும் இல்லீங்க தொரை!"

"அப்புறம் என்னைக் கேக்காம ஏன் மடையா கட்டினாய்?"

திரும்பவும் மேசையில் ஒரு குத்து. கண்கள் சின்னக் கலப்பனின் உருவத்தில் அதிகாரத்தோடு உருண்டு வந்தன.

"காம்பரா இல்லையென்னீங்க தொரே. என் மவனுக்குக் கலியாணம். அது..."

"டேய் அதை ஒன்னைக் கேக்கலே புரியுதா? மடையன்!"

சப்பாத்துக் கால்களை நிலத்தில் உதைத்துத் தேய்த்து விட்டு நின்றான் துரை. சின்னக்கலப்பன் துரையின் முகத்தைப் பார்த்துவிட்டு மேசையைப் பார்த்தவாறு சொன்னான்.

"எம்மவனுக்கு காம்பரா இல்லே. அதனாலே போட்டேனுங்க தொரை!"

"ஓ! மடையா, நீதான் தோட்டத் தொரையோ?"

துரை பற்களை நெருடிக்கொண்டு இரண்டு காலடிகளை அங்குமிங்கும் வைத்தான்.

"மவனுக்குக் கலியாணம் செய்யணுங்க தொரே! நம்ம காம்பராவில இடமில்லீங்க தொரே! புதுசா கலியாணம் கட்டினவங்களுக்கு காம்பரா வேணுங்க தொரே!"

சின்னக்கலப்பன் நியாயத்தைத் துரைக்கு விளக்கினான். இதைச் சொல்லும்போது திடீரென மெல்லிய உணர்வுகள் மனதில் எழுந்து கண்களைக் கலக்க முயன்றன. அதை அவன் அமுக்கிக் கொன்று, துரையின் முகத்தைப் பார்த்தான். அவன் கண்கள் நீதியைத் தேடின.

துரை கிட்டவாக வந்தான். கையில் கைப்பிரம்பைத் தூக்கி வைத்திருந்தான்.

"ஏய் அதைப்பத்தி நமக்குத் தெரியாது. நீ நம்மைக் கேக்காம காம்பரா போட்டது குத்தம்! தோட்டச் சட்டங் களுக்கு மாறானது. அதுக்கு ஒனக்கு பத்து ரூபா தெண்டம்!"

அவனை வெருட்டும் நோக்கத்துடன் நெருக்கமாக நின்று அவன் முகத்தில் தன் கண்களை கோபமாக உருட்டினான்.

அவன் ஒன்றுமே பேசவில்லை. துரை சில விநாடிகள் யோசித்தான். அவனின் காதுக்குள் கூறுவதுபோல் காத்திர மான தாழ்ந்த குரலில் சொன்னான்.

"இது வெள்ளக்காரங்க தோட்டம். வெள்ளக்காரங்க சொத்து. இது ஒன் புத்தியில் இருக்க வேணும்."

சின்னக்கலப்பன் அப்படியே நின்றான்.

"நீ ஒரு சின்ன மனுசன். நீ நம்மை எதிர்க்கக்கூடாது. நீ நம்மை எதிக்கிறது ஒனக்கு நல்லதில்ல!"

துரை திரும்பி எலிஸபெத் மகாராணியின் படத்துக்குக் கிட்டச் சென்று கொஞ்ச நேரம் யோசிப்பவனைப் போல பார்த்துக் கொண்டு நின்றான்.

சின்னக்கலப்பன் அவன் கூறுவதைக் கேட்டு உள்ளெழும் பல எண்ணங்களுடன் போராடி மௌனித்து நின்றான். துரை அவனைப் பார்க்கத் திரும்பினான். அவனுக்குதான், சொன்னதில் இருந்து புத்தி வந்திருக்குமென்று நினைத்தான். சில அடிகள் முன் வைத்து நின்றான்.

"நீ காம்பராவை ஒடைச்சுப் போடு என்ன?"

அவன் துரையை நிதானமாகப் பார்த்தான். உதடுகள் உணர்வில் துடித்தன. கட்டி இருந்த கைகளை சற்று இறுக்கினான்.

"அது முடியாதுங்க தொரே!"

அவன் வாயில் இருந்த நல்ல வார்த்தை வரும் என்று எதிர்பார்த்த துரைக்கு சினமும் ஆத்திரமும் பொத்திக் கொண்டு வந்தன.

"என்ன மடையன் சொல்லறாய்?" என்று கத்தியவாறு கைப்பிரம்பை ஓங்கியவாறு அவனுக்கு அடிக்க ஓடிவந்தான்.

"இந்தா தொரே, என்மேலே தொட்டா, அப்பறம் நா, மனுஷனா இருக்கமாட்டேன். ஆமா அதுக்கு வேற யாரையும் பாக்கணும்." துரையின் குரலையும் மிஞ்சக் கத்தி வலது கையால் பத்திரமும் காட்டினான்.

துரை நிதானம் பெற்று கைப்பிரம்பைக் கீழே ஊன்றினான்.

"ஏய் எதித்துப் பேசாதே, மனுசா—எதித்துச் பேசாதே—!"

சின்னக்கலப்பன் மீண்டும் கைகளைக் கட்டிக்கொண்டான். அவனைப் பார்த்த துரை ஏதோ நினைத்துக்கொண்டான். அவனைப் பார்த்து உதட்டுக்குள் சிரித்தான். எந்தச் சந்தர்ப்பத்திலும் தொழிலாளர்க்கு முன்னால் துரைமார் முழுப்பல்லையும் காட்டிச் சிரிப்பது மரியாதை இல்லை. மேசை அருகில் சென்று அதன்மேல் வைத்த பைப்பை எடுத்து வாயில் வைத்து புகைவிட்டான். சின்னக்கலப்பன் அவன் விட்ட புகையை நோக்கியவாறு நின்றான். துரையின் முகத்தில் கோபக் கோலம் இல்லை. அவனுக்குக் கிட்டவந்து அவன் தோளில் தட்டினான். அவன் சிரிக்கவுமில்லை, குழைந்து கொடுக்கவுமில்லை. அவன் மிகவும் சந்தோஷப்படுவான் என்பது துரையின் நினைப்பு.

"சின்னக்கலப்பன் நீ நல்லவன்!"

துரை பெயர் சொல்லி அழைப்பது பெரிய மதிப்பு.

அதிலும் நல்லவன் என்றால் அபூர்வம்தான். துரை பெருமையாக உதட்டின் ஓரத்தை நெளித்துச் சிரித்தான்.

சின்னக்கலப்பன் அடக்கமாக நின்றான்.

"நீ இந்த தோட்டத்திலே நீண்ட காலமா வேல செய்யிறே. நீ நல்லவன்; ஒன்னைக் கெடுக்கிறது சங்கம்தான்!"

அதற்கும் சின்னக்கலப்பன் எதிர் மொழி கூறவில்லை.

"ஒனக்கு காம்பரா தர்றன். அதோட ஒனக்கு கங்காணி வேலையும் தர்றன். இரண்டு மாசம் போக ஒன் மகனுக்கு கணக்குப் புள்ளை வேலையும் கொடுக்கிறன் என்னா?"

அவன் அதிசயப்படாமல் துரையை நிமிர்ந்து பார்த்தான். அவன் அதற்கு இசைந்துவிட்டான் என்று துரை மகிழ்ச்சிப்பட்டான்.

"ஆனா ஒன்னு செய்யணும் நீ, இந்த சங்கம் கூடாது. அது சரியல்ல. அதைவிட்டு விலகிடு. ஒன் மகனையும் விலகச் சொல்லு. ஒனக்கு இப்ப நான் நல்ல புத்திதான் சொல்றன் தெரியுதா? அப்புறம் வேற சங்கத்திலே சேரு. நான் ஒனக்கு நல்லா ஹெல்ப் பண்றேன். அதுக்கு யோசியாதே. அப்புறம் ஒன் பக்கத்திலே இருக்கிறவங்களையும் சேத்துக்கோ என்னா? அப்புறம் நீ நல்லா இருக்கலாம்!"

துரை அவனுக்கு நல்ல புத்தி சொல்லி திருத்திவிட்டேன் என்னும் பாவனையில் அவனுடைய முகத்தை மிகத் துடிப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.

சின்னக்கலப்பன் நிமிர்ந்து நையாண்டித் தனத்துடன் சிரித்தான். அவன் இவனைப் போல் எத்தனை துரைமாரின் நைசான பேச்சுக்களைக் கடந்து வந்துள்ளான்.

"என்னா நீ சிரிக்கிறது?"

துரையின் முகம் 'சக்'கென்று சிவந்தது. கோபந்தான் காரணம்.

"என்னா தொரே, நான் அவ்வளவு மடையன்னு நெனச்சுக்கிட்டிருக்கீங்களா?"

துரை, தீ நெஞ்சில் சுட்டதைப் போல் துள்ளி எழுந்து சப்பாத்துக் கால்களை நிலத்தில் தூக்கிக் குத்தினான்.

''ஏய், எதித்துப் பேசாதே—காம்பராவை ஒடைச்சுப் போட்டுவா...வேல தர்றன்—போ—நீ ஒடைக்கலேன்னு நான் ஒடைக்கிறேன்!''

பற்களை நறுமி தலையை ஏதோ திட்டமிட்டு ஆட்டினன்.

''அது முடியாதுங்க தொரே. இந்தத் தோட்டத்திலே நாங்க பரம்பரை பரம்பரையா இருந்து வாருேமுங்க. நியாமென்னு ஒன்னிருக்கு.''

''ஏ மனுஷா வாயை மூடு. எதித்துப் பேசாதே. மடையன்!''

ஒன்னும் செய்ய முடியாத மனக்கொதிப்பில் கைப் பொல்லை இரு கைகளாலும் பிசைந்து கொண்டான் துரை.

''நமக்கு நீதி கேட்க நம்ம தொழிற் சங்கமிருக்குதுங்க தொரை!''

சின்னக்கலப்பன் நெஞ்சில் கைகட்டி கோபத்தில் கர கரத்த குரலில் சொன்னுன்.

அவனைப் பார்க்கவும் அவன் சொல்வதைக் கேட்கவும் துரைக்கு மண்டையெல்லாம் எரிந்தது. எந்தத் தொழிற் சங்கம் கூடாதென்றும், அதில் இருந்து விலகிவிடு என்றும் கூறினுனே, அதே தொழிற் சங்கத்தை தனது பலமாக அவன் கொண்டு அதை சுட்டியும் காட்டியது அவனை, 'மூளை கெட்டவனே' என்று அழைப்பதைப் போல் இருந்தது. பற்களால் உதட்டைக் கடித்து முகச் சதைகளை அசிங்கமாக நெளித்தான். துரைக்கு அவனை தடியால் அடித்து விழுத்திக் கொல்லும் ஆத்திரம் வந்தது. சின்னக்கலப்பனின் ஆத்திரம் அவன் நெஞ்சில் பதுமையாக எதிரொலித்தது. அதை அவனுல் சகிக்க முடியவில்லை.

''யூ புளடி ருஸ்கல். கெற் அவுட்.''

துரை போட்ட சத்தம் அடுத்த அறையில் இருந்த கிளார்க்மாரையும் நடுங்கச் செய்தது. அந்த ஆத்திரத்தை தங்கள் மேல் பாய்ச்சுவான் என்ற பயம் அவர்களுக்கு.

''சும்மா போங்க தொரே. ஒங்களையும் தெரியும், ஒங்க அப்பனையும் தெரியும் நமக்கு!'' என்று வீராய்ப்பாகக் கூறிக் கொண்டு வெளியில் வந்தான் சின்னக்கலப்பன்.

துரை மனக்கொதிப்பில் நடுங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய வெள்ளை முகம் சிவப்பாகியது.

சின்னக்கலப்பன் முகத்தில் கசிந்த வியர்வையை துண்டால் துடைத்துக்கொண்டு தலைகுனிந்து கொண்டு லயத்தை நோக்கி நடந்தான். அவன் யோசனைக்குள் முழுகி விட்டான். இனித்தான் பிரச்சினையின் உச்சகட்டம் தோன்றி இருக்கிறதென்னும் துடிப்பு, நெஞ்சத்தின் உயிர் நாடியைச் சுற்றி வளைத்துக் கொண்டது. தற்செயலாக வீர முத்துவின் கலியாணம் முடியுமுன் காம்பராவைத் துரை உடைத்துவிட்டால் அவன் என்ன செய்வான், என்ற கேள்வி எழுந்ததும் வழி புரியாமல் நீரில் அமுக்கப்பட்டவனின் நிலை யில் அவன் மனம் அங்கலாய்த்தது. நெஞ்சம் கனத்து வேர்த்தது.

எவ்வளவுதான் துரையுடன் தான் வீராப்புப் பேசினாலும் அவனிடம்தான் முழு அதிகாரமும் இருக்கிறதென்பதை அவன் உணராமலில்லை.

துரை தெண்டம் போட்டதும், வேலையில்லை என்றதும், காம்பராவை உடைக்கச் சொன்னதும் கொள்ளிவால் பிசாசுகளைப் போல் மனதை வெருட்டிக்கொண் டிருந்தன. தனிமையில் நடக்கும் உணர்வில் அவனுக்கு மனதை உடைத்துக்கொண்டு அழுகை கெம்பியது. ஒளி பொருந் திய அவன்கண்களை எரித்துக்கொண்டு கண்ணீர் கசிந் தது. சொற்ப நேரத்தில் தான் அழுவதை உணர்ந்த அவன், தன்மேல் தானே வெட்கப்பட்டு "ச்சீ இதென்ன தலையா போவுது, சின்னப்புள்ள மாதிரி அழுறேன்" என்று முணுமுணுத்தான். தோளில் கிடந்த சிவப்புத் துண்டால் கண்களை இறுகத் துடைத்துவிட்டு வலிந்து சிரித்துக்கொண் டான். என் பக்கந்தான் நியாமிருக்கிறதென்று துணிந்ததும் நடையில் துரிதம் ஏற்பட்டது.

"என்ன கலப்பண்ணே தொரை என்ன சொன்னுன்?"

அவன் வேலை செய்து கொண்டிருந்த மலைக்கருகில் வந்ததும் நயினுமலை செல்லையா, அவனேடு வேலை செய்த சக தொழிலாளர்கள் ஆவலுடன் கேட்டார்கள். அவர்கள்

முள்ளுப் போடுவதை விட்டுவிட்டு, அவனுக்கருகில் ஓடி வந் தார்கள்.

"காம்பரா ஒடைச்சாத்தான் வேல தருவேன் என்னு சொல்லியிருக்கான், தெண்டமும் போட்டிருக்கான்."

"அண்ணே நீங்க ஒண்ணுக்கும் யோசியாதீங்க. நம்ம பக்கந்தான் பிடி இருக்கு. நேரா தலைவரை அழைச்சுக்கிட்டு தொழிற் சங்க ஒப்பீசுக்குப் போய்ச் சொல்லி நடவடிக்கை எடுங்க!"

"ஆமாண்ணே இந்த வேசமவன் தொரையை ஒரு கை பாக்கத்தான் வேணும்!"

"முதலாளி என்ன, தொழிலாளிக்கு எதிரிதானே, தொர, அவென் கையாள்தானே?"

"ஆமா! ஆமா!"

நயினுமலை சொல்ல செல்லையா அவனுடன் சேர்ந்து உஷார்ப்படுத்த மற்றவர்களும் ஆமோதித்தார்கள்.

"ஆமா, அதுதான், நா, அங்கதான் போறன்!"

சின்னக்கலப்பன் அவர்கள் கொடுத்த தைரியத்தில் தென்பு பெற்று அண்ணுமலையையும் கூட்டிக்கொண்டு உடனே தொழிற் சங்கக் காரியாலயத்துக்குப் போவதற்காக வீச்சாக நடந்தான்.

வெயில் கடுமையாக எரித்துக் கொண்டிருந்தது.

## 15

**சி**ன்னக்கலப்பன் வாயில் சுருட்டு புகைத்த கோலமாக புதிதாகக் கட்டிய காம்பராவை செம்மைப் படுத்திக் கொண் டிருந்தான். அவன் இரவு சாப்பிட்டு முடித்து விட்டான். பப்பாசித் தண்டில் செய்த ஒரு பந்தத்தை, காம்பரா முன் னுல் கட்டி வைத்துவிட்டு இருந்தான். அவன் அந்தக் காம் பராவுக்கு முன்னுல் சுவர் எழுப்பி அதை அழுத்தமாக்கிக் கொண்டிருந்தான். மாசிலானும் பக்கத்தில் நின்று உதவி செய்தான். நட்சத்திரம் பக்கத்தில் சென்று ஆதரவோடு,

பார்த்தவாறு நின்றாள். சுற்றி நின்று பார்த்துக் கொண்டிருந்த சின்னப் பயல்களை விரட்டி அடித்து, போய் தூங்கும் படி செய்து விட்டான்.

அவனுக்கு தோட்டத்தில் வேலை இல்லை என்று மறுத்து ஒரு கிழமை ஆகிவிட்டது. அதனால் அவன் பாதிக்கப் பட்டவனாகத் தெரியவில்லை. வழமையான உஷாரோடுதான் இருந்தான். தொழிற் சங்க மூலம் நடவடிக்கை எடுத்துவிட்டு பதிலுக்கு காத்துக் கொண்டிருந்தான். சங்கத் தலைவர் அண்ணுமலையும் சின்னக்கலப்பன் கூறியவற்றை விளக்கமாக அறிந்து கொண்டு பிரதிநிதி இராமநாதன் காம்பராப் பிரச்சனையை தொழிற் கந்தோருக்கு அறிவித்து துரை பெய்லிக்குக் கடிதம் எழுதியுள்ளார். பெரும்பாலும் கொன் பரன்சுக்கு அழைத்து விசாரணை செய்து முடிவு கூறுவார்கள். இராமநாதன் சின்னக்கலப்பனை அழைத்து, சின்னக்கலப்பனைப் பார்த்து ''நீங்க ஒண்ணுக்கும் பயப்படாதீங்க! தைரியமா இருங்க'' என்று கூறி அனுப்பியது அவனுக்கு நல்ல மனப் பலமாக இருந்தது. அந்தத்துணிவில்தான், தான் எடுத்த முடிவில் இருந்து சிறிதும் இறங்கவில்லை அவன்.

புதிய காம்பராவில் வீரமுத்துவுக்குக் கலியாணம் நடத்தி முடிப்பதற்காகத்தான் எல்லா வேலைகளையும் துரிதமாக தொடர்ந்து செய்து கொண்டிருந்தான். அவனும் அடிக்கடி நிமிர்ந்து நிலவைப் பார்த்துக் கொள்ளத் தவறவில்லை. சின்ன வயதில் இருந்து அது அவனுடைய ஆசை.

பூரணமான மஞ்சள் நிலவு வஞ்சகமில்லாமல் எங்கும் ஒரே அளவாக குதூகலத்துடன் பிரகாசித்துக் கொண்டிருந்தது. நிறை கர்ப்பிணிப் பெண்கள் அடுக்கடுக்காய் நிமிர்ந்து படுத்திருப்பதைப் போல, உருவங்காட்டி வளைந்து வளைந்து செல்லும் மேற்கு மலைத் தொடரின் மறைவுக்குள் இருந்து அப்போதுதான், முழுதாகத்தன் விதானத்தைக் காட்டிக் கொண்டிருந்தது நிலவு.

நிலவு காலம் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு சந்தோஷமான காலந்தான். கம்பளம் விரித்தாற் போல, வழு வழுப்பாக மலைச் சரிவுகளை மூடி வளர்ந்திருக்கும்

தேயிலைச் செடிகளும், அந்தச் செடிகளின் மத்தியில் உயர்ந்து பட்டுப் போல் நிற்கும் சவுக்கு மரங்களும், நீள மாய்ப் போட்ட வெள்ளைத் துகில் சேலை மெல்லிய காற்றில் அசைவது போல மலை உச்சிகளிலிருந்து, முன்னேக்கி நெளிந்து ஓடும் ஆறுகளும், சந்திர கதிர்களில் குளித்து வனப்பான கோலங் காட்டும் போது, மனம் எல்லாத் துன்பங்களையும் துரத்திவிட்டு மகிழ்ச்சி பொங்கும் அமைதி வலயமாகி விடும்.

வீரமுத்து, அப்பொழுதுதான் சாப்பிட்டுவிட்டு பீடி ஒன்றைப் புகைத்தவாறு வெளியில் வந்தான். கைகளைப் பெருக்கல் அடையாளம் போல் நெஞ்சில் மாறிப் போட்டு, தோள்களை பிடித்த வண்ணம், தலையை சுழட்டி, மலைகளையும் பிரகாசிக்கும் சந்திரனையும் வானத்தையும் பார்த்து இரசித்துக் கொண்டான். கோவிலடிப் பக்கம் போகும் எண்ணத்துடன் வெளிவந்த அவன் தகப்பனையும் காம்பராவையும் நோட்டம் விட்டுக் கொண்டு சில விநாடிகள் நின்முன். தனக்காக கட்டப்படும் காம்பரா தனக்குச் சொந்தமாகும் தானும் ஜானகியும் அதில் தனியாக வாழ வேண்டும் என்பதுதான் அவனுடைய உள்ளார்ந்த ஆசை. சாதாரண ஆசை இல்லை. பெரும் ஆசை. ஆனுல் அவன் அதை வெளிக் காட்டிக் கொள்வதில்லை. வெளிக்காட்டினுல் அது ஒரு பைத்தியகார கற்பனையாகத்தான் இருக்கும் என்பது அவன் முடிவு.

''கடைசியிலே தொரை ஒடைச்சு வீசுறதுதானே?''

அவன் நோகாமல் கூறியது சின்னக்கலப்பனின் செவியில் ஊசி முனை போல் குத்தியது. திரும்பிப் பார்த்தான்.

''டேய் நீ என்ன என்னை முட்டாளென்னு நெனச்சிக்கிட்டிருக்கிறியா? கோழைப்பயலே! என்ன தெரிஞ்சுடா நீ இப்படி பேசுறே? நான் நெனச்சா இதை ஒடைச்சு வீசிட்டுப் போயிறுவேன். விளங்குதா?''

மகன் மேல் மகா கோபம் கொண்டிருந்தான் அவன்.

''என்னன்னு நீங்க, ஒனக்குத்தானே காம்பரா?''

தொடர்ந்து நட்சத்திரம் நச்சரித்தாள்.

"அவென் கெடக்கிறு கழுதைப்பய!" என்று கூறிவிட்டு திரும்பி வேலையில் ஈடுபட்டான் சின்னக்கலப்பன்.

வீரமுத்து அந்த வார்த்தைகளைத்தான் கேட்க விரும்பினான். கேட்கும்போது நெஞ்சம் உறுதியாகி புளகாங்கிதம் அடைந்து பூரித்தான். அவன் பதில் ஒன்றும் கூறாமல் நடந்தான். மூன்றாவது காம்பரா வாசலுக்கு வந்ததும் நின்றான். அந்தக் காம்பரா வாசலில் அவனோடு அன்பாகப் பேசும் பாலாயிக் கிழவி ஒரு குப்பி விளக்கில்தான் உடுத்திருந்த சேலையைப் பிடித்து காயவைத்துக் கொண்டிருந்தாள்.

"அம்மாயி நீ என்ன செய்யிறே?"

"ஆமாப்பா, மாறிக்கட்டிக்க சேலே இல்ல. இந்த சேலேயும் நனஞ்சிபோச்சி. காய வச்சிக்கிட் டிருக்கேனப்பா, நீ எங்கப்பா போற?"

அவன் மனது நடுங்கியது. அந் நிலையில் அவன் மனதை நீள வைக்க விரும்பவில்லை. அதை நினைவில் கொள்ளாதவன் போல "கோவிலடிப் பக்கமாய்ப் போறன்." என்று சொல்லி விட்டு நகர்ந்தான்.

தம்பிரான் கிழவன் கசிப்புக் கள்ளு குடித்த வெறியில் கோழிக் கூட்டுக்குப் பக்கத்தில் பாடிக் கொண்டு கிடந்தான்.

கூடை மேல் கூடை வைச்சு கொழுந்தெடுக்கப் போர பெண்ணே!

கூடைய இறக்கி வைச்சி, குழுந்த வார்த்தை சொல்லிப் போவே தங்கரத்தினமே!

அவன் அலங்கோலமாய்க் கிடந்தான்.

வீரமுத்து அந்த லயத்தைக் கடந்து சென்று விட்டான்.

பச்சைப் பால் போன்ற நிலவு. குளிராத மனதுக்கும் குளிர்மை யூட்டி குளிர்ச்சி தரும் நிர்மலமான ஜுவாலிப் புடன் மலை முகடுகளில், ஆற்றுப் பள்ளங்களில், அழகைச் சிந்திக் கொண்டிருந்தது. அவன் தான் அசைய அசையும் வட்ட நிலவையும், அதுகொடுக்கும் பிரகாசத்தில் தேயிலைக் கொழுந்துகளின் முகங்களில் தோய்ந்து கொண்டிருக்கும் பொலிவு கொண்ட இளமைத் திமிரையும் பார்த்துவிட்டு

பெருமூச்செறிந்தான். அதன் அழகை அவனால் நீண்ட நேரம் அனுபவிக்க முடியவில்லை.

"அதாரு வீரமுத்தா?"

வீரமுத்து கோயில் பக்கமாக ஏறிவந்து விட்டான்.

"ஆமா!"

"என்னப்பா யோசினை?"

"நாம நிதமும் என்னத்தைப் பற்றி யோசிச்சுக் கிட்டிருக்கோம்? நம்ம வாழ்க்கையைப் பத்தித்தான் அண்ணே!"

"நீ என்னத்துக்கு யோசிக்கிற. ஒனக்குத்தான் அடுத்த மாதம் கலியாணமாமே?"

தாயின் இருமலுக்கு தோட்டத்து டிஸ்பென்சரியில் கலவை மருந்து வாங்கிக் கொண்டு வந்த சன்னாசி வீர முத்துவைக் கண்டதும் நின்று பேசினான்.

"அது சரிதான் நாம காம்பரா கட்டின கோபத்திலே நம்ம குடும்பத்திலே எல்லாருக்கும் தெண்டம் அடிச்சுக் கிட்டே இருக்கான். எனக்கும் இன்னைக்கி ஸ்டோரிலே ஐஞ்சு ரூபா தெண்டம் அடிச்சுட்டாண்ணே!"

நிமிர்ந்து வானத்தைப் பார்த்தவாறு பீடிப் புகையை விட்டான் வீரமுத்து.

"அவென் தெண்டம் மட்டுமா அடிப்பான். பற்றுச் சீட்டுக் கொடுத்து தோட்டத்துக்கு வெளியில போடவும் சந்தர்ப்பம் பார்த்துக் கிட்டிருப்பான். கவனமா இருந் துக்கோ நா வர்றேன்."

"எங்க போயிட்டுப் போறீங்க?"

"ஆசுப்பத்திரிக்கப்பா, ஆயாவுக்கு இருமல் கலவை வாங்கிக்கிட்டுப் போறேன். கலவையா தந்திருக்கான் முக்காவாசித் தண்ணி!"

"நம்ம டாக்டர் ஐயாவா? அவரு நமக்கு வைத்தியம் செய்யவா இருக்காரு. நம்மை ஏமாத்தி பணஞ் சம்பாதிக்க வல்லவா இருக்காரு. நம்ம உழைப்பை யார் யார் எல்லாம் சுரண்டிக்கிட்டுப் போறாங்க!"

"ஆமாப்பா நான் வர்றன்!"

சன்னுசி கோயில் ஓரமாகச் செல்லும் பணிய ரேட்டை நோக்கி விரைவாகக் காலெடுத்து வைத்தான். அவன் குளிருக்காகப் பட்டாளக்காரரின் சட்டையொன்று போட்டிருந்தான்.

"தார்ரு அவென் வீரமுத்துவுக்குப் பற்றுச்சீட்டு கொடுக்கிற தொரே? நாமெல்லாம் என்னத்துக்கு இருக்கோம். அந்த நிமிசமே ஸ்ட்ரெக் அடிப்போம். நம்ப சிவப்புக் கொடிச் சங்கம் என்னத்துக்கு இருக்கு?"

தெருக்கரை ஓரமாக பள்ளத்தில் இருக்கும் லயத்தில் இருந்து ஏறிவந்த பாக்கியம் தெரு ஓரத்தில் நின்று கொண்டிருந்தான். அவன் பக்டரியில் உள்ள பெட்டிக் காம்பரா வில் ஞானத்தோடு வேலே செய்கிருன்.

"நாமென்ன அதுக்கு மறுப்பா? நாம இண்ணைக்கும் சாகத் தயாரப்பா. நமக்கு கவலப்பட இந்த ஒலகத்தில என்ன இருக்கு? தொரை புத்தியச் சொன்னேன்" என்று நடந்து கொண்டே சொன்னுன் சன்னுசி.

சலவைப்பட்டு ஆடிக்கொண்டிருந்த வீரமுத்துவின் உள்ளம், அவர்கள் கூறியவற்றைக் கேட்டதும் இறுகி திடப் பட்டு தன்னம்பிக்கையைக் கொடுத்தது. தானொரு தனி மனிதனல்ல மாபெரும் சக்தி என்பதை தெளிவாக உணர்ந் தான். அந்நேரம் அவனுக்கு வானத்துச் சந்திரன் மிக ஜோதியாகத் தெரிந்தது. நெஞ்சம் பலம் பெற்று ஆனந்தத் தில் நிறைய ஒன்றும் பேசாமல் சிரித்த முகமாக பிள்ளேக் காம்பராவுக்கு வந்தான்.

"ஆரு வீரமுத்தா?"

"ஆமா!"

"வாப்பா, வா, ஒங்க விசயத்தைப் பத்தித்தான் பேசிக் கிட்டிருக்கோம்!"

அங்கு வேலுவும், சொத்திச் சிலம்பனும், புஞ்சிபண்டா வும், அருணுசலமும் கூட்டமாக நின்று பேசிக் கொண்டிருந் தார்கள். அக்கூட்டத்தில் இராகவனும் நிற்பான் என வீர முத்து எண்ணினுன். இராகவன் கற்றனிலுள்ள தொப்பித்

தோட்டத்தில் இருக்கும் தன் சிறிய தகப்பன் வீட்டுக்குப் போய் இன்னும் வரவில்லை.

''எனக்கு புதுக் காம்பராவில கலியாணம் நடக்கப் போவதைப் பத்தித்தான் பேசி யிருப்பீங்க'' என்ருன் வீர முத்து சிரித்துக் கொண்டு.

''அது இல்லப்பா, நீ ஒரு பக்கோம்!'' என்ருன் சொத்திச் சிலம்பன் விளையாட்டாக.

''நம்ம கலப்பண்ணே செய்த வேலதானப்பா நமக்கெல் லாம் புதுத் தைரியத்தைக் கொடுத்திருக்கு!''

''வேலு, வீரமுத்துவின் தோளில் அடித்துக் கூறிவிட்டு, அவன் சட்டைச் சேப்பில் கையைவிட்டு ஒரு பீடியை எடுத் தான்.

''ஆமாப்பா!''

''இப்ப, நாம்ம தொரைக்கு முன்னுல் தலைநிமிர்ந்து நிக் கிருேம்—தொரைக்குப் பள்ளாப் போச்சு!''

அதை அருணுசலமும் சொத்திச் சிலம்பனும் அனுமதித் தார்கள்.

''இந்தத் தோட்டத்தில, இந்த மாதிரி, இது வரையிலே எவனும் செய்யலே, துணிவு வரல்லே, கலப்பண்ணே தொரையை ஆட்டி வைக்கிருரே?'' என்று புஞ்சிபண்டா அதியே பாவத்துடன் சொன்னுன்.

''தேதி குறிச்சிருக்குத்தானே?'' என்று அருணுசலம் ஆவ லோடு கேட்டதற்கு வீரமுத்து ''இன்னுமில்லை, கூடிய சீக்கிரமா வைப்பாங்க'' என்று நிதானமாகக் கூறினுன்.

சொத்திச் சிலம்பன் புகைத்துக் கொண்டிருந்த சுருட்டை வாங்கி பீடியை பற்றவைத்த வேலு சொன்னுன்: ''கொன்பரன்சுலே நம்ம பக்கந்தான் தீரும். நம்ம பக்கந் தானே நியாயமிருக்கு, நம்ம பிரதிநிதி கரக்டா பேசி முடிச் சிடுவாரு!''

அவன் திடமனத்துடன் கையெடுத்துக் கூறியதைப் பார்த்து சிலம்பன் சிரித்தான். பின்பு தணிவான குரலில் கூறினுன். ''நம்ம பக்கம் எப்பத்தான் அநியாயம் இருந்

திருக்கு. நாம இந்தத் தோட்டத்தில என்ன கொடுமையை செய்திட்டோம்? ஒழைச்சுச் சாகிறதைத் தவிர.''

அங்கு நின்ற எல்லோரும் அவன் கூறிய உண்மையினுல் மனம் ஆட்டமுற்று அதை ஆளப்படுத்தும் உணர்வோடு மௌனமாக நின்ருர்கள்.

''அப்படிக் கேளப்பா? ஆமா, நாங்க நீதியின் பக்கம் தான் நிக்கிரும்?''

வீரமுத்து அவனைத் தட்டிக் கொடுத்தான். சில விநாடிகள் மௌனத்தில் கழிந்த பின் அருணுசலம் ''அதுசரி கொன் பரன்சுல தொரை பக்கம் தீர்ந்தா என்ன நடக்கும்?'' என்று மற்றவர்களைப் பார்த்து சந்தேகத்துடன் கேள்வி தொடுத்தான்.

''தீந்தா என்ன நடக்கும்? தெரியாதா? தொர கட்டின காம்பராவை ஒடைச்சுப் போடுவான், அதுக்குத்தானே அவென் தருணம் பாத்திக்கிட்டிருக்கான்.''

வேலு கூறிய வார்த்தைகள் வீரமுத்துவின் மனதை ஊடுருவின. அவன் முகம் கருகிவிடுவது நிலவொளியில் தெரிகிறது. காம்பரா ஒடைக்கப்படும் என்பதை கேட்க அவன் முற்ருக விரும்பவில்லை. அவனுடைய முகத்தைப் பார்த்து அவனுடைய மனநிலைமையைப் புரிந்துகொண்ட புஞ்சிபண்டா சொன்ஞன்.

''ஒடைச்சா, அடுத்த நாளே வீரமுத்துக்கென்ன நமக்கெல்லாம் காம்பரா கொடுன்னு ''ஸ்ட்ரைக்'' அடிக்கவேண்டியதுதானே!''

''ஆமா!''

அருணுசலத்தின் குரலில் ஆவேசமும் எழுச்சியும் இருந்தன.

அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டு வீரமுத்து மௌனமாக நின்ருன்.

''அப்படி ஒன்னும் நடக்காதூ. தீர்ப்பு நம்ம பக்கந்தான். அதில சந்தேகமில்ல. அப்படின்ஞ காம்பரா கொடுத்துப் புட்டுத்தான் கட்டின காம்பராவ ஒடைக்கனும்—வீரமுத்து நாங்க தலைவரைப் பார்த்திட்டு வர்றம்.''

"ஆமாமா காம்பரா கொடுத்திட்டுத்தான் காம்ப ராவை ஒடைக்கணும். தோட்டத்தில காம்பரா காலியா இல்ல. நீங்க பயப்படாதீங்க."

வேலு கூறியதை ஆதரித்து அருணாசலம் கூற மற்றவர்கள் "ஆமா" என்று தலை அசைக்க, அதைப் பார்த்த வீரமுத்து முகப் பொலிவடைந்தான். வேலு, புஞ்சிபண்டா, சிலம்பன், அருணாசலம் ஆட்களை அழைத்துக்கொண்டு தலைவர் அண்ணாமலை இருக்கிற லயத்தை நோக்கி நடந்தார்கள்.

காம்பராவை துரை ஒடைக்க முடியாதென்பது வீரமுத்துவின் மனம். தன் சந்தேகத்தைப் போக்கடித்தது. அந்நேரம் தன் தகப்பனான சின்னக்கலப்பனின் உருவம் மனதில் தோன்றிற்று. அவனைக் கட்டி அணைக்கும் ஆசை வீரமுத்துவின் மனதில் பரவி வந்தது.

காம்பராச் சுவரோடு சாய்ந்து நிலவின் திவ்வியமான ஒளியில் வானப்பரப்பைப் பார்த்தான். முழுவதும் நீலம் பாரித்து விரிந்திருக்கும் வானத்தில் விளித்தவண்ணம் இமை வெட்டும் நட்சத்திரங்கள் கொத்துக் கொத்தாய் சிதறிச் சிதறி பூத்து சிலிர்த்திருந்தன. அவனுக்கு உடனே தன் திருமண வாழ்க்கையின் இன்பங்கள் நினைவில் கற்பனார்த்தமாக ஓடிவந்தன. ஜானகி கண்சிமிட்டினாள். அந்நினைவுகள் அவன் நினைத்து வரவில்லை, தானாகவே ஓடிவந்தன.

பிள்ளைக் காம்பராவுக்கு இருபது யார் தள்ளி இருக்கும் காளிகோயில் முற்றத்தில் இளம் பையன்கள் சிலம்படி, மல்யுத்தம், பழகிக் கொண்டிருந்தார்கள். பக்கத்திலுள்ள வாசிகசாலையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

வீரமுத்து அந்த சோபனமான நினைவுகள் மனதில் தூவானிக்க அந்தக் கோயில் பக்கமாக கண்களை மெல்ல நகர்த்தினான்.

கோயிலின் வடக்குத் திசையாக வாசலில், இருள் ஒதுக்குப் பக்கமாக ஒரு மெலிந்த உருவம் கட்டி இருந்த சாரத்தால் உடலை இழுத்து மூடி, தலையை முழங்காலில் கவிட்டு வைத்து குந்தியவாறு இருந்தது. வீரமுத்து அந்த உரு

வத்தை கூர்குறிப்பாய் பார்த்ததும், தன் நண்பன் பழனி யாக இருக்குமென்று எண்ணி அங்கு சென்ருன். பழனி இரண்டு நாட்களாக காய்ச்சலாக இருந்தான். கிட்டவாகச் சென்ற அவன் குனிந்து முகத்தைப் பார்க்க முயற்சித்தவ ஞய் ''யாரப்பா இது பழனியா?'' என்று கேட்டான்.

பக்கத்தில் நின்று கேட்டும் பதில் இல்லே. அவன் திரும்ப வும் குரல் எழுப்பிவிட்டு குந்தி இருந்து அவ்வுருவத்தின் தலேயை நிமிர்த்திப் பார்த்தான்.

''அடைக்கலோம்.''

வீரமுத்து திகிலடைந்து கத்திஞன். அவள் உள்ளம் நலுங்கிப் போச்சு. அடைக்கலத்தின் கண்கள் கண்ணீரில் மினுங்கின.

அவனுடைய தாய் ஒரு கிழமைக்கு முன்ஞல்தான் இறந்துவிட்டாள். அவள் மலேயில் கொழுந்தெடுக்கும் போது விழுந்தவள். பின்பு எழும்பவே இல்லே. நல்லிரத்தம் இல்லாததால் உண்டான மரணம் என்று டாக்டர் கூறிஞர். அதுதான் உண்மை. அவனுக்கும் அவனுடைய சின்னத் தங்கச்சி இந்துராணிக்கும் ஆதர்சமாக அவள் இருந்தாள்.

இவைகளே நினேத்துப் பார்த்த வீரமுத்து கைவிரல் களால் அவனுடைய தோள்களே ஆதரவாக வருடிக்கொண் டிருந்தான்.

''ஏனப்பா அழுவுறே. ஆயாவை நெனச்சுட்டியா?''

மெல்லிய குரலில் மனத்தாங்கலுற்றுக் கேட்டான்.

அடைக்கலம் அவனுடைய முகத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''அடைக்கலம் நீ ஏனப்பா அழுவுறே?''

அவனேப் பார்த்துக் கொண்டிருந்த வீரமுத்து பொறுக்க முடியாமல் அவனேத் தன்ஞேடு அணேத்துக் கொண்டான்.

''நாங்க இந்தத் தோட்டத்தில தானே பொறந்தோம்?''

அவன் இக்கேள்வியை அடைக்கலத்திடமிருந்து எதிர் பார்க்கவில்லே.

''ஆமா!''

''எங்க அப்பன் ஆயா எல்லாமே இங்கத்தானே பொறந் தாங்க?''

''ஆமா! அதிலென்ன சந்தேகமிருக்கு!''

''இந்தத் தோட்டம் எந்த நாட்டிலே இருக்கு?'!

''இலங்கையில!''

''அப்ப எங்க தாய் நாடெது?''

''இலங்கைதான்!''

அடைக்கலம் வீரமுத்துவின் கண்களை நோக்கினான்.

''நம்மை எல்லாம் ஏனப்பா இந்தியாவுக்கு நாடு கட த்தப் போறுங்க? நாங்க இந்த நாட்டுக்கு என்ன துரோ கத்தை செய்தோம்? கொள்ளை அடிச்சுப் போற வெள்ளைக் காரனை விட்டுட்டு, ஒழைச்சுச் சாகிற நம்மை ஏனப்பா கலைக் கிறுங்க?''

அடைக்கலத்தின் பூரணமான நெஞ்சம் பேசியது. அந்தச் சத்தியமயமான கேள்விகளால் கதிகலங்கி தானே தன்னைக் கேட்டுக் கொண்டதைப் போல் சலனமடைந்தான். வீரமுத்து, அவற்றின் உள்மயமான உணர்ச்சிகளால் தானும் தாக்குண்டு பதிலே வராமல் இருந்தான் வீரமுத்து. அடைக்கலத்தின் மார்பை உற்று நோக்கிய வண்ணம் இருந் தான்.

''வீரமுத்தண்ணே என்னைப் பாரு, எனக்கு இருபத்தி நாலு வயசாப் போச்சு. இன்னும் தொர பேர் பதிய மாட் டேங்கிறுன். வேல ஒண்ணுமில்லையாம். நம்ம வயிறு வளர்த்த ஆயாவும் தேயிலைச் செடிக்கு இரையாப் போச்சு. தொர அடுத்த மாசம், நாம இருக்கிற காம்பராவை காலி பண்ணிஞ நாங்க எங்க போவம்? நாங்க பொறந்த இந்த நாட்டிலுமிடமில்லை. இந்தியாவுக்கனுப்பிஞ? ஐயோ! நமக்கு ஒருத்தருமில்லேண்ணே'''

''அடைக்கலோம்!''

நெஞ்சு உணர்வுகளின் நெருக்கத்தால் தாங்கமுடியாமல் வீரமுத்து கத்தினான். அவன் கண்களும் கலங்கிவிட்டன.

''என்னப்பா நீ சொல்றே?''

அடைக்கலத்தின் இதயத்துடன் ஒன்றிப்போய் என்ன என்ன கேட்க வேண்டுமென்று தெரியாமல் கேட்டான்.

''அண்ணே எனக்கு பயமா இருக்கு. நமக்கு என்ன கதி அண்ணே இருக்கு? நாளேக்கி தெருவிலே நின்னு, கள்ளத் தோணின்னு புடிச்சடைப்பாங்க. கால் வச்சு நிக்க ஒரு இடமில்லேயே இந்த ஒலகத்திலே. சத்தியமாச் சொல்றேன் எனக்கு கடலே தெரியாதண்ணே!''

வீரமுத்துவினல் அவன் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. இருதயம் கசங்கி ஒடுங்கிக் கொண்டிருந்தது.

''டேய் அடைக்கலம் நீ ஏண்டா பயப்பட வேணும்? நாங்களும் உன்னைப் போலத்தாண்டா? கடலே தெரியாதவங்க. இந்த நாட்டைத்தாண்டா தெரியும். நீ பயப்படாதே! நீ அனுதை இல்லேடா முழுத் தொழிலாளரும் ஒன் பக்கந்தாண்டா!''

அவன் எழுந்து அடைக்கலத்தின் கையைப் பிடித்து இழுத்தான்.

''எழுந்திரடா! சாரத்தைக் கட்டிக்கோ;''

அடைக்கலம் எழுந்து நின்று சாரத்தை அரையில் கட்டினுன். வீரமுத்து அவனுடைய கண்களில் உள்ள கண்ணீரைத் துடைத்துக்கொண்டே ''நாங்க தொழிலாளி வர்க்கமடா! நாங்க எந்தச் சந்தர்ப்பத்திலும் அழக்கூடாது. அழறது கோழையுங்க வேலே'' என்று காதுக்குள் கூறுவது போல கூறினுன்.

அடைக்கலம் மௌனமாக தூரத்தே நிலவொளியில் ஓடும் ஊமை ஆற்றைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''நீ ஏன்டா பயப்படுறே?'' நாங்க இந்தத் தோட்டத்தில தாண்டா வாழப்போறம், நமக்கெல்லாம் இதுதாண்டா தாய்நாடு! வா, நம்ம வூட்டுக்குப் போவம் குழந்தை மாதிரி அழறே வா!''

வீரமுத்து அடைக்கலத்தின் கையை இறுகப்பற்றி தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு சென்ருன். இருவரும்

கொஞ்சத்தூரம் பேசாமல் நடந்தனர். வீரமுத்து மௌனத்தைக் கலைத்தான்.

''அடைக்கலோம், எனக்கு, நான் சின்னவயசிலே படிச்ச பாரதியாருட ஆத்திசூடி ஞாபகத்தில் வருது !''

''என்னது ?''

''பூமியை இழந்திடேல்: கொடுமையை எதிர்த்து நில் !''

''நாமேன் பூமியை இழந்திட்டோமிண்ணு நமக்குப் புரியலே ?''

''அதுதாண்டா முதலாளி வர்க்கத்தின் கொடுமை !''

''ஆமா, காணி நிலம் வேண்டும் பராசக்தி காணிநிலம் வேண்டும் என்று பாரதிதானே பாடினுரு ?''

''ஆமா—ஆனு நாம பராசக்தியைக் கேட்டு பிரயோசனமில்ல. கொடுமய எதிர்த்து நின்னு போராடினுத்தான், காணி நிலமென்ன எல்லாமே கிடைக்கும் !''

அடைக்கலம் வீரமுத்து கூறியதில் கருத்தாக அதை விட்டு யோசித்துக்கொண்டு வந்தான். வீரமுத்துவும் அதே நிலைதான்.

சில நிமிடங்கள் கழிந்தபின், அடைக்கலம் பேச்சைத் தொடர்ந்தான்.

''ஒனக்கு புதுக் காம்பராவில கலியாணமாமே ?''

''ஆமா !''

''காம்பரா கட்டி முடிச்சுட்டாரா கலப்பண்ணே ?''

''ஆமா முடிஞ்சுது !''

''கலியாணத்துக்கப்புறம் நீ அதிலதானு, குடியிருப்பே?''

''ஆமா அந்தக் காம்பராவிலதான் இருக்கம் போறன் ? நானும்; ஜானகியும் அதிலேதான் தனியா வாழப் போறம் !''

வீரமுத்து நெஞ்சுரத்துடன் சொன்னுன். இருவரும் வீரமுத்து இருக்கும் லயத்திற்கு கிட்டவாகப் போய்க்கொண்டிருந்தார்கள். குளிரினுல் லயத்து நாய் ஒன்று ஊளையிட்டுக் கத்தி குரைத்துக் கொண்டிருந்தது. மின்னிட்டாம் பூச்சிகள் கண்ணடித்துக் கொண்டிருந்தன. நடந்து

கோண்டிருக்க இரு உள்ளங்களும், உள்ளே, விடைகாண முடியாத உணர்வுகளால் அமைதி குலைந்து கொண்டுதான் இருந்தன.

## 16

**வீ**ரமுத்துவின் கலியாணத்துக்கு எண்ணி இன்னும் பத்துநாட்கள் இருக்கின்றன. இம்முறை நிச்சயமாக அவனுக்கும் ஜானகிக்கும் குறித்த சுபமுகூர்த்தத்தில் கலியாணம் நடந்துவிடும். அது தங்கமலைத் தோட்டத்திலுள்ள சகல தொழிலாளர்க்கும் தெரிந்து விட்டது. ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது அப்படித்தான் பேசிக்கொண்டார்கள். புதுக் காம்பராவில் கலியாணம் நடப்பதுதான் எல்லோருக்கும் விசேஷமாக இருந்தது. அதில் அவர்களுக்கும் சந்தோஷம் தான். சின்னக்கலப்பன் பெரிய அளவில் கலியாணத்துக்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தான். வீரமுத்துவும் சுறுசுறுப்பாகத்தான் இயங்கினான்.

சின்னக்கலப்பன் காளிகோவில் முன் வாசலில் துண்டை விரித்துப் போட்டு அதன் மேல் தலைவைத்துக் கொண்டு நிமிர்ந்து படுத்திருந்துதான். முழங்கைகள் நிலத்தில் முட்டிய படி மார்பில் கைகளை கோர்த்து வைத்து காலுக்கு மேல் காலைப்போட்டுக் கொண்டு ஓய்வாகக் கிடந்தான். அவன் கண்கள் மிகத் தூரத்தே அவர்களைப் போல் சுற்றிச் செல்லும் மலை உச்சி விளிம்புகளில் ஊர்ந்து கொண்டிருந்தன. அந்த விளிம்புகளில் ஒன்றன் பின் ஒன்றாக நிரை நிரையாக நிற்கும் சவுக்கு மரங்கள், ஆக்கிரமிப்புப் படைகளைத் துரத்துவதற்கு உறுதியுடன் தொடர்ந்து செல்லும் தேசபக்த படைகளைப் போல் இருக்கின்றன.

அவன் அங்கு வந்து கிடக்கும் போது மாலை நாலுமணியிருக்கும். அன்று போயா தினம். தோட்டத்தில் வழமை போல் வேலை இல்லை. அவனுக்கு கலியாண வேலை. இவ்வளவு நாளும் ஒரே அலைச்சல். பதுளைக்கும் தோட்டத்

திற்கும் ஓடி ஓடி அலைந்துவிட்டு உடற் சோர்வு தீர ஓய் வெடுக்கும் நோக்கத்துடனேயே அங்கு வந்தான்.

கலியாண அழைப்பிதழ் அடித்து தோட்டத்தில் உள்ள உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் கொடுக்கப்படலா யிற்று. சின்னக்கலப்பன் முதல் இதழை அண்ணுமலைக்குத் தான் கொடுத்தான். தோட்டச் சங்கத் தலைவர் முதல் தொண்டர்வரை என்று அழைப்பிதழில் குறிப்பிடப்பட் டுள்ளது. வீரமுத்து தன் நண்பர்கள் எல்லோருக்கும் கொடுத்தான். இதே போல நமுனகுலவில் செய்துகொண் டிருந்தாள் கண்ணம்மா.

ஓய்வு எடுக்க வந்த சின்னக்கலப்பனின் மனம் ஓய்வின்றி பலவாறு பலதையும் யோசித்து அலைச்சல் பட்டுக்கொண் டிருந்தது. கலியாணத்தைச் சாதாரணமாக நடத்தி விட லாம் என்றுதான் நினைத்திருந்தான். அந்த எண்ணத் தோடுதான் கலியாண வேலைகளைத் தொடருகிறுன். இப் பொழுது ஆயிரம் ரூபாய்க்கு மேல் கடன் பட்டுவிட்டான். வீரமுத்துவிற்கு அது தெரியும். அத்துடன் நட்சத்திரம், பொட்டு, ஆருயி ஆகிய மூவருடைய நகைகளையும் அடகு வைத்து விட்டான். இன்னும் செலவிருக்கு; இன்னும் ஆறு மாதத்தில் வட்டியுடன் திருப்பித்தருவதாக சாமிவேல் கணக்கப் பிள்ளையிடம் வாங்கினுன். 'பாயி'டம் வாங்கிய கடன் வேறு. கணக்கப் பிள்ளையிடம் வாங்கிய பணத்தில் ஒரு பகுதியை, கலியாணத்தன்று வரும் மொய்ப்பணத்தில் கொடுத்துவிடலாம் என்று எண்ணினுன். மிகுதியை எப்படி கட்டிமுடிப்பது? அதுபெரிய யோசனை. இதற்கிடையில் கலியாணத்துக்கு வரும் அத்தனை பேரையும் எங்கே அமர்த் துவது? போயும் போயும் இரண்டு காம்பராவிலும் ஒரு இருபத்தைந்து பேரை அமர்த்தலாம். மிகுதி? பந்தல் ஒன்று போட வேண்டும். இந்தப் பிரச்சனையை மனதின் ஒரு மூலைக்குள் ஒதுக்கிவிட்டு இன்னெரு பிரச்சனை பூதாகார மாக வந்து நின்றது. கொன்பரன்சுக்கு நாள் குறிச்சு, கல்யாணம் முடிந்து மூன்றும் நாள் கொன்பரன்ஸ். அன் றைக்கு என்ன முடிவு வருமோ என்ற பயம் மனத்தைப்

பீடித்துக் கொண்டது. கலியாணம் நடக்கப்போகிறதென்றதும் அந்தப் பயம் மனதைக் கிலேசமடையச் செய்தது. கலியாணம் முடிந்து வீரமுத்துவும் ஜானகியும் தனிக்குடித்தனம் நடத்துமுன் காம்பராவை உடைக்கும்படி தீர்ப்பாகிவிட்டால்? மனம் கொதித்தது. இவ்வளவு காலமும் அவன் எடுத்த முயற்சிகளும் மனதோடு புரையோடிய நீண்டகால ஆசையும் சுக்கு நூருகிப் போவதோடு அது பெரிய அவமான மாகவும் போய்விடும் என்று நெஞ்சு உணர்த்திக் கொண்டிருந்தது, ஒடுங்கிய கண்ணுடிப் பாத்திரத்துக்குள் விழுந்த எறும்பு வெளியேறுவதற்கு முயற்சித்து அப்பாத்திரத்தின் அடித்தளத்தை சுற்றிச் சுற்றி வருவது போல் அவன் யோசனைகளும் தீர்வுகாண முடியாத தவிப்பில் நெஞ்சுக்குள்ளேயே வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

சங்கத் தலைவர் அண்ணுமலையுடன் எத்தனையோ முறை கலந்து பேசிக்கொண்டாலும் இன்றைக்கும் ஒரு முறை கலந்துபேசவேண்டுமென்று எண்ணிக்கொண்டு கிடந்தான்.

அண்ணுமலை வாசிக சாலைக்குள் இருந்தார். இன்றைக்கும் தொழிலாளர்கள் தங்கள் பிரச்சினையை வைத்து கலந்து பேசும் நாள். அங்கு அண்ணுமலையுடன் நொண்டிச் சிவப்பன், இராகவன், பெருமாள், வேலு, இன்னும் பலர் இருந்தனர். நாலு பக்கத்தாலும் வாசிக சாலையை நோக்கி ஒவ்வொருவராக வந்து கொண்டிருந்தனர். அடைக்கலத்தை உலுக்கிய நாடு கடத்தும் பிரச்சனை தோட்டத்தில் அநேக தொழிலாளர்களின் உஷாரைக் கெடுத்ததோடு மனக் கொதிப்பையும் உண்டாக்கி இருந்தது. இதையிட்டு எங்கும் பரபரப்பாக இருந்தது. அந்தமான் தீவுக்கு கொண்டு போய் தள்ளப் போகிருர்கள் என்ற செய்தி பத்திரிகைகளில் வந்து அவர்களின் உள்ளங்களை நோண்டிச் சிதைத்துக் கொண்டிருந்தது. அநேகருக்கு அதன் சாராம்சம் என்னவென்றே புரியவில்லை. நாளைக்கு என்ன நடக்குமோ என்று புரியாமல், இருட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் கிரிமினல் கைதிகளின் மனநிலையில் எல்லாரும் இருந்தனர்.

சின்னக்கலப்பனே அந்த விசயம் எந்த விதத்திலும் பெரிதாகத் தாக்கவில்லே. அவனேப் பொறுத்த வரையில் அவனுக்கு அது பழசு. அத்துடன் ''நான் இலங்கையன்'' என்ற எண்ணத்தின் உறுதி. வீரமுத்து இதனுல் மனம் உடைந்து போயிருந்தான். அன்று அடைக்கலத்தையும் அழைத்துக் கொண்டு போய் அந்த மாதிரித்தான் பேசினுன், அதுதான் சின்னக்கலப்பனின் யோசனேயை சிறிது பாதித்தது.

''இதென்னய்யா? இதென்ன கொடுமை?''

''நம்மளே நாடு கடத்தப் போருங்களாமே?''

''நம்மளே இந்தியாவுக்கு துரத்தப் போருங்களாமே உண்மையா?

''சிரிமா சாஸ்திரி ஒப்பந்தமென்னங்க? நமக்கு ஒண்ணும் புரியலயே?''

''நாம இந்த நாட்டுக்கு என்ன குத்தமய்யா செய் தோம்? அந்தமானுக்கு கடத்தப் போருங்களாமே ?''

''இந்த நாட்டில பொறந்தவங்களேயும் அனுப்புவாங் களா?''

மனம் நொந்து போன தொழிலாளர்கள் ஒருவர் பின் ஒருவராக ஒருவரை மீறிப் பலராக இதயத்தில் இருந்து புண்ணுகி வரும் கேள்விகளேத் தொடுத்துக் கொண்டிருந் தனர். அவர்கள் முகத்தில் ஏக்கமும், தவிப்பும், அவதியும் ரேகைகளே ஆழமாகக் கீறி இருந்தன. அண்ணுமலே, பெரு மாள், நொண்டிச் சிலப்பன், இராகவன் முதலியோர் மௌனமாக ஒரு சிறிய மேசைக்கு முன்னுல் இருந்தனர். அவர்களேச் சூழ்ந்து தொழிலாளர்கள் நின்றனர். கேள்வி எழுப்பிய குரல்களில் ஒன்றியிருந்த ஆவேச உணர்வுக்கு எல்லேயில்லே.

சின்னக்கலப்பன், காளி கோயிலில் எழுந்து உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

''நீங்கள்ளாம் யாரு?''

அண்ணுமலே எழுப்பிய கேள்வியில் திடீரென கொண கொணப்பு அடங்கிற்று. நிசப்தம் நிலவிற்று.

''நீங்கல்லாம் எங்க பொறந்தீங்க?''

''இலங்கையில?''

''உங்கள் தகப்பன் தாய் எங்க பொறந்தாங்க?''

''இலங்கையில!''

''அப்புறமென்ன நீங்க ஏன் பயப்புடனும்? நீங்கள் இலங்கையர் தானே நீங்க இங்கே தானே வாழனும்—உங்களுக்கு இந்தியாவிலே நிலமிருக்கா? ஏதாவது சொத்திருக்கா?''

அண்ணமலை எல்லோரையும் கண்களை அகல விரித்துப் பார்த்தார்.

''எப்படி இருக்கும்? ஒண்ணு மில்லையே?''

''நீங்க கள்ளத் தோணிகளா?''

''ஆரய்யா சொன்னு? இங்க கடலைக் காணுத வங்கதான் கூட இருக்கானுக!''

அண்ணமலை சிரித்தார். அந்த சிரிப்பில் மனதைச் சாடிய சில உணர்வுகள் கலந்திருந்தன.

''அப்புறம் என்ன இதெல பயப்புர்ரதுக்கு என்ன காரண மிருக்கு? என்ன நியாயத்தைக் கொண்டு நம்மல அனுப்ப முடியும்.''

அண்ணமலையின் திடமான வார்த்தைகள் அவர்களின் இதயத்திலே வீசிய சுவாலையைத் தணித்துக் கொண்டிருந்தது.

''அப்புறம் ஆரைத்தான் அனுப்பப் போறுங்க?''

கூட்டத்தில் நின்ற ஒருவன் உரக்கக் கத்தினுன். அண்ணமலை அவர்களை சாவதானமாக நோக்கினுன்.

''இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளரைத் தான் அனுப்புறதுக்கு திட்டம் போர்ருங்க. இது இண்ணக்கிப் போட்ட திட்டமில்ல. அரசியல் நோக்கத்துக்காக முதலாளிவர்க்கம், ஒண்ணுமே தெரியாத தொழிலாளரைப் பழி வாங்கிற திட்டமிது. ஆனு சிரிமா, சாஸ்திரி ஒப்பந்தந் தான் இதுக்கு ஒரு முடிவு கண்டிருக்கு. நாங்க கூறுகிறோம் இந்தியாவின் நிலம், சொத்துக்கள் இருக்கிறவங்களை. இந்தியாவுக்குப் போக விருப்புறவர்களை அனுப்புறதில குத்த

மில்ல. ஆனு இந்த நாட்டில பொறந்து, இந்த நாட்டுக்கா ஒழைச்சு இந்த நாட்டையே நம்பி இருக்கிறவர்களை பல வந்தமாக அனுப்புவதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். அது பெரிய கொடுமை!''

''ஆமா கொடுமை தான்!''

''ஆமா!''

அங்கு நின்றவர்கள் பலர் சேர்ந்து கத்தினர். அண்ணுமலையின் பேச்சு அவர்களுக்கு சிறு தென்பைக் கொடுத்தது. அப்பொழுது அங்கே வீரமுத்துவும், அடைக்கலமும், பழனியும் வந்து சேர்ந்தனர். பழனி அவதியாக எல்லோரையும் இடித்துக் கொண்டு போய் முன்னுல் நின்றுன். அவர்களுக்கு அதே மனவிகாரம் தான். இவ்வளவு நேரமும் தொழிலாளர்களின் முகங்களில் வெளிப்படும் கொதிப்புக்களையும் இதயத் துடிப்புக்களையும் கவனித்தவாறிருந்த இராகவன் சொன்னுன்.

''நாங்க இந்த விசயத்தை வச்சு ஆத்திரமடையுறோம். எல்லாரையும் அனுப்பப் போருங்க என்று வைச்சிக்கிருவோம். எங்களுக்கு ஆத்திரம் தான்வரும். ஆனுல் யார் மேலே நமக்கு ஆத்திரம் வரனும்? யார் யாரை அனுப்புருங்க? தொழிலாளிவர்க்கம் தொழிலாளிவர்க்கத்துக்கு துரோகம் செய்யுமா ? அது சரித்திரத்தில நடக்காது, அப்புறம்? இந்த நாட்டை கொள்ளை அடிக்கிற வெள்ளை முதலாளிகளை இங்க ஒருமுடிவில்லாம இருக்க விட்டு விட்டு, இந்த நாட்டை வளமாக்கிறவர்களை அனுப்பத் துணிபவர்கள் யாராக இருக்க முடியும். நிச்சயம் இது முதலாளி வர்க்கத்தின் கோழைத்தனமான வேலை. தொழிலாளிவர்க்கம் ஆட்சியில இருந்தா இது நடக்குமா?''

''ஆமா நடக்காது தான்!''

''அதுன்னுதான் நெசந்தான்!''

''இந்தக் களவாணிப்பய வெள்ளைக்காரனை இந்த நாட்டில இருக்க விட்டுட்டு ஒன்னுந் தெரியாத தொழிலாளர்களை ஏன் பழிவாங்குருங்க!''

'அதுதான் முதலாளி வர்க்கத்தின் வேலே' என்று உடனே கூறிய இராகவன் ''வெள்ளைக்காரன் கொடுக்கிற எலும்புத் துண்டில உயிர்வாழ்கிற முதலாளிகள் வேல இல்லாம கஷ்டப்படுற சிங்கள மக்களை ஏமாத்துறதுக்கு செய்யிற முட்டாள் தனமான வேலே இது'' என்று தொடர்ந்து கூறினுள்.

அவன் கூறியது உண்மையாக இருந்தாலும் கொந்தளிக்கும் தொழிலாளர்களின் மனத்துக்குத் திருப்தி இல்லே.

''தொழிலாளர்களை ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்களாக நெனச்சுக்கிட்டிருக்காங்க''

''அந்தக் காலத்தில வெள்ளைக்கார வேசமவன் செய்த வேலேக்கு இண்ணிக்கி நாம் அனுபவிக்க வேண்டியிருக்கு!''

மனம்நொந்து ஏமாற்றமடையும் தோரணையில் வெளிப்படும் வார்த்தைகள் தொழிலாளர்களின் நெஞ்சங்களிலிருந்து வந்து கொண்டிருந்தன. அந்தக் கலவரமான சூழ்நிலேயில் புஞ்சி பண்டா தன் நாயுடன் வந்து சேர்ந்தான். அவனைக் கண்டவர்கள் அவனைத் திரும்பிப்பார்த்து ''இதென்னப்பா இது! இந்த நாட்டுக்காக தங்கள் இரத்தெத்தைக் கொடுத்து இதை அழகு படுத்தியவங்களைப் புடிச்சு, அனுப்பப் போறுங்களாமே?

நாம என்ன தேசத் துரோகக் குற்றமய்யா செய்தோம்?'' என்று உணர்ச்சி வசப்பட்டுக் கேட்டனர். புஞ்சி பண்டாவின் உள்ளம் சங்கடமான நிலேயில் துடிதுடித்தது. மனத்தில் வேதனை பொங்கியது.

''எனக்கென்னு என்ன சொல்றதுன்னு புரியலே. ஆனு ஒன்னுமட்டும் நிசம். இந்த நாட்டுத் தொழிலாளிவர்க்கமோ, விவசாயிகளோ இந்த முடிவை எடுக்கலே; இங்க ஏற்பட்டிருக்கிற வேல இல்லாத் திண்டாட்டத்தை, அதுவும் முதலாளிகள்தான் உண்டாக்கினது, அதை வெச்சு மக்களை ஏமாத்துறதுக்கு வகுப்புவாத ரீதியில் நடவடிக்கை எடுத்திருக்கிறுங்க. இதனுல் ஒண்ணும் தீரப்போறதில்ல. இந்த

நாட்டு மக்கள், நாமதான் நடவடிக்கை எடுக்கிறதுண்ணு முதல்ல வெள்ளேக்காரனேத் துரத்துவாங்க!''

அவன் தட்டுத்தடுமாறி கூறி முடித்துவிட்டு இடுப்பில் கை வைத்துக்கொண்டு நின்று நெட்டுயிர்த்தான். அவன் கூறியதில் அவனுக்குத் திருப்தியில்லே. அவர்களே எப்படி மனம் திறந்து சிரிக்கவைப்பது என்று யோசித்து அவஸ்த்தைப் பட்டான்.

இதுவரை சுவரோடு சாய்ந்துகொண்டு மௌனமாக மனம் புழுங்கியவாறு நின்ற வீரமுத்து ''படுத்துத் தூங்கிற துக்குத்தான் இடமில்லன்னுங்க, கடைசியிலே நாடே இல்லேன்றுங்க'' என்று கைகளே விரித்து ஏக்கப் பெருமூச்சோடு சொன்னபோது, அவன் கண்கள் கலங்கிவிட்டன. அவனேப் பார்த்துக்கொண்டு பக்கத்தில் அடைக்கலம் நின்றுன்.

''ஆமாண்ணே''

''ஆமா!'' ஒரு குற்றமும் செய்யாமலேயே நாம நாடற்றவராகி விட்டோம்!''

கைகளேக் கட்டியவாறு நின்ற பழனி ஒரு ஈனஸ்வரமான குரலில் கூறியது அங்கு சகலரின் இதயங்களிலும் சுரண்டி முள்ளுப்போல் குத்திற்று.

''இதுலே ஆச்சரியம் ஒன்றுமில்ல. நமக்கு நாடேல்லத்தான். ஆமா, படுத்துத்தூங்க இடமில்லத்தான். முதலாளி வர்க்கம் ஆட்சி இருக்கிறவரைக்கும் எந்த நாட்டிலும், அந்நாடு தொழிலாளி வர்க்கத்திற்கு சொந்தமில்லதான். ஆனு உண்மையான சொந்தக்காரங்க அவங்கதான். முதலாளி வர்க்கத்தைப் பூண்டோடு அழிக்கிறவரைக்கும்—அவங்களுக்கு இல்லத்தான். முதலாளிகள் நம்மல கடலில் தள்ள நெனச்சுட்டாங்க. தள்ளத்தான் செய்யும்!''

இராகவன் உள்மனம் பிதுங்கிய நிலேயில் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அமைதியாகச் சொன்னுன். அவன் கைவிரலொன்று மேசை விளிம்பில் கீறிக் கொண்டிருந்தது. கடுமையாய் ஆலோசித்த வண்ணமிருந்த நொண்டிச் சிலம்பன் இராகவன் கூறியதைக் கேட்டதும், முகத்தில் திர்க்க

மான உணர்ச்சிக் கோடுகள்பட, சற்று பலமான தொனியில் சொன்னான்.

"நாம ஏன் இதில பயப்புடனும்? நம்மல எங்க அனுப் புனாத்தான் என்ன? இந்த நாட்டில இவ்வளவு காலமா ஒழைச்சுச் சாகிறோம். எம்மில ஒருத்தனுக்காவது ஒரு துண்டு நிலமிருக்கா? அப்புறமெப்படி நாடு சொந்தமாகும். அனுப் பினா அனுப்பட்டும். நாம எங்கபோனாலும் தொழிலாளி தான். நமக்கு இந்த கைகால்தான் சொந்தம். நாம முத லாளி வர்க்கத்தோட போராடித்தான் ஆகணும். நம்ம வாழ்க்கை போராட்டந்தான்."

அவன் மனது உறுதியாக இருந்தது. அவர்களை தைரி யப்படுத்தும் நோக்கத்தோடு அதை சொன்னான். எல் லோரும் மௌனம் சாதித்தனர். அவன் கூறியது சரியாகப் பட்டது.

"அதிருக்கட்டும் நம்மல அந்தமானுக்கு அனுப்ப திட்டம் போர்றாங்களாமே?" இரண்டு மூன்று குரல்கள் ஒன்றாக வந்தன.

"அது இந்த ஒலகத்தில் நடக்காது! சங்கம் வைச்சி தொழிலாளர்களை ஏமாத்தி வயிறு வளர்க்கிற தொண்ட மான்களைத்தான் நாம் அந்தமானுக்கு அனுப்புவோம்."

கூட்டத்தில் இருந்து திடீரென வந்த தொனி எல்லாருக் கும் சந்தோஷத்தை அளித்தது. அப்படிக் கூறியது மண் டையன் சிவசாமி. அதைக்கேட்டுப் பலர் கைதட்டிக் கொடுத்தனர்.

அடைக்கலம் மெதுவாக முன்னால் சென்று நின்றான். அண்ணாமலையை ஏறிட்டுப் பார்த்தான்.

"நம்மல நாடு கடத்துவாங்களா?"

—வீரமுத்துவும் அவனுக்குப் பக்கத்தில் போய் நின்றான்.

"நீங்க ஒருத்தரும் பயப்புட தேவையில்லை. இந்த நாட் டில காலங் காலமா வாழ்ற நம்மல ஒண்ணுஞ்செய்ய முடி யாது! நமக்கெல்லாம் இதுதான் தாய்நாடு!"

அண்ணுமலே திடமாகவும் கலவரமடையாத தொனி யிலும் கூறினுன். எல்லோர் முகமும் சிறிது மலர்ந்தது. அமைதியாக ஓடும் ஆற்றில் பெரிய ஒரு கல்லு விழுந்து கலங்கி ஆடி அலேந்து அடங்கியதுபோல அவர்கள் மனங்கள் இருந்தன.

''டேய்! போயி ஒங்க வேலேயைப் பாருங்கடா! ஏனடா சும்மா மனதை அலட்டிக்கிறீங்க? நம்ம என்ன நியாயத் தைக் காட்டியடா அனுப்பிட முடியும். நமக்கு இது தாண்டா தாய் நாடு! போங்கடா!''

வாசிகசாலேயின் வாசலோரம் வந்து நின்று நடந்த வற்றை அவதானித்துக்கொண்டு வெகுநேரமாக நின்றிருக் கின்ருன். அவன் முகத்தில் எந்த அலேப்பும் இல்லே.

அவனேக் கண்டதும் அண்ணுமலேக்கு முதல் எல்லோருக் கும் சந்தோஷம் எழுந்தது. உள்ளே ஒரு வீரியங் கூடியது.

''கலப்பண்ணே! வீரமுத்து கலியாணத்துக்கு நாங்க அத்தனே பேரும் வருவோம்!'' விருந்து சாப்பிடுவதை மன தில் கொண்டு பழனி சொன்ஞன்.

''வாங்கடா அதைத்தாண்டா எதிர்பாத்துக்கிட்டிருக் கேன்!''

''அண்ணே புதுக்காம்பரா, நல்லா அழகா இருக் காமே?''

''வந்து பாருங்க?''

''என்ன வீரமுத்து ஆடா அடிக்கிறீங்க?''

வீரமுத்து சும்மா சிரித்தான். அவர்கள் எல்லோரும் தன் கல்யாணத்துக்கு வருவார்கள் என்று எண்ணிப் பெரு மிதப் பட்டுக் கொண்டான்.

''அண்ணே, கொன்பரன்சு எப்போ?''

''பத்தாந்தேதி!''

சின்னக் கலப்பனுக்கு கொன்பரன்ஸ் என்றதும் தான் மனதில் கொஞ்சம் சலனம் தட்டிற்று,

''கலப்பண்ணே, பயப்படாதீங்க!''

பெருமாள் அவனே உறுதிப்படுத்தும் பாவனேயில் கூறினுன்.

"என்னடா பயோம்?"

"அண்ணே கொன்பரன்சுல நம்ம பக்கந்தான் தீரும்?"

விமுக்கன் கிட்டவந்து அவனுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு கூறினுன்.

சின்னக் கலப்பன் அப்பொழுதுதான் வாய்திறந்து சிரித்தான்.

அவன் அதைத்தான் விரும்பினுன்.

## 17

ஒரு கிழமைக்கு முதல் அந்த முகூர்த்த நாளில் சின்னக் கலப்பன் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே யில்லை. நெஞ்சத்தில் மகிழ்ச்சிப் பிரவாகம் பொங்கி வழிந்தது. அந்தப் பிரவாகத்தில் நெஞ்சம் மிதந்து கொண்டிருந்தது. தன் தேசத்தை மீட்டதும் போர்வீரன் ஒருவன் தன் சுயாதீனப் பூமியில் நின்று கைகால்களை எறிந்து துள்ளிப் பறப்பதைப் போல அவன் உள்ளம் பறந்து திரிந்தது.

வீரமுத்துவுக்கு, அவன் நினைத்தது போல் புதிய காம்பராவில் கலியாணத்தை மிக மங்களமாக செய்து முடித்து விட்டான். அன்றைக்கும் வீரமுத்துவையும் ஜானகியையும் ஒன்ருக இணைந்திருக்கக் கண்டதும் அவன் ஓரிடத்திலா நின்ருன். தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு கலியாணப் பந்தலில் துள்ளிவந்தான். அவனை தொழிற் சங்கத் தலைவர் அண்ணுமலையும் மற்றவர்களும் மெச்சிய போது இன்னும் இன்னும் உயர்ந்து போனுன். தைரியத்தின் ஒரு உருவமாக நின்ருன். இனி என்னை ஒருவனுலும் அசைக்க முடியாது என்று மார்புதட்டி நெஞ்சுரத்துடன் நின்ருன்.

அவன் தானுகவே காம்பராவை உடைத்து விடக்கூடியதாக தோட்டத் துரை எத்தனை கொடுமைகளை செய்து பார்த்தான். அவனை அவை எவையும் தொட்டுக் கூடப் பார்க்கவில்லை.

குயின்ஸ் தோட்டத்தில் வீரமுத்துவின் கலியாணம் எல்லோருக்கும் தெரிந்து எல்லோரும் வாழ்த்தி வரவேற்று

எவருக்கும் இல்லாதமாதிரி அநேகர் பங்கு கொண்டமாதிரி அமைந்திருந்தது. கலியாணம் கொண்டாட இடம்தான் போதவில்லை. போட்ட பந்தலும் காணவில்லை. என்றாலும் அடுத்த காம்பராவில் இருக்கும் தொழிலாளர்களின் உதவியுடன் ஒருவாறு வெற்றிகரமாக முடித்துவிட்டான்.

கலியாணம் ஒரு குறையுமின்றி மங்கலகரமாக முடிந்தது. முதல் நாள் தாலி கட்டும், திருமணமும் பெண் வீட்டில் நடந்தாலும், கண்ணம்மாவின் ஆசைப்படி புது மண தம்பதிகளை பெண் வீட்டிற்கு அனுப்பி வைத்தான். மூன்று நாளில் திரும்பி வந்துவிட வேண்டுமென்று கண்டிப்பாக கூறி அனுப்பி வைத்தான். அங்கு இருக்கின்ற காம்பரா இட நெருக்கடி அவனுக்குத் தெரியும். புதிய காம்பராவில் அவன் வந்திருந்து குடும்பம் நடத்துவதைப் பார்க்க அவனுக்கு ஆவலாக இருந்தது.

அவன் நிம்மதியாக இருந்தான். அவனுக்கு ஏற்பட்ட புதிய மனத்திடமும் நம்பிக்கையும், நூற்றுக்கு நூறு வீத நியாயம் இருக்கிற தென்ற எண்ணமும் கொன்பரன்சில் தனக்குச் சாதகமாகவே தீரும் என்ற நம்பிக்கை உணர்வை உண்டாக்கி விட்டிருந்தன. அந்த நிம்மதியான மயக்கத்தில் அடுத்து நட்சத்திரத்தின் கல்யாணத்தையும் வெகு சீக்கிரம் முடித்துவிட நினைவு பண்ணினான்.

ஆனால் இன்று ஒரு நான்கு நாட்களுக்குப் பின்பு, எல்லாம் இழந்தவனைப் போல் தன்னுடைய ஒடுங்கிய காம்பரா வாசலில் வியாகூலத்தால் சிறுகி பாலைவனத்தில் நடந்தவனைப் போல் குந்தி இருக்கிறான். கண்களுக்குள் கண்ணீரின் புகைச்சல். அவனுக்கு என்ன நடந்து விட்டது?

அவன் கண்களுக்கு மிக அழகாகவும் பசுமையாகவும் தெரிந்த காட்சிகள் எல்லாம் இப்பொழுது எரிந்து சாம்பலாகி பாழாய்ப்போனவையாகப் படுகின்றன.

கலியாணம் முடித்தபின் குறித்தபடி கொன்பரன்சுக்குப் போனான். தோட்டச் சங்கத் தலைவர் அண்ணாமலையும் போனார். பெரிய துரையும் வந்தான். கொன்பரன்ஸ் நடக்கின்றபோது அவன் தோளில் சால்வை போட்டு

துரைக்கு சமனுனவனுக நெஞ்சு நிமிர்த்தி இருந்தான். அதற்கு உண்மைகள் தன் பக்கம் என்ற நினைப்புத்தான் காரணம். பிரதிநிதி இராமநாதன் மிகப் புத்திசாலித் தன மாக வாதாடினுர். துரையை உருட்டி எடுத்தார் அப் போது துரைக்கு வியர்த்துக் கொட்டியது. இராமநாதன் தொழிலாளர்களுக்குச் சாதகமான எல்லா அம்சங்களையும் எடுத்து வாதாடினுர். கடைசியில் தீர்ப்பு!

"எது எப்படி இருந்தாலும் துரையின் அனுமதி இன்றி யாருக்கும் எதுவும் செய்ய உரிமை இல்லை. தோட் டத்திற்குள் அனுமதி இன்றி செல்லவே முடியாது. அப்படி சட்டம் இருக்கையில் சின்னக்கலப்பன் காம் பரா கட்டியது சட்ட விரோதம். துரை, காம்பரா கொடுப்பது, கொடுக்காமல் விடுவது வேறு விசயம். அதுபற்றி இப்போது பேச்சில்லை. ஆகையால் துரை காம்பராவை பதினுன்காம் தேதிக்குள் உடைத்து விடலாம்."

சின்னக்கலப்பன் என்ன கம்பீரமாக கலகலப்பாகப் போனுன். கொன்பரன்ஸ் முடிந்து வந்த பொழுது அவனைப் பார்க்கவே முடியாது. ஒரு அகதியைப் போல் அவன் உருவம் மாறி விட்டிருந்தது.

அவனுடைய நீதியான பிரார்த்தனைகளும் எண்ணங் களும் அவமானமாகிவிட நெஞ்சம் நொறுங்கி சீர்குலைந்து போச்சு. மனதில் குன்று போல் உயர்ந்து நின்ற அவ னுடைய பெரிய ஆசைகள் புயற்காற்றில் சிக்கி ஒரு நொடிக் குள் உருவழிந்து போன மண் கும்பம் போலாகி மனம் வெறுமையாகி விட்டது.

இன்று பதினுன்காம் திகதி.

அவன் தன் கைகளால் கட்டிய காம்பராவை உடைப் பதற்கு யார் வருகிறுர்கள் என்று மரண அவஸ்தையில் நெளியும் குழந்தையைப் பார்ப்பதுபோல் உள்ளம் வெந்து புண்ணுகிய நிலையில் அதை வெறித்துப் பார்த்துக்கொண்டே இருக்கிறுன். இவ்வளவு நாளும் துரை, காம்பராவை

உடைப்பதற்கு ஆள் அனுப்பவில்லை. இன்று கடைசி திகதி நிச்சயமாக ஆட்களை அனுப்புவான் என்று கருதினுன்.

அவன் தனிமையில் இருக்கிருன். ஆருயி, நட்சத்திரம் முதலியோர் வேலைக்குப் போய் விட்டார்கள். காம்பராவை உடைக்கும்படி தீர்ப்பு கூறிய அன்று ஆருயி அழுது புலம்பினுள். எல்லோரும் துக்கம் கொண்டாடினர். இன்று அது பழையதாகி விட்டது. அத்துடன் துரை இனி காம்பராவை எந்த விதத்திலும் உடைத்து விடுவான் என்ற உண்மையும். பொட்டு ஆற்றுக்குக் குளிக்கப் போய் விட்டாள். மாசிலான் அவனுடன் இருந்து விட்டு எங்கோ சென்று விட்டான்.

உண்மையில் அவன் நெஞ்சில் இடி விழுந்துவிட்டது. நினைவுகள் உன்மத்தம் பிடித்த நிலை. குந்தியவாறு இரு கால்களையும் ஒடுக்கி, இரு கைகளாலும் கட்டி, குனிந்து தலையை முழங்கால் இடுக்கில் வைத்துக் கொண்டிருக்கிருன். நிலை கலங்கிய நெஞ்சும் சுமையாக இருந்தது. அதன் நரம்புகள் கிண்கிண் என்று குத்தும் நோவு நெஞ்சப்பரப்பில் திரண்டு, புரையோடி வலித்துக் கொண்டிருந்தது. அந்த நெஞ்சோடு இரவு கண் உறங்கிய அவன் ஒரு தொடர் பறுந்து, உடைந்து, உடைந்து, மீண்டும், மீண்டும் தோன்றிய ஒரு கனவு கண்டான்.

அன்ெறுரு நாள் தங்கள் தோட்டத்தைப் பார்ப்பதற்கு பிரித்தானியாவில் இருந்து வந்த சொந்தக்கார வெள்ளையர், அந்த இரு பாரிய உருவங்கள் தான். அவர்கள் ஆமிக்காரன் உடையில் அவனைக் கொல்ல வருவது போல் பின் தொடர்ந்து துரத்தினர். அவன்தான் கட்டிய புதிய காம்பராவைச் சுற்றி சுற்றி ஓடிக்கொண்டிருந்தான். எங்கள் சொத்தில் கை வைக்க நீயார்? என்று துப்பாக்கிகளை நீட்டி பயமுறுத்தினர். அந்நேரம் அவன் ஒரு கோழை போல், கைகால், ஒடுங்கி நின்று எல்லாம் ஒங்க சொத்துத்தான் தொரே! ஒரு பிழை மன்னிச்சிருங்க" என்று கெஞ்சுகின்ற போது கண் விழித்து விட்டான்.

அது அவன் மனதுக்கு விரும்பாத கனவு. அவன் அந்த வெள்ளைக்காரர்களை யிட்டு நினைத்துக் கொண்டு தூங்கவு மில்லை.

விடியற்காலை எழுந்ததும் கவ்வாத்து கத்தியை எடுத்து வைத்துக் கொண்டு காம்பரா உடைக்க யார் வந்தாலும், துரை சரி, வெட்டித் துரத்தியடிப்பதென்ற உறுதியுடன் இருக்கின்றான்.

தொழிலாளர்கள் எவரும் அந்தக் காம்பராவை உடைக்கத் தயாரில்லை. இத்தனை நாளும் துரை காம்பராவை உடைக்காமல் விட்டற்கு அதுதான் காரணம்.

தீர்ப்புக் கூறிய அன்று எத்தனை பேர் வந்து அவனுக்குத் தைரியம் கூறினார்கள். ஊக்கப்படுத்தினார்கள். இராகவன், நொண்டிச் சிலம்பன் முதலியோர் மிக மிகத் தென்பு கூறினார்கள். அண்ணாமலை அவனை சோர்ந்து போகாமல் மிக மிகத் தென்பாக இருக்கும்படி கூறினான். காம்பரா உடைக்குமுன் துரை காம்பரா கொடுத்தாக வேண்டும். அப்படியில்லையென்று உடைத்தால் உடனே போராட்டத்தில் குதிப்போம், என்று கூறினார். சின்னக்கலப்பனுக்கு அது ஒன்றும் திருப்திப் படவில்லை. மனதுக்குச் சரிப்பட்டு வரவில்லை.

எவர் என்ன கூறினாலும் அவனுடைய உணர்வுகளும் அவனுக்குத்தான் பூர்ணமாகத் தெரியும். அவனுடைய சுதந்திரமான ஆசைகள் மலை உச்சியில் கெம்பீரமாக இருந்து கீதம் இசைத்துக் கொண்டிருந்த நேரம் திடிரெனச் சுடப்பட்டு மலையின் அடிவாரப் பாதாள இருளில் விழுந்து கிடந்து துடிக்கும் மைனாக் குருவியைப் போல் ஆகி விட்டன.

அவன் தலையை நிமிர்த்தினான். தலைபாரமாக இருந்தது. கோழிக்கூடுக்குப் பக்கத்தில் உள்ள சிறிய மாதுளை மரத்தில் இரு அடைக்கலங் குருவிகள் ஆனந்தமாகக் கொஞ்சி விளையாடுவதைக் கண்டான். அதைப் பார்க்க வேண்டுமென்று மனம் விரும்பிற்று. நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். மகனின் நினைவு ஓடி வந்து, பெண்

வீட்டுக்குச் சென்ற வீரமுத்து ஜானகியுடன் நாளை இங்கு வருவதாக கடிதமெழுதியுள்ளான். நல்ல நாள் பார்த்துத் தான் பயணம் வைக்கிறுன்.

அவன் ஜானகியுடன் புதிய காம்பராவில் கலியாணத் தன்று நிற்கையில் அவன் முகம் மழையில் குளித்த தேயிலைக் கொழுந்துபோல் தெளிந்து, எந்தூரியம் பூவைப் போன்று மலர்ந்திருந்தது. போகும் போதும் அது மாறவில்லை. நாளைக்கு வருகின்ற நேரத்திலும் அது அப்படித்தான் இருக்கும்.

சின்னக்கலப்பன் மெதுவாக எழுந்து சென்று அக் காம்பராவின் வாசலில் நின்று உள்ளே பார்த்தான். கலியாணத்துக்கு முதல் நாள் வீரமுத்து மனம் வைத்து அதை எவ்வளவு அழகு படுத்தினுன். கலியாணத்துக்கு அவன் நண்பர்கள் கொடுத்த வாழ்த்துப் பத்திரங்கள், பக்கச் சுவரில் தொங்கிக் கொண்டிருந்தன. இராகனும், நொண்டிச் சிலப்பனும் அளித்த புரட்சிகர தலைவர்களின் படங்கள் ஒருபக்கம் இருந்தன. அவை அவன் கண்களை உறுத்தவில்லை. வீரமுத்து தானும் மனைவியும் படுத்துத் தூங்குவதற்காக புற்பாயும், இரண்டு தலையணைகளும் ஒரு பெட்சீட்டும் வாங்கிக் கொண்டு வந்து அங்கே பவுத்திரமாக வைத்திருந்தான். அது இன்னும் பாவிக்கப்படவில்லை.

அவற்றை கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தத சின்னக்கலப்பன் திரும்பி வந்து வாசலில் குந்திக் கொண்டான். அவன் கண்கள் கலங்கின. மகனுக்கு கலியாணம் நடத்திய மகிழ்ச்சியில் பூரித்திருந்த பிதா இருதயம் இன்று காய்ந்து வரண்டு தாகத்தில் அலையும் உயிரைப் போல் அவஸ்தைப் படுகின்றது.

வெய்யிலில் கிடந்த அவனுடைய வெள்ளை நாய் உடலை முறித்துக் கொண்டு வந்து அவனின் கால் அருகில் சுருண்டுப் படுத்தது. அதை அவன் காணவில்லை. மாதுளை மரத்தில் இருந்த சிட்டுக் குருவிகள் இறங்கி கானுக்குப் பக்கத்தில் இரைபொறுக்கின.

'டக்' கென்று ஒரு நினைவு எழுந்து அவன் கையில் கத்தியைப் பிடித்துக்கொண்டு முன்னால் விரிந்திருக்கும் மலைப் பரப்பை நன்ருக நோட்டம் விட்டான். அவன் கண்கள் காம்பராவை உடைக்க வரும் ஆட்களை தேடிக்கொண்டிருந்தன. யாரையும் காணேம். தூரத்தில் கொழுந்துக் காம்பராவுக்குப் பக்கத்தில் விமுக்கனும், மாசிலானும் வந்துகொண்டிருந்தார்கள். கத்தியைப் பக்கத்தில் வைத்துவிட்டு சும்மா இருந்தான்.

அந்தக் காம்பரா கட்டுவதில், அவனுக்கு உதவி செய்த சிவஞானம் என்னும் பையன் மூன்ருவது காம்பரா வாசலில் நின்று விட்டு, அவனை நோக்கி வந்தான். அவன் தன் தங்கையை இடுப்பில் காவிக்கொண்டு சின்னக்கலப்பனுக்கு முன்னால் வந்து நின்ருன். அசையாது எங்கோ பார்த்தவாறு குந்திக்கொண்டிருக்கும் அவனை நன்ருகப் பார்த்தான். திரும்பி அவனைப் பார்க்கவில்லை. அவனுக்கு யோசனை.

"கலப்பண்ணே! ஏன் இதில சும்மா உக்காந்துக்கிட்டிருக்கே? உங்கள மலையில இருந்து விரட்டிப்புட்டாங்களா?"

அவன் மிக ஆவலாகக் கேட்டான்.

சின்னக்கலப்பனின் காதில் அவன் கேட்டவைகள் விழுந்தன. அவன் பதில் ஒன்றும் கூறவில்லை. தலையைத் திருப்பி அவனைப் பார்த்து விட்டிருந்தான்.

"வீரமுத்தண்ணே எப்ப வருகுது? இந்தக் காம்பரா அவங்களுக்கு கட்டினதுதானே?"

சின்னக்கலப்பன் சிவஞானத்தின் முகத்தை ஏறிட்டுப் பார்த்துவிட்டு அவன் வயிற்றைத் தடவியவாறு சொன்ஞன்.

"இந்த ஒலகத்திலே நமக்கெண்ணு ஒண்ணுமில்லேயடா!"

அவன் கூறியதைப் புரிந்து கொள்ள முடியாத சிவஞானம் சும்மா சிரித்துவிட்டு நின்ருன். ஆனல் சின்னக்கலப்பனின் கோலத்தைப் பார்க்க அவனுக்கு அனுதாபம் பிறந்தது.

அடைக்கலங் குருவிகள் கீச்சிடுவது சின்னக்கலப்பனின் காதில் விழுகின்றது.

அப்போது விமுக்கனும், மாசிலானும் கையில் ஒவ்வொரு தடியும் கொண்டு, அவனுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தனர். மாசிலானின் முகத்தில் கோபமும் துக்கமும் கலந்திருந்தன.

''கலப்பண்ணே, வீரமுத்தண்ணே எப்ப வருது?''

கொஞ்ச நேரம் சும்மா இருந்து பீடியைக் குடித்த விமுக்கன் கேட்டான்.

''நாளைக்கடா!''

விமுக்கன் மனதில் சூடேற, அந்தக் காம்பராவைப் பார்த்தான். வீரமுத்துவின் நினைவு வந்தது. ''அண்ணே, யார் காம்பரா ஒடைக்க வந்தாலும் அடிச்சுக் கலைப்பம். ஆர் வரப்போருன்? அந்தக் குட்டையன் கங்காணிதான் வருவான்.''

''ஆமா, உதைச்சுக் கலைப்பம். வந்தது வரட்டும்!''

மாசிலான் கையில் உள்ள தடியை நிலத்தில் அடித்துச் சொன்னுன்.

சின்னக்கலப்பன் திரும்பி பக்கத்தில் வைத்திருக்கும் கத்தியைப் பார்த்தான்.

''இங்க பாரடா கத்தியை, இண்ணக்கி தொர வந்தாலும் வெட்டுவேன். ஆமா, அது நெசம்!''

அவனுடைய குரல் கடுமையாத்தான் இருந்தது. ஆனுல் உள்ளம் நொருங்கிப் பலயீனப்பட்டுப் போய்த்தான் இருந்தது.

வெண்ணிற வண்ணத்திப் பூச்சிகள் கூட்டம் கூட்டமாக சோடி சேர்ந்து சுதந்திரத்தின் உருவங்களாக, காற்றைக் கிழித்துக்கொண்டு, மலைகளைக் கடந்து பறந்து கொண்டிருந்தன.

பறவைகளுக்கு கூடுகளும், பாம்புகளுக்குப் புற்றுகளும் உள்ள இந்த பாரிய பூமியில் நேர்மையாக உழைக்கும் உயிர்களுக்கு ஒரு சிறிய இடம் இல்லாது கவலைப்படுவதேன்?

சின்னக்கலப்பன் காம்பராவை, அவன் கட்டிய குடிசையைப் பார்த்தவண்ணம் கால்களை கைகளால் ஒடுக்கிக் கட்டியவாறு, துக்கத்தில் கருகிப்போய் இருந்தான்.

இன்று துரை எப்படியும் அந்தக் காம்பராவை உடைக்கத்தானே வேண்டும்?

## 18

காம்பராவை உடைப்பதற்கு நேற்றுத் துரை யாரையும் அனுப்பவில்லை. தொழிற்சங்க கந்தோர் அதிகாரியால் காம்பரா உடைப்பதற்கு குறிக்கப்பட்ட கடைசித் திகதி நேற்று; அது போய்விட்டது. சின்னக்கலப்பனுக்கு மீண்டும் ஒரு நம்பிக்கை புதிய உருவில் பிறந்தது. இரவு யோசித்து, யோசித்து தூக்கமின்றி புரண்ட அவன், காலை எழுந்ததும் சோர்வில் இருந்து தன்னை மீட்டு, உஷாரை வரவழைத்துக் கொண்டு, யாருக்கும் சொல்லாமல் கெட்டவல கடைத்தெருவுக்கு வந்து பஸ்ஸில் ஏறி பதுளையில் உள்ள தொழிற்சங்கக் காரியாலயத்துக்கு வந்தான். அவன் முகத்தில் படிந்திருந்த துக்கமும், பயச் சோர்வும் கலந்த மந்தமான நிறங்களை, மேவி புதிய நம்பிக்கை ஒளிக் கதிர்களை கீறிக் கொண்டிருந்தது.

காலையில் எழுந்து சாமியைக் கும்பிட்டு, நெற்றியில் திருநீற்றைப் பூசிவிட்டிருந்தான்.

என்றுமில்லாத பக்தியோடு அன்று அவன் வணங்கினான்.

''எப்போது பஸ்ஸில் இருந்து இறங்குவேன்'' என்று துடித்துக் கொண்டிருந்த அவன் பதுளையில் இறங்கியதும் நேராக தொழிற்சங்க காரியாலயத்தை நோக்கி ஓடினான்.

தொழிற்சங்கக் காரியாலயத்தில் பிரதிநிதி இராமநாதன் மேசைக்கு முன்னால் இருந்தார். பல தொழிலாளர்கள் தங்கள் தோட்டத் தகராறுகளுக்காக வந்திருந்தார்கள். சின்னக்கலப்பன் காரியாலயத்துள் அவதி அவதியாகச்

சென்று தோளில் கிடந்த துண்டால் முக வியர்வையைத் துடைத்து விட்டான்.

"வணக்கம்!"

"வணக்கம் வாங்க என்ன விஷயமா வந்தீங்க? துரை வேலே கொடுக்க மறுத்திட்டாரு?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் இராமநாதன். "அதில்ல!" என்று சொல்லிக் கொண்டு தான் கூறப்போகும் விஷயத்துக்குப் பதில் அறியும் ஆவலுடன், "என்ன ஏன் வந்தீங்கள்!" என்று ஆச்சரியத் துடன் கேட்டார் இராமநாதன். அவன் வாங்கு விளிம்பில் இருந்து கொண்டு சொன்ஞன்.

"சட்டப்படி நேத்து நம்ம காமராவை உடைச்சிருக் கணும், ஆஞ நேத்து உடைக்கல. யாருமே வரல்ல. இண்ணக்கி பதிஞன்காம் திகதி. இனி சட்டப்படி காம் பராவை உடைக்க முடியாதுதானுங்களே?"

குரலில் மிக அவசரம் தெரிந்தது.

அவன் தனக்குப் பிறக்கப்போகும் குழந்தை தப்புமா? என்றறியும் தகப்பனின் ஆவலுடன் இராமநாதன் உதடு களின் அசைவை எதிர்பார்த்திருந்தான்.

இராமநாதன் ஆவலோடு தன்னே எதிர்பார்த்திருக்கும் சின்னக்கலப்பனே நோக்கிஞர். அவனுடைய களங்கமற்ற புத்தியையும் அவனுடைய வார்த்தைகளுக்குள் அமைந்த ஆதார ஆசைகளேயும் புரிந்து கொண்டார். வந்திருக்கும் மற்றத் தொழிலாளர்களேயும் பார்த்தார்.பின்பு சொன்ஞர்.

"சின்னக்கலப்பன், நீங்கள் நினேப்பதுபோல சட்டங்கள் உங்களேப் பாதுகாக்க உண்டாக்கப்பட்டவையல்ல. இந்தச் சட்டங்கள் எல்லாம் முதலாளிகளேப் பாதுகாப்பதற்குத் தான் உண்டாக்கப்பட்டவை. இவை எல்லாம் அந்தக் காலத்தில் அவங்க வைத்த சட்டங்கள். வெள்ளேக்காரங் களுக்காக வைத்த சட்டங்கள்தான். இன்றைக்கும் சில திருத்தங்களுடன் இருக்கு. அதாவது அவங்க சொத்தைப் பாதுகாக்க வைச்சிருக்காங்க. இவுங்க எண்ணப்படி நீங்க கூலி வேலே செய்யும் கூலிகள். உங்களுக்கு அங்கு உழைப் பதைத் தவிர எந்த உரிமையும் கிடையாது. அவுங்க நினேத்த

நேரம் நினைத்ததைச் செய்யலாம். உங்க பக்கம் நியாயம் இருக்கிறது. இருக்கத்தான் செய்யும். ஆனல் சட்டம் அப்படி! சட்டமெல்லாம் ஆர்பக்கம்? இந்த சட்டங்களெல் லாம் தொழிலாளி வர்க்கத்தினுல் உருவாக்கப்பட்ட சட்டங் களா? முதலாளி வர்க்கத்தினுல் உருவாக்கப்பட்ட சட்டங் கள் எப்படி தொழிலாளிகளுக்கு ஆதரவாக இருக்க முடியும்? சொல்லுங்க?''

இராமநாதன் அவனைப் பார்த்து யோசித்தவாறு இருந் தார். சின்னக்கலப்பன் முகத்தில் அந்தப் புதிய நம்பிக்கை யொளி சிறிது தூரப் போய்க் கொண்டிருந்தது. ஒரு கனவு மறந்து கொண்டு போவதுபோல இருந்தது.

''நாம் பரம்பரைமாக தோட்டத்திலதானுங்களே வேலை செய்து வாறமுங்க.''

அவன் மனத்தில் எவ்வளவு தவிர்ப்பு இருக்கிறது?

இராமநாதன் அர்த்தத்தோடு சிரித்துவிட்டு தொடர்ந்து சொன்னர். ''இந்த நீதியை நாங்க யாரிடம் கேட்கிறதுங்க? தோட்டங்கள் அந்நியனுன வெள்ளைக்காரன் கையிலே இருக்கு. சட்டங்களும் அவங்களைப் பாதுகாக்க வைச்சவை தான். அரசாங்கம் அவர்களுக்கு சாதகமானது. கொடுமை களைச் செய்வது யார்? முதலாளிகள்! ஆட்சி அதிகாரத்தில் இருப்பது யார்? முதலாளிகள். தோட்டங்கள் அந்நிய முதலாளிகள் கையில். சட்டங்கள் அவர்களால் உண்டாக்கப் பட்டவை. இந்த சமுதாய அமைப்பு அது? முதலாளித்துவ சமுதாய அமைப்பு. இத்தனையும் தொழிலாளி வர்க்கத்துக் குச் சாதகமாகவா இருக்கின்றன? இத்தனையும் தொழிலாளி வர்க்கத்துக்கு எதிரானவை? முதலாளிகள் செய்யும் கொடு மைக்கு முதலாளிகளிடம் சென்று நீதி கேட்டால் கிடைத்து விடுமா? ஒரு ஆட்டுக்குட்டி ஒரு ஓநாய்க்குப் பயந்து இன்னெரு ஓநாயிடம் தஞ்சம் புகுந்தால் அது ஆட்டுக் குட்டியை பாதுகாத்திடுமா?''

இராமநாதன் அவனையும் அங்கு வந்திருக்கும் மற்றத் தொழிலாளர்களையும் சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந் தார். சின்னக்கலப்பன் சுவரில் தொங்கிய லெனின் படத்

ளதயே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு யோசனை ஓடவில்லை. கோப உணர்ச்சிகளின் பாரம் மனதில் அதிகரித்துக் கொண்டிருந்தது.

"இந்தத் தொழிற்சங்கங்களெல்லாம் என்னத்துக்கையா இருக்கணும்?"

வார்த்தைகள் கோபத்தின் துண்டுகளாக விழுந்தன.

இராமநாதன் அவனை நிமிர்ந்து பார்த்தார்.

"சின்னக்கலப்பன், நீங்க நல்ல கேள்வி கேட்டீங்க? இந்தக் கேள்விதான் ஒவ்வொரு தொழிலாளியும் கேட்கும் காலம் வரணும். ஆமா, தொழிற்சங்கமெல்லாம் என்னத் துக்கு இருக்கு? உங்களுக்காகத்தான் இருக்கு. இவ்வளவு காலமும் தொழிற்சங்கமெல்லாம் உங்களுக்காகத்தான் சேவை செய்திருக்கு! ஆனு உங்க துன்பங்கள் தொலைந்து போச்சா? அல்லது மாறியென்றுலும் இருக்கின்றதா? இல்லை; அடிமைத்தனம் அதே உருவில்தான் இருக்கின்றது. வாழ்க்கை பழைய இருளில்தான் மூச்சு விட்டுக்கொண்டிருக் கிறது. தொழிற்சங்க போராட்டங்களினுல் இவை ஏன் மாறவில்லை? நீங்கள் யோசித்து பார்க்கவில்லையா? தொழிற் சங்க போராட்டம் எப்படிப்பட்டது? முதலாளி வர்க்கம் அண்ணைக்கி, அண்ணைக்கி செய்கிற கொடுமைகளை எதிர்த்து அதே முதலாளி வர்க்கத்துடன் பேசி அவர்கள் வைத்த சட்டங்களுக்கமைய சமரசமாக தீர்த்து வைக்கிறது. இது தான் நடக்கிறது. ஆனுல் முதலாளி வர்க்கம் அப்படியே தான் இருக்கிறது. தொழிலாளி வர்க்கத்துக்கு பொருந்தாத முதலாளித்துவ சமூக அமைப்பு அப்படியேதான் இருக்கிறது. முதலாளி வர்க்கம் செய்யிற கொடுமைகளுக்கு காரணம் என்ன? முதலாளித்துவ சமுதாய அமைப்பு இருப்பதுதான். நாம் ஏன் சம்பள உயர்வு கேட்கிறேம். முதலாளி வர்க்கத் தின் சுரண்டல் இருப்பதுதான்? அதை யாரிடம் கேட்கிறேம்? முதலாளி வர்க்கத்திடம். ஏன்? முதலாளி வர்க்கம் இருக்கிற படியாலும் தொழிலாளி வர்க்கத்தைச் சுரண்டுகின்றபடி யாலும்தான். தொழிற்சங்கங்கள், முதலாளித்துவ சமூக அமைப்பு இருப்பதினுல் அன்றுடம் ஏற்படுகின்ற தொழி

லாளி வர்க்கத்துக்கு துரோகமான அதன் விளைவுகளைத்தான் எதிர்த்துப் போராடுகின்றன. ஆனால் முதலாளித்துவ சமூக அமைப்பையல்ல ? தொழிற்சங்கங்கள் தொழிலாளி வர்க்கத்திற்கு முதலாளித்துவ சமூக அமைப்பை எதிர்த்துப் போராட வழி காட்டாவிட்டால் அதன் அர்த்தம் என்ன? அந்த அமைப்பை அவை விரும்புகின்றன என்பதுதானே? அப்படியானால் அவை யாருக்கு சேவை செய்கின்றன? முதலாளி வர்க்கத்துக்குத்தான். என்ன சொல்றீங்க. இது உண்மையா இல்லையா ?

"ஆமாங்க"

"சரிதானுங்க"

அங்கிருந்த தொழிலாளர்கள் கூறிக்கொண்டனர். சின்னக்கலப்பன் புருவங்களை வெட்டியவாறு இராமநாதனைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"நம்ம சங்கம் தொழிலாளி வர்க்கத்திற்கு இதைத்தான் கூறுகிறது. தொழிற்சங்க போராட்டத்தினால் வேலையில்லை. தொழிலாளர்களே! முதலாளித்துவ சமூக அமைப்பை எதிர்த்துப் போராடுங்கள்! முதலாளித்துவ சமூக அமைப்பை மாற்றியமைக்க ஐக்கியப்பட்டு போராடுங்கள். தொழிற்சங்க போராட்டங்களை அரசியல் போராட்டங்களாக மாற்றுங்கள்."

"சின்னக்கலப்பன் நான் சொல்லுறன். தொழிற்சங்கம் உங்களுக்காகத்தான் இருக்கு. இவ்வளவு காலமும் எல்லா தொழிற்சங்கமும் உங்களுக்காகத்தான் சேவை செய்திருக்கு! ஆனா உங்க துன்பங்கள் தொலைஞ்சு போச்சா? வாழ்க்கை பழைய நிலையில், பழைய உருவத்தில், பழைய இருளில் தானே கிடக்கு. அதில் ஏதாவது மாற்றம் உண்டா? அடிமைத்தனம் போய்விட்டதா ?

"இல்லிங்க!"

"ஆமாங்க!"

அங்கிருந்த தொழிலாளிகள் கூறிக்கொண்டனர்.

இராமநாதன் மௌனமாக இருந்தார். அவர்களுக்கிடையில் கொஞ்ச நேரம் அமைதி நிலவியது.

"இதைத்தான் உங்களுக்கு எப்பவும் சொல்லிக்கொண்டு வாறம். இப்பவும் சொல்லுறம். ஏன் இந்த நாட்டில வெள்ளைக்காரன் இப்பவும் தோட்டங்களை வைச்சிருக்கான். உங்களுக்குச் சேவை செய்யவா? ஒரு அட்டை நம்மை யறியாமல் நம்ம இருதயத்துக்குள்ளே புகுந்து கடித்து இரத்தம் குடித்துக் கொண்டிருந்தால் நமக்கு எப்படி இருக்கும்? நாம் என்ன செய்வம்? வேறு ஒரு காரணத்துக்காகவு மின்றி, இலாபத்துக்காக மட்டும் இருந்து கொண்டு நியாய மாக உழைக்கும் உங்களையும், நமது நாட்டையும் அநீதி யாகச் சுரண்டிக்கொண்டு, தனது நாட்டுக்கனுப்பும் வெள்ளைக்காரர்களை இந்நாட்டைவிட்டு விரட்டாத வரை உங்கள் துன்பங்கள் தீருமா? சொல்லுங்க? வருஷா வருஷம் கோடி கோடியாக இலாபமாகக் கொண்டுபோகும் வெள்ளைக்காரன் அவன் சொத்தில், தோட்டத்தில் நீங்க தொட சும்மா இருப்பானு; நீங்க உங்க எண்ணெப்படி ஒரு காம்பராவை கட்ட விடுவானு? உங்கள் வாழ்க்கையின் எதிரி யார்? வெள்ளைக்கார முதலாளிகள். அவர்கள் மட்டு மல்ல. இந்த சுரண்டும் முதலாளித்துவ சமூக அமைப்பு. வெள்ளைக்காரனை வெளியேற்றி தொழிலாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி இந்த அசிங்கமான சமுதாய அமைப்பை மாற்றி அமைக்காவிட்டால் தொழிலாளி வர்க்கத்திற்கு விமோசனம் இல்லவே இல்லை. ஆகவே ஒவ்வொரு வரும் இந்த சமூக அமைப்பை எதிர்த்துப் போராட உறுதி கொள்ள வேண்டும். போராடத் தயாராக வேண்டும். தொழிலாளி வர்க்கம் தன் விடுதலையை போர்க்களத்தில் தான் பெறவேண்டும்."

அவர் கூறிவிட்டு முன்னுல் இருந்த தொழிலாளர்களை நோக்கினுர்.

"ஆமாங்க!"

"நீங்க சொல்றது சரிதாங்க."

பிரதிநிதி இராமநாதனின் முகம் வெறுப்புடன் கோணிக்கொண்டது.

''இந்த ஆமா போடுற புத்திதான் உங்களுக்குக் கூடாது. எதற்கும் ஆமாம் போடுவீங்க. ஆனு யோசிக்க மாட்டீங்க. உங்க மோசமான நிலைக்கு இதுதான் காரணம். இப்ப இருக்கிறதை விட ஒரு நல்ல வாழ்க்கை உங்களுக்கு இருக்கிற தென்று அறிஞ்சா? இப்ப நடக்கிறது அநீதி எண்ணுபட்டா அதை மாத்தரத்துக்கு தயாரில்லை என்னு? நீங்க இந்த நிலையில்தான் காலமெல்லாம் இருக்கணும். உங்க தலைவிதி உங்க கையிலதான் இருக்கு. யோசித்துப் பாருங்க!'' என்று கூறிவிட்டு சின்னக்கலப்பனைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மற்றத் தொழிலாளர்கள் மௌனமாக இருந்தார்கள். பிரதிநிதி கூறியதைக் கேட்டுக்கொண்டு நின்ற சின்னக் கலப்பன் அவரை ஒருமுறை பார்த்துவிட்டுப் பேசாமல் இருந்தான். முகம் இருண்டு விட்டது. பிறகு சொன்னுன்.

''நீங்க சொல்றதுக்கு நா, எப்பவுந் தயாராகத்தானிருக்கிறேன், இப்ப இந்தக் காம்பரா விஷயத்தில என்ன சொல்றீங்க? எனக்கொரு முடிவு வேணும்!''

''சின்னக்கலப்பன் நீங்க போய், துரை காம்பரா கொடுக்காம நீங்க கட்டின காம்பராவை உடைச்சாண்ணு சொன்னு நான் தலைவருக்கு சொல்லியிருக்கிறேன், ஸ்டிரைக் கொண்ணு போடுவம். தொழிலாளர்களுக்கு நல்ல காம்பரா கொடுண்ணு ஒரு போராட்டம் தொடங்கலாம்தான். கலகம் பிறந்தால்தான் நியாயம் பிறக்கும். அதில்ல சந்தேகமில்ல. ஆனு அதற்கு ஒரு தோட்டம் மட்டும் தயாராக இருந்தாப் போதுமா? என்ருலும் குயின்ஸ் தோட்டத்தில் போராட்டத்தை ஆரம்பிப்போம். காலம் நமக்குச் சாதகமாகத்தான் வந்து கொண்டிருக்கும். பயப்படாதீங்க!'' என்று கூறிய இராமநாதன் சிகரெட் ஒன்றை எடுத்து பற்ற வைத்தார்.

அவன் சொல்வதற்கு ஒண்ணுமில்லை. மௌனமாக வெளியே வந்தான். அவன் எண்ணி வந்ததற்கு மாருகவே விஷயம் இருக்கிறது. அந்தக் காம்பராவைக் கட்ட எவ்வளவு பாடுபட்டான்.

நேராக பஸ் நிலையத்துக்கு வந்து பஸ் ஏறி கெட்டவல சந்தியில் இறங்கினுன். அவனின் உடற்பாரம் குறைந்து விட்டது போல் இருந்தது. எல்லாச் சுமையும் நெஞ்சுக்குள் நிறைந்து கொண்டது. அவனுடைய பாரம் போன உடலை அவனுக்கு சுமக்க சுமையாகப்பட்டது. முகம் களையிழந்து மேலும் சுருங்கிவிட்டது. வழியில் சந்திக்க யாரையும் நிமிர்ந்து பார்க்கவில்லை.

பிரதிநிதிகள் சொன்னவைகள் உள்ளத்தில், வெள்ளத்தின் குமுழிகள் போல் புதிது புதிதாக உருவாகி உடைய வாழ்க்கையின் தோல்விகள், ஆசை அழிவுகள் முட்களாக நெஞ்சத்தின் உட்சதைகளைப் பிய்த்துக்கொண்டு மேல் எழ யாருடனும் போசனமின்றி தெருவைப் பார்த்தவண்ணம் மெதுவாக நடந்து கொண்டிருந்தான். அவனது உடலைத் தழுவுவது உலர்ந்த மலைக் காற்றுதான்.

''ஏ சின்னக்கலப்பா, என்ன நீ. எங்கே சல்லி? இரண்டு மாசமாச்சு. வட்டியும் இல்லே, முதலும் இல்லே!'' ஆற்றில் குளித்துவிட்டு வந்த சின்னபாய், அவன் வட்டிக்கி வாங்கி காம்பராவுக்கு தாரம் வாங்கிய பணத்தைப்பற்றிக் கேட்டான்.

அவன் தலையை உயர்த்திப் பார்த்தான்.

''மறு சம்பளத்திற்கு கொடுத்திடுறன் பாயி!''

அவன் வார்த்தைகள் ஜீவனின்றி லேசாக ஒலித்தன. தோட்டத்தின் மேல் ரோட்டில் தண்ணீர்ப் பூவைச் சிந்தி இரைத்துக்கொண்டிருக்கும் ஆற்று வீழ்ச்சியைக் கடந்து கொண்டிருக்கும்போது, புல்லு அறுக்கும் மாணிக்கம் ஓடி வந்தான். அவன் நெஞ்சம் களைத்தது.

''அண்ணே, உங்க புதுசா கட்டின காம்பராவை ஒடைக்கிருங்க. பெரிய தொரையும் நிக்கிருரு!''

மாணிக்கமும் அதைக் கட்ட உதவி செய்தவன். அத் துடிப்பு அவனுடைய குரலின் வேகத்தில் தெரிந்தது.

சின்னக்கலப்பன் அவனை பரிதாபமாக கைகால் இல்லாத கோழைபோல் நிமிர்ந்து பார்த்துவிட்டு சலனமின்றி நடந்து கொண்டிருந்தான்.

''என்னண்ணே, ஒங்கபாட்டுக்கு போறீங்க?''

மாணிக்கம் அவனுடைய பின் உருவத்தை அதிசயமாகப் பார்த்துக்கொண்டு சொன்ஞன். அந்தக் காம்பராவைக் கட்டுகின்ற நேரத்தில் கத்தியுடன் நின்ற சின்னக்கலப்பனே அவன் பார்த்திருக்கிருன். சின்னக்கலப்பன் மார்போடு இரு கைகளேயும் கட்டியவாறு அடியெண்ணி நடந்து கொண்டிருக்கிருன். அவனுடைய நெஞ்சத்தில் மகனும் ஜானகியும் கால் வைத்து சிரிப்போடு நடந்து வருவதைப் போல் இருக்கிறது. வீரமுத்துவும் மனேவியும் நிச்சயமாக இங்கு வருவார்கள். நிச்சயமாக அவர்கள் குதூகலமாக இன்றைக்கு வருவார்கள்.

அவர்கள் வந்து விட்டார்களோ?

இதை நினேத்ததும் மந்தைக் கூட்டத்தை விட்டுச் சிதறிய ஆட்டுக்குட்டியைப்போல் அவனுடைய மனம் திசை தெரியாமல் அல்லலுற்றுக் கத்திக் கொள்கிறது. நெஞ்சு மேலும் பாரமாகி வேதனேப் புகையினுல் நிரம்பி மங்கப் படுகிறது.

இரு கைவிரல்களேயும் இறுக்கிப் பொத்திக் கொண்டான்.

மனேவியோடு உறங்குவதற்கு ஒரு ஒதுக்கிடம் இல்லே யென்ற காரணத்தினுல் கல்யாணம் வேண்டாமென்று கூறிய வீரமுத்து இப்பொழுது என்ன செய்யப் போகிருன்?

மேல் ரோட்டில் இருந்து அவனிருக்கும் லயத்துக்குச் செல்லும் படிக்கட்டுக்களின் முதற்படியில் கால்வைத்தவாறு லயத்தை நோக்கினுன்.

அங்கே அவன் கைகளால் கட்டிய அழகான காம்பராவை, குட்டையன் கங்காணி, மாரியன் கங்காணி, ஏழுமலேக் கணக்கப்பிள்ளே ஆகியோர் உடைத்தெறிந்து கொண்டிருந்தார்கள். தண்ணீர்க் குழாயடியருகே பெரிய துரை கையில் பிரம்புடன் தலேயில் தொப்பி அணிந்தவாறு கம்பீரமாக நின்று கொண்டிருந்தான். அவனேச் சுற்றி லயத்து நாய்கள் குரைத்துக்கொண்டு நின்றன. அவைகள் தங்கள் இடத்துக்கு ஒரு அந்நியன் வந்திருப்பதைக் கண்டு அவனேக் குரைத்துக் கலேக்க முயல்கின்றன.

''டேய் வெள்ளைக்கார வேசமவனே! டே களவாணி! நான் என் ஒட்டுக் கையிலே கட்டின காம்பராவை ஒடைக் கிறியா? ஒடை நீ, நீங்க நாசமாப் போவீங்க!''

அவன் ஆத்திரத்தின் உந்தலால் கல்லொன்றை எடுத்து துரை நிற்கும் பக்கமாக வீசி எறிந்தான். மனம் அடங்கினுல் தானே? கைகள் கோபவுணர்ச்சியினுல் நடுங்கிக் கொண் டிருந்தன.

சின்னக்கலப்பனின் நெஞ்சம் நொருங்கிவிட்டது. அவன் இரண்டு அடிகள் எடுத்து வைத்து இறங்கினுன். ஆனுல் இறங்க முடியவில்லை. கால்கள் சோர அவன் மூன்ரும் படி தியில் குந் இருந்து அவர்களையே கண்வெட்டாது பார்த்துக் கொண்டிருந்தான். உதவிக்கு யாருமற்ற அனுதியாக உணர்வுகளால் இதயம் பீதிக்கப்பட மூச்சுவிட்டுக் கொண் டிருந்தான்.

கண்ணீர் கண்களின் சதைகளை எரித்துக் கொண்டு கன்னங்களால் வழிந்து கொண்டிருந்தது. அவனுடைய அந்தக் கண்களுக்கு சின்னுபின்னப் படுத்தப்படும் காம்பரா வின் மத்தியில் வீரமுத்து வாங்கி பவுத்திரமாக வைத்திருந்த புற்பாயும் இரண்டு தலையணைகளும், உடைப்பவர்களின் கால் களுக்கருகே அமுக்குப்பட்டுக் கிடப்பது தெரிகிறது.

அடைக்கலங் குருவிகள் ஆனந்தமாக கீச்சிடுவது அவ னுடைய காதில் விழவில்லை. வெள்ளைநிற வண்ணுத்திப் பூச்சிகள் பறந்து கொண்டே யிருந்தன.

அவ்வளவு நேரம் செல்லவில்லை.

''கலப்பண்ணே, எழுந்திரு!''

குடல் தெறிக்க ஓடிவந்த விமுக்கன் அவன் முதுகில் கை வைத்துக் கத்திக் கூறினுன். சின்னக்கலப்பன் துடிப்பின்றி இருந்தவாறு தலையைத் திருப்பிப் பார்த்தான்.

''அண்ணே, புஞ்சிபண்டாவுக்கு தொரை கைப்பொல் லால அடிச்சு மண்டை உடைஞ்சு போச்சு.''

''என்னடா?''

''ஆமா புஞ்சுபண்டாவும், அடைக்கலண்ணனும் காம் பிரா ஒடைக்கக் கூடாதென்று போய் தடுத்தாங்க. ஆத்திரங்

கொண்ட தொரை இரண்டு பேருக்கும் அடிச்சுப் போட்டாண்ணே?''

''கொப்பராளே, அவ்வளவு தூரத்துக்குப் போயிட்டாஞ?''

அவனுக்கு அவை ஒன்றும் தெரியாது. அவை நடந்து ஒரு மணித்தியாலத்துக்கு மேலாகிவிட்டது.

''புஞ்சிபண்டாவும் அனடக்கலனும் எங்கயடா இருக்காங்க இப்ப?''

''அதோ பாரண்ணே!''

விமுக்கன் கறுத்த ரோட்டைச் சுட்டிக் காட்டிஞன்.

சற்றுத் தூரத்தில் கறுத்த ரோட்டில் தலைவர் அண்ணுமலை, சொத்திச் சிலம்பன், வேலு, பாக்கியம், புஞ்சிபண்டா, முதலியோர் கூட்டமாக ஆவேச உணர்ச்சி தெறிக்கும் வேகத்தில் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் வீரமுத்துவும் ஜானகியும் அதே வேகத்தில் வந்து கொண்டிருக்கிருர்கள். முன்னதாகவே தோட்டத்துக்கு வந்த வீரமுத்துவும் ஜானகியும் காம்பரா உடைப்பதைக் கண்டு நேராக தலைவரிடம் சென்றிருக்க வேண்டும்.

அவர்களைக் கண்ட சின்னக்கலப்பன் ஒரு நொடிக்குள் உதையப்பஞகி நின்ருன்.

''டே வேசமவனே! வெள்ளைக்காரப் பயலே.''

அவன் தொண்டை கிழிய தன் பெலமெல்லாம் கூட்டி ஆவேசமாகக் கத்திஞன்.

''மலைகளைப் பாரண்ணே!''

விமுக்கன் மலைச்சரிவுகளைக் காட்டிஞன். எல்லாத் தொழிலாளர்களும் ஆண்களும், பெண்களும் வேலையை நிறுத்திவிட்டு கூடைகள், முள்ளு, மண்வெட்டி சகிதம் தெருவுக்கு இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

நேற்றிரவே அண்ணுமலை, வேலை நிறுத்தம் போட வேண்டிவரும். அதஞல் எல்லோரும் ஆயத்தமாக இருக்கும்படி கூறியிருந்தான்.

பழனி, முண்டன், பொன்னையன், இராசு, சுருட்டன், கலப்பையா, பண்டா, திசநாயக்கா, முதலியோர் பக்டரியி

லிருந்து கூட்டமாக வந்து கொண்டிருந்தனர். பக்டரியிலும் வேலை நிறுத்தம் செய்யப்பட்டுவிட்டது. அவர்களுடன் சேர்ந்து இராகவனும் வந்து கொண்டிருந்தான்.

இராகவன், அன்று தொழிற் சங்கத் தலைவர் வந்து கூட்டம் போட்டபோது எழுதிய சுலோக அட்டைகளை எடுத்துக் கொண்டு வந்து தொழிலாளர்களிடம் கொடுத்தான். அவை அவர்களின் கைகளில் உயர்ந்து நின்றன. இராகவன் செங்கொடியை உயர்த்திப் பிடித்திருந்தான்.

காத்தன், சோனமுத்து, சிங்காரவேல், அடைக்கலம், சிவகாமி பெருமாள், ஊமையன், சரவணம் முதலியோர் மலைகளில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

சகலரும் இறங்கி வருவதைப் பார்த்துக்கொண்டு நின்ற சின்னக்கலப்பனின் மூச்சினிலே சக்தி பிறந்து கொண்டிருந்தது.

''அண்ணே மத்த டிவிசன்களுக்கும் ஆள் அனுப்பியாச்சு. ஸ்ரைக் அடிக்கும்படி சொல்லி, இப்ப அவங்களும் ஊர்வலத்தில் வருவாங்க!'' விமுக்கன் உற்சாகத்தோடு சொன்னான்.

சின்னக்கலப்பன் தோளில் கிடந்த துணியை தலையைச் சுற்றி அவசரமாக நின்றான்.

அண்ணாமலை வீரமுத்து எல்லோரும் அவனுக்கு கிட்டவாக வந்துவிட்டார்கள். புஞ்சிபண்டாவின் தலையில் காயத்தை மூடி வெள்ளைத் துணி கட்டப்பட்டிருந்தது. அவனுக்குப் பக்கத்தில் வீரமுத்து வந்தான்.

''உலக மக்களே துணிவு கொள்வீர்; போரிடத் துணிவீர். கஷ்டங்களை துச்சம் செய்வீர்; அலைக்குமேல் அலையாக முன்னேறுவீர். அப்பொழுது முழு உலகமும் மக்களுக்குச் சொந்தமாகும். எல்லாவித பைசாசங்களும் அழிக்கப்படும் என்னும் சுலோக அட்டையை வீரமுத்து கைகளில் பிடித்திருந்தான். அவர்களுக்கு அருகில் சென்று அவர்கள் முகத்தை ஏறிட்டுப் பார்த்த அவன் கண்கள் கலங்கின. அக்கோலத்தில் ஆவேசமும், வர்க்க உணர்ச்சியும் கலந்திருந்தன. அந்தக் கண்களால் தன் மகன் வீரமுத்துவையும் ஜானகியையும் பார்த்தான்.

அவர்கள் கண்கள் கண்ணீரால் அல்ல, புரட்சிகர உணர்வினுல் சிவந்திருந்தன.

எல்லா இடங்களுக்கும் ஓடி, ஓடி விஷயத்தை அறிவித்தவன் விமுக்கன்தான்.

சில நிமிடங்களில் சகலரும் தெருவில் நிரை, நிரையாக வந்து கொண்டிருந்தார்கள்.

சின்னக்கலப்பனின் பக்கத்தில் வந்த தலைவர், துரை தானுக நின்று காம்பரா உடைப்பதைக் கண்டான்.

''வீரமுத்துக்குக் காம்பரா கொடு!''

''புஞ்சிபண்டாவிடம் மன்னிப்புக் கேள்!''

அவர் கையை உயர்த்தி முஷ்டியைப் பொத்திக் கத்திஞன். சின்னக்கலப்பன் திரும்பினுன்.

''வெள்ளைக்காரனே வெளியேறு!''

''அடிமைத்தனம் ஒழிக!''

''வெள்ளையனே வெளியேறு!''

''முதலாளி வர்க்கம் ஒழிக!''

''உழைப்பவனுக்கே உலகம் சொந்தம்!''

''இலங்கைத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!''

சின்னக்கலப்பன் பெலத்த குரலில் கோசமிட்டதும், அவனைத் தொடர்ந்து சொத்திச் சிலம்பன், புஞ்சிபண்டா, வீரமுத்து சகலரும் கோசித்தனர். அவை அவர்களின் இதயங்களில் இருந்து வந்து கொண்டிருந்தன. ஒடோடி முன்னுக்கு வந்து அண்ணுமலைக்குப் பக்கத்தில் நின்ற இராகவனும் தொடங்கினுன்.

வீரமுத்துவும் ஜானகியும் கைகளை உயர்த்திக் கத்தினர்.

''நல்ல காம்பரா எல்லோருக்கும் வேண்டும்!''

''அடக்குமுறை ஒழிக!''

''அடிமைத்தனம் ஒழிக!''

''வெள்ளையனே வெளியேறு!''

''இலங்கைத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!''

முனகிக் கொண்டு இரைந்து, இரைந்து வரும் புயற் காற்றுப்போல் ஒடுக்கப்பட்ட இதயங்களில் இருந்து துவக்

குச் சன்னங்களைப்போல் புறப்பட்ட கோரிக்கைக் குரல்கள் வானைப் பிளந்தது.

அவர்களைக் கண்ட துரை மாயமாக மறைந்துவிட்டான். அவன் பொலிசுக்கு போன் பண்ணத்தான் சென்றிருப்பான்.

அண்ணுமலை முன்னுக்குச் சென்று கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் சின்னக்கலப்பன் தோளில் போட்டிருந்த துண்டால் தலையைச் சுற்றிக்கட்டி கையுயர்த்தி கோசமிட்டவாறு நிமிர்ந்து நடந்து கொண்டிருந்தான். அவனுக்குப் பின்னுல் வீரமுத்துவும் ஜானகியும் எதிர்கால நம்பிக்கையோடு நிரைகட்டிச் செல்லும் சுறுசுறுப்புள்ள எறும்புகளைப் போல் தொழிலாளர்கள் உத்வேகம் கொண்டவர்களாக இழப்பதற்கு ஒன்றுமில்லையென்ற தைரியத்தோடு கால்களை முன்னெடுத்து வைத்து ஊர்வலத்தில் நடந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களின் இதயங்களில் இருந்து தாஞக எழுந்து ஒலிக்கும் கோசங்கள் மலைமுகடுகளில் சென்று அடிபட்டு எதிரொலித்துக் கொண்டிருந்தன. அவைகளின் கொடும் முனைகள் முதலாளித்துவ சமுதாய அமைப்பை குறிபார்த்து பாய்ந்து கொண்டிருந்தன.

அப்போது பிரதான வீதியால் துப்பாக்கிகள் தாங்கிய பொலிஸ் படைகளைக் கொண்ட ஜீப்வண்டியும், லொரியும் குயின்ஸ் தோட்டத்தை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தன.

முற்றும்

# சொந்தக்காரன் ?

அதிகாலையில் தேயிலைத் தோட்டத்து லாயங்களில் சங்கொலி கேட்டு எழுந்து மாலைவரை மழையிலும் குளிரிலும் மாடாக உழைக்கும் இந்தியத் தமிழ் மக்கள் ......மனித அடிப்படை உரிமைகளும் உறவுகளுமே மறுக்கப்பட்டு நசிந்து வாழும் பத்து லட்சம் மலை நாட்டுத் தொழிலாளர்கள்...... அவர்களிடையே இலங்கையில் இன்று குமுறிக்கொண்டிருக்கும் புதிய எண்ணங்களையும் எழுச்சிகளையும் ஆசிரியர் இந்த யதார்த்த நாவலில் படம் பிடித்துக் காட்டுகிறுர். இளைஞரான பாலன் (28) சிறு கதைகள் மூலமும் 'குட்டி' என்ற நாவல் மூலமும் ஈழத்தில் நன்கு அறிமுக மான படைப்பாற்றல் மிக்க எழுத்தாளர்.

குயின்ஸ் தோட்ட நிலத்திற்கு யார் சொந்தக்காரன்? என்றுமட்டுமல்ல—இலங்கை நிலத்திற்கு யார் சொந்தக் காரன் ?—பூமிக்கே யார் சொந்தக்காரன் ? என்றே இந் நாவல் மூலம் பரந்த உலகிற்கே குரல் எழுப்புகிறுர். அதற்குரிய பதிலையும் இந்நாவலில் காணலாம்.

செ. கணேசலிங்கன்

Jacket Printed at Neo Art Press, Madras - 2